செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி–7

மங்கல மனையறம், கைக்கிளை, பெருந்திணை, தொழிலாளர் காதல்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி 7

மங்கல மனையறம், கைக்கிளை, பெருந்திணை, தொழிலாளர் காதல்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்
'கோனார் மாளிகை'
25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28132863 / 43408000
e-mail: sales@palaniappabrothers.com
கிளைகள்
திருச்சி - 620 002 சேலம் - 636 001
கோயம்புத்தூர் - 641 001 மதுரை - 625 001
ஈரோடு - 638 001

முதல் பதிப்பு : 2017

© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-774-0 (Vol-7)

தனிப்பிரதி விலை ரூ. 450/–
(தொகுதி–7)

மொத்த விலை ரூ. 7200/–
(14 தொகுதிகள்)

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை – 600 014.

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431–2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427–2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422–2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452–2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424–2256261

பொருளடக்கம்

களஞ்சிய வாயில் x

மதிப்புரை xv

பதிப்புரை xvi

அகத்திணை xviii

மங்கல மனையறம்

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 352	முடவுமுதிர்	அஞ்சியத்தை மகள் நாகையார்	14
அகநானூறு 400	நகைநன்று	உலோச்சனார்	32
ஐங்குறுநூறு 6	வாழி ஆதன்	ஓரம்போகியார்	23
ஐங்குறுநூறு 7	வாழி ஆதன்	ஓரம்போகியார்	25
ஐங்குறுநூறு 8	வாழி ஆதன்	ஓரம்போகியார்	27
ஐங்குறுநூறு 9	வாழி ஆதன்	ஓரம்போகியார்	28
ஐங்குறுநூறு 10	வாழி ஆதன்	ஓரம்போகியார்	30
ஐங்குறுநூறு 103	அன்னை	அம்மூவனார்	6
ஐங்குறுநூறு 104	அன்னை	அம்மூவனார்	43
ஐங்குறுநூறு 148	எக்கர்	அம்மூவனார்	9
ஐங்குறுநூறு 149	எக்கர்	அம்மூவனார்	11
ஐங்குறுநூறு 208	அன்னாய்	கபிலர்	5
ஐங்குறுநூறு 292	மயில்கள்	கபிலர்	67
ஐங்குறுநூறு 294	எரிமருள்	கபிலர்	7
ஐங்குறுநூறு 401	மறிஇடை	பேயனார்	58
ஐங்குறுநூறு 402	புதல்வற்	பேயனார்	56
ஐங்குறுநூறு 403	புணர்ந்த	பேயனார்	48
ஐங்குறுநூறு 404	வாள்நுதல்	பேயனார்	53
ஐங்குறுநூறு 405	ஒண்சுடர்ப்	பேயனார்	47
ஐங்குறுநூறு 406	மாதர்	பேயனார்	55

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 407	நயந்த	பேயனார்	62
ஐங்குறுநூறு 408	பாணர்	பேயனார்	61
ஐங்குறுநூறு 409	புதல்வன்	பேயனார்	57
ஐங்குறுநூறு 410	மாலை	பேயனார்	59
ஐந்திணை எழுபது 43	ஆற்றல்	மூவாதியார்	44
ஐந்திணை எழுபது 47	தேங்கமழ்	மூவாதியார்	52
கலித்தொகை 115	தோழிநாம்	நல்லுருத்திரனார்	2
குறுந்தொகை 19	எவ்வி	பரணர்	95
குறுந்தொகை 157	குக்கூ	அள்ளூர் நன்முல்லையார்	65
குறுந்தொகை 167	முளிதயிர்	கூடலூர் கிழார்	49
குறுந்தொகை 178	அயிரை	நெடும்பல்லியத்தை	17
குறுந்தொகை 193	மட்டம்	அரிசில் கிழார்	21
குறுந்தொகை 201	அமிழ்தம்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	19
குறுந்தொகை 228	வீழ்தாழ்	வள்ளுவர்	22
குறுந்தொகை 242	கானங்	பெருஞ்சாத்தனார் குழற்றத்தனார்	51
திணைமாலை நூற்றைம்பது 140	மண்ணார்	கணிமேதாவியார்	35
திணைமாலை நூற்றைம்பது 142	தண்கயத்துத்	கணிமேதாவியார்	10
திணைமாலை நூற்றைம்பது 143	நல்வயல்	கணிமேதாவியார்	36
திணைமாலை நூற்றைம்பது 145	பாட்டர	கணிமேதாவியார்	45
திருக்குறள் 1281	உள்ளக்	திருவள்ளுவர்	69
திருக்குறள் 1282	திணைத்துணையும்	திருவள்ளுவர்	70
திருக்குறள் 1283	பேணாது	திருவள்ளுவர்	72

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திருக்குறள் 1284	ஊடற்கண்	திருவள்ளுவர்	73
திருக்குறள் 1285	எழுதுங்கால்	திருவள்ளுவர்	74
திருக்குறள் 1286	காணுங்கால்	திருவள்ளுவர்	75
திருக்குறள் 1287	உய்த்தல்	திருவள்ளுவர்	77
திருக்குறள் 1288	இளித்தக்க	திருவள்ளுவர்	78
திருக்குறள் 1289	மலரினும்	திருவள்ளுவர்	79
திருக்குறள் 1290	கண்ணின்	திருவள்ளுவர்	80
திருக்குறள் 1291	அவர்நெஞ்சு	திருவள்ளுவர்	82
திருக்குறள் 1292	உறாஅ	திருவள்ளுவர்	83
திருக்குறள் 1293	கெட்டார்க்கு	திருவள்ளுவர்	84
திருக்குறள் 1294	இனிஅன்ன	திருவள்ளுவர்	86
திருக்குறள் 1295	பெறாஅமை	திருவள்ளுவர்	87
திருக்குறள் 1296	தனியே	திருவள்ளுவர்	89
திருக்குறள் 1297	நாணும்	திருவள்ளுவர்	90
திருக்குறள் 1298	எள்ளின்	திருவள்ளுவர்	91
திருக்குறள் 1299	துன்பத்திற்(கு)	திருவள்ளுவர்	93
திருக்குறள் 1300	தஞ்சம்	திருவள்ளுவர்	94
திருக்குறள் 1301	புல்லா(து)	திருவள்ளுவர்	97
திருக்குறள் 1302	உப்புஅமைந்(து)	திருவள்ளுவர்	98
திருக்குறள் 1303	அலந்தாரை	திருவள்ளுவர்	99
திருக்குறள் 1304	ஊடி	திருவள்ளுவர்	100
திருக்குறள் 1305	நலத்தகை	திருவள்ளுவர்	102
திருக்குறள் 1306	துனியும்	திருவள்ளுவர்	103
திருக்குறள் 1307	ஊடலின்	திருவள்ளுவர்	104
திருக்குறள் 1308	நோதல்	திருவள்ளுவர்	105
திருக்குறள் 1309	நீரும்	திருவள்ளுவர்	107
திருக்குறள் 1310	ஊடல்	திருவள்ளுவர்	108

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திருக்குறள் 1311	பெண்இயலார்	திருவள்ளுவர்	110
திருக்குறள் 1312	ஊடி	திருவள்ளுவர்	111
திருக்குறள் 1313	கோட்டுப்பூச்	திருவள்ளுவர்	112
திருக்குறள் 1314	யாரினும்	திருவள்ளுவர்	114
திருக்குறள் 1315	இம்மைப்	திருவள்ளுவர்	115
திருக்குறள் 1316	உள்ளினேன்	திருவள்ளுவர்	117
திருக்குறள் 1317	வழுத்தினாள்	திருவள்ளுவர்	118
திருக்குறள் 1318	தும்முச்	திருவள்ளுவர்	119
திருக்குறள் 1319	தன்னை	திருவள்ளுவர்	121
திருக்குறள் 1320	நினைத்திருந்து	திருவள்ளுவர்	122
திருக்குறள் 1321	இல்லை	திருவள்ளுவர்	124
திருக்குறள் 1322	ஊடலில்	திருவள்ளுவர்	125
திருக்குறள் 1323	புலத்தலின்	திருவள்ளுவர்	126
திருக்குறள் 1324	புல்லி	திருவள்ளுவர்	127
திருக்குறள் 1325	தவறிலர்	திருவள்ளுவர்	129
திருக்குறள் 1326	உணலினும்	திருவள்ளுவர்	130
திருக்குறள் 1327	ஊடலில்	திருவள்ளுவர்	131
திருக்குறள் 1328	ஊடிப்	திருவள்ளுவர்	133
திருக்குறள் 1329	ஊடுக	திருவள்ளுவர்	134
திருக்குறள் 1330	ஊடுதல்	திருவள்ளுவர்	135
நற்றிணை 110	பிரசம்	போதனார்	63
நற்றிணை 35	பொங்குதிரை	அம்மூவனார்	38
நற்றிணை 131	ஆடிய	உலோச்சனார்	41
நற்றிணை 294	தீயும்	புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர் கிழான்	12

கைக்கிளை

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கலித்தொகை 56	ஊர்க்கால்	கபிலர்	138
கலித்தொகை 57	வேய்எனத்	கபிலர்	144
கலித்தொகை 58	வார்உறு	கபிலர்	148
கலித்தொகை 117	மாண	நல்லுருத்திரனார்	158
கலித்தொகை 122	கோதை	நல்லந்துவனார்	154
சிலப்பதிகாரம், கானல் வரி 23	சேரல்	இளங்கோவடிகள்	153

பெருந்திணை

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கலித்தொகை 62	ஏஎ	கபிலர்	162
கலித்தொகை 99	நறவினை	மருதனிளநாகனார்	165
கலித்தொகை 100	ஈண்டு.நீர்	மருதனிளநாகனார்	170
கலித்தொகை 138	எழில்மருப்பு	நல்லந்துவனார்	173
கலித்தொகை 139	சான்றவிர்	நல்லந்துவனார்	177
கலித்தொகை 140	கண்டவிர்	நல்லந்துவனார்	182
கலித்தொகை 141	அரிதினில்	நல்லந்துவனார்	186
கலித்தொகை 142	புரிவுண்ட	நல்லந்துவனார்	190
கலித்தொகை 143	அகல்ஆங்கண்,	நல்லந்துவனார்	198
கலித்தொகை 144	நன்னுதால்	நல்லந்துவனார்	206
கலித்தொகை 145	துனையுநர்	நல்லந்துவனார்	215
கலித்தொகை 146	உரைசெல	நல்லந்துவனார்	223
கலித்தொகை 147	ஆறுஅல்ல	நல்லந்துவனார்	230
கலித்தொகை 148	தொல்இயல்	நல்லந்துவனார்	238

தொழிலாளர் காதல்

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கலித்தொகை 94	என்நோற்	மருதனிளநாகனார்	270
கலித்தொகை 108	இகல்வேந்தன்	நல்லுருத்திரனார்	243
கலித்தொகை 109	கார்ஆரப்	நல்லுருத்திரனார்	251
கலித்தொகை 110	கடிகொள்	நல்லுருத்திரனார்	255
கலித்தொகை 112	யார்இவன்	நல்லுருத்திரனார்	258
கலித்தொகை 113	நலம்மிக	நல்லுருத்திரனார்	262
கலித்தொகை 116	பாங்குஅரும்	நல்லுருத்திரனார்	267

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற் கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற் கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஒரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராசு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், 'நன்றி' என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்

மதிப்புரை

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முயன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி. இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? சிலம்பொலியின் இந்நூல் தமிழறிவைத் தழைத்திடச் செய்யும். பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும். ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும். மாணவர்க்கு மாங்கனியாகும். ஆசிரியருக்கு உரை நூல் ஆகும். இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று, “பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில் பிறந்ததனால் மிகச் சிறந்தவன் நான் என்று” மகிழ்ந்திட வேண்டுகிறேன்...

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத் துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிற்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லு வதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும். கொண்டாடும்...

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

மிக எளிமையாகவும், இனிய எளிய நடையிலும், பாடல்களில் கருத்து களையும் சிறப்புகளையும் சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத் திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம். மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்பு களுள் ஒன்றாகவும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது. தமிழ்க்களஞ்சியத் திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கி யுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
　　பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
　　தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
　　தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
　　கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
　　சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
　　பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
　　காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
　　செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
　　ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
　　குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
　　எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
　　எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
　　நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
ஒவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
உள்ளூறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
சூட்டுகின்றோம் மணிமகுடம்!

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது 'குறையிரத்தல்' எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல்களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத்தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித்திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப் பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறி யாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ் விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலி யிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப் படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத் திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படு வராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் ‘உடன்போக்கு’ என்றும், ‘கொண்டுதலைக் கழிதல்’ என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். ‘பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்’ என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். ‘காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே’ என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, “உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்" என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தி யிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வாராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, 'வரைவின் மகளிர்', 'பொருள்விலைப் பெண்டிர்' என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் 'வாயில்கள்' எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் 'வாயில்' மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

மங்கல மனையறம்

பக். 1 - 136

கைக்கிளை

பக். 137 - 160

பெருந்திணை

பக். 161 - 241

தொழிலாளர் காதல்

பக். 242 - 278

மங்கல மனையறம்

களவு நீங்கிக் கடிமணம் புரிந்துகொண்ட தலைவனும் தலைவியும் இனிய இல்லறம் நடத்துதல்.

தோழி கூற்று

கலித்தொகை 115 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகள் களவு வெளிப்பட்டதென்று அஞ்சித் தோழிக்குச் சொல்ல, நமர் நின்னை அவற்கே கொடுக்கச் சூழ்ந்தனர் எனச் சொல்லி அச்சம் நீக்கியது.

கூற்று விளக்கம்

தாய்க்குத் தன் களவு வெளிப்பட்ட நிலையில் தலைவி அச்சம் கொண்டு தோழிக்குக் கூறத் தோழி, ‘உன்னை உன் காதலனுக்கே மணம் செய்து வைக்க நம்மவர் முடிவு செய்துள்ளனர், அஞ்சாதே’ என்று கூறியது.

தலைவி கூற்று

தோழிநாம், காணாமை யுண்ட கடுங்கள்ளை மெய்கூர
நாணாது சென்று நடுங்க உரைத்தாங்குக்
கரந்ததூஉங் கையொடு கோட்பட்டாம் கண்டாய்நம்
புல்லினத்து ஆய மகன்சூடி வந்ததுஓர்
முல்லை ஒருகாழும் கண்ணியும், மெல்லியால்!
கூந்தலுள் பெய்து முடித்தேன்மன் தோழி,யாய்
வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே,
அன்னையும் அத்தனும் இல்லரா, யய்நாண
அன்னைமுன் வீழ்ந்தன்றுஅப் பூ
அதனை, வினவலும் செய்யாள் சினவலும் செய்யாள்,
நெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டு,
நீங்கிப் புறங்கடைப் போயினாள்; யானும்என்
சாந்துளர் கூழை முடியா, நிலந்தாழ்ந்த
பூங்கரை நீலந் தழீஇ, தளர்புஒல்கிப்
பாங்கருங் கானத்து ஒளித்தேன் அதற்குஎல்லா
ஈங்குஎவன் அஞ்சு வது

தோழி கூற்று

அஞ்சல், அவன்கண்ணி நீபுனைந்தாய் ஆயின் நமரும்
அவன்கண் அடைசூழ்ந்தார், நின்னை; அகன்கண்

வரைப்பில் மணல்தாழப் பெய்து, திரைப்பில்
வதுவையும் ஈங்கே அயர்ப; அதுவேயாம்
அல்கலும் சூழ்ந்த வினை.

தெளிவுரை

மெல்லிய இயல்புடைய தோழியே! ஆட்டினத்து ஆயர்மகன் அவன் சூடி வந்த முல்லை மலர்களையும் அவற்றால் தொடுக்கப் பட்ட மாலையையும் என்னிடம் கொடுத்தான். நான் அவற்றை என் கூந்தலில் செருகி இறுக முடித்திருந்தேன்.

நற்றாயும் தந்தை முதலியோரும் வீட்டிலே இருந்தனர். செவிலித்தாய் என் கூந்தலில் வெண்ணெய் தேய்த்த அளவிலே, நற்றாய் காணும்படியாக என் வரிந்த கூந்தலிலிருந்து செவிலித் தாய் முன் வீழ்ந்தது அப்பூ.

பிறர் காணாமல் கள்ளுண்ட ஒருவன், களிப்பு (மயக்கம் - போதை) மிகுதியால், உடலில் நடுக்கம் ஏற்பட்ட நிலையில், தான் கள்ளுண்டமையை நாணமின்றி உரைத்ததுபோல, நாம் இதுவரை மறைத்து வைத்திருந்த களவொழுக்கம் வெளிப்பட, நானும், தாயும் தந்தையும் அறியும்படி கையும் களவுமாய்ப் பிடிபட்டேன்.

தாய் அதுபற்றி எதுவும் கேட்கவில்லை; சினக்கவும் இல்லை; நெருப்பைத் தொட்டவர் போன்று கையைப் பிசைந்தபடி வீட்டை விட்டு நீங்கிப் புறக்கடைப் பக்கம் போயினள். நானும் மயிர்ச் சாந்து பூசி உலர்த்தின கூந்தலை இறுக முடித்து, பூக்கரையிட்டுத் தாழ உடுத்திய நீல ஆடையைக் கையிலே சிறிது தழுவிக் கொண்டு, அச்சத்தால் தளர்ந்த நடையுடன், மெல்ல நடந்து, வீட்டருகே இருந்த கானத்திலே சென்று ஒளிந்தேன், என்றாள் தலைவி.

அது கேட்ட தோழி, 'தலைவியே அஞ்சாதே! தலைவன் கொடுத்த கண்ணியை நீ சூடிய காரணத்தால் உன்னை அவனுக்கு மணமுடிக்கப் பெற்றோர் முடிவு செய்துள்ளனர். அதுவேயன்றி, அகன்ற இடத்தையுடைய முற்றத்தே, புதுமணலை நிறையப் பரப்பித் திரையிட்டு உடனே திருமணமும் முடிக்க உள்ளனர். நாள்தோறும், இரவும் பகலும் நாம் ஆராய்ந்து வந்த

காரியம் இப்போது கைகூடியுள்ளது. அச்சம் தவிர்" என்று தலைவிக்குக் கூறினாள்.

கருத்து

தன் களவொழுக்கத்தைத் தாய் தந்தையர் அறிய நேர்ந்ததால் என்ன நேருமோ என்று அஞ்சியிருந்த தலைவிக்கு, 'உன்னை அவனுக்கு மணமுடிக்கப் பெற்றோர் தீர்மானித்துள்ளனர். அஞ்சேல்' என்று தோழி உரைத்தாள்.

சொற்பொருள்

1. கடுங்கள் - மிக்க மயக்கம் தரும் கள்; மெய் - உடல்; கூர - மிகுதியாக.
2. நடுங்க - உடல் நடுங்க.
3. கரந்தது - மறைத்தது; கோட்பட்டோம் - பிடிபட்டோம்.
4. புல்இனத்து ஆயர் - ஆட்டுக் கூட்டமுடைய இடையர்.
5. காழ் - பூமாலை; கண்ணி - தலையிலணியும் மாலை.
6. பெய்து - இட்டு; யாய் - தாய்.
7. உரைஇ - தடவி, தேய்த்து; கதுப்பு - கூந்தல்.
8. அத்தன் - தந்தை; இல்லரா - வீட்டிலே இருக்க.
11. விரித்திட்டு - உதறி.
13. சாந்து - மயிர்ச்சாந்து; உளர் - கோதுதல்; கூழை - மாதர் கூந்தல்.
14. தளர்பு - தளர்ந்து; ஒல்கி - மெல்ல நடந்து.
15. பாங்கு - பக்கம்; எல்லா - தோழி.
17. நமர் - நம்மவர்.
18. அடை சூழ்ந்தார் - ஒப்படைக்க முடிவு செய்துள்ளனர்; அகன்கண் - அகன்ற இடம்.
19. வரைப்பு - முற்றம்.
20. வதுவை - திருமணம்; அயர்ப - செய்வர்.
21. அல்கலும் - இரவும் (பகலும்); சூழ்ந்த - ஆராய்ந்த; வினை - காரியம்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 208 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

செவிலிக்கு அறத்தொடு நின்ற தோழி அவளால் வரைவு மாட்சிமைப் பட்ட பின்பு, 'இவள் இவ்வாறுபட்ட வருத்தமெல்லாம் நின்னிற் தீர்ந்தது' என்பது குறிப்பினாற்றோன்ற அவட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழி செவிலியிடம் அறத்தொடு நின்று களவை வெளிப்படுத்தினாள். செவிலியின் முயற்சியால் திருமணம் நிறைவேறிற்று. அப்போது தோழி, செவிலியை நோக்கி, 'தலைவி இதுவரை பட்ட வருத்தமெல்லாம் உன்னால் தீர்ந்தன' எனக் குறிப்பாய்ச் சொல்லியது.

அன்னாய், வாழி!வேண்டு அன்னை! கானவர்
கிழங்குஅகழ் நெடுங்குழி மல்க வேங்கைப்
பொன்மலி புதுவீத் தாஅம் அவர்நாட்டு
மணிநிற மால்வரை மறைதொறு,இவள்
அணிமலர் நெடுங்கண் ஆர்ந்தன பனியே.

தெளிவுரை

தாயே! நான் கூறுவதைக் கேள்! காட்டிலுள்ளோர் கிழங்கு எடுப்பதற்காகத் தோண்டிய நெடிய குழிகளை வேங்கை மரத்தின் பொன்போன்ற புதிய பூக்கள் உதிர்ந்து நிரப்பும். அத்தகைய தலைவனுடைய நாட்டிலிருக்கும் நீலமணியின் நிறங்கொண்ட பெரிய மலை மறையும்போதெல்லாம் தலைவியின் அழகிய மலர்போலும் நீண்ட கண்கள் துன்பக்கண்ணீரைச் சொரிந்த வண்ணம் இருந்தன. (அத்துன்பம் இப்போது உன்னால் நீங்கியது.)

கருத்து

தாயே! உன் அருளால் திருமணம் நிறைவேறி, தலைவி மகிழ்வுட னிருக்கிறாள்.

குறிப்பு

மலையைக் காணுந்தொறும் தலைவி ஒருவாறு ஆற்றியிருந்தாள். மேகங்கள் மறைப்பதாலோ அன்றி இரவில் இருள் செறிந்துவிடுவதாலோ மலை கண்ணுக்குத் தோன்றாமையால் அவள் அழத் தொடங்கிவிடுவாள்! இப்பொழுது உன்னருளால் திருமணம் நடந்தேறியுள்ளதால் இனி அவள் வருத்தமின்றி மகிழ்ந்திருப்பாள் எனத் தோழி குறிப்பிடுகிறாள்.

கிழங்கு எடுப்பதற்காகத் தோண்டிய குழியை வேங்கையின் பூக்கள் உதிர்ந்து மறைக்கும் என்பது, செவிலியின் முயற்சியால் திருமணம் முடிந்ததால் தலைவி அடைந்த வருத்தமெல்லாம் இல்லாததாயிற்று என்னும் பொருளை வெளிப்படுத்துகிறது.

இதனை, தலைவன் மலையைக் காணாதபோது தலைவியின் நெஞ்சினுள்ளே தோன்றிய வருத்தக்குழியை அவள் கண்ணீர்ப் பூக்கள் நிறைத்தன என்றும் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. கானவர் - காட்டிலுள்ளோர்.
2. அகழ் - தோண்டிய; மல்க - நிறைய.
3. பொன்மலி புதுவீ - பொன் போன்ற புதிய மலர்; தாஅம் - பரவும்.
4. மணி நிற - நீலமணியின் நிறங்கொண்ட; மால் வரை - பெரிய மலை; மறைதொறு - மறையும்போதெல்லாம்.
5. ஆர்ந்தன - சொரிந்தன; பனி - கண்ணீர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 103 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

அறத்தொடு நின்ற தோழி வதுவை நிகழா நின்றுழித் தாய்க்குக் காட்டி உவந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

அறத்தொடு நின்ற பின்னரும் செவிலி, அத்தலைவன் வருவானோ வாரானோ என ஐயுற்றுக் கவலையுற்றிருந்தாள். தலைவன் வரைவொடு

வந்து மணந்துகொண்டதையும், அதனால் தலைவி புத்தொளி படைத்துப் பொலிவுற்றிருப்பதையும் செவிலியிடம் தலைவிக்குத் தோழி (செவிலி மகள்) மகிழ்ந்து கூறியது.

அன்னை வாழி!வேண்டு அன்னை! புன்னையொடு
ஞாழல் பூக்கும் தண்ணம் துறைவன்
இவட்குஅமைந் தனனால் தானே;
தனக்குஅமைந் தன்றுஇவள் மாமைக் கவினே.

தெளிவுரை

தாயே! வாழ்க! நான் சொல்வதைக் கேள்! புன்னையுடன் ஞாழலும் பூத்து மணம் பரப்பும் குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறையினைக் கொண்டவன், தலைவன். அவன் இவளுக்கு (உன் மகளுக்கு) என்றே அமைந்தவன்; மாமை நிறங்கொண்ட இவளது அழகும் அவனுக்கென்றே அமைந்ததாயிற்று.

கருத்து

இவன் அவளுக்கென்றும், அவள் இவனுக்கென்றும் அமைந்தவர்கள்.

சொற்பொருள்

3. இவட்கு - தலைவிக்கு; அமைந்தனன் - ஒத்தனன்.
4. அமைந்தன்று - அமைந்தது; மாமைக் கவின் - மாமை நிறம் கொண்ட அழகு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 294 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வதுவை செல்லா நின்றுழித் தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணம் நடந்துகொண்டிருக்கும்போது தோழி தலைவனிடம் கூறியது.

எரிமருள் வேங்கை இருந்த தோகை
இழைஅணி மடந்தையின் தோன்றும் நாட!
இனிது செய்தனையால்; நுந்தை வாழியர்!
நல்மனை வதுவை அயரஇவள்
பின்இருங் கூந்தல் மலர்அணிந் தோயே!

தெளிவுரை

நெருப்புப் போன்ற நிறங்கொண்ட மலர்களைக் கொண்ட வேங்கை மரத்தில் இருக்கும் மயில், அணிகலன் அணிந்த அழகான பெண்ணைப் போலக் காட்சி தரும் மலைநாட்டிற்கு உரியவனே! இல்லற நலம் வாய்ந்த எங்கள் நல்ல இல்லத்தில் இப்பொழுது திருமணம் நடக்கிறது. (இம்மங்கலச் செயல் நடைபெறுதற்காகத்) தலைவியின் பின்னப்பட்ட கரிய கூந்தலில் மலர் சூட்டுகின்றாய். இத்தகைய பெருந்தகையாகிய உன்னை ஈன்று வளர்த்து ஆளாக்கி இம்மணத்தை நடத்தும் உன் தந்தை வாழ்க!

கருத்து

முன்பு களவுக்காலத்தில் பிறர் அறியாவண்ணம் இவள் கூந்தலில் மலர் சூட்டி மகிழ்ந்த நீ, இன்று அனைவரும் காணும்வண்ணம் இவ்வதுவைச் சடங்கில் இவள் கூந்தலில் மலர் அணிவிப்பது இனிய செயல் அன்றோ?

குறிப்பு

முன்பு நீ மலர் சூட்டி இருந்தாலும் இப்போது சூட்டுவது மிகவும் சிறப்பானது.

சொற்பொருள்

1. எரிமருள் - நெருப்பை ஒத்த; தோகை - மயில்.
2. இழை அணி - அணிகலன்கள் அணிந்த; மடந்தை - பெண்.
3. நுந்தை - உம் தந்தை.
4. வதுவை - திருமணம்.
5. பின்இருங் கூந்தல் - பின்னப்பட்ட கரிய கூந்தல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 148 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

களவொழுக்கத்தின் விளைவறியாது அஞ்சிய வருத்தம் நீங்கக் கரண வகையான் வதுவை முடித்த பின்பு தலைமகளைப் பள்ளியிடத்து உய்க்குந் தோழி சொல்லியது. (கரணம் - திருமணச் சடங்கு.)

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தின் முடிவு யாதாகுமோ என்றஞ்சியிருந்தாள், தோழி. ஆனால், தலைவியைத் தலைவன் மணந்துகொண்டான்; சடங்குகள் நிறைவேறிய பின்னர்த் தலைவியைத் தலைவனோடு ஒருங்கே கட்டிலில் ஏற்றிய தோழி, மகிழ்ச்சி மிகுதியால் தலைவியிடம் கூறியது.

எக்கர் ஞாழல் இகந்துபடு பெருஞ்சினை
வீஇனிது கமழும் துறைவனை
நீஇனிது முயங்குமதி, காத லோயே!

தெளிவுரை

அன்புடையாய்! மணற்பரப்பில் நிற்கும் ஞாழல் மரத்தின் மிக மிக ஓங்கிய கிளையில் பூத்த பூக்கள் எங்கும் மணத்தைப் பரப்புகின்ற துறையையுடைய தலைவனை, இனி நீ இனிதே தழுவி இன்புறுக!

('உயர்ந்த கிளைகளில் பூத்த பூக்கள் எங்கும் கமழ்தல்போல உன் மணவாழ்வும் இனிதாகப் பலரும் வியக்க அமைக' என வாழ்த்தி அனுப்புகிறாள்.)

கருத்து

மணங்கொண்டுள்ள தலைவியே, நீ மகிழ்வோடு வாழ்க!

குறிப்பு

ஞாழல் மரம் மிகமிக உயர்ந்து பூத்துள்ளதுபோலத் தலைவன் அன்பும் மிகமிக வளர்ந்து திருமணமாய் மலர்ந்துள்ளது என்பதாம்.

களவுக்காலத்துப் புணர்ச்சியிலும் இன்பம் உண்டெனினும், அதில் அச்சமும் உண்டு. கற்புக்காதலால் பெறும் இன்பம் நிறைவானது. ஆதலின், இனி 'அச்சத்திற்கிடமின்றி முழுமையான இன்பம் பெறுக' என்று வாழ்த்தி அனுப்புகிறாள், தோழி!

சொற்பொருள்

1. எக்கர் - மணல்மேடு; இகந்துபட - மிகமிக ஓங்கிய (இகத்தல் - கடத்தல்); சினை - கிளை.
2. வீ - மலர்; கமழும் - மணம் பரப்பும்.
3. முயங்குதல் - தழுவுதல்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 142 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

தலைவனைப் பாங்கி புகழ்தல்.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை வரைந்தபின் அதற்குக் காரணமாய் இருந்த தோழியைப் புகழ, அதுகேட்டு மகிழ்ந்த தோழி தலைவனைப் புகழ்தல்.

தண்கயத்துத் தாமரைநீள் சேவலைத் தாழ்பெடை
புண்கயத் துள்ளும் வயலூர! – வண்கயம்
போலும்நின் மார்பு புளிவேட்கைத்(து) ஒன்(று);இவள்
மாலும்மா றாநோய் மருந்து.

தெளிவுரை

குளிர்ச்சி பொருந்திய குளத்தில் மலர்ந்துள்ள தாமரை மலரிலே உள்ள ஆண் அன்னப்பறவைக்குப் பெண் பறவை பணிந்து நடக்கும். இத்தகைய காட்சியைக் கொண்ட கழனிகள் சூழப்பெற்ற மருதநிலத்து ஊருக்குத் தலைவனே! வளமையான குளத்தைப் போன்ற உன் மார்பு, உன்னோடு கூடி வாழ்கின்ற இவளது மயக்கத்தைத் தரும் காமநோய்க்கு மருந்தாய் உள்ளது. புளியம்பழத்தினிடம் மக்கள் கொள்ளும் விருப்பம்போல (உன் மேல் தலைவி கொண்டுள்ள அன்பு) மேலும் மேலும் விரும்பத் தக்கதாயுள்ளது.

கருத்து

தலைவ! உன் மார்பு தலைவியின் காமநோய்க்கு மருந்தாகி, மேலும் மேலும் விரும்பும் மேன்மையினைக் கொண்டதாய் உள்ளது.

குறிப்பு

புளியம்பழத்தை அக்கால மக்கள் விரும்பிச் சுவைத்துள்ளனர் என அறிகிறோம்.

சொற்பொருள்

1. தண்கயம் - குளிர்ச்சி பொருந்திய குளம்; நீள் - பெரிய; தாழ் - கீழ்ப்படிந்துள்ள.
2. புண்கயம் - புள் கயம்; வண்கயம் - வளப்பம் பொருந்திய குளம்.
3. புளிவேட்கை - புளியம் பழத்தின்மேல் மக்கள் கொள்ளும் விருப்பம்.
4. மாலும் - மயக்கத்தைத் தரும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 149 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைந்தெய்திய தலைமகன் தலைமகளோடு பள்ளியிடத்திருந்துழித் தோழி வாழ்த்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைத் திருமணம் செய்துகொண்டு அவளோடு படுக்கையறையிலிருந்தபோது தோழி மகிழ்ந்து தலைவனை வாழ்த்தியது.

எக்கர் ஞாழல் பூவின் அன்ன,
சுணங்குவளர் இளமுலை மடந்தைக்கு
அணங்கு வளர்த்து,அகறல் வல்லாதீமோ!

தெளிவுரை

தலைவ! மணல்மேட்டிலே நிற்கும் ஞாழல் மரத்தின் பூப் போலும் நிறம் கொண்ட தேமல் படர்ந்துள்ள இளமுலையைக் கொண்டவள், தலைவி. அவளது பெண்மைப் பேரழகினை மிகவும் பெருகச் செய்து, என்றும் பிரியாது இனிதே வாழ்க!

கருத்து

தேமல் பொருந்திய மார்பினைக் கொண்ட இவளைப் பெருகிடும் இன்பத்தால் மகிழ்ந்திடச் செய்க.

சொற்பொருள்

2. சுணங்கு வளர் - தேமல் படர்ந்த; மடந்தைக்கு - தலைவிக்கு.
3. அணங்கு - அழகு; அகறல் - அகலுதல்; வல்லாதீம் - வல்லமை கொள்ளாதிரு, அஃதாவது என்றும் பிரியாதிரு.

தோழி கூற்று

நற்றிணை 294 **புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர் கிழான்**

திணை : குறிஞ்சி

கூற்று

மணமனை உட்புக்க தோழி தலைமகளது கவின் கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

மணம் செய்துகொண்ட தலைமக்கள் தனி இல்லத்தில் தம்முடைய மங்கல மனையறத்தை இனிது நடத்தத் தொடங்கிய காலத்தில் தோழி அவர்களைக் காண வந்தாள். இன்ப நிறைவுடன் மிகுந்த மேனியழகு கொண்டு தலைவி விளங்குவது கண்டு, அதனைத் தாயர் முதலானவரிடம் தோழி மேன்மைப்படுத்திக் கூறியது.

தீயும் வளியும் விசும்புபயந் தாங்கு,
நோயும் இன்பமும் ஆகின்று மாதோ;
மாயம் அன்று தோழி! வேய்பயின்று,
எருவை நீடிய பெருவரை யகம்தொறும்,
தொன்றுஉறை துப்பொடு முரண்மிகச் சினைஇக்
கொன்ற யானைக் கோடுகண் டன்ன
செம்புடைக் கொழுமுகை அவிழ்ந்த காந்தள்
சிலம்புடன் கமழும் சாரல்
இலங்குமலை நாடன் மலர்ந்த மார்பே!

தெளிவுரை

பெரிய மலைப்பக்கத்தில் மூங்கில்கள் கொறுக்கச்சிபோல நெடிது வளர்ந்துள்ளன. அங்கு, தனக்குப் பகையாகிய புலியை யானை மிகுந்த சினத்துடன் கொம்பினால் குத்திக் கொன்றது. அதனால் செந்நிறம் கொண்ட அதன் கொம்பினைக் கண்டது போல, சிவந்த புற இதழைக் கொண்ட கொழுவிய அரும்பு மலர்ந்த காந்தள் பூக்கள் மலையிடம் எங்கும் மணத்தைப் பரப்பியிருக்கின்றன. அத்தகைய மணம் வீசும் மலைநாட்டுக் குரியவன், தலைவன். வானம் தீயையும் காற்றையும் தந்ததுபோல, நம் தலைவனின் மார்பு துன்பத்தையும் இன்பத்தையும் தருவதா யுள்ளது. இது மாயமன்று; உண்மையே!

கருத்து

வானம் தீயையும் காற்றையும் தந்தது போன்று மலைநாடன் மார்பு துன்பமும் இன்பமும் தருகின்றது. இஃது உண்மை.

விளக்கம்

திருமணத்திற்கு முன்பு இடையீடு இல்லாக் கூட்டம் பெறாமையால் தலைவியின் மேனி மெலிந்தது; நிறம் வேறு பட்டது; வேட்கை நோய் மிகுந்தது. அதனால் அவள் வருந்தி யிருந்தாள். திருமணத்திற்குப் பின் அவள் யாதொரு குறையும் இன்றி இன்பம் மிக, பொலிவுற்ற மேனியுடனும் மிகுந்த அழகுடனும் திகழ்ந்தாள். அதனைக் கண்ட தோழி, தாயர் முதலாயினார்க்குத் தான் கண்டதனைச் சிறப்பித்துரைக்கிறாள்.

குறிப்பு

விசும்பு ஒன்றே. ஆயினும், அதிலேதான் முரண்பட்ட தன்மை கொண்ட தீயும் வளியும் தோன்றுகின்றன. தலைவனின் மார்பும் விசும்பு போன்றதே! அஃது அவன் பிரிவால் தலைவிக்கு நோயும் அவன் புணர்வால் இன்பமும் தோன்றச் செய்கிறது.

உள்ளுறை

பகை வென்ற சிவந்த யானைக்கோடு போன்ற காந்தள், மலையகமெங்கும் கமழும் என்னும் அடி, அலர் கூறுவார் வாயடங்க, தலைவியை மணந்துகொண்ட தலைவனது

அன்பொழுக்கம் மனையகம் முழுவதும் பரவி மாண்புறச் செய்கின்றது என்னும் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

1. வளி - காற்று; விசும்பு - ஆகாயம்; பயத்தல் - தோற்றுவித்தல்.
2. நோய் - துன்பம்.
3. மாயம் அன்று - உண்மை; வேய் - மூங்கில்; பயின்று - மிகுந்து.
4. எருவை - கொறுக்கச்சி; நீடிய - நெடிது வளர்ந்த; பெரு வரை - பெரிய மலை.
5. தொன்று உறை - தொன்றுதொட்டு வருகின்ற; துப்பு - பகை; முரண் - மாறுபாடு; சினைஇ - சினந்து.
6. செம்புடை - சிவந்த புற இதழினைக் கொண்ட; அவிழ்ந்த - மலர்ந்த.
7. சிலம்புடன் - மலையகம் எங்கும்.
8. மலர்ந்த - அகன்ற.

தலைவி கூற்று

அகநானூறு 352 **அஞ்சியத்தை மகள் நாகையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைந்தெய்திய பின்றை மணமனைக்கட் சென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவிக்குத் திருமணம் முடிந்தது. தலைவி இல்லற வாழ்வில் ஈடுபட்டாள். ஒருநாள், தோழி தலைவியின் இல்லத்துக்குச் சென்றாள். அவளைக் கண்ட தலைவி மகிழ்ந்து, தோழி மிகவும் முயன்று தன்னைத் தலைவனுடன் சேர்ப்பித்தமைக்குத் தோழியைப் பாராட்டிக் கூறியது.

முடவுமுதிர் பலவின் குடம்மருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்,
பாடுஇமிழ் அருவிப் பாறை மருங்கின்,
ஆடுமயில் முன்னது ஆக, கோடியர்
விழவுகொள் மூதூர் விறலி பின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ,

இன்துணைப் பயிரும் குன்ற நாடன்
குடிநன்கு உடையன்; கூடுநர்ப் பிரியலன்;
கெடுநா மொழியலன்; அன்பினன் என,நீ
வல்ல கூறி வாய்வதின் புணர்த்தோய்;
நல்லை காண்,இனி – காதல்அம் தோழீஇ!–
கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி,
நல்இசை நிறுத்த நயம்வரு பனுவல்,
தொல்இசை நிறீஇய உரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்,
புதுவது புனைந்த திறத்தினும்,
வதுவை நாளினும், இனியனால் எமக்கே.

தெளிவுரை

தன் கூட்டத்திற்குத் தலைவனான கல்லாக் கடுவன், மிக்க வளைவினைக் கொண்ட பலா மரத்தின் குடம் போன்ற பழத்தினைத் தன் கையில் தழுவிக்கொண்டு, அருவிகள் ஒலிக்கின்ற பாறைக்கு அருகில் நின்று கொண்டிருக்கும்; ஆடுகின்ற மயில்கள் ஒன்றன் பின் ஒன்றாய்ப் பின்னே நிற்கும். அந்தக் காட்சி, விழாக் கொண்டாடும் பழமையான ஊரில் விறலி ஆட, அவள் பின்னே தன் கையிலே முழவினை வைத்துக் கொண்டிருப்பவன் முழவினை இசைக்கும் காட்சியினைப் போலத் தோன்றும். அந்த ஆண்குரங்கு இனிய துணையான தன் பெண்குரங்கை அழைக்கும். இத்தகைய காட்சி கொண்ட மலைநாட்டையுடையவன், நம் தலைவன்.

'அவன் உயர்ந்த குடியில் பிறந்தவன்; தன்னுடன் சேர்ந்தவரை விட்டுப் பிரியாத அன்புகொண்டவன்; நாவினால் தீய சொற்களைச் சொல்லாதவன்; நம்பால் அன்பு மிகுந்தவன்' என்று அவன் சிறப்புகளைக் கூறி, என்னை அவனுடன் சேர்த்து வைத்தாய். அவன் என்றும் இனியவன்.

மிக்க வேகமாய்ச் செல்லும் குதிரைகள் பூட்டப்பட்ட நெடிய தேரினையுடைய அதியமான் அஞ்சியின் பழம் புகழை நிலை நிறுத்திய திறமைமிக்க பாணன், நல்ல இசையை வரையறை செய்த இனிமை மிக்க இசை நூலில் கூறியுள்ள எண்ணின் முறைப்படி இயற்றிய பண்ணைக் காட்டிலும், அவன் புதுமை

யாய் இயற்றிய பண்களின் திறத்தைக் காட்டிலும், தலைவன் என்னைத் திருமணம் செய்துகொண்ட அந்த நாளைக் காட்டிலும் இப்பொழுது மிகவும் இனியவனாய் விளங்குகின்றான் (அதனால் தோழியே! நீ மிகவும் நல்லவள்.)

கருத்து

“தோழியே! ‘குன்ற நாடன் உயர்குடியில் பிறந்தவன்; தன்னுடன் சேர்ந்தவரை விட்டுப் பிரியாதவன்; நாவால் கொடுமொழிகளைக் கூறாதவன்; அன்பினன்” என்று நீ அவன் சிறப்புகளைச் சொல்லிப் பொருத்தமாய்க் கூட்டுவித்தனை. நீ கூறியவாறே அவன் என்னை மணம் செய்துகொண்ட அந்த நாளைக் காட்டிலும் என்றும் எனக்கு அவன் இனியனாகவே உள்ளான். ஆதலின், நீ வாழ்த்துக்குரியவள்” என்று மகிழ்வு மிகுதியால் தோழியைத் தலைவி பாராட்டுகிறாள்.

உள்ளுறை

தன் சுற்றத்திற்குத் தலைவனாகிய கடுவன் பலாப்பழத்தைத் தழுவிக்கொண்டு தன் கண்அனைய மந்தியை அழைக்கும் என்பது, சுற்றத்தார் பலரையும் பாதுகாத்துத் தலைவிபால் பேரன்பு கொண்டவனாய்த் தலைவன் இருப்பான் என்னும் உள்ளுறைப் பொருளைக் கொண்டது.

சொற்பொருள்

1. முடவு - வளைந்த; குடம் மருள் - குடம் போன்ற.
2. கிளை - சுற்றம்; கடுவன் - ஆண்குரங்கு.
3. இமிழ் - ஒலிக்கும்; மருங்கின் - அருகில்.
4. கோடியர் - கூத்தர்.
5. விறலி - ஆடுமகள்; பின்றை - பின்னே.
6. முழவன் - முழவினை உடையவன்; தழீஇ - தழுவிக்கொண்டு.
7. இன்துணை - இனிய துணையாகிய பெண்குரங்கை; பயிரும் - அழைக்கும்.
8. கூடுநர் – சேர்ந்தோர்.
9. கெடுநா - தீய சொல்; மொழியலன் - சொல்ல மாட்டான்.
10. வல்ல - திறமை, சிறப்பு; வாய்வதின் - பொருத்தமுற.
11. நல்லை - நல்லவள்.

12. கடும்பரி - விரைந்தோடும் குதிரை; அஞ்சி - அதியமான் அஞ்சி, வள்ளல்களுள் ஒருவன்.
13. நல் இசை நிறுத்த - நல்ல இசையை வரையறை செய்த; நயம்வரு - இனிமைமிக்க; பனுவல் - இசை நூல்.
14. தொல் இசை - பழம் புகழ்; நிறீஇய - நிலைபெறச் செய்த; பாண்மகன் - பாணன்.
15. எண்ணு முறை - எண்ணின் முறைப்படி; பண்ணினுள்ளும் - பண்களைக் காட்டிலும்.
16. புதுவது புனைந்த - அவன் புதுமையாய் இயற்றிய; திறத்தினும் - பண்களின் திறத்தைக் காட்டினும்.
17. வதுவை நாள் - திருமண நாள்; இனியன் - இனியனாய் உள்ளான்.

தோழி கூற்று

குறுந்தொகை 178 **நெடும்பல்லியத்தை**

திணை : மருதம்

கூற்று

கடிநகர் புக்க தோழி, தலைமகன் புணர்ச்சி விதும்பல் கண்டு, முன்னர்க் களவுக்காலத்து ஒழுகலாற்றினை நினைந்து அழிந்து கூறியது. (கடிநகர் - திருமணமான காதலர்கள் தனியே இல்லறம் நடத்தும் மனை.)

கூற்று விளக்கம்

தலைவியும் தலைவனும் வாழும் மனைக்கு அவர்களோடு சென்ற தோழி, அளாவுதலில் தலைவனுக்கிருக்கும் விரைவைக் கண்டு, 'இத்தகைய வேட்கை கொண்டோர் களவுக்காலத்தே எவ்வாறு ஆற்றியிருந்தனரோ?' என்று இரங்கித் தன்னுள் கூறிக்கொண்டது.

அயிரை பரந்த அம்தண் பழனத்து
ஏந்துஎழில் மலர தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கு,இவள்
இடைமுலைக் கிடந்தும், நடுங்கல் ஆனீர்;
தொழுதுகாண் பிறையின் தோன்றி, யாம்நுமக்கு
அரியம் ஆகிய காலைப்
பெரிய நோன்றனிர்; நோகோ யானே.

தெளிவுரை

அயிரை மீன்கள் நிறைந்த அழகிய நீர்நிலையில், அழகும் உள்துளையும் வாய்ந்த திரண்ட தண்டுகளைக்கொண்ட ஆம்பல் பூக்களைப் பறிப்பவர்கள், நீர்க்குள்ளே இருந்தபோதிலும், வேட்கை கொண்டு நீர் அருந்த விரும்புவர். அதுபோல நீயிர் (தலைவன்) இவளது முலையிடையே தழுவிக் கிடந்தும், கணப் பொழுதும் பிரிவதற்கு அஞ்சி நடுங்குவீராயினீர்! உடனிருக்கும் போதே சிறு பிரிவிற்கு வருந்தும் அத்துணைக் காமவேட்கை கொண்ட நீவிர், களவுக்காலத்தில், மாதம் ஒருமுறை மட்டும் தேடிக் கண்டு தொழும் மூன்றாம் பிறையைப் போலக் காண்பதற்கு அரியராய் நாங்கள் இருந்தபோது எப்படித்தான் பொறுமை காத்தீரோ? உமது முந்தைய நிலையை நினைந்து நான் இப்போது வருந்துகின்றேன்.

(தலைவன் தலைவியரின் அன்பைத் தோழி வியந்து தன்னுள் கூறிக்கொள்கின்றாள்.)

கருத்து

தலைவனும் தலைவியும் பிரியாது வாழும் பேரன்பினராய் இருக்கின்றனர்.

விளக்கம்

இடையறாது உடனுறையும் வாய்ப்பு இருந்தும் அளவு கடந்த வேட்கையாலே விரைவுபடுகின்றீர்; இத்தகைய நீவிர், களவுக் காலத்தில் சேர்ந்திருக்கும் பொழுதைவிடப் பிரிந்திருக்கும் பொழுதே மிகுதியாயிருந்தபோது என்ன பாடு பட்டீரோ என்று நினைந்து தோழி வருந்தித் தன்னுள் கூறிக்கொள்கிறாள்.

சொற்பொருள்

1. அயிரை - அயிரை மீன்; அம் - அழகிய; தண் - குளிர்ந்த; பழனம் - வயல்.
2. ஏந்து - மிகுந்த; தூம்பு - உள்துளை; திரள்கால் - திரட்சி பொருந்திய தண்டு.
3. குறுநர் - பறிப்போர்; நீர் - பருகுதற்குரிய நீர்; வேட்டாங்கு - வேட்கை கொண்டதுபோல.
4. இடைமுலை - முலை இடை.

5. தொழுதுகாண் பிறை - கண்டு தொழும் மூன்றாம் பிறை.
6. அரியம் - (காண்பதற்கு) அரியவர்; காலை - காலம்.
7. நோன்றனிர் - பொறுத்திருந்தீர்; நோகு - (நான்) வருந்துகின்றேன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 201 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

'கடிநகர் புக்கு வேறுபடாது நன்கு ஆற்றினாய்' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. (வரைந்துகொள்ளும்வரையில் வேறுபடாமல் எங்ஙனம் ஆற்றியிருந்தாய்.)

கூற்று விளக்கம்

மணந்துகொண்டு இல்லறம் நடத்தும் தலைவியைக் கண்டுவர அவள் தோழி சென்றாள். தலைவி, தன் கணவனிடத்திலே கொண்டிருக்கும் ஆர்வத்தைக் கண்ட தோழி, 'இவ்வளவு ஆர்வத்தினைத் தலைவன் வரைந்துகொள்ளும் வரையில் எப்படிப் பொறுத்திருந்தனை?' என்று கேட்க, அதற்குத் தலைவி கூறியது.

அமிழ்தம் உண்கநம் அயல்இல் ஆட்டி,
பால்கலப் பன்ன தேக்கொக்கு அருந்துபு,
நீல மென்சிறை வள்உகிர்ப் பறவை
நெல்லி அம்புளி மாந்தி, அயலது
முள்இல் அம்பணை மூங்கிலில் தூங்கும்
கழைநிவந்து ஓங்கிய சோலை
மலைகெழு நாடனை வரும்என் றோளே!

தெளிவுரை

தோழியே! சர்க்கரையிடப்பட்டுக் கலக்கப்பட்ட பால் போன்ற இனிமையினைக் கொண்ட தேமாம் பழத்தினைக் கரிய மெல்லிய சிறகையும் கூரிய நகங்களையும் கொண்ட வௌவால் தின்றது; அதற்குப் பின் நெல்லியின் புளிப்பான காயினையும்

உண்டது; அதற்குப் பக்கத்திலிருந்த முள்ளற்ற அழகிய பருத்த மூங்கிலில் தொங்கியபடி தூங்கியது. இத்தகைய காட்சி பொருந்திய மலைநாட்டினையுடையவன், நம் தலைவன். வரைவுக்குரிய ஏற்பாடுகளோடு அவன் வரவிருக்கிறான் என்று நம் அடுத்த வீட்டுத் தலைவி உரைத்தாள். அப்பெருமகள் சாவா நிலை தரும் அமுதம் உண்க! (தலைவன் வரைவொடு வருதலை முன்கூட்டி அறிவித்த அயல்மனைக் கிழத்தியைத் தலைவி, அளவு கடந்த மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறாள்.)

கருத்து

தலைவன் வரைவுக்குரிய ஏற்பாடுகளோடு வரவிருப்பதை நம் அயலகத்துப் பெரியவள் கூறினாள். அவள் கூறியது நடந்ததால்தான் இன்று இத்தகைய இன்பத்தைத் துய்த்திருக்கிறேன்.

இறைச்சி

இனிய தேமாம் பழத்தை உண்ட வெளவால், இடையே புளிப்புச்சுவை கொண்ட நெல்லிக்காயையும் உண்டு, அதற்குப் பின் முள் முதலிய இடையூறில்லாத மூங்கில் மரத்தில் தூங்கும் என்னும் தொடர், தலைவன் முதலில் களவில் இன்பம் நுகர்ந்து, இடையே நேர்ந்த தடைகளால் ஏற்பட்ட துன்பத்தையும் ஏற்று, இப்பொழுது தலைவியை வரைந்துகொண்டு இடையூறற்ற இன்பம் துய்க்கும் நிலையை அடைந்துள்ளான் என்னும் இறைச்சிப் பொருள் கொண்டது.

சொற்பொருள்

1. அமிழ்தம் - சாவா மருந்து; அயல் இல் - அடுத்த வீடு; ஆட்டி - உரியவள் (பெரியவள்).
2. தேக் கொக்கு - தேமாம்பழம்.
3. மென்சிறை - மெல்லிய சிறகு; வள்உகிர் - கூரிய நகம்; பறவை - வெளவால்.
4. புளி - புளிப்பான; நெல்லி - நெல்லிக்காய்; மாந்தி - உண்டு; அயலது - அருகேயுள்ள.
5. முள் இல் - முள் இல்லாத; அம்பணை - அழகிய பருத்த.
6. கழை - மூங்கில் கோல்கள்; நிவந்து - உயர்ந்து.
7. கெழு - பொருந்திய; வரும் என்றோள் - (வரைவுக்குரிய ஏற்பாடு களோடு) வருவான் என்று கூறியவள்.

தலைவி கூற்று

குறுந்தொகை 193 **அரிசில் கிழார்**

திணை : முல்லை

கூற்று

தோழி கடிநகர் புக்கு, 'நலம் தொலையாமே நன்கு ஆற்றினாய்' என்றாட்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனை மணம் புரிந்து இல்லறம் நடத்திக்கொண்டிருக்கும் மனைக்குச் சென்ற தோழி, தலைவியிடம், 'உன்னைத் தலைவன் மணக்கும்வரை நீ உன் மேனிநலம் கெடாதவாறு பொறுத்திருந்தாய்' என்று பாராட்டினாள். அதற்கு மறுமொழியாய்த் தலைவி கூறியது.

மட்டம் பெய்த மணிக்கலத்து அன்ன,
இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை,
தட்டைப் பறையின் கறங்கும் நாடன்
தொல்லைத் திங்கள் நெடுவெண் ணிலவின்
மணந்தனன் மன்எம் தோளே;
இன்றும் முல்லை முகைநா றும்மே.

தெளிவுரை

தோழி! கள்ளினைப் பெய்து வைத்த நீலக்குப்பிகளைப் போன்று, குறுகிய வாயினைக் கொண்ட சுனை தோன்றும். அச்சுனைகளிலுள்ள பிளந்த வாயைக் கொண்ட தேரைகள் (கிளிகடி கருவியாகிய) தட்டைப் பறையைப் போல ஒலிக்கும். இத்தகைய காட்சியுடைய நாட்டிற்கு உரியவன், நம் தலைவன். அவன் களவுக் காலமாகிய முந்தைய மாதத்தில் நெடிய வெண்ணிலாப் பொழுதில் என் நீண்ட தோள்களைத் தழுவிக் கூடினான். அப்போது அவன் மேனியில் அணிந்திருந்த முல்லைமொட்டின் மணம் இன்றும் என் மேனியில் மணக்கிறது.

கருத்து

தலைவன் ஒருமுறை தழுவிய பின் பல நாள் பிரிந்திருந்தாலும் புணர்ந்த போது பெற்ற இன்பத்தை நினைந்து நினைந்து ஆற்றினேன் என்கிறாள், தலைவி.

குறிப்பு

தலைவன் களவுக்காலத்தில் செய்த இன்னருள் இன்றளவும் என்னைப் பாதுகாக்கிறது.

சொற்பொருள்

1. மட்டம் - கள்; மணிக்கலம் - நீலக்குப்பி.
2. இட்டு - குறுகிய, சிறிய; பகுவாய் - பிளந்த வாயினைக் கொண்ட
3. தட்டைப் பறை - கிளிகடி கருவி; கறங்கும் - ஒலிக்கும்.
4. தொல்லை - பழைய.
5. மணந்தனன் - தழுவினான்.
6. முகை - மொட்டின்; நாறும் - மணக்கும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 228 **வள்ளுவர் பெருஞ்சாத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

'கடிநகர் வேறுபடாது நன்கு ஆற்றினாய்' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

'தலைவன் நெடுந்தூரத்திலுள்ள நாட்டினனாயிருந்தும் உன்னை மணந்து கொள்வதற்கு முன் நீ எவ்வாறு ஆற்றியிருந்தாய்' என்று கேட்ட தோழியிடம் தலைவி கூறியது.

வீழ்தாழ் தாழை ஊழ்உறு கொழுமுகை,
குருகுஉளர் இறகின், விரிபுதோடு அவிழும்
கானல் நண்ணிய சிறுகுடி முன்றில்,
திரைவந்து பெயரும் என்ப,நத் துறந்து
நெடுஞ்சேண் நாட்டார் ஆயினும்,
நெஞ்சிற்கு அணியரே, தண்கடல் நாட்டே.

தெளிவுரை

தோழியே! நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் நெடுந்தொலைவில் உள்ள நாட்டில் இருந்தாலும், அவர் நம் நெஞ்சிற்கு

அருகிலேயே இருந்தார். விழுதுகள் வீழ்ந்திருக்கும் (விட்டிருக்கும்) தாழை மரங்களின் முதிர்ந்த வளமையான மலர் மொட்டு, நாரைகள் கோதுகின்ற இறகைப்போல் மலர்ந்திருக்கும் கடற்கரைச் சோலையிலே அமைந்திருக்கும் நம் சிற்றூருக்கு அருகே அவர் நாட்டின் தண்ணிய கடல் அலைகள் வந்து வந்து திரும்பும் என்பர்.

கருத்து

சேய்மையிலுள்ள அவர் நாட்டுக் கடலலை நம் சிற்றூருக்கு அருகே வந்து வந்து திரும்புவதுபோல அவர் தொலைவில் இருப்பவராயினும், நம் நெஞ்சருகே வந்து வந்து இன்பமூட்டினராதலின் ஆற்றியிருந்தேன்.

குறிப்பு

அவர் நாட்டு அலைகளைக் கண்டு அவரே வந்தது போன்று எண்ணி ஆற்றியிருந்தேன். (தாழை மலரைக் குருகெனக் கருதுவதுபோல.)

சொற்பொருள்

1. வீழ் - விழுது; தாழ் - தாழ்ந்த; தாழை - தாழை மரம்; ஊழ் உறு - முதிர்ந்த; கொழு – கொழுவிய; முகை - அரும்பு.
2. குருகு - நாரை; உளர் - கோதுகின்ற; இறகின் - சிறகைப் போல; விரிபு தோடு - விரிந்த மடல்கள்; அவிழும் - மலர்கின்ற.
3. நண்ணிய - பொருந்திய; முன்றில் - முன்னிடத்தில்.
4. திரை - அலை; வந்து பெயரும் - வந்து திரும்பும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 6 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

களவினிற் பல நாள் ஒழுகி வந்து வரைந்துகொண்ட தலைமகன் தோழியோடு சொல்லாடி, 'யான் வரையாது ஒழுகுகின்ற நாள் நீயிர் இங்கு இழைத்திருந்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியோடு பல காலம் களவொழுக்கம் மேற்கொண் டிருந்தான்; பின்பு தலைவியை மணந்தான். மணத்திற்குப் பின் ஒரு நாள் தோழியோடு உரையாடும்பொழுது, 'நான் மணம் புரியாது களவொழுக் கத்தை நீட்டித்திருந்தபொழுது, நீங்கள் இங்கே எவ்வாறு இருந்தீர்கள்?' எனக் கேட்டான். அதற்குத் தோழி கூறியது.

'வாழி ஆதன், வாழி அவினி!
வேந்துபகை தணிக! ஆண்டுபல நந்துக!'
எனவேட் டோளே, யாயே; யாமே,
'மலர்ந்த பொய்கை, முகைந்த தாமரைத்
தண்துறை ஊரன் வரைக!
எந்தையும் கொடுக்க! எனவேட் டேமே.

தெளிவுரை

உம்மைப் பார்த்த அன்றே நீ தன்னை மணந்துகொண்டாய் எனக் கருதி எம் தலைவி, "எம் மன்னன் ஆதன் அவினி வாழ்க! அவன் பகை தணிக! மன்னன் வாழ்நாள் நீள்க!" என்று தனக்குரிய அறநெறியே வேண்டி ஒழுகினாள். (தனக்கியல்பான நலன்களையே வேண்டுவாள்போலக் காட்டி, நின் பிரிவால் எய்திய துயரத்தை மறைத்து ஒழுகிவந்தாள்.)

அவள் துயர் நிலையை ஊகித்தறிந்த தோழியராகிய நாங்களோ, 'அகன்ற பொய்கையில் மலர்ந்த தாமரைகளைக் கொண்ட குளிர்ச்சி பொருந்திய துறையையுடைய ஊரன் விரைந்து வந்து தலைவியைத் திருமணம் புரிந்துகொள்ள வேண்டும்; அவன் தமர் மகட்பேசி வரும்போது எம் தந்தையும் உவந்து மகட் கொடை நேர வேண்டும் என்று மிகவும் விரும்பியிருந்தோம்!

கருத்து

உன்னை எதிர்ப்பட்ட அன்றே நீ தன்னை மணந்ததாய்க் கருதிக்கொண்டு இல்லறத்திற்கு வேண்டியவற்றை விரும்பியதல்லது தலைவி பிறிதொன்றும் நினைந்திலள்; தலைவனாகிய நீ விரைந்து தலைவியை மணந்துகொள்ள வேண்டும்; எங்கள் தந்தையும் மகட்கொடை நேரவேண்டுமென்று நாங்கள் விரும்பியிருந்தோம்!

குறிப்பு

'பொய்கையில் தாமரை மலர்ந்தது' என்று கூறுவதன்மூலம், ஊரில் அலர் எழுந்தது என்பதைக் குறிப்பால் புலப்படுத்தி, விரைந்து மணந்துகொள்ள வேண்டும் எனத் தாங்கள் கருதியிருந்ததாய்த் தோழி கூறுகின்றாள்.

விளக்கம்

ஆதன் வாழியாதன் என்னும் சேரமான், கபிலரால் பதிற்றுப் பத்தில் பாடப்பெற்ற வள்ளற்பெருமான்; இவனைச் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்றும் வழங்குவர்.

சொற்பொருள்

2. ஆண்டு பல நந்துக - அரசன் ஆட்சி செய்யும் ஆண்டுகள் பலவாகுக.
3. வேட்டோளே - வேண்டினாள்; யாய் - தலைவி.
4. முகைந்த - அரும்பிய.
5. வரைக - (தலைவியை) மணம் செய்துகொள்ளட்டும்.
6. வேட்டேம் - விரும்பியிருந்தோம்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 7 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

களவினிற் பலநாள் ஒழுகி வந்து வரைந்துகொண்ட தலைமகன் தோழியோடு சொல்லாடி, 'யான் வரையாது ஒழுகுகின்ற நாள் நீயிர் இழைத்திருந்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கம் மேற்கொண்டிருந்த தலைவன், தலைவியை மணந்து இல்லறம் பேணி இன்புற்றிருந்தான். அப்போது ஒரு நாள் தோழியோடு உரையாடும்பொழுது, 'நான் மணம் புரியாது களவொழுக்கத்தை நீட்டித்திருந்தபொழுது, நீங்கள் எவ்வாறு இருந்தீர்கள்?' எனக் கேட்டான். அதற்குத் தோழி கூறியது.

'வாழி ஆதன்; வாழி அவினி!
அறம்நனி சிறக்க; அல்லது கெடுக!'
எனவேட் டோளே, யாயே; யாமே,
உளைப்பூ மருதத்துக் கிளைக்குருகு இருக்கும்
தண்துறை ஊரன் தன்ஊர்க்
கொண்டனன் செல்க! எனவேட் டேமே.

தெளிவுரை

எம் தலைவி, 'ஆதன் புகழ் வாழ்க! அவினி மன்னன் வாழ்க! அறங்கள் மிக்கு ஓங்குக! தீவினை அறவே கெட்டொழிக' என்று மிகவும் விரும்பி, உன்னைப் பிரிந்த துயரைத் தன்னுள் மறைத்து அலர் எழாமல் காத்துக்கொண்டனள்.

நாங்களோ (எம் தலைவியின் இன்னா நிலைக்கு இரங்கி) பஞ்சு போன்ற மென்மை வாய்ந்த பூக்களைக் கொண்ட மருத மரத்தில் குருகுகள் தம் இனம் சூழக் குழுமியிருக்கும் குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறைக்கு உரியவனான தலைவன், தலைவியைத் தன் ஊருக்குக் கொண்டு செல்லட்டும் என விரும்பியிருந்தோம்.

கருத்து

தனக்கியல்பான நற்பண்புகளைக் காட்டி, நீ பிரிந்தமையால் ஏற்பட்ட பெருந்துயரைத் தலைவி மிகவும் திறம்பட மறைத்தனள்.

களவு வெளிப்படின் அலர் தோன்றும் என்றும், அயலார் மகட்பேசி வரக்கூடும் என்றும் அஞ்சிய நாங்கள் தலைவியை நீ உன்னுடன் கொண்டு செல்ல வேண்டும் என்று விரும்பினோம்.

குறிப்பு

குருகு தங்கியிருப்பதற்கு மருத மரம் ஆதாரம் ஆனாற்போலத் தலைவி வாழ்வுக்குத் தலைவன் இன்றியமையாதவன் என்பது உட்குறிப்பு.

சொற்பொருள்

2. நனி - மிகவும்; அல்லது - அறம் அல்லாதவை.
3. வேட்டோள் - விரும்பியிருந்தாள்.
4. உளைப்பூ - உள்ளே துய் உள்ள பூ, பஞ்சு போன்ற மென்மை வாய்ந்த பூ; மருதம் - ஒரு மரம்; குருகு - நாரை.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 8 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

களவினிற் பலநாள் ஒழுகி வந்து வரைந்துகொண்ட தலைமகன் தோழியோடு சொல்லாடி, 'யான் வரையாது ஒழுகுகின்ற நாள் நீயிர் இழைத்திருந்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் நெடுநாள் களவொழுக்கத்தையே மேற்கொண்டு வந்தான்; பின்பு தலைவியை மணந்தான். மணம் முடிந்த பின் ஒரு நாள் தோழியோடு உரையாடும்பொழுது தலைவன், 'நான் மணம் புரியாது களவொழுக்கத்தை நீட்டித்திருந்தபொழுது, நீங்கள் இங்கே எவ்வாறு இருந்தீர்கள்?' எனக் கேட்டான். அதற்குத் தோழி கூறியது.

'வாழி ஆதன்; வாழி அவினி!
அரசு முறைசெய்க! களவுஇல் ஆகுக!'
எனவேட் டோளே, யாயே; யாமே
'அலங்குசினை மாஅத்து அணிமயில் இருக்கும்
பூக்கஞல் ஊரன் சூள்,இவண்
வாய்ப்பது ஆக!' எனவேட் டேமே.

தெளிவுரை

எம் தலைவி, 'செல்வக்கடுங்கோ வாழியாதன் கீர்த்தி என்றென்றும் நின்று நிலவுக! அவன் வழித்தோன்றலாகிய ஆதன் அவினி மன்னன் நீடு வாழ்க! அரசன் செங்கோல் முறைமை செய்க! களவு முதலிய வஞ்ச நெறிகள் இல்லாவாகுக!' என விரும்பியிருத்தலின்மூலம் தனது ஆற்றாமைத் துயரை மறைத்திருந்தனள்.

அவளது இன்னா நிலைக்கு இரங்கிய நாங்களோ, அசைகின்ற கிளைகளைக் கொண்ட மாமரத்தில் அழகிய மயில்கள் வீற்றிருக்கும் பூக்கள் மிக்க மருதநிலத் தலைவன், தலைவியைத் தலைநாள் சந்தித்தபோது செய்த சூளுறவு இப்போது மெய்யாகட்டும் என்று மிகவும் விரும்பியிருந்தோம்.

கருத்து

தலைவி, மன்னனை வாழ்த்தி, நாட்டுநலனை நினைந்து ஆற்றியிருந்தாள். நாங்களோ, தலைவன் முன்பு செய்த வாக்குறுதி இப்போது மெய்யாகட்டும் என்றிருந்தோம்.

உள்ளுறை

மாமரத்தில் அணிமயில் வீற்றிருக்கும் என்னும் தொடர், சுற்றம் கெழுமிய தலைவனுடைய அறமனையின் விளக்காகத் தலைவி வீற்றிருந்து அணி செய்வாள் என்னும் உள்ளுறைப் பொருளைத் தருகிறது.

குறிப்பு

தலைவியை முதற்கண் சந்தித்த வேளையில், 'நின்னைப் பிரியேன்; பிரியின் உயிர் தரியேன்' என அவள் முன் கையைப் பற்றித் தெய்வத்தை முன்நிறுத்தித் தலைவன் உறுதிமொழி கூறியதை ஆயத்தார் நினைவு கூர்ந்தனர்.

சொற்பொருள்

2. அரசுமுறை - செங்கோல் ஆட்சி; களவு - திருட்டு.
4. அலங்குதல் - அசைதல்; சினை - கிளை; மாஅத்து - மாமரத்தில்; அணிமயில் - அழகிய மயில்.
5. பூக்கஞல் - பூக்கள் மிக்க; சூள் - சூளுறவு, உறுதிமொழி; இவண் - இங்கே.
6. வாய்ப்பதாக - வாய்க்கட்டும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 9 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

களவினிற் பலநாள் ஒழுகி வந்து வரைந்துகொண்ட தலைமகன் தோழியோடு சொல்லாடி, 'யான் வரையாது ஒழுகுகின்ற நாள் நீயிர் இழைத்திருந்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கம் மேற்கொண்டிருந்த தலைவன், பின்பு தலைவியை மணந்து இல்லறம் பூண்டான்; அப்போது தோழியோடு உரையாடும் பொழுது, 'நான் மணம் புரியாது களவொழுக்கத்தை நீட்டித்திருந்தபொழுது, நீங்கள் இங்கே எவ்வாறு இருந்தீர்கள்?' எனக் கேட்டான். அதற்குத் தோழி கூறியது.

வாழி ஆதன்; வாழி அவினி!
நன்றுபெரிது சிறக்க! தீது,இல் லாகுக!
எனவேட் டோளே, யாயே; யாமே,
'கயல்,ஆர் நாரை போர்வில் சேக்கும்
தண்துறை ஊரன் கேண்மை
அம்பல் ஆகற்க!' எனவேட் டேமே.

தெளிவுரை

"ஆதன் என்னும் சேரமான் குடிமுதல்வனின் புகழ் நிலைபெறுக! அவன் வழித்தோன்றலாகிய ஆதனவினி என்னும் நம் செங்கோல் வேந்தன் பல்லாண்டு வாழ்க! நாட்டில் நன்மை அனைத்தும் மிகுந்த சிறப்பினைப் பெறுக! தீமை முற்றிலும் தேய்க" என்று தன் இயல்பிற்கேற்பனவற்றையே தலைவி விரும்பியிருந்தாள். நாங்கள் மட்டும், "கயல்மீனை இரையாய்த் தேர்ந்துண்ட நாரைகள் நெற்போரில் இனிதே தங்கியிருக்கும் குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறையையுடைய ஊருக்குரியவன், தலைவன். அவன் உறவு, அவன், வரையும்வரை பிறர் பழிக்கும், 'அம்பலாய்' ஆகாதிருக்கட்டும் என வேண்டினேம்!

(தலைவன் தலைவி ஆகியோரின் களவொழுக்கத்தினைச் சிலரே அறிந்து தமக்குள் பேசுதலை, 'அம்பல்' என்றும், அதுவே பலராலும் வெளிப்படப் பேசப்படின், 'அலர்' என்றும் கூறப் படும்.)

கருத்து

தலைவி தன் இயல்புக்கேற்ப அரச நலமும் நாட்டு நலமும் நினைந்து ஆற்றியிருந்தாள். நாங்களோ ஊரில் பழிச்சொல் எழாமுன் தலைவன் மணந்துகொள்வானாக என்று எண்ணியிருந்தோம்.

உள்ளுறை

தலைவியின் நலனுண்டவனாகிய தலைவன் அவளை முறைப்படி மணந்து வாழ்தலைப்பற்றி எண்ணாது, தன் மனை யகத்தே வாளாவிருந்தனன் என்பதை, 'கயல்மீனை உண்ட நாரை நெற்போரில் தங்கும்' என்னும் தொடர் உணர்த்துகிறது.

குறிப்பு

நெற்போரிலே தங்கியிருந்தாலும் நாரை உண்ட புலால் நாற்றம் வெளிப் படுதல்போல், தலைவன் தன் களவுறவை மறைத்துத் தன் வீட்டிலேயே ஒழுகினும், அது புறத்தார்க்குப் புலப்படும் அம்பலாதலை அவனாலும் தடுக்க இயலாது. ஆதலின், 'அவன் விரைவாய் வந்து மணங்கொள் ளட்டும்' என்று வேண்டியிருந்தோம்.

சொற்பொருள்

2. நன்று - நன்மை; தீது - தீமை.
4. கயல்ஆர் - கயல் மீனை உண்ணும்; போர்வு - நெற்போர்; சேக்கும் - தங்கும்.
5. கேண்மை - நட்பு.
6. அம்பல் - பழி.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 10 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

களவினிற் பலநாள் ஒழுகி வந்து வரைந்துகொண்ட தலைமகன் தோழியோடு சொல்லாடி, 'யான் வரையாது ஒழுகுகின்ற நாள் நீயிர் இழைத்திருந்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

நெடுங்காலம் களவொழுக்கம் மேற்கொண்டிருந்த தலைவன், தலைவியை மணந்தான். மணம் முடிந்த பின் அவன் ஒரு நாள் தோழி யோடு உரையாடும்பொழுது, 'நான் மணம் புரியாது களவொழுக்கத்தை

நீட்டித்திருந்தபொழுது, நீங்கள் இங்கே எவ்வாறு இருந்தீர்கள்?' எனக் கேட்டான். அதற்குத் தோழி கூறியது.

வாழி ஆதன்; வாழி அவினி!
மாரி வாய்க்க; வளம்நனி சிறக்க!
எனவேட் டோளே, யாயே; யாமே,
'பூத்த மாஅத்து, புலால்அம் சிறுமீன்,
தண்துறை ஊரன் தன்னொடு
கொண்டனன் செல்க' எனவேட் டேமே.

தெளிவுரை

தலைவி, 'ஆதன் வாழ்க; அவினி வாழ்க! மழை தவறாமல் பொழிக! எல்லா வளமும் மிகவும் சிறக்க!' என விரும்பியவளாய்ப் பிரிவாற்றாமைப் பெருந்துயரை அயலார் அறியாதவாறு தன்னுள் மறைத்துக்கொண்டிருந்தாள்.

அவள் இன்னா நிலைக்குப் பரிந்து தோழியராகிய நாங்கள், பூத்துக் குலுங்கும் மாமரமும் புலால் கமழும் சிறு மீனும் கொண்ட குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறையையுடைய தலைவன் (தலைவிக்குத் தமர் ஒரோவழி வரைவுடன்படாராயினும் அவளை அவர் அறியாமல்) தன்னொடு அழைத்துக்கொண்டு தன்னூர் செல்லட்டும் என்று மிகவும் விரும்பியிருந்தோம்!

கருத்து

மன்னன் ஆட்சி சிறந்து, மழை குறைவின்றிப் பெய்து, உலகம் நலமுற்று வாழ வேண்டுமெனத் தலைவி எண்ணியிருந்தாள். நாங்களோ, ஒருவேளை எம் தமர் மகட்கொடை நேராரெனின் தலைவியைத் தலைவன் தன் ஊர்க்கு அழைத்துச் சென்று மணந்துகொள்ள வேண்டும் என்று விரும்பியிருந்தோம்.

குறிப்பு

மலர்ந்து மணம் கமழும் மாமரத்தையும் புலால் நாறும் சிறுமீனையும் ஒருங்கே கொண்ட தண்துறை என்பதில், 'இவ்வூரிலே உம்மை அகமலர்ந்து வரவேற்கும் நாங்களும் உளேம்; அலர் தூற்றும் சிறுபுன்மாக்களும் உள்ளனர். ஆதலால், தலைவன் விரைந்து தலைவியை உடன் அழைத்துச் செல்லட்டும் என்று விரும்பினோம்' என்றாள், தோழி.

சொற்பொருள்

2. மாரி - மழை; நனி - மிகவும்.
4. மா - மாமரம்; புலால் - ஊன் நாற்றம்.
6. கொண்டனன் - அழைத்துக்கொண்டு.

தோழி கூற்று

அகநானூறு 400 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வரைந்து எய்திய பின்றைத் தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

முன்னர்க் களவொழுக்கம் நிகழ்ந்தபோது அலர் கூறித் தூற்றிய ஊர், தலைவன் மணம் புரிய வந்தபோது மகிழ்ச்சியோடு வரவேற்றதனைத் தோழி தலைவியிடம் கூறியது.

நகைநன்று அம்ம தானே, 'அவனொடு,
மனைஇறந்து அல்கினும் அலர்'என நயந்து,
கானல் அல்கிய நம்களவு அகல,
பல்புரிந்து இயறல் உற்ற நல்வினை,
நூல்அமை பிறப்பின், நீல உத்தி,
கொய்ம்மயிர் எருத்தம் பிணர்படப் பெருகி,
நெய்ம்மிதி முனைஇய கொழுஞ்சோற்று ஆர்கை
நிரல்இயைந்து ஒன்றிய செலவின், செந்தினைக்
குரல்வார்ந் தன்ன குவவுத்தலை, நல்நான்கு
வீங்குசுவல் மொசியத் தாங்குநுகம் தழீஇ,
பூம்பொறிப் பல்படை ஒலிப்பப் பூட்டி,
மதியுடை வலவன் ஏவலின் இகுதுறைப்
புனல்பாய்ந் தன்ன வாமான் திண்தேர்க்
கணைகழிந் தன்ன நோன்கால் வண்பரி,

பால்கண் டன்ன ஊதை வெண்மணல்
கால்கண் டன்ன வழிபடப் போகி,
அயிர்ச்சேற்று அள்ளல் அழுவத்து ஆங்கண்,
இருள்நீர் இட்டுச் சுரம்நீந்தி, துறைகெழு
மெல்லம் புலம்பன் வந்த ஞான்றை,
பூமலி இருங்கழித் துயல்வரும் அடையொடு,
நேமி தந்த நெடுநீர் நெய்தல்
விளையா இளங்கள் நாற, பலவுடன்
பொதிஅவிழ் தண்மலர் கண்டு, நன்றும்
புதுவது ஆகின்று அம்ம– பழவிறல்,
பாடுஎழுந்து இரங்கும் முந்நீர்,
நீடுஇரும் பெண்ணை,நம் அழுங்கல் ஊரே!

தெளிவுரை

தலைவியே! தேரில் பூட்டப்பெற்றிருந்த குதிரைகள் நான்கும் புரவி நூல் கூறும் இலக்கண முறைப்படி அமைந்தவையாகும். பிறப்பிலே நீல மணியாலாகிய நெற்றிச்சுட்டியினையும், கொய்யப்பட்ட மயிரடர்ந்த பிடரியையும் கொண்டனவாகும். நெய் பெய்து மிதித்து உண்டாக்கிய கவளத்தை வெறுத்துக் கொழுமையான சோற்றை உண்ட அக்குதிரைகள் வரிசையாய்ப் பொருந்தி ஒரே விதமாய் ஓடும் ஓட்டத்தினைக் கொண்டவை யாகும். செவ்விய தினைக்கதிர் நீண்டு வளர்ந்தாற்போன்ற வளைந்த தலையினைக் கொண்ட அவற்றை நுகத்தடியில் பூட்டி அறிவுமிக்க பாகன் செலுத்த, அக்குதிரைகளும் தாழ்ந்த துறையில் பாய்ந்து செல்லும் நீரைப் போலத் தாவிச் சென்றன.

அம்பு பாய்ந்தாற்போன்று தாவிச் சென்ற அக்குதிரைகள் பால் போன்ற வெண்மையான மணலில் வாய்க்கால்களைப் போலச் சுவடு உண்டாகுமாறு காற்றெனக் கடுகிச் சென்றன.

இவ்வாறாய், நுண்ணிய குழம்பாலாகிய சேற்றுப்பரப்பினை யும், இருண்ட நீரைக் கொண்ட குறுகிய உப்பங்கழிகளையும் கடந்து நம் தலைவன் தேர் வந்துகொண்டிருந்தது. அத்தேரில் தலைவன், கடல் தந்த நெய்தற்பூக்களுடன் ஏனைய பூக்களையும் சூடிக்கொண்டு உன்னை மணந்துகொள்ள வந்து சேர்ந்தான்.

அதனால், வீட்டைக் கடந்து சென்று சிறிது நேரம் வெளியே தங்கினாலும் பழி உண்டாகும் என்ற அச்சத்துடன் கானற் சோலைக்குச் சென்று தலைவனுடன் நாம் கொண்ட களவொழுக்கம் நீங்குமாறு, இப்போது நமக்கு நல்வினைப் பயனும் வந்து வாய்ப்பதாயிற்று.

பழம் பெருமை கொண்டதும், ஆரவாரம் மிக்கதும், நீண்ட பனைமரங்களைக் கொண்டதுமாகிய நம் ஊருக்குத் தலைவன் வந்து, உன்னை மணந்து செல்லுதலைக் கண்டு, பழி கூறும் மக்களின் வாய் அடங்கியதால் ஊரே புதிதாய் மாறிவிட்டது. இது நமக்குப் பெரிதும் நகைப்பினை (மகிழ்ச்சியினை) உண் டாக்குகிறது.

கருத்து

தலைவன் மணந்துகொள்ள வந்தான். பழி கூறிய மக்கள் வாய் அடங்கினர். ஊரே மகிழ்ச்சியொடு தலைவனை வரவேற்றது.

சொற்பொருள்

1. நகை - நகைப்பு.
2. மனை இறந்து - வீட்டை விட்டு நீங்கி; அல்கினும் - (வெளியே) தங்கினாலும்; அலர் - பழிச்சொல்; நயந்து - விரும்பி.
3. களவு அகல - களவொழுக்கம் நீங்க.
4. பல்புரிந்து - பல நன்மைகளும் செய்து; இயறல் - பொருந்துதல்.
5. நூல் அமை பிறப்பு - குதிரை நூல் கூறும் இலக்கணம் பொருந்திய பிறப்பு; நீல உத்தி - நீலமணியால் ஆன நெற்றிச்சுட்டி.
6. கொய்ம் மயிர் - கத்தரித்து விடப்பட்ட மயிரைக் கொண்ட; எருத்தம் - கழுத்து; பிணர்பட - சொரசொரப்பு உண்டாக.
7. நெய்ம்மிதி - நெய் ஊற்றி மிதித்து அமைத்த கவள உணவு; முனை இய - வெறுத்து; ஆர்கை - தின்னுதல்.
8. நிரல் இயைந்து - ஒரே தன்மையதாய்.
9. குரல் - கதிர்; வார்ந்தன்ன - வளைந்தாற்போன்ற; குவவுத்தலை - வளைந்த தலை; நல்நான்கு - நல்ல நான்கு குதிரை.
10. வீங்கு சுவல் - பருத்த கழுத்து; மொசிய - நெருங்க.
11. பூம்பொறி - அழகிய புள்ளிகள்; பல்படை - பல வடங்கள்.
12. வலவன் - பாகன்; ஏவலின் - செலுத்தியதால்; இகு - தாழ்ந்த.
13. புனல் - நீர்; வாமான் - தாவிச் செல்லும் குதிரை.

14. கணை - அம்பு; கழிந்தன்ன - பாய்ந்தாற்போன்ற; நோன்கால் - வலிய கால்; வண்பரி - விரைந்த செலவு.
15. ஊதை - காற்று.
16. கால் கண்டன்ன - வாய்க்காலைக் கண்டாற்போன்ற; வழிபட - சுவடு உண்டாக.
17. அயிர்ச் சேற்று அள்ளல் - நுண்ணிய குழம்பாகிய சேறு; அழுவம் - பரப்பு.
18. இட்டு - குறுகிய; சுரம் - உப்பங்கழி.
19. மெல்லம் புலம்பன் - கடற்கரைக்குத் தலைவன்.
20. மலி - நிறைந்த; துயல்வரும் - அசையும்; அடை - இலை.
21. நேமி - கடல்; நெடுநீர் - ஆழமான நீர்.
22. விளையா - முதிராத.
23. பொதிஅவிழ் - கட்டு அவிழ்ந்த.
24. பழவிறல் - பழைய பெருமை.
25. பாடு எழுந்து இரங்கும் - ஆரவாரம் மிக்க முழங்கும்; நீடு இரும் - நீண்ட பெரிய; பெண்ணை - பனை மரம்; அழுங்கல் - ஆரவாரம்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 140 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

மன்றல் மனைவரும் செவிலிக்குத் தோழி அன்புற உணர்த்தல்.

கூற்று விளக்கம்

தலைவனும் தலைவியும் உடன்போக்காகச் சென்ற பின் தலைவன் மனையில் மணம் நிகழ்ந்தது. அதனைக் கேள்வியுற்ற செவிலி, மகளைக் காண வந்தபொழுது, தோழி மணமக்களின் அன்புடன் கூடிய வாழ்க்கையினைச் செவிலிக்கு எடுத்துச் சொல்லியது.

மண்ணார் குலைவாழை யுள்தொடுத்த தேன்நமதென்(று)
உண்ணாப்பூந் தாமரைப் பூவுள்ளும் – கண்ணார்
வயலூரன் வண்ணம் அறிந்து தொடுப்பாள்
மயல்ஊ ரர்அவர் மகள்.

தெளிவுரை

மண்ணிலே படியுமாறு நீண்ட குலையினைக் கொண்ட வாழை மரத்திடையே கட்டப்பட்ட தேன் கூட்டை நம்முடையது என்று கருதி, உண்டு, மயக்கம் அடைந்தவள், மருதநிலத்தூர்த் தலைவன் மகளாகிய நம் தலைவி. அவள் அழகிய தாமரைப் பூவினிடத்திலும் தன் கண்ணிலே நிறைந்து நின்றுள்ள தலைவனின் நிற அழகினைக் கண்டுகொண்டே மாலையினைத் தொடுத்துக்கொண்டிருக்கிறாள்.

கருத்து

காணும் பொருள்களிலெல்லாம் தலைவனின் அழகையே காண்பவள் தலைவி.

குறிப்பு

வாழை தள்ளியிருக்கும் குலை நீண்டு தரையைத் தொட்டுக்கொண்டிருக் கிறது.

சொற்பொருள்

1. மண்ஆர் - மண்ணிலே படிந்த.
2. உண்ணா - உண்டு; கண்ஆர் - கண்ணிலே நிறைந்துள்ள.
4. மயல் ஊரர் - மயக்கமுற்ற மருத நிலத்து ஊர்த்தலைவர்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 143 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

மன்றல் மனைவரு செவிலிக்கு இகுளை அன்புற உணர்த்தல். (இகுளை - தோழி)

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணந்தபின் செவிலித்தாய் தலைவி வீட்டுக்கு வந்த காலத்துத் தோழி அவளுக்குத் தலைவன் தலைவியரின் அன்பான உறவை எடுத்துச் சொல்லியது.

நல்வயல் ஊரன் நறுஞ்சாந்(து) அணிஅகலம்
புல்லிப் புடைபெயரா மாத்திரைக்கண் – புல்லிஆர்
கூட்டு முதல்உறையும் கோழி துயில்எடுப்பப்
பாட்டு முரலுமாம் பண்.

தெளிவுரை

அன்னையே! வளம் மிகுந்த மருதநிலத்தூர்த் தலைவனின் மணம் மிக்க சந்தனக்குழம்பு பூசப்பெற்ற மார்பை நம் தலைவி அன்புடனே தழுவி, விட்டு விலகாது தூங்கியிருந்த அவ்வேளையில் வீட்டருகில் நெற்கூட்டின் உச்சியில் தங்கியிருக்கும் சேவல் கூவி, அவர்களை உறக்கத்தினின்றும் எழுப்பும். விழித்தெழுந்த அப்போது வண்டினம் முதலியன, இசையோடு கூடிய பாடல்களைப் பாடத் தொடங்கிவிடும்.

கருத்து

இருவரும் அன்பின் மிகுதியால் பொழுது புலரும்வரை பிரியாது கூடி மகிழ்ந்து வாழ்கின்றனர்.

சொற்பொருள்

1. சாந்து - சந்தனம்; அணி - அணியப்பெற்ற; அகலம் - மார்பு.
2. புல்லி - தழுவி; புடைபெயரா - விட்டு விலகாத; மாத்திரைக்கண் - வேளையில்; புல்லி - (வீட்டருகே) நெருங்கி; ஆர் - பொருந்தியுள்ள.
3. கூட்டு முதல் - நெற்கூடுகளின் உச்சியில்; உறையும் - தங்கியிருக்கும்.
4. முரலும் - ஒலிக்கும்; பண் - இசையோடு கூடிய பாட்டு.

தோழி கூற்று

நற்றிணை 35 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

மணமனைப் பின்றைஞான்று புக்க தோழி, 'நன்கு ஆற்றுவித்தாய்' என்ற தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழி, திருமணத்திற்குப் பின் தலைவியைக் காணச் சென்றாள். அங்குத் தலைவன் தோழி செய்த உதவிகளுக்கு நன்றி பாராட்டினான். அப்போது தோழி, 'நீ அக்காலத்தில் சரியான நேரத்துக்கு வந்து காத்தாய். இனி இவளிடமிருந்து விலகாதிருப்பாய்; என்றும் பிரியாமல் அருள் செய்' என்று தலைவனிடம் கூறியது.

பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்
புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி, பழம்செத்துப்
பல்கால் அலவன் கொண்டகோட்கு அசாந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை எய்திய விடுக்கும்
துறைகெழு மாந்தை அன்ன இவள்நலம்
பண்டும் இற்றே; கண்டிசின் தெய்ய;
உழையின் போகாது அளிப்பினும், சிறிய
ஞெகிழ்ந்த கவின்நலம் கொல்லோ மகிழ்ந்தோர்
கள்களி செருக்கத்து அன்ன
காமம் கொல்?இவள் கண்பசந் ததுவே!

தெளிவுரை

பொங்கியெழுந்து வந்து மோதும் அலைகளால் செதுக்கப் பட்ட மணலை அடுத்த கடற்கரையில் நாவல் மரத்திலிருந்து சதை பொதிந்த கரிய கனிகள் காம்பற்றுத் தரையில் விழுந்தன. வண்டுகள் அவற்றைத் தம்மையொத்த வண்டுகள் என்று கருதி அவற்றைச் சூழ்ந்தன. நண்டொன்று வந்து பழத்தைப் பற்றியது. வண்டுகள் நண்டை விலக்கிக் கனியைப் பெறப் பேரொலி

எழுப்பிப் பறந்தன. அப்போது நாரை ஒன்று இரை தேடி அங்கு வர, அதைக் கண்ட நண்டு பழத்தை விட்டுவிட்டு அஞ்சி ஓடியது. அத்தகைய கடல் துறையைக் கொண்ட மாந்தை நகர் போன்ற இவள் மேனி நலம் முன்பு நீ ஒழுகிய களவுக்காலத்திலும் இத் தன்மையதாகவே இருந்தது. இவள் கண் இப்போதும் பசப் புற்றுள்ளது. இதற்குக் காரணம் என்ன? அது நீ அருகிலேயே இருந்து பிரியாது தலையளி செய்து ஒழுகினும், தழுவியுள்ள கை சிறிது நெகிழ்ந்ததனால் உண்டான மேனியழகின் வேறுபாடோ? கள்ளுண்டார்க்கு அக்கள்ளால் உண்டாகும் களிப்பு நீங்கும் வரை கண் சிவந்து காட்டும் வேறுபாடு போன்ற காதற்காமக் களிப்போ!

கருத்து

தலைவியின் காதற்காம நிலையினை எடுத்துரைத்து, அவளைப் பிரியாது உறைதல் வேண்டும் எனத் தோழி வற்புறுத்துகிறாள்.

தலைவ! இவள் நலம் சேரமானுடைய மாந்தை நகர்போல என்றும் ஒரு தன்மை வாய்ந்தது. நீங்காமல் தழுவி நின்று தலையளி செய்யும் நின் கை தழுவுதலிலிருந்து சிறிது நெகிழ்ந்தாலும் இவளது மேனிநலம் வேறுபடும்.

உள்ளுறை

நாவற்கனியைத் தலைவியாகவும், வண்டினைத் தோழி யாகவும், நண்டினைத் தலைவியின் தமராகவும், நாரையைத் தலைவனாகவும் கொள்க.

கனி - தலைவி; வண்டு - தோழி; நண்டு - தலைவிக்கு இடர் விளைவிக்கும் உறவினர்; இரைதேர் நாரை - தலைவன். அஃதாவது கனியை வண்டுகள் மொய்த்ததும், நண்டு கனியைக் கைப்பற்றிக்கொள்ள முனையும்போது நாரை வரக் கண்டு, கனியை விட்டுவிட்டது என்னும் இத்தொடர்மூலம், தலைவி தோழியைச் சார்ந்திருக்க, தலைவிக்கு உறவினர் அவளை இற் செறிக்க, தலைவன் மகட்கொடை தந்து, இற்செறிப்பை நீக்கிக் கொண்டான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

குறிப்பு

கற்பின் தொடக்கமாகிய புது மணவாழ்வில் தலைவியிடம் உண்டாகும் வேறுபாடு கண்டு, ஆற்றானாகிய தலைவன் உள்ளத்தே அசைவு தோன்றியது. அதனை உணர்ந்த தோழி, தலைவியின் காதற்காம நிலையை எடுத்துரைத்துப் பிரியாமல் உறைதல் வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினாள்.

சொற்பொருள்

1. பொங்கு திரை - பொங்கி எழுகின்ற அலை; வார்மணல் - ஒதுக்கப்பட்ட மணல்; அடை கரை - பரந்த கரை.
2. புன்கால் - புல்லிய கால்; நாவல் - நாவல் மரம்; பொதிப்புறம் - பொதி போலும் புறம்; இருங்கனி - கரிய கனி.
3. கிளை செத்து - இனம் எனப் பிறழ உணர்ந்து.
4. பல்கால் அலவன் - பல கால்களைக் கொண்ட நண்டு; கொண்ட கோள் - பற்றிக்கொண்டதற்கு; அசாந்து - வருந்தி.
5. கொள்ளா - யாழொடு சேராத; இமிரும் - ஒலிக்கும்.
6. எய்திய - வரக்கண்டு; விடுக்கும் - கை விட்டு நீங்கும்.
7. மாந்தை - ஒரு நகரம்; நலம் - அழகு.
8. பண்டும் - முன்பும்; இற்றே - இவ்வாறே இருந்தது; கண்டிசின் - காண்க.
9. உழையின் போகாது - பக்கத்திலிருந்தும் விலகாமல்; அளிப்பினும் - அருள் செய்யினும்.
10. சிறிய ஞெகிழ்ந்த - (தழுவிய கை) சிறிது ஞெகிழ்ந்ததனால்; கவின் நலம் கொல்லோ? - உண்டாகும் உடலழகின் வேறுபாடோ?; மகிழ்ந்தோர் - கள்ளுண்டோர்.
11. கள்களி செருக்கம் - கள்ளுண்டதால் உண்டாகும் களிப்பு நிற்கும்போது.
12. காமம் கொல்? - காதற்காமக் களிப்போ?; இவள் - தலைவி; கண் பசந்தது - கண் பசந்து தோன்றுதற்குக் காரணம்.

தோழி கூற்று

நற்றிணை 131 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

மணமனையிற் பிற்றைஞான்று புக்க தோழியைத் தலைமகன், 'வேறு படாமை ஆற்றுவித்தாய்; பெரியை காண்' என்றாற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

மணம் பெற்றதன் பிற்றை நாளில், 'இதுகாறும் தலைவியை நீதான் நன்கு ஆற்றுவித்துக் காத்தாய்; நீ மிகவும் பெருந்தகைமை உடையை' எனத் தலைவன் தோழியைப் பாராட்டுகிறான். அவனிடம் தலைவியின் அளப்பரிய காதல் தன்மையை உரைத்து, அதனாலேயே அஃது இயல்வ தாயிற்று என்று தோழி கூறியது.

ஆடிய தொழிலும், அல்கிய பொழிலும்,
உள்ளல் ஆகா உயவு நெஞ்சமொடு
ஊடலும், உடையமோ உயர்மணற் சேர்ப்ப!
திரைமுதிர் அரைய தடந்தாள் தாழைச்
சுறவுமருப்பு அன்ன முள்தோடு ஒசிய,
இறவுஆர் இனக்குருகு இறைகொள இருக்கும்
நறவுமகிழ் இருக்கை நல்தேர்ப் பெரியன்
கள்கமழ் பொறையாறு அன்னஎன்
நல்தோள் நெகிழ மறத்தல் நுமக்கே.

தெளிவுரை

மணல் பரந்த உயர்ந்த கடல்நிலத் தலைவனே! களவுக் காலத்தே நாங்கள் நீ இல்லாது எந்த விளையாட்டையும் விளை யாடியதில்லை; நீ இல்லாது தனித்து எந்தச் சோலையிலும் தங்கியதில்லை; உன்னை நினையாதிருக்கும் நெஞ்சமுள்ள வராயும் இருந்ததில்லை; உன்னுடன் பிணங்கும் நெஞ்சமும் கொண்டதில்லை.

திரைத்து முதிர்ந்த நடுப்பகுதியினையும் வளைந்த அடிமரத் தினையும் கொண்ட தாழை மரத்தில், சுறாமீனின் கொம்புபோல்

இருபுறமும் முள் பொருந்திய அதன் மடல் சாயுமாறு, இறால் மீன்களை இரையாய் உண்ட குருகுகளின் கூட்டம் இனிது தங்கி இளைப்பாறும். (அதுபோலத் தலைவியின் உள்ளத்தில் நீ எப்போதும் தங்கியிருந்தாய்.)

பெரியன் என்பவன் நறவுண்டு மகிழும் ஊர்களையும் நல்ல தேரினையும் உடையவன். அவனுக்குரிய பொறையாறு என்னும் ஊர், தேன்மணம் கொண்டது. அவ்வூரைப் போன்ற நலம் வாய்ந்தன, என் தலைவியின் நல்ல தோள்கள்; எப்போதும் நீ அவற்றை மறந்ததில்லை; ஆதலின் நீயே பெரியவன்.

கருத்து

எப்பொழுதும் எவ்விடத்தும் உன்னையே நெஞ்சில் கொண்டிருந்ததால் ஆற்றியிருந்தது எமக்குப் பெரியதன்று; நீயும் இவளை மறக்கவில்லை; ஆதலின், தோளும் மெலியவில்லை. இந்நிலையில் நான் ஆறுதல் சொல் வதற்கு என்ன இருந்தது?

உள்ளுறை

இரையுண்ட நாரை தாழை மடலின்மீது தங்கியிருக்கும் என்னும் தொடர், தலைவி மனமகிழ்ந்து அன்பு மிகுமாறு, அவள் உள்ளத்தில் செல்வம் மிகுந்த தலைவன் தங்கியிருக்கிறான் என்னும் உள்ளுறைப் பொருளைக் கொண்டுள்ளது.

சொற்பொருள்

1. தொழில் - விளையாட்டு; அல்கிய - தங்கிய.
2. உள்ளல் ஆகா - நினையாது; உயவு - வருத்தம்.
4. திரை முதிர் - திரைத்து முதிர்ந்த; அரைய - நடுப்பகுதி; தட - வளைந்த; தாள் - அடிமரம்.
5. சுறவு - சுறா மீன்; மருப்பு - கொம்பு; முள் - முள் பொருந்திய; தோடு - இதழ்; ஒசிய - சாய.
6. இறவு - இறா மீன்; ஆர் - உண்ட; இறை - தங்குதல்.
7. நறவு - தேன்; மகிழ் - விரும்பும்; இருக்கை - ஊர்; பெரியன் - தலைவன் ஒருவன்.
8. பொறையாறு - ஓர் ஊர்.
9. நெகிழ - தளர; மறத்தல் நுமக்கே - உம்மால் மறக்க இயலுமா?

தோழி கூற்று

ஐங்குறுநூறு 104 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

புதல்வற் பெற்றுழித் தலைமகன் மனைக்கண் சென்ற செவிலிக்கு, முன்பு அறத்தொடு நின்று வதுவை கூட்டிய தோழி, அவன் ஊர் நன்மை காட்டிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியர் ஆகியோரின் களவொழுக்கத்தை வெளிப் படுத்தி, அறத்தொடு நின்று திருமணத்தை நிறைவேற்றிவைத்தாள், தோழி. தலைவிக்கு மகன் பிறந்தான். அதனைக் கேள்வியுற்ற செவிலி, தலைவன் ஊர்க்குச் சென்றாள். அங்குத் தோழி, தலைவனது ஊரின் சிறப்பைச் சுட்டிச் செவிலியிடம் சொல்லியது.

அன்னை, வாழி!வேண்டு அன்னை! நம்ஊர்ப்
பலர்மடி பொழுதில் நலம்மிகச் சாஅய்
நள்ளென வந்த இயல்தேர்ச்
செல்வக் கொண்கன் செல்வன்அஃது ஊரே.

தெளிவுரை

"தாயே! நான் கூறுவதை விரும்பிக் கேள்! முன்பு நமது ஊரில் நள்ளிரவில் ஊரார் அனைவரும் அயர்ந்து உறங்கும்போதில், (குறியிடையீடுபட்டும், வழித்துன்பங்களுக்கு அஞ்சியும்) தன் நலம் மிகவும் மெலிவுற்றுத் தலைவியைக் காண்பதற்குத் தனியே இலக்கணம் அமைந்த தேரினையுடைய செல்வமிக்க தலைவன் வந்தான். அத்தலைவன் மகன் ஊர் இதுவே. இதன் சிறப்பை யெல்லாம் உவப்போடு காண்க!" என்று தோழி செவிலியிடம் கூறினாள்.

கருத்து

தலைவி மகப்பேறு வாய்க்கப்பெற்றுள்ளாள்.

குறிப்பு

தலைவன் செல்வங்கள் பல பெற்றிருப்பினும், அவை எல்லாவற்றினும் சிறந்தது மக்கட்பேறே ஆகும். தலைவன் அம்மகப்பேறு வாய்க்கப் பெற்றுள்ளான் என்னும் செய்தியை மகிழ்ச்சியுடன் கூறும் தோழி, 'இது தலைவனுடைய ஊர்!' என்று சொல்லாது, 'அவனுடைய மகன் ஊர்' என்றாள்.

முன்பு தலைவனுக்கே உரியதாய் இருந்த ஊர், இனி அவன் பெற்ற மகனுக்கு உரிமையுடையது என்பதால், 'அவன் மகன் ஊர் இது' என்றாள்.

சொற்பொருள்

2. பலர் மடி பொழுதில் - பலரும் தூங்குகின்ற இரவுக்காலத்தில்; சாஅய் - மெலிந்து.
3. நள்ளென - இரவின் இடையாமத்தில், நள்ளிரவில்; இயல்தேர் - இலக்கணம் அமைந்த தேர்.
4. கொண்கன் செல்வன் - தலைவன் மகன்; ஊரே அஃது - ஊர் அதுவே.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 43 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

மகற்பெற்ற தலைமகளினைச் செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற்கண் தலைமகன் மகற்கண்டு மகிழ்ந்த வகையினைத் தோழி கண்டு மகிழ்ந்து கூறியது.

கூற்று விளக்கம்

தலைவி பெற்றெடுத்த மகனுக்கு ஐம்படைத்தாலி பூட்டிப் பெயரிடுத லாகிய சிறப்பின்போது, தலைவன் தன் புதல்வனைச் சுமந்து தலைவியோடு வந்ததைக் கண்டு மகிழ்ந்த தோழி கூறியது.

ஆற்றல் உடையன் அரும்பொறி நல்ஊரன்
மேற்றுச் சிறுதாய காய்வஞ்சி – போல்துருவிக்
கண்தக முத்தின் புதல்வனை மார்பின்மேல்
பட்டம் சிதைப்ப வரும்.

தெளிவுரை

போர் ஆற்றலும் அரிய செல்வமும் கொண்டவன், மருத நிலத்து ஊரனாகிய தலைவன். அவன், மேற்பகுதியில் சிறிய காய்களைக் கொண்ட வஞ்சிக்கொடி, கணுக்கள் சிதறுவதால் தோன்றுகின்ற முத்தைப் போன்ற தன் மகனைத் தன் மார்பில் தழுவிக்கொண்டான். அதனால் தன் மேலாடை நழுவிக் கீழே வீழ்ந்ததையும் உணராதவனாய் உள்ளான்.

கருத்து

பெற்ற மகனைக் கண்டு மிகவும் பெருமை கொள்கிறான், தலைவன்.

சொற்பொருள்

1. அரும்பொறி - அரிய செல்வம்.
2. மேற்று - மேற்பாகத்தினிடத்தே; சிறுகாய் - சிறிய காய்; தாய - பொருந்தியுள்ளன; வஞ்சி போல் - வஞ்சிக்கொடியினைப் போன்று; துருவி - நெருங்கித் தழுவிப் பிடித்து.
3. கண்தக - கணுக்கள் சிதறுதலால்; முத்தின் - முத்தினைப் போல்.
4. பட்டம் - மேலாடை; சிதைப்ப - சிதையும்படியாக.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 145 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

மகற்பெற்ற தலைமகளினைச் செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற்கண் தலைமகன், மகற்கண்டு மகிழ்ந்த வகையினைத் தோழி கண்டு மகிழ்ந்து கூறியது.

(செய்பெருஞ் சிறப்பு - பிறந்த புதல்வன் முகங்காண்டல், ஐம்படைப் பூட்டல், பெயரிடுதல் முதலியன.)

கூற்று விளக்கம்

தலைவி பெற்றெடுத்த மகனுக்கு ஐம்படைத்தாலி பூட்டிப் பெயரிடுதலாகிய சிறப்பின்போது தலைவன் புதல்வனைச் சுமந்து தலைவியோடு வந்ததைக் கண்டு மகிழ்ந்த தோழி கூறியது.

பாட்டர வம்,பண் அரவம், பணியாத
கோட்டரவம் இன்னிவை தாம்குழுமக் – கோட்(டு)அரவம்
மந்திரம் கொண்டோங்கல் என்ன மகச்சுமந்து
இந்திரன்போல் வந்தான் இடத்து.

தெளிவுரை

பாட்டு ஒலி, இசை ஒலி, வளைதல் இல்லாத கொம்பின் ஒலி இன்னும் இவை போன்ற பல ஒலிகளும் ஒன்றுகூடி ஒலித்துக் கொண்டிருக்கின்றன. வளைந்த நச்சுப் பற்களைக் கொண்ட வாசுகி என்னும் பாம்பினைக் கயிறாய் மேற்கொண்டு பாற் கடலைக் கடையப் பயன்பட்ட மந்திரம் என்னும் மலை சிறப் புற்றதைப் போல, தன் மகனைச் சுமந்துகொண்டு மருதநிலத் தெய்வமான இந்திரன்போலத் தலைவன் தலைவிக்கு இடப் பக்கத்தில் வந்து சேர்ந்தான்.

கருத்து

முன்னரே சிறப்புப் பெற்றிருக்கும் தலைவன், மகனைப் பெற்றதால் மேலும் சிறப்புப் பெறுகிறான்.

குறிப்பு

பாற்கடலை மந்திரம் என்னும் மலையை மத்தாய் அமைத்து, அதன்மீது வாசுகி என்னும் பாம்பைக் கடைகயிறாய்க் கொண்டு தேவர்கள் ஒரு பக்கமும் அசுரர்கள் ஒரு பக்கமுமாய் நின்று கடைந்தனர் என்பது புராணக் குறிப்பு.

சொற்பொருள்

1. அரவம் - ஒலி; பண் - இசை; பணியாத - வளைதல் இல்லாத.
2. கோடு - கொம்பு; குழும - கூடி ஒலிக்க; கோட்டு அரவம் - வளைந்த நச்சுப்பற்களைக் கொண்ட பாம்பினை (வாசுகி என்னும் அரவம்).
3. மந்திரம் - (பாற்கடலைக் கடையப் பயன்பட்ட) மந்திர மலை; கொண்டு - மேற்கொண்டு; ஓங்கல் என்ன - சிறப்புப் பெற்றதைப் போல.
4. இந்திரன் - தேவர்கள் தலைவன்; இடத்து - இடப்பக்கம்.

செவிலி கூற்று

ஐங்குறுநூறு 405 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

கடிமனைச் சென்றுவந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் மணம் செய்துகொண்ட பிறகு மணமகனைக் காணச் சென்ற செவிலி, மணமக்களின் காதல் வாழ்க்கையின் சிறப்பைக் கண்டு மனமகிழ்ச்சியோடு திரும்பி வந்து நற்றாய்க்குக் கூறுவது.

ஒண்சுடர்ப் பாண்டில் செஞ்சுடர் போல,
மனைக்குவிளக்(கு) ஆயினள் மன்ற கனைப்பெயல்
பூப்பல அணிந்த வைப்பின்
புறவுஅணி நாடன் புதல்வன் தாயே.

தெளிவுரை

இடி முழக்கோடு பெருமழை பெய்தலால் ஊரெங்குமுள்ள சோலைகளெல்லாம் பூத்துக் குலுங்கியுள்ளன. அத்தகைய முல்லை நாடன் மகனுக்குத் தாயாகிய நம் மகள், கால் நிறுத்திய பெரிய தகழி விளக்கின் சுடர்போல உறுதியாய் வீட்டிற்கு ஒளியாய் விளக்கும் ஆயினாள்.

கருத்து

'மகனைப் பெற்றெடுத்துள்ள நம் மகள் மனை விளக்கு ஆயினள்' என்று செவிலி நற்றாய்க்குக் கூறினாள்.

சொற்பொருள்

1. பாண்டில் - விளக்குத் தகழி, அகல்.
2. கனைப்பெயல் - பெருமழை.
3. வைப்பு - இடங்கள்.
4. புறவு அணி - முல்லை நிலத்தால் அழகுபெற்ற.

செவிலி கூற்று

ஐங்குறுநூறு 403 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

கடிமனைச் சென்றுவந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் மணம் செய்துகொண்ட பிறகு மணமகனைக் காணச் சென்ற செவிலி, மணமக்களின் காதல் வாழ்க்கையின் சிறப்பைக் கண்டு, மனமகிழ்ச்சியோடு திரும்பி வந்து நற்றாய்க்குக் கூறுவது.

புணர்ந்த காதலியின் புதல்வன் தலையும்
அமர்ந்த உள்ளம் பெரிது ஆகின்றே;
அகன்பெரும் சிறப்பின் தந்தை பெயரன்
முறுவலின் இன்நகை பயிற்றிச்
சிறுதேர் உருட்டும் தளர்நடை கண்டே.

தெளிவுரை

தலைவனுக்குத் தந்தை பரந்த பெரும் புகழைப் பெற்றவன். அவன் பெயரைக் கொண்டவன் தலைவன் மகன். அம்மகன் புன்முறுவல் பூத்த முகத்தோடு சிறு தேருருட்டித் தள்ளாடி நடக்கும் நடையைக் கண்டான், தலைவன். அப்போது அவன் காதலித்துக் கூடி மகிழ்ந்த தலைவிமீது கொண்ட அன்பு போலவே, மகன்மீது கொண்ட அன்பும் மிகுந்ததாய் அமைந்து விளங்கியது.

கருத்து

குடிக்கு விளக்காகிய மகனிடத்தும், மனைக்கு விளக்காகிய மனைவியினிடத்தும் தலைவன் அன்பு மறவாதவன்.

குறிப்பு

ஓர் ஆண் மகவினுக்குத் தந்தைக்குத் தந்தையின் (தாத்தா) பெயரைச் சூட்டுவது அன்றைய மரபு. தந்தைக்குத் தந்தையின் பெயருக்கு உரியவன் என்பதால் அந்த ஆண்மகவு 'பெயரன்' என வழங்கப்பட்டது. (பெயரன் - தந்தைக்குத் தந்தையின் பெயருக்கு உரியவன்.)

சொற்பொருள்

1. புணர்ந்த - கூடி மகிழ்ந்த; காதலியின் - மனைவியின்பால் கொண்டது போன்ற; புதல்வன் தலையும் - மகனின்மீதும்; தலையும் - இடத்தும்.
2. அமர்ந்த உள்ளம் - விரும்பும் அன்பு உள்ளம்.
3. அகன் பெரும் - பரந்த பெரும்; தந்தை பெயரன் - தலைவனுக்குத் தந்தையின் பெயரைக் கொண்ட புதல்வன் (தலைவன் தன் தந்தையின் பெயரைத் தன் மகனுக்கு இடுதல் மரபு).
4. பயிற்றி - புரிந்து.

செவிலி கூற்று

குறுந்தொகை 167 **கூடலூர் கிழார்**

திணை : முல்லை

கூற்று

கடிநகர் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்தும் மனைக்குச் சென்று வந்த செவிலித்தாய், தலைவன் மகிழுமாறு தலைவி உணவு சமைத்து உண்பித்தலை நற்றாயிடம் கூறியது.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்,
கழுவுறு கலிங்கம், கழாஅது உடீஇ,
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
'இனிது'எனக் கணவன் உண்டலின்,
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

தெளிவுரை

"தன் செங்காந்தள் மலர்போலும் விரல்களால் கட்டித் தயிரைப் பிசைந்த தலைவி, பிசைந்த கைவிரல்களைத் தன் பட்டாடையிலேயே துடைத்துக்கொண்டாள். அதனால் ஆடையில் பட்ட தயிரைப் போக்காது அதனையே உடுத்திய படியே விரைந்து சமைத்தாள்; தாளிதம் செய்யும்போது 'குய்' என எழுந்த புகை, அவளது குவளை மலர் போன்ற மை தீட்டிய கண்களில் பட்டுப் பரவியது; அதையும் பொருட்படுத்தாது

தானாகவே மிக முயன்று துழாவிச் சமைத்த இனிய புளிக் குழம்பைக் (முன்னைய அனுபவமின்றி முதன்முறையாய்ச் செய்த சமையலாயினும்) கணவன் 'இனிதாய் இருக்கிறது' எனச் சொல்லிக்கொண்டே உண்டான். கணவனின் அன்பு மொழியைக் கேட்டு, ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட நம் மகளது முகம் மிக நுட்பமாய்த் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது" என்று செவிலி நற்றாயிடம் கூறினாள்.

கருத்து

கணவனுக்காகக் கண்ணுங்கருத்துமாய் உணவு சமைக்கிறாள், தலைவி.

விளக்கம்

"கெட்டியான தயிரை மென்மையான விரல்களால் பிசைகிறாள். நெகிழ்ந்தது ஆடை; தயிர் ஒட்டியுள்ள கையுடனேயே எடுத்துச் செருகிக்கொள்கிறாள். முகத்தில் புகை படியத் தயிரிலே தாளிப்பினைக் கொட்டிக் குழம்பு தயார் செய்கிறாள்; கணவனுக்கு உணவு பரிமாறுகிறாள். குழம்புச்சோற்றினை உண்ணும் கணவன், 'நன்று நன்று' என்கிறான். அதைக் கேட்டு நம் மகள், முகம் ஒளி வீச மகிழ்ந்து நிற்கிறாள். இத்தகைய அன்பு வாழ்க்கையை நம் மகள் நடத்தி வருகிறாள்" எனச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. முளிதயிர் - உலர்ந்த (கெட்டியான) தயிர்; காந்தள் - காந்தள் மலர்.
2. கழுவுறு - கழுவப்பட்ட; கலிங்கம் - ஆடை; கழாஅது - தயிரைப் போக்காதே; உடீஇ - உடுத்து.
3. குய்ப்புகை - தாளிப்பாலுண்டாகிய புகை; கழும - திரள.
4. துழந்து - துழாவி; தீம் - இனிய; பாகர் - பாகம் - பக்குவம்.
6. நுண்ணிதின் - நுண்ணிதாய்; மகிழ்ந்தன்று - மகிழ்ந்தது; ஒண்ணுதல் - ஒள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி; முகன் - முகம்.

செவிலி கூற்று

குறுந்தொகை 242 **குழற்றத்தனார்**

திணை : முல்லை

கூற்று

கற்புக்காலத்துக் கடிநகர் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

மகளும் அவள் கணவனும் இல்லறம் நடத்தும் மனைக்குச் சென்று மீண்டுவந்த செவிலித்தாய், 'மகளும் அவள் கணவனும் பிரிவின்றி ஒன்றி வாழ்கின்றனர்' என நற்றாயிடம் கூறியது.

கானங் கோழிக் கவர்குரல் சேவல்
ஒண்பொறி எருத்தில் தண்சிதர் உறைப்பப்
புதல்நீர் வாரும் பூநாறு புறவில்
சீறூ ரோளே மடந்தை, வேறுஊர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்,
சேந்துவரல் அறியாது, செம்மல் தேரே.

தெளிவுரை

முல்லை நிலம்; தன் பெடையைக் கவர்கின்ற குரலைக் கொண்ட காட்டுக்கோழிச்சேவல் ஒள்ளிய புள்ளிகளைக் கொண்ட கழுத்தைக் கொண்டுள்ளது; புதர்களிலிருந்து நீர்த்துளிகள் அதன் கழுத்தில் விழுந்து வழிகின்றன. மலர்கள் மணம் கமழ்கின்றன; இத்தகைய முல்லைநிலச் சிற்றூரில் நம் இளைய மகள் இருக்கிறாள். பெருமைமிக்க அவள் கணவன் அரசு வேலையாக அயலூர் சென்றாலும், அங்கே தங்கியிராது (பணியை முடித்துக்கொண்டு) உடனே திரும்பிவிடுகின்றான். மணமக்கள் அன்புடன் கூடி வாழ்வதை நான் கண்டேன் எனச் செவிலி நற்றாயிடம் கூறுகிறாள்.

கருத்து

அரசுப் பணியாய் அயலூர் சென்றாலும் அங்குத் தங்குதலின்றிப் பணி முடிந்ததும் உடனே திரும்பி வந்து நம் மகளோடு கூடி மகிழ்கிறான், தலைவன்.

சொற்பொருள்

1. கானம் கோழி - காட்டுக்கோழி; கவர்குரல் - பெட்டையைக் கவரும் குரல்.
2. ஒண்பொறி - ஒள்ளிய புள்ளிகள்; எருத்து - கழுத்து; தண்சிதர் - குளிர்ச்சி பொருந்திய நீர்த்துளிகள்; உறைப்ப - வழிய.
3. வாரும் - சொரியும்; புறவு - முல்லை நிலம்.
4. மடந்தை - பெண் (தலைவி).
5. வேந்து - அரசன்; விடு - அனுப்பிய.
6. சேந்துவரல் - தங்கி வருதல்; செம்மல் - தலைவன்.

செவிலி கூற்று

ஐந்திணை எழுபது 47 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளின் இல்லற இயல்பினைக் கண்டு மகிழ்ந்த செவிலி நற்றாய்க்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவி மணம் பெற்றுத் தலைவன் வீடடைந்தாள். அவள் குடும்பம் நடத்தும் பாங்கினைக் கண்டுவரச் சென்ற செவிலி திரும்பிவந்து நற்றாயிடம் தலைவியின் இனிய இல்லற வாழ்க்கையை எடுத்துரைத்தது.

தேங்கமழ் பொய்கை அகவயல் ஊரனைப்
பூங்கண் புதல்வன் மிதித்துழக்க – ஈங்குத்
தளர்முலை பாராட்டி என்னுடைய பாவை
வளர்முலைக் கண்ஞெமுக்கு வார்.

தெளிவுரை

மணம் கமழும் நீர்நிலைகளைக் கொண்ட மருதநில ஊருக்குத் தலைவனை, அழகிய கண்களைக் கொண்ட அவன் மகன் தன் கால்களால் மிதித்து வருத்திக்கொண்டிருந்தான். அப்போது, மகப்பெற்றதால் தளர்ந்திருந்த பாவை போன்ற தலைவியின் கொங்கைகளில் முன்னோக்கி வளர்ந்திருந்த முனைகளைத்

தலைவன் தன் கைகளால் விரும்பி நெருடி மகிழ்ச்சி அடைந் திருந்தான். (இதனைச் செவிலித்தாய் கண்டு மிகவும் மகிழ்ச்சி கொண்டாள்; நற்றாயிடம் சொல்லியும் மகிழ்ந்தாள்.)

கருத்து

மகனைப் பெற்றெடுத்துத் தந்த தலைவியைத் தலைவன் காதல் பொங்கப் பாராட்டுகிறான்.

சொற்பொருள்

1. தேம்கமழ் - நறுமணம் மிக்க; பொய்கை - நீர்நிலை, குளம்.
2. பூங்கண் - அழகிய கண்; மிதித்து - கால்களினால் மிதித்து; உழக்க - வருத்த; ஈங்கு - இந்நிலையில்.
3. தளர்முலை - (மகப்பெற்றமையால்) நெகிழ்ந்துள்ள முலை; பாராட்டி - விரும்பி; என்னுடைய பாவை - என் பாவை போன்ற தலைமகளின்.
4. முலைக்கண் - முலை நுனி; ஞெமுக்குவார் - நெருடி மகிழ்வார்.

செவிலி கூற்று

ஐங்குறுநூறு 404 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

கடிமனைச் சென்றுவந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் மணம் செய்துகொண்ட பிறகு, தலைவனைக் காணச் சென்ற செவிலி, மணமக்களின் காதல் வாழ்க்கையின் சிறப்பைக் கண்டு மனமகிழ்ச்சியோடு திரும்பி வந்து நற்றாயிடம் கூறியது.

வாள்நுதல் அரிவை மகன்முலை ஊட்டத்
தான்அவள் சிறுபுறம் கவையினன் நன்றும்
நறும்பூம் தண்புறவு அணிந்த,
குறும்பல் பொறைய நாடுகிழ வோனே.

தெளிவுரை

நறுமணப்பூக்கள் பல கொண்ட, குளிர்ச்சி பொருந்திய முல்லை நிலத்தால் அழகு பெற்று விளங்கும் குன்றுகளைக் கொண்ட நாட்டிற்கு உரிமை பூண்டவன், தலைவன். ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட தன் மனைவி (தலைவி) தன் மகனுக்குப் பாலூட்டிக்கொண்டிருக்கும்போது அவன், அவள் முதுகுப்புறமாய்ச் சென்று அவளை நன்கு தழுவிக்கொண்டு இன்புற்றான்.

கருத்து

மனைவி மகனுக்குப் பாலூட்டிக்கொண்டிருக்கும்போது கணவன் அவள் முதுகினை நன்கு தழுவி நின்றான்.

விளக்கம்

மனைவிக்கு முன்புறம் வந்தால் அவள் தாய்மைப் பெருமிதம் இடையீடுபடும் என்பதால், அவளுக்குப் பின்புறமாய் வந்து அவள் முதுகினை அணைத்து இன்புற்றான்.

சொற்பொருள்

1. வாள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி; அரிவை - தலைவி.
2. சிறுபுறம் - பின்புறக் கழுத்து; கவையினன் - அணைத்தான்.
3. தண்புறவு - குளிர்ச்சி பொருந்திய முல்லை நிலம்.
4. குறும்பல் பொறைய - சிறிய பல குன்றுகளைக் கொண்ட; கிழவோன் - உரிமை பூண்ட தலைவன்.

செவிலி கூற்று

ஐங்குறுநூறு 406 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

கடிமனைச் சென்றுவந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் மணம் செய்துகொண்ட பிறகு தலைவனைக் காணச் சென்ற செவிலி, மணமக்களின் காதல் வாழ்க்கையின் சிறப்பைக் கண்டு மனமகிழ்ச்சியோடு திரும்பி வந்து நற்றாயிடம் கூறியது.

மாதர் உண்கண் மகன்விளை யாடக்
காதலித் தழீஇ இனிதுஇருந் தனனே;
தாதுஆர் பிரசம் ஊதும்
போதுஆர் புறவின் நாடுகிழ வோனே.

தெளிவுரை

தேன் நுகரும் வண்டுகள் ஒலி செய்யும் பூக்கள் நிறைந்த முல்லை நாட்டுக்குரியவன், நம் தலைவன். அவன் தன் மனைவியைத் தழுவியபடியே மை தீட்டப்பட்ட கண்களைக் கொண்ட அன்புமிக்க தன் மகன் அருகில் விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்தபடி மகிழ்ந்திருந்தான்.

கருத்து

மகன் விளையாடிக்கொண்டிருக்கிறான்; அவ்வின்பத்தினைத் தன் மனைவியை அணைத்தபடியே தலைவன் கண்டு மகிழ்கிறான்.

சொற்பொருள்

1. மாதர் - காதலைக் கொண்ட; உண்கண் - மை தீட்டப்பட்ட கண்.
2. காதலி - மனைவி; தழீஇ - தழுவியபடியே.
3. தாதுஆர் - பூந்தாதினை அருந்தும்; பிரசம் - வண்டு.
4. போதுஆர் - மலர் நிறைந்த; புறவு - முல்லை நிலம்.

செவிலி கூற்று

ஐங்குறுநூறு 402 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

கடிமனைச் சென்றுவந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் மணம் செய்துகொண்ட பிறகு தலைவனைக் காணச் சென்ற செவிலி, மணமக்களின் காதல் வாழ்க்கையின் சிறப்பைக் கண்டு மனமகிழ்ச்சியோடு திரும்பி வந்து நற்றாயிடம் கூறியது.

புதல்வற் கவைஇய தாய்புறம் முயங்கி,
நசையினன் வதிந்த கிடக்கை, பாணர்
நரம்புளர் முரற்கை போல,
இனிதால்; அம்ம! பண்புமார் உடைத்தே.

தெளிவுரை

அன்னையே! புதல்வனை அணைத்தபடி படுத்திருந்த தலைவியின் முதுகைத் தழுவியவனாய் விருப்பத்தோடும் தலைவன் படுத்திருந்தான். அந்தக் காட்சி, பாணர்கள் நரம்பைத் தடவி எழுப்பும் யாழின் இசைபோல மனத்துக்கு இனிமையாயிருந்தது; நல்ல பண்பும் கொண்டதாய் இருந்தது.

கருத்து

தொட்டுத் தடவலிலே எழும் யாழின் இனிய இசைபோல அவன் அணைப்பிலே அவள் இன்புற்றிருந்தாள்.

குறிப்பு

யாழின் இசை கேட்டற்கு இன்பம் தருவது போன்று, புதல்வனை அணைத்தபடி படுத்திருந்த தலைவியைத் தழுவியபடி தலைவன் படுத்திருந்தது, காண்பதற்கு இன்பம் தருகிறது.

சொற்பொருள்

1. கவைஇய - தழுவிய; தாய் புறம் - தாயினது முதுகை.

2. நசையினன் - விருப்பமுள்ளவனாய்; வதிந்த - தங்கிய.
3. நரம்புளர் - நரம்பில் எழுகின்ற; முரற்கை - துள்ளலோசை.

செவிலி கூற்று

ஐங்குறுநூறு 409 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

கடிமனைச் சென்றுவந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் மணம் செய்துகொண்ட பிறகு தலைவனைக் காணச் சென்ற செவிலி, மணமக்களின் காதல் வாழ்க்கையின் சிறப்பைக் கண்டு மனமகிழ்ச்சியோடு திரும்பி வந்து நற்றாயிடம் கூறியது.

புதல்வன் கவைஇயினன் தந்தை; மென்மொழிப்
புதல்வன் தாயோ இருவரும் கவைஇயினள்;
இனிது மன்றஅவர் கிடக்கை;
நனிஇரும் பரப்பின் இவ்உலகுடன் உறுமே.

தெளிவுரை

தந்தை தன் புதல்வனைத் தழுவியிருந்தான்; மழலை பேசும் அம்மகனுக்குத் தாயாகிய தலைவியோ, தன் மகனையும் தலைவனையும் ஒருசேரத் தழுவிக்கொண்டிருந்தாள். அவர்கள் மூவரும் ஒருங்கிணைந்திருந்த காட்சி மிகவும் இனிதாயிருந்தது. அவ்வின்பத்திற்கு ஈடாய் இவ்வுலகம் முழுவதையும் கொடுத்தாலும் அமையும்.

கருத்து

தந்தை புதல்வனைத் தழுவியிருக்கிறான்; தாயோ மகனையும் கணவனையும் ஒன்றிணைத்துத் தழுவிக்கொண்டிருக்கிறாள்.

குறிப்பு

கணவன், மனைவி, குழந்தை (புதல்வன்) ஆகிய மூவரால் ஆனது உலகம். ஆகவே, அவர்கள் மூவரும் ஒருங்கிணைந்திருந்த காட்சி உலகத்தை ஒத்ததாயிருந்தது.

சொற்பொருள்

1. கவைஇயினன் - தழுவியிருந்தான்; மென்மொழி - மழலை மொழி.
2. இருவரும் - மகன், கணவன் ஆகிய இருவரையும்.
4. நனி இரும்பரப்பு - மிகப் பெரும்பரப்பு; இவ்வுலகுடன் - இவ் உலகம் முழுவதும்; உறுமே - ஒக்கும்.

செவிலி கூற்று

ஐங்குறுநூறு 401 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

கடிமனைச் சென்றுவந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் மணம் செய்துகொண்ட பிறகு தலைவனைக் காணச் சென்ற செவிலி மணமக்களின் காதல் வாழ்க்கையின் சிறப்பைக் கண்டு மனமகிழ்ச்சியோடு திரும்பி வந்து நற்றாயிடம் கூறியது.

மறிஇடைப் படுத்த மான்பிணை போல,
புதல்வன் நடுவணன் ஆக, நன்றும்
இனிது மன்றஅவர் கிடக்கை; முனிவின்றி
நீல்நிற வியலகம் கவைஇய
ஈனும், உம்பரும், பெறலருங் குரைத்தே.

தெளிவுரை

"மான் கன்றினை இடையில் கிடத்தி, ஆண்மானும் பெண் மானும் படுத்துக்கிடப்பதுபோலப் புதல்வனை நடுவே படுக்க வைத்துத் தலைவன், தலைவி ஆகிய இருவரும் படுத்திருக்கும் காட்சி மிகவும் இனியது. அதுபோன்ற இனியதொரு காட்சியை அகன்ற வானம் சூழ்ந்த இவ்வுலகிலும், இதன்மேலுள்ளதாகிய அந்த விண்ணுலகத்திலும் காண இயலாது" எனச் செவிலி *நற்றாய்க்குக் கூறினாள்.*

கருத்து

தங்களுக்கிடையே மகனைப் படுக்கவைத்துக் கணவனும் மனைவியும் மகிழ்வுடன் படுத்திருந்தனர்.

விளக்கம்

மக்கட்பேறும் பிரிவின்றி இணைந்து வாழும் வாழ்வும் தலைவன் தலைவியருக்கு வாய்த்திருக்கின்றன. அத்தகைய இன்ப வாழ்வைக் காட்டிலும் இன்பம் தரும் சிறந்த வாழ்வு மண்ணுலகிலும் விண்ணுலகிலும் இருக்க இயலாது.

சொற்பொருள்

1. மறி - மான்குட்டி; இடைப்படுத்த - இடையிலே கிடத்திய; மான்பிணை - ஆண்மானும் பெண்மானும் (கலை - ஆண்மான், பிணை - பெண்மான்).
2. நடுவணன் - நடுவில் உள்ளான்.
3. கிடக்கை - கிடத்தல்; முனிவின்றி - இடையீடு இல்லாமல்.
4. நீல்நிற வியலகம் - நீலநிறம் கொண்ட அகன்ற இடம், கடல்; கவைஇய - சூழ்ந்த.
5. ஈனும் - இவ்வுலகத்தும்; உம்பரும் - மேலுலகத்திலும்; பெறலருங் குரைத்து - பெறுதற்கு அரிது.

செவிலி கூற்று

ஐங்குறுநூறு 410 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

கடிமனைச் சென்ற செவிலி, தலைமகனும் தலைமகளும் புதல்வனோடு பாடல் கேட்டிருந்தமை கண்டு தன்னுள்ளே உவந்து கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியர் கூடி வாழும் மனைக்குச் செவிலி சென்றாள். அங்கே தலைவனும் தலைவியும் தம் புதல்வனோடு கூடிப் பாடல் கேட்டுக் கொண்டிருந்தனர். அதனைக் கண்ட செவிலி தன்னுள் சொல்லிக் கொண்டது.

மாலை முன்றில் குறுங்கால் கட்டில்
மனையோள் துணைவி ஆக, புதல்வன்
மார்பின் ஊரும் மகிழ்நகை இன்பப்
பொழுதிற்கு ஒத்தன்று மன்னே!
5. மென்பிணித்து அம்ம பாணனது யாழே!

தெளிவுரை

மாலை நேரம்; வீட்டிற்கு முன்புள்ள முற்றத்தில் குறுகிய கால்களைக் கொண்ட கட்டில்; தலைவன் படுத்திருக்கிறான்; மனைவி அவன் அருகிலிருக்கிறாள்; தந்தையின் மார்பில் மகன் ஊர்ந்து விளையாடுகிறான். இந்த இனிய காட்சிக்கு, பாணனது யாழ் எழுப்பும் இனிய ஓசை, ஓரளவு ஒத்திருக்கிறது; ஆயினும், ஐம்புலன்களையும் பிணிக்கும் வல்லமை அந்த யாழிசைக்கு இல்லை.

கருத்து

கணவன் மனைவியர் தம் மகனோடு சேர்ந்து யாழிசை கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

குறிப்பு

யாழிசையும் குழந்தையின் மழலையோசையும் இனியவே; ஆயினும், யாழிசையைவிட மழலையோசைக்கு இனிமை மிகுதி. கேட்கும் போது தான் யாழிசை இனிக்கும்; மழலையோசையோ நினைக்குந்தொறும் இனிக்கும்.

சொற்பொருள்

1. முன்றில் - முன் வாசல்.
2. மனையோள் - மனைவி.
3-4. ஊரும் - தவழ்ந்து; மகிழ் நகை இன்பப் பொழுது - சிரித்து மகிழத்தக்க இனிய நேரம்.
5. மென்பிணித்து - மெல்லிய பிணிப்பாற்றலைக் கொண்டது.

செவிலி கூற்று

ஐங்குறுநூறு 408 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

கடிமனைச் சென்றுவந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் மணம் செய்துகொண்ட பிறகு தலைவனைக் காணச் சென்ற செவிலி, மணமக்களின் காதல் வாழ்க்கையின் சிறப்பைக் கண்டு மனமகிழ்ச்சியோடு திரும்பி வந்து நற்றாயிடம் கூறியது.

பாணர் முல்லை பாடச் சுடரிழை
வாள்நுதல் அரிவை முல்லை மலைய,
இனிதுஇருந் தனனே, நெடுந்தகை
துனிதீர் கொள்கைத்தன் புதல்வனொடு பொலிந்தே.

தெளிவுரை

பாணர்கள் முல்லைப்பண் பாடினர். ஒளி வீசும் அணிகலன் களையணிந்த, ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட தலைவி, கற்புக்கு அடையாளமான முல்லைப்பூவைச் சூடியிருந்தாள். நெடுந்தகையாகிய தலைவன், அன்பை வளர்க்கும் தன் மகனோடு மனையில் (சிறப்புடன்) மகிழ்ச்சியாய் இருந்தான்.

கருத்து

பாணர்கள் வாழ்த்துப் பாடினர்; தலைவி முல்லைப்பூவைச் சூடி யிருந்தாள்; குடி தொடர்வதற்குக் காரணமாகிய மகனுடன் தலைவன் இருந்தனன். எல்லாம் ஒருங்கிணைந்த இந்த இன்பச்சூழலில் இல்லறம் நல்லறமாய்த் திகழ்கிறது.

சொற்பொருள்

1. முல்லை - முல்லைப்பண்; சுடர்இழை - ஒளி வீசும் அணிகலன்களை அணிந்த.
2. முல்லை மலைய - முல்லை மலரைச் சூட.
3. நெடுந்தகை - தலைவன்.
4. துனிதீர் - வெறுப்பு நீங்கிய, அன்பு வளர்க்கும்.

செவிலி கூற்று

ஐங்குறுநூறு 407 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

கடிமனைச் சென்றுவந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் மணம் செய்துகொண்ட பிறகு தலைவனைக் காணச் சென்ற செவிலி, மணமக்களின் காதல் வாழ்க்கையின் சிறப்பைக் கண்டு மனமகிழ்ச்சியோடு திரும்பி வந்து நற்றாயிடம் கூறியது.

நயந்த காதலித் தழீஇப் பாணர்
நயம்படு முரற்கையின் யாத்த பயன்தெரிந்து,
இன்புறு புணர்ச்சி நுகரும்;
மென்புல வைப்பின் நாடுகிழ வோனே.

தெளிவுரை

மென்புலமாகிய முல்லை நாட்டினை உரிமையாய்க் கொண் டவன், தலைவன். அவன் மாலை நேரத்தில் தன் அன்புக்குரிய காதலியைத் தழுவியபடியே, இனிமை மிகுமாறு நரம்பமைந்த யாழில் பாணர்கள் எழுப்பும் இசையினை நுகர்ந்திருப்பான்; பின்னர் அவளொடு கூடிக் காதலின்பம் துய்த்து மகிழ்ந் திருப்பான்.

கருத்து

தலைவன் மாலைப்போதில் மனைவியைத் தழுவியபடி பாணரது இசையின்பத்தையும், பின்னர் இன்புறு புணர்ச்சியின்பத்தையும் நுகர்கிறான்.

சொற்பொருள்

1. நயந்த - விரும்பிய; தழீஇ - தழுவி.
2. நயம் படு - நயத்தில் ஈடுபட வைக்கும்; யாத்த - கட்டப்பட்ட.
3. இன்புறு புணர்ச்சி - காதல் இன்பம் தரும் கூந்தல்.
4. மென்புல வைப்பு - முல்லை நிலம்; கிழவோன் - உரியவன்.

செவிலி கூற்று

நற்றிணை 110 **போதனார்**

திணை : பாலை

கூற்று

மகள் நிலை உரைத்தது.

கூற்று விளக்கம்

திருமணத்தின் பின் தலைவன் வீடு சென்று வந்த செவிலி, தலைவியின் கற்பியல்பை நற்றாய்க்குச் சொல்லியது.

பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பில் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
'உண்'என்று ஓக்குபு பிழைப்பத் தெண்நீர்
முத்துஅரிப் பொன்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று,
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரீஇ மெலிந்துஒழிய, பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுஉணர்ந் தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென,
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்,
ஒழுகுநீர் நுணங்குஅறல் போலப்
பொழுதுமறுத்து உண்ணும் சிறுமது கையளே!

தெளிவுரை

(மென்மையாய் நரைத்த கூந்தலைக் கொண்ட முதிய செவிலியர்), தேன் கலந்த சுவைமிக்க வெண்மையான இனிய பாலை, ஒளி வீசும் பொன் கலத்தில் பெய்து, ஒரு கையில் ஏந்திக்கொண்டு 'உட்கொள்' என்று சொல்லும்போது உட்கொள்ள மாட்டாள்; 'உட்கொள்கிறாயா மாட்டாயா' என அச்சுறுத்தி, மெல்லிய நுனி கொண்ட சிறு குச்சியை ஓச்சும் போது அடியினின்றும் தப்பிப் பொன்சிலம்பு ஒலிக்கத் தத்தித் தத்தி ஓடுவாள். செவிலித்தாயர் அவளைப் பிடிக்க இயலாமல் அயர்ந்து நிற்க, அவள் முல்லைப்பந்தலின்கீழ் ஓடி நின்று, தலையை அசைத்துப் பாலை உட்கொள்ள மறுப்பாள். இவ்வாறு அன்று

விளையாட்டுப் பிள்ளையாய் இருந்த என் மகள் இன்று இல்லறம் ஆற்றுதற்குரிய அறிவையும் ஒழுக்கத்தையும் எவ்விடத்துக் கற்றாளோ?

தன்னை மணந்துகொண்ட கணவன் குடி, வறுமையுற்ற போதும் தன் தந்தை கொடுத்த சிறந்த செல்வத்தையும் பெற மறுத்தாள். தன் கொழுநன் தேடித் தந்த உணவு சிறிதாயினும், அதுவும் ஒரு பொழுது விட்டு ஒரு பொழுதே கிட்டுவதாயினும், அதனை உண்ணும் கற்பு வலிமை கொண்டவள் ஆனாள்.

கருத்து

வறுமை நேர்ந்தபோதும் பிறந்தகத்துச் செல்வத்தைப் பெற மறுக்கும் வலிமையான கற்பு நெறிகொண்டவள், நம் மகள்.

விளக்கம்

திருமணம் செய்துகொண்ட பின் தலைவி கணவன் வீடடைந்த சில காலத்திற்குப் பின்னர் அவளை வளர்த்த செவிலி அவள் மனைக்குச் சென்றாள். தன் வீட்டிலிருந்தபோது, பொன் வள்ளத்தில் தேன் கலந்த பாலைத் தந்தபோது குடிக்க மறுத்து ஓடிய விளையாட்டுப் பிள்ளையாய் இருந்த தன் மகள், இன்று இல்லறத்தைச் செம்மையாய் நடத்த எங்ஙனம் கற்றனளோ என்று வியந்தாள்.

தன் கணவன் குடி வறுமையுற்றதால், ஒரு பொழுதுவிட்டு ஒரு பொழுது உண்ணும் நிலை ஏற்பட்டபோதும், தந்தை கொடுத்த செல்வத்தை ஏற்க மறுத்து, தன் கணவன் தேடிய பொருள் சிறிதளவேயாயினும், அதைக்கொண்டு சிறப்புறக் குடும்பம் நடத்தும் மனவலிமையைப் பெற்றுள்ளாள், மகள்.

குறிப்பு

தாய்வீட்டில் செல்வத்தோடு வளர்ந்திருந்தாலும், தன் கணவன் மனையில் உள்ள நிலைக்கு ஏற்ப வாழ்தலே மனைத்தக்க மாண்பு வாய்ந்த பெண்ணின் கடமை என்பது இப்பாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. பிரசம் - தேன்; வெண்சுவைத் தீம்பால் - வெண்மையான இனிய பால்.

3. புடைத்தல் - கோல் கொண்டு ஓச்சுதல்; பூந்தலை - மெல்லிய நுனியைக் கொண்ட.
4. பிழைப்ப - தப்பி ஓடுதல்.
5. அரி - பரல்; தத்துற்று - தத்தித் தத்தி.
6. அரிநரை - மென்மையான நரை.
7. பரீஇ மெலிந்து ஒழிய - பற்ற முடியாமல் தளர்ந்து அகல; பந்தர் - பந்தல்.
8. விளையாட்டி - விளையாட்டுப்பிள்ளை.
10. கொழுநன் - கணவன்; வறன் - வறுமை.
11. கொழுஞ்சோறு - பெரிய செல்வம்; உள்ளாள் - நினையாதவள்.
12. ஒழுகுநீர் நுணங்கறல் - நீர் துளிக்க நனைந்து உடனே புலரும் நுண்மணல்.
13. பொழுது மறுத்து - வேளாவேளைக்கு உணவின்றி; மதுகை - மனவலிமை.

தலைவி கூற்று

குறுந்தொகை 157 **அள்ளூர் நன்முல்லையார்**

திணை : மருதம்

கூற்று

பூப்பு எய்திய தலைமகள் உரைத்தது.

கூற்று விளக்கம்

பூப்பு எய்தியதால், அடுத்த மூன்று நாள்களும் தலைவனுடன் தான் சேர்ந்திருக்க இயலாததனைத் தலைவி, தலைவனிடம் குறிப்பால் புலப்படுத்தியது.

'குக்கூ' என்றது கோழி; அதன்எதிர்
துட்கென் றன்றுஎன் தூஉ நெஞ்சம்
தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே.

தெளிவுரை

" 'குக்கூ' என்று கூவியது, கோழி; தோளைத் தழுவியுள்ள காதலரை என்னை விட்டுப் பிரிக்கின்ற வாளைப் போல விடியற்

காலமும் வந்துவிட்டது. ஆதலால், என் தூய நெஞ்சமும் திடீரென அச்சமடைந்தது" என்று தலைவி கூறுகிறாள்.

கருத்து

தலைவனைப் பிரிந்திருக்க நேரும் என்பதால் என் மனம் அஞ்சுகிறது.

விளக்கம்

விடியற்காலத்திலே பூப்படைந்த தலைவியின் உள்ளத்திலே இன்னும் மூன்று நாள்களுக்குக் கணவனைப் பிரிந்திருக்க வேண்டுமே என்னும் கவலை உண்டாயிற்று. இதனை வெளிப் படையாய்ச் சொல்லக் கூடாத 'அவையல் கிளவி' என்று அவள் கருதினாள். ஆதலால், அவள் அச்செய்தியை வேறு விதமாய்க் கூறினாள். (அவையல் கிளவி - அவையிலே சொல்லுதற்குத் தகுதியற்ற சொல்.)

குறிப்பு

பெண்கள் பூப்பெய்தினால் மூன்று நாள்கள் தனித்திருப்பர்; கணவனோடு சேர்ந்திருக்க மாட்டார்.

உவமை விளக்கம்

வாளின் இயல்பு ஒரு பொருளை இரண்டாய்த் துண்டித்தல். வைகறைப் பொழுதில் ஏற்பட்ட பூப்பு, காதலர் இருவரையும் தனித்தனியே பிரித்துவிடுவதால், அதற்கு வாள் உவமையாய்க் கூறப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. கோழி - சேவல்; அதன் எதிர் - அதற்கு மாறாய்.
2. துட்கென்று அன்று - திடீரென்று அச்சமடைந்தது; தூஉ - தூய.
3. தோள் தோய் - தோளைத் தழுவிய.
4. வைகறை - விடியற்காலை.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 292 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்முறையாக்கிய பெரும்பொருள் வதுவை முடித்தவளை இல்லத்துக் கொண்டு புகுந்துழி தலைமகள் உவந்து சொல்லியது.

(தன் வாழ்க்கைத்துணையாகிய தலைவி மகவீனும் பேறு வாய்க்கப் பெறாதவளாயிருக்கும் போது வேறொருத்தியை மணந்துகொள்ளுதல் 'பின்முறையாக்கிய பெரும்பொருள் வதுவை' எனப்படுகிறது. அஃதாவது, இரண்டாம் மனைவி.)

'பின்முறையாக்கிய பெரும்பொருள் வதுவை' என்பது தொல்காப்பிய நூற்பாவில் வரும் தொடர். (தொல். பொருள். கற்பு-31). தொல்காப்பிய நூற்பா முழுவதையும் நோக்கினால், தலைவன், தலைவியர் இல்லற வாழ்விலே 'மக்கட்பேறு' சிறப்பிடம் பெற்றிருப்பதை உணரலாம்.

வாழ்க்கைத்துணையாகிய தலைவி மகவீனும் பேறு வாய்க்கப் பெறாதவளாயிருக்கும்போது, வேறொருத்தியைப் பின்முறையாக வதுவை செய்துகொள்ளுதல் உலகியல் வழக்காகும்.

ஒருத்தி மக்கட்பேறெய்திய பின் அவள் கணவன் வேறொருத்தியை மனையாட்டியாக்குதல் தமிழ் மரபன்று; பிறர் உளராயின் அவர் அனைவரும் 'இற்பரத்தையர்' எனப்படுவர். 'இற்பரத்தையர்' பொது மகளிராகாது, ஒருவர்க்கே உரிமையாவார். அதனால் பிற்காலத்தார் அவர்களை 'உரிமை மகளிர்' என்றும் குறிப்பிடுவராயினர்.

கூற்று விளக்கம்

தலைவன் தனக்குப் பிள்ளைப்பேறாகிய பெரும்பேறு வேண்டி, முறைப்படி இரண்டாம் மனைவியாக மணந்துகொண்டவளை அழைத்துக் கொண்டு இல்லத்தில் புகுந்தான். அப்போது முதல் மனைவியாகிய தலைவி மகிழ்ந்து சொல்லியது.

மயில்கள் ஆலப் பெருந்தேன் இமிர,
தண்மழை தழீஇய மாமலை நாட!
நின்னினும் சிறந்தனள், எமக்கே நீநயந்து
நல்மனை அருங்கடி அயர,
எம்நலம் சிறப்பயாம் இனிப்பெற் றோரே.

தெளிவுரை

"மயில்கள் ஆடிக்கொண்டிருப்பதும், வண்டினம் பாடிக் கொண்டிருப்பதும், மழை பொழிந்து கொண்டிருப்பதும், குளிர்ச்சி பொருந்திய மேகங்கள் தழுவிக் கொண்டிருப்பதுமான பெரிய மலைநாட்டிற்கு உரியவனே! நீ விரும்பி நல்ல வீட்டில் அரிய திருமணம் செய்தமையால் எம் இல்லற நலம் சிறப்படை கிறது. நான் இப்போது துணையாய்ப் பெற்றுள்ள இவள், எனக்கு உன்னையும்விட நல்லவள்" எனத் தலைவி தலைவனிடம் கூறுகிறாள்.

கருத்து

'எனக்குள்ள குறையை நீக்குதலின், எனக்கு இவள் உன்னைவிடச் சிறந்தவள்' ஆகிறாள்.

குறிப்பு

" 'தம் பொருள் என்ப தம்மக்கள்', 'பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற' என்னும் திருக்குறள் தொடர்கள் ஒருகால், 'பின்முறையாக்கிய பெரும்பொருள் வதுவை' எனும் இந்த அடை மொழிக்கு விளக்கம் தருவனவாய் இருக்கலாமோ என்னும் எண்ணம் எழுகிறது. தலைவிக்கு மகப்பேறு வாய்க்காமையால், தலைவன் பின் ஒரு மணம் முடித்திருக்கக்கூடும். மகப்பேறு குறித்த மணமாகையால் தலைவி ஒருவாறு மனந்தேறி ஏற்றிருக்கக்கூடுமென்று அமைதி காண இடமுண்டு. எனினும், இஃது அமைதியே (சமாதானமே) தவிர அறநெறியாகாது" என்கிறார், அறிஞர் அ.ச. ஞானசம்பந்தம்.

பலதார மணம் இருந்த சமுதாயத்தில் வாழ்ந்த தலைவியின் பேச்சாகவே இப்பாடலைக் கொள்ள வேண்டியுள்ளது.

சொற்பொருள்

1. ஆல - ஆட; பெருந்தேன் - பெரிய வண்டுகள்; இமிர - ஒலிக்க.
2. மழை - மேகம்; தழீஇய - தழுவிய.
3. நயந்து - விரும்பி.
4. அருங்கடி - அரிய திருமணம்; அயர - செய்ய.
5. இனிப் பெற்றோள் - இப்போது பெறப்பட்டவள்.

திருக்குறள் - அதிகாரம் 129 புணர்ச்சி விதும்பல்

தலைவி கூற்று

திருக்குறள் 1281 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

பிரிதல் குறிப்பினனாய தலைமகனோடு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியும் குறிப்புத் தெரிந்தும், 'நீ ஊடல் கொள்ளாதிருப்பது ஏன்?' என, நகைப்புடன் கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்(கு)இல் காமத்திற்(கு) உண்டு.

தெளிவுரை

நினைத்த அளவிலேயே மகிழ்ச்சி தருதலும், பார்த்த அளவிலேயே பேரின்பம் உண்டாக்கலும் மதுவுக்கு இல்லை; காம இன்பத்திற்கு உண்டு.

கருத்து

நினைத்தால் மயக்கம், கண்டால் மகிழ்ச்சி காதலுக்கு மட்டுமே உண்டு; கள்ளுக்கு இல்லை.

விளக்கம்

மதுவை நினைத்தால் மட்டும் மயக்கம் வராது; அதனைக் குடித்தால்தான் வரும். ஆனால் காதலனைக் கூடினபோது மட்டுமின்றி நினைத்த அளவிலேயே அவனைத் துய்க்கும் இன்பம் தோன்றும்.

குறிப்பு

'காதலன் பிரிந்து செல்வதால் அவனைக் காண முடியாது என்பது ஒன்றே தவிர, அவனை நினைத்த அளவிலேயே இன்பம் கிடைக்கிறதே! அவ்வாறிருக்க அவன் பிரிவு கருதி நான் ஏன் ஊட வேண்டும்?' என்று, தலைவி தோழிக்குக் கூறினாள்.

சொற்பொருள்

1. உள்ளக் களித்தலும் - நினைத்த அளவிலே மயக்கம் கொள்ளுதலும் (உள்ளுதல் - நினைத்தல்; களிப்பு - மயக்கம்); காண - கண்ட அளவிலேயே; மகிழ்தலும் - மகிழ்ச்சி அடைதலும்.
2. கள்ளுக்கு இல் - மதுவுக்கு இல்லை; காமத்திற்கு உண்டு - காதலுக்கு உண்டு.

தலைவி கூற்று

திருக்குறள் 1282 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

பிரிதல் குறிப்பினனாய தலைமகனோடு நீ புலவாமைக்குக் காரணம் யாதெனா நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியும் குறிப்புத் தெரிந்தும், 'நீ ஊடல் கொள்ளாதிருப்பது ஏன்?' என நகைப்புடன் கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்.

தெளிவுரை

பனை அளவாகக் காதல் பெருகிடும்போது தினை அளவுகூட ஊடல் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

கருத்து

காமநோய் பெரிதாய் இருக்குமானால் ஊடல் சிறிதளவும் கூடாது.

விளக்கம்

"தலைவனின் நெடுநாள் பிரிவினால் காமநோய் மிகப் பெரிய அளவில் வளர்ந்திருக்கிறது; ஆதலின் அவனைக் கண்டதும் ஊடல் கொள்ளச் சிறிதளவும் விரும்பக் கூடாது; உடனே சேர வேண்டும்" எனத் தலைவி தன் தோழிக்குக் கூறுகிறாள். (மிகப் பெரிய அளவுக்குப் 'பனை'யையும், மிகச் சிறிய அளவுக்குத் 'தினை'யையும் திருவள்ளுவர் கையாண்டுள்ளார்.)

குறிப்பு

'காம இன்பம் பனையளவினும் மிகுந்திருக்கும்போது மகளிர் தம் காதலரோடு தினையளவுகூட ஊடுதல் கொள்ளக் கூடாது' எனத் தலைவி, தான் ஊடல் கொள்ளாமைக்குக் காரணம் கூறினாள்.

சொற்பொருள்

2. காமம் - காமமானது.
1. பனைத் துணையும் - பனை அளவினும்.
2. நிறைய - மிக; வரின் - (மகளிர்க்கு) உண்டாகுமாயின்.
1. தினைத் துணையும் - தினை அளவும்; ஊடாமை - (தம் தலைவரோடு) பிணங்காமை; வேண்டும் - விரும்பப்படும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1283 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

பிரிதல் குறிப்பினனாய தலைமகனோடு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியும் குறிப்புத் தெரிந்தும், ‘நீ ஊடல் கொள்ளாதிருப்பது ஏன்?’ என, நகைப்புடன் கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணா(து) அமையல கண்.

தெளிவுரை

“என்னைப் பேணி அன்பு செய்யாமல் புறக்கணித்து, தான் விரும்பியவற்றை அவன் செய்தாலும் என் காதலனைக் காணாமல் என் கண்கள் அமைதி அடைவதில்லை.”

கருத்து

என்னைப் புறக்கணித்துத் தான் விரும்பியபடியே செய்யினும், காதலனை என்னால் காணாதிருக்க முடிவதில்லை.

விளக்கம்

காதலி தன் காதலன் பிரிவை விரும்புவதில்லை. அவளுடைய எண்ணத்தைப் புறக்கணித்துக் காதலன் தான் விரும்பியவாறே பிரிந்து சென்றாலும் காதலியின் கண்கள் அவனைக் காணவே துடிக்கின்றன.

குறிப்பு

‘கண், காணத் துடிக்கும்போது ஊடுவது எங்ஙனம்?’ எனத் தலைவி கேட்கிறாள்.

சொற்பொருள்

1. பேணாது - (நம்மைப்) புறக்கணித்து; பெட்பவே - (தான்) விரும்பியவற்றையே; செய்யினும் - செய்தாலும்; கொண்கனை - என் காதலனை (கணவனை).
2. காணாது - பாராமல்; கண் அமையல - என் கண்கள் அமைதி அடைவதில்லை (கண்கள் காணவே துடிக்கின்றன).

தலைவி கூற்று

திருக்குறள் 1284 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

பிரிதல் குறிப்பினனாய தலைமகனோடு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியும் குறிப்புத் தெரிந்தும், 'நீ ஊடல் கொள்ளாதிருப்பது ஏன்?' என, நகைப்புடன் கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

ஊடற்கண் சென்றேன்மன் தோழி! அதுமறந்து
கூடற்கண் சென்றதென் நெஞ்சு.

தெளிவுரை

தோழி! காதலரைக் காணாமுன் அவர் செய்த தவற்றை எண்ணி அவரோடு ஊடல் கொள்ள வேண்டுமென்றுதான் எண்ணியிருந்தேன். அவரைக் கண்டதும் என் நெஞ்சு, ஊடலை மறந்து கூடுவதற்குச் சென்றுவிட்டது.

கருத்து

நான் ஊடச் சென்றேன்; என் நெஞ்சு அவரைக் கூடச் சென்றுவிட்டது.

விளக்கம்

தோழி! காதலர் செய்த தவற்றினை எண்ணி, அவரோடு ஊடல் கொள்ளச் சென்றேன். என் மனமோ அதை மறந்து

கூடலை எண்ணிச் சென்றது. (அவள் வேறு, மனம் வேறு அன்று. அவள் செய்கையை மனத்தின் மேல் ஏற்றிச் சொல்கிறாள்.)

குறிப்பு

'மனம் கூடுதற்குச் சென்றபின் நான் ஊடுதல் ஏது?' என்று தான் ஊடாமைக்குத் தலைவி, தோழிக்குக் காரணம் கூறுகிறாள். 'தோழி' என்ற சொல்லைத் திருவள்ளுவர் இந்த ஒரு குறளில் மட்டுமே கையாண்டுள்ளார்.

சொற்பொருள்

1. தோழி - தோழியே! ஊடற்கண் சென்றேன் - ஊடுவதற்குச் சென்றேன்; அது மறந்து - அதை மறந்து.
2. என் நெஞ்சு - என் நெஞ்சம்; கூடற்கண் சென்றது - கூடுவதற்குச் சென்றது.

தலைவி கூற்று

திருக்குறள் 1285 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

பிரிதல் குறிப்பினனாய தலைமகனோடு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியும் குறிப்புத் தெரிந்தும், 'நீ ஊடல் கொள்ளாதிருப்பது ஏன்?' என, நகைப்புடன் கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

எழுதும்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து.

தெளிவுரை

மை தீட்டும்போது தீட்டும் கோலைக் காணாத கண்களைப் போலக் காதலனை நேரில் கண்டபோது, அவர் செய்த தவறுகள் எனக்குத் தெரிவதில்லை.

கருத்து

மை தீட்டும்போது தீட்டும் கோலைக் காணாத கண்களைப்போலக் காதலனை நேரில் காணும்போது, அவர் செய்த தவறுகளைக் காண மாட்டேன்.

விளக்கம்

கண்களுக்கு அஞ்சனக் கோலால் மை தீட்டும் பொழுது கண்களுக்கு அக்கோல் தெரியாது. அதுபோலக் காதலனைக் காணும் போது, அவர் செய்த தவறுகள் எதுவும் எனக்குத் தெரிவதில்லை.

குறிப்பு

'தவறுகள் தெரியாதபோது ஊடுவது எவ்வாறு?' என்று தலைவி கேட்கிறாள்.

சொற்பொருள்

1. எழுதும்கால் - (கண்களுக்கு) மை தீட்டும்பொழுது; கோல் காணா - மை தீட்டும் அஞ்சனக் கோலின் இயல்பைக் காண முடியாத; கண்ணேபோல் - கண்களைப் போல; கொண்கன் - காதலனை.
2. கண்ட இடத்து - (நேரில்) கண்டபோது; பழிகாணேன் - (அவர் செய்த) தவறுகளைக் காண மாட்டேன்.

தலைவி கூற்று

திருக்குறள் 1286 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

பிரிதல் குறிப்பினனாய தலைமகனோடு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியும் குறிப்புத் தெரிந்தும், 'நீ ஊடல் கொள்ளாதிருப்பது ஏன்?' என, நகைப்புடன் கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

காணுங்கால் காணேன் தவறாய; காணாக்கால்
காணேன் தவ(று)அல் லவை.

தெளிவுரை

தலைவனை நான் காணும்போது அவர் செய்த தவறுகளைக் காணுவது இல்லை. காணாதபோது தவறுகளைத் தவிர வேறொன்றையும் காணுவதில்லை.

கருத்து

காணாதபோது தவறு தவிரப் பிற காணேன். காணும்போதோ தவறு காணேன்.

விளக்கம்

காதலர் நான் காண என் அருகிலேயே இருக்கும்போது, அவரிடம் ஒரு குற்றமும் காண முடியவில்லை; ஆனால் அவரைப் பிரிந்து காணாதிருக்கும்போது, அவர் செய்வதெல்லாம் குற்றமாகவே தெரிகின்றன.

குறிப்பு

காதலரைக் காணும்போது நல்லதே காண்கிறேன்; எனின் எவ்வாறு ஊடல் கொள்ள முடியும்?

சொற்பொருள்

1. காணும்கால் - நான் (காதலனைக்) காணும்பொழுது; தவறாய - (அவர் செய்த) குற்றங்களாக.
2. காணேன் - (எதையும்) காண்கிலேன்; காணாக்கால் - (அவரைக்) காணாத பொழுது; தவறு அல்லதை - குற்றமல்லாதவற்றை; காணேன் - காண்கிலேன்.

தலைவி கூற்று

திருக்குறள் 1287 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

பிரிதல் குறிப்பினனாய தலைமகனோடு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியும் குறிப்புத் தெரிந்தும், 'நீ ஊடல் கொள்ளாதிருப்பது ஏன்?' என, நகைப்புடன் கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்(து),என் புலந்து.

தெளிவுரை

ஓடும் வெள்ளம் இழுத்துப் போகும் என்பதை அறிந்தும் அதனுள் பாய்கின்றவரைப்போல, என் ஊடல் பொய்த்துப் போம் என்பது தெரிந்திருந்தும், ஊடல் கொள்வதால் என்ன பயன்?

கருத்து

புலவி தோல்வியில் முடியும் என்பதை அறிந்தும், கணவனோடு புலவி கொள்வதால் என்ன பயன்?

விளக்கம்

'இறங்கினால் ஆற்றின் வேகம் இழுத்துச் சென்று விடும் என்பதை அறிந்திருந்தும், அதில் இறங்கலாமா? அதுபோலத் தலைவனுடன் இன்பம் துய்க்க வேண்டும் என்ற வேகம் ஊடலைத் தோற்கடிக்கச் செய்துவிடும் என்று தெரிந்திருந்தும், ஊடுதலால் என்ன பயன்?

குறிப்பு

"ஊடல் வேகத்தினும் கூடல் வேகம் மிகுதியாய் இருப்பதால், ஊடல் கொள்வதால் பயனில்லை" என்று, தோழிக்குத் தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. உய்த்தல் - (வெள்ளம்) நம்மை ஈர்த்துக்கொண்டு செல்லும்; அறிந்து - (என்பதை) அறிந்தும்; புனல் பாய்வரேபோல் - நீருள் பாய்பவர்போல.
2. பொய்த்தல் அறிந்து - (ஊடல்) பொய்த்துப் போவதை அறிந்தும்; என் புலந்து - ஊடல் கொள்வதால் என்ன பயன்?

தலைவி கூற்று

திருக்குறள் 1288 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் புணர்ச்சி விதுப்பில் சொல்லியது. (விதுப்பு - விரைவு)

கூற்று விளக்கம்

ஊடலுக்குக் காரணம் உள்ளபோதும் தலைவி வேட்கை மிகுதியால் விரைந்து கூடுதலை விரும்பிச் சொல்லியது.

இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்அற்றே கள்வ!நின் மார்பு!

தெளிவுரை

இழிவும் கேடும் தரும் என்று தெரிந்திருந்தும் குடியர் கள்ளை மீண்டும் மீண்டும் விரும்புவர். காதலனே! எமக்கு உன் மார்பு அது போன்றதே!

கருத்து

தலைவன் மார்பைத் தழுவாது இருக்க முடியவில்லை.

விளக்கம்

“என் மனத்தைக் கொள்ளை கொள்ளும் தலைவனே! இழிவு நேர்ந்தாலும் கள் குடிப்போர் போதை விருப்பத்தால் குடியை விட முடியாதுள்ளனர். அதுபோல, நீ என்ன செய்தாலும் உன்னை விரும்பி உன் மார்பைத் தழுவாமல் என்னால் இருக்க

முடியவில்லை" என்று தலைவனிடம் ஊடல் கொள்ளக் கருதும் தலைவி தன் நெஞ்சிற்குக் கூறுகிறாள்.

குறிப்பு

கள்ளுண்டு களித்தவர்க்கு மேன்மேலும் ஆசையூட்டும் கள்ளைப் போல், தலைவன் மார்பை மேன்மேலும் தழுவ வேண்டும் என்று, தலைவியின் உள்ளம் அவளை விரைவுபடுத்துகிறது.

சொற்பொருள்

2. கள்வ - என் மனத்தைக் கொள்ளை கொள்ளும் தலைவனே!
1. இளித்தக்க - இழிவு தரத்தக்க; இன்னா செயினும் - கெடுதிகள் செய் தாலும்; களித்தார்க்கு - (கள்ளுண்டு) போதையுற்றவர்க்கு.
2. கள் அற்றே - (மேன்மேலும் விருப்பம் தரும்) கள்ளைப் போன்றது; நின் மார்பு - உன் மார்பு.

தலைவன் கூற்று

திருக்குறள் 1289 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது. (உணர்ப்புவயின் வாரா ஊடல் - உணர்த்தியும் தணியப் பெறாத ஊடல்; உணர்ப்பு - உணர்த்துதல்.)

கூற்று விளக்கம்

தன்மேல் தவறு எதுவுமில்லையெனப் பன்முறை வேண்டியும் தலைவி ஊடல் நீங்காதபோது தலைவன் தன்னுள் கூறியது.

மலரினும் மெல்லிது காமம்; சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

தெளிவுரை

காம இன்பம் மலரைவிட மென்மையானது. அதன் பக்குவம் அறிந்து இன்பம் துய்ப்பார் மிக மிகச் சிலர்.

கருத்து

காமம் மலர்போல் மென்மையது என்பதைச் சிலரே அறிவர்.

விளக்கம்

மலரினும் மென்மையானது காமம். மலர் மலரும் பருவத்தை அறிந்தே, அதன் மணத்தையும் தேனையும் பெறவேண்டும். மலரும் முன் மணமோ தேனோ பெற முடியாது. காதலிலும் பக்குவ நிலை கண்டே இன்பம் துய்க்க வேண்டும். வலிந்து துய்க்க முற்பட்டால், இன்பம் சிறிதும் பெற முடியாது. ஆதலின், பக்குவம் அறிந்தே இன்பம் துய்க்க முற்பட வேண்டும். காதலின் இம் மென்மைத் தன்மையை உணர்ந்தோர், உலகில் சிலராகவே உள்ளனர்.

குறிப்பு

தலைவியின் மனப் பக்குவம் அறிந்தே, இன்பம் துய்க்க வேண்டும். இது தெரியாவிடின் காதல் சுவைக்காது.

சொற்பொருள்

1. காமம் - காம இன்பம்; மலரினும் - பூவினும்; மெல்லிது - மென்மை யுடையது.

1-2.(அப்படி மென்மையதாய் இருப்பதறிந்து), அதன் செவ்வி - அதன் பக்குவத்தை (அறிந்து); தலைப்படுவார் - பெறக் கூடியவர்; சிலர் - உலகத்திலே மிகச் சிலரே.

தலைவன் கூற்று

திருக்குறள் 1290 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன்மேல் தவறு எதுவுமில்லையெனப் பன்முறை வேண்டியும் தலைவி ஊடல் நீங்காதபோது தலைவன் தன்னுள் கூறியது.

கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று.

தெளிவுரை

கண் அளவில் காதலி ஊடல் கொண்டிருப்பதுபோலக் கலங்கி உள்ளாள். ஆனால் உள்ளத்தளவில் என்னைக் காட்டிலும் விரைந்து தழுவுதலை விரும்பியுள்ளாள்.

கருத்து

ஊடல் தோற்றத்திலிருந்தாலும் அவள் கூடலையே விரும்பியுள்ளாள்.

விளக்கம்

என் மேல் அவள் ஊடல் கொண்டுள்ளாள் என்பதை அவள் கண்கள் உணர்த்தின. ஆனால் உள்ளத்தில் ஊடுதல் நினைப்பு நீங்கி, விரைந்து தழுவுதலை விரும்பி நிற்கிறாள்.

குறிப்பு

'அவள் ஊடல் கொண்டதுபோல் தோன்றினும் கூடலையே விரும்பி யுள்ளாள். நான் அணைத்தால் அவள் என்னைவிட விரைந்து அணைப்பாள்' என்று, தலைவன் தன்னுள் கூறிக் கொள்கிறான்.

சொற்பொருள்

1. கண்ணின் துனித்தே - கண்ணாலே ஊடல் கொண்டு; புல்லுதல் - கூடுதற்கு.
2. என்னினும் விதுப்புற்று - என்னைவிடத் தான் விரைதலாலே.
1. தான் கலங்கினாள் - (அவள் ஊடலையும் மறந்து) தடுமாறினாள்.

அதிகாரம் 130 நெஞ்சொடு புலத்தல்

தலைவி கூற்று

திருக்குறள் 1291 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன்கண் தவறு உண்டாயவழியும் புலவி கருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தவறு செய்தபோதும் அவனிடம் ஊடல் கொள்ளக் கருதாத தன் நெஞ்சிற்குத் தலைவி சொல்லியது.

அவர்நெஞ்சு அவர்க்(கு)ஆதல் கண்டும், எவன்நெஞ்சே
நீஎமக்(கு) ஆகா தது?

தெளிவுரை

நெஞ்சே! அவர் நெஞ்சம் உன்னை நினையாது அவரையே நினைத்துக் கொண்டிருக்கும்போது, நீ மட்டும் என்னை நினையாது அவரையே நினைந்திருப்பது ஏன்?

கருத்து

நம்மை நினையாரை நாம் நினைப்பது ஏன்?

விளக்கம்

"நெஞ்சே! நம்மைப் பிரிந்து சென்றிருக்கும் தலைவர் தன்னையே நினைந்து, என்னை நினைந்து கவலைப்படுவதாய்த் தெரியவில்லை. (கவலைப்பட்டிருந்தால் பிரிந்து சென்ற அவர் இவ்வளவு காலம் தங்கியிருக்க மாட்டார்.) அவ்வாறிருக்க, என் நெஞ்சே! நீ எனக்காக மட்டும் நில்லாமல் அவரைப் பற்றியே எண்ணிக்கொண்டிருக்கிறாயே; அது ஏன்?" என்று தலைவி தன் நெஞ்சிடம் கேட்கிறாள்.

குறிப்பு

தலைவி தான் ஊடல் கொண்டிருப்பதாய்க் கூறினாலும், அவள் உள்ளூர ஊடல் கொள்ளவில்லை என்பதைத் தலைவனை அவள், 'அவர்' என்று குறிப்பிடுவதிலிருந்து புரிகிறது.

சொற்பொருள்

1. நெஞ்சே! - என் மனமே!; அவர் நெஞ்சு - அவரது (தலைவரது) மனம்; அவர்க்கு ஆதல் கண்டும் - (நம்மை நினையாமல்) அவரிடமே நிற்கக் கண்டும்.
2. நீ - என் மனமே!; எமக்கு ஆகாதது - (அவரை நினையாது) எனக்காகவே நில்லாமைக்குக் (காரணம்); எவன்? - யாது?

தலைவி கூற்று

திருக்குறள் 1292 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன்கண் தவறு உண்டாயவழியும், புலவி கருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தவறு செய்தபோதும் அவனிடம் ஊடல் கொள்ளக் கருதாத தன் நெஞ்சிற்குத் தலைவி சொல்லியது.

உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅர்எனச் சேறி,என் நெஞ்சு!

தெளிவுரை

என் நெஞ்சே! தலைவர் நம்மிடத்தில் அன்பு காட்டாதவர் என்று அறிந்திருந்தும், நாம் சென்றால் அவர் வெறுக்க மாட்டார் என நம்பி, அவர் பின்னேயே செல்கிறாயே, அது ஏன்?

கருத்து

அன்பில்லாதவர் என்று தெரிந்தும் அவர்பின் செல்லலாமா?

விளக்கம்

'அவருக்கு நம்மேல் அன்பில்லை என்பதை அறிந்திருந்தும் அவரிடம் செல்கிறாயே' என்று, தலைவி தன் மனத்திற்குக் கூறி வருந்துகிறாள்.

குறிப்பு

'அடைய முடியாததை அடைய எண்ணாதே' என்று நெஞ்சுக்குத் தலைவி அறிவுரை கூறுகிறாள்.

சொற்பொருள்

2. என் நெஞ்சு - என் நெஞ்சமே!
1. உறாஅதவர் - (அவர் நம்மிடம்) அன்பு கொள்ளாதவர்; கண்ட கண்ணும் - (என்பதைத் தெளிவாக) அறிந்திருந்தும்.
2. செறாஅர் என - (நாம் சென்றால்) வெறுக்க மாட்டார் என்று.
1-2. அவரைச் சேறி - அவரிடம் செல்கிறாயே?

தலைவி கூற்று

திருக்குறள் 1293 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன்கண் தவறு உண்டாயவழியும், புலவி கருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தவறு செய்தபோதும் அவனிடம் ஊடல் கொள்ளக் கருதாத தன் நெஞ்சிற்குத் தலைவி சொல்லியது.

கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சே,நீ
பெட்டாங்(கு) அவர்பின் செலல்?

தெளிவுரை

நெஞ்சமே! நீ என்னிடம் நில்லாது அவரை விரும்பிப் பின் தொடர்ந்து செல்வது, துன்பத்தால் அழிந்தோர்க்கு நண்பர் துணையிருக்க மாட்டார் என்று சொல்வது போன்றதா?

கருத்து

நெஞ்சமே! 'கெட்டார்க்கு நட்டார் இல்' என்பதற்கொப்ப என்னை நீங்கி நீ அவர் பின் செல்கிறாய்.

விளக்கம்

ஒருவர் நலமுடன் இருக்கும்போது நட்பும் சுற்றமும் சூழ்ந்திருக்கும். நலம் கெட்டபோது அந்நட்பும் சுற்றமும் விலகிப் போகும். "நெஞ்சே! என்னோடு ஒட்டியிருந்த நீ, அவர் பிரிவால் நான் நலம் கெட்டதும் என்னை நீங்கி அவரிடம் சென்று சேர்ந்தாயா?" என்று தலைவி, தன் நெஞ்சைக் கேட்டுப் புலம்புகிறாள்.

குறிப்பு

'கெட்டார்க்கு நட்டார் இல்' என்னும் பழமொழி, இக்குறட்பாவில் ஆளப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. நெஞ்சே நீ - மனமே! நீ (என்னிடத்தில் நில்லாமல்).
2. பெட்டாங்கு - நீ விரும்பியபடி; அவர் பின் செலல் - அவர் பின் செல்வதற்குக் (காரணம்).
1. கெட்டார்க்கு நட்டார் இல் - நலம் கெட்டவர்க்கு நண்பர் இல்லை; என்பதோ - என்ற உலக இயல்போ? (சொல்).

தலைவி கூற்று

திருக்குறள் 1294 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன்கண் தவறு உண்டாயவழியும், புலவி கருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தவறு செய்தபோதும் அவனிடம் ஊடல் கொள்ளக் கருதாத தன் நெஞ்சிற்குத் தலைவி சொல்லியது.

இனிஅன்ன நின்னொடு சூழ்வார்,யார் நெஞ்சே!
துனிசெய்து துவ்வாய்,காண் மற்று.

தெளிவுரை

நெஞ்சே! முதலில் அவருடன் ஊடல் கொண்டு பின் கூடலாம் என்ற எண்ணமே உனக்கு இல்லை. அவ்வாறுள்ள உன்னை நம்பி ஊடல் செய்யும் கருத்தினை எவ்வாறு திட்டமிட முடியும்?

கருத்து

மனமே! தலைவரைக் கண்டவுடன் அவரைச் சென்றடையும் உன்னுடன் நான் அவரிடம் ஊடல் கொள்ள உன்னிடம் கலந்து பேசுவதில் என்ன பயன்?

விளக்கம்

என் நெஞ்சமே! அவரைக் கண்டதும் முதலில் ஊடலாம் பிறகு கூடலாம் என்ற எண்ணமே உனக்கு இல்லை. இப்படிப் பட்ட உன்னிடம் ஊடல் பற்றிக் கலந்து பேசுபவர் எவர்?

குறிப்பு

தலைவனைக் கண்டதும் இணங்காமல் பிணங்கிப் பிறகே கூட வேண்டும் என்று, தலைவி எண்ணியிருந்தாள்; ஆனால் இயலவில்லை. இச்செயலை மனத்தின்மேல் ஏற்றி, அதன் குற்றமாய்க் குறிப்பிடுகிறாள்.

சொற்பொருள்

1. நெஞ்சே - என் நெஞ்சமே! (நீ அவரைக் காணும் பொழுதே).
2. துனிசெய்து - (அவர் தவறு நோக்கி) ஊடல் செய்து; துவ்வாய் காண் - (அதன் பயனை) நுகர மாட்டாய்.
1. இனி - இனி; அன்ன நின்னொடு - அத்தகைய உன்னோடு; சூழ்வார் யார்? - கூடிக் கலந்து பேசுபவர் எவர்? (ஒருவரும் உன்னுடன் கலந்து பேசார்).

தலைவி கூற்று

திருக்குறள் 1295 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது. (வாயில் - வழி. தலைமகனுடைய இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர்.)

கூற்று விளக்கம்

ஊடியிருந்த தலைவி ஊடல் நீங்கித் தலைவனோடு கூட வேண்டும் என்று, தலைவன் சார்பாய்ச் சொல்ல வந்த தோழிக்குத் தலைவி சொல்லியது.

பெறாஅமை அஞ்சும்; பெறின்பிரி(வு) அஞ்சும்;
அறாஅ இடும்பைத்(து)என் நெஞ்சு.

தெளிவுரை

காதலரைப் பெறாதபோது பெறாமைக்கு அச்சம்; பெற்றால் பிரிவை நினைந்து அச்சம். இவ்வாறாக என் நெஞ்சம் தீராத துன்பம் கொண்டதாய் இருக்கிறது.

கருத்து

காதலர் பிரியும்போது தனித்திருக்க அச்சம்; சேர்ந்தால் எப்போது பிரியப் போகிறாரோ என்ற அச்சம். அச்சமே மனத்தின் அன்றாட நிலைமை.

விளக்கம்

என் நெஞ்சம் எப்போதும் துன்பத்திலேயே அல்லற்படுகிறது. எனவே, என் மனம் எப்பொழுதும் கவலைப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

குறிப்பு

'தலைவன் பிரியும்போதும் துன்பம்; இருக்கும்போதும் துன்பம். என் மனத்துக்கு எப்போதும் அவனால் துன்பமென்றால் அவன் ஏன் என்னிடம் வரவேண்டும்' என்று, தலைவி தோழிக்கு வாயில் மறுத்துக் கூறுகிறாள். (தலைவி வாயில் மறுத்தல் - தூதாய் வந்தவர்க்குத் தலைவி முகம் கொடுக்க மறுத்தல்.)

சொற்பொருள்

1. பெறாஅமை - காதலரைப் பெறாத போது; அஞ்சும் - மனம் (அவரைப் பெறாமைக்கு) அஞ்சும்; பெறின் - தலைவன் வரப்பெற்றால்; பிரிவு அஞ்சும் - இவன் பிரிவானோ என்று அஞ்சும்.
2. (அதனால்) என் நெஞ்சு - என் நெஞ்சம்; அறாஅ இடும்பைத்து - தீராத துன்பமுடையது.

தலைவி கூற்று

திருக்குறள் 1296 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

ஊடியிருந்த தலைவி ஊடல் நீங்கித் தலைவனோடு கூட வேண்டும் என்று, தலைவன் சார்பாய்ச் சொல்ல வந்த தோழிக்குத் தலைவி சொல்லியது.

தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்த(து)என் நெஞ்சு.

தெளிவுரை

நான் தனித்திருந்து தலைவனின் தவறுகளை நினைத்திருக்கும்போது என் நெஞ்சம் என்னைத் தின்று விடுவதுபோல வாட்டிக் கொண்டே இருக்கிறது.

கருத்து

தலைவனின் தவறுகளை நான் எண்ணும்போது, என் மனம் என்னைத் துன்புறுத்துகிறது.

விளக்கம்

"நான் தலைவனைப் பிரிந்து தனியாக இருந்து அவன் செய்த கொடுமைகளை எண்ணிக் கொண்டிருப்பேன். அவ்வேளையில், என்னோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருக்கும் என் மனமோ என்னைத் தின்றுவிடுவது போன்ற துன்பத்தைச் செய்வதற் கென்றே என்னோடு இருக்கின்றது" என்று, தலைவன் கொடுமை களை நினைக்கத் தன் மனம் தன்னோடு ஒத்துழைக்காதது குறித்துத் தலைவி வருந்துகிறாள்.

குறிப்பு

தலைவன் கொடுமைகளை நினைக்கும்போதே என்னைத் தின்பதுபோல் துன்புறுத்துவதற்கென்றே என் மனம் இருக்கும்போது, நான் அவரோடு

எவ்வாறு ஊடல் கொள்ள முடியும்? (ஊடல் தீர்ந்ததை மனத்தின்மேல் ஏற்றித் தோழியிடம் தலைவி புலப்படுத்துகிறாள்.)

சொற்பொருள்

1. தனியே இருந்து - (தலைவன் பிரிவில் நான்) தனித்து இருந்து; நினைத்தக்கால் - (அவன் தவறுகளை) நினைத்திருக்கும்போது; என்னை - என்னை.
2. என் நெஞ்சு - என் மனம்; தினிய இருந்தது - தின்னுவதுபோல (வாட்டிக் கொண்டு இருந்தது).

தலைவி கூற்று

திருக்குறள் 1297 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

ஊடியிருந்த தலைவி ஊடல் நீங்கித் தலைவனோடு கூட வேண்டும் என்று, தலைவன் சார்பாய்ச் சொல்ல வந்த தோழிக்குத் தலைவி சொல்லியது.

நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லா,என்
மாணா மடநெஞ்சிற் பட்டு.

தெளிவுரை

காதலரை மறக்க முடியாத அறிவில்லா என் நெஞ்சோடு சேர்ந்து, மறக்கத் தகாததாகிய நாணத்தையும் நான் மறந்து விட்டேன்.

கருத்து

அறிவில்லாத நெஞ்சினால் உயிரினும் சிறந்த என் நாணத்தை மறந்தேன்.

விளக்கம்

"தலைவன் தலைவியைப் பிரிந்து மறந்திருக்கிறான். தன்னைப் பொருட்படுத்தாது பிரிந்த தலைவனைத் தலைவி மறக்க விரும்புகிறாள். ஆனால், அவள் மனத்தால் அவனை மறக்க முடியவில்லை. 'நம்மை மதியாரை நாம் மதித்தல் இழிவு' என்று கருதாது அவனையே நினைத்திருக்கும் என் மனத்தால் என் நாணத்தையும் மறந்தேன்" என்று, தலைவி வருந்திக் கூறுகிறாள்.

குறிப்பு

'மனம் அவரை மறக்காதபோது நான் எவ்வாறு ஊடல் கொள்ள முடியும்?' எனத் தலைவி, தான் புலவி நீங்கியதைத் தோழியிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. அவர் மறக்கல்லா - (தன்னை மறந்த) அவரை மறக்க முடியா.
2. மாணா - சிறப்பில்லாத; என் மடநெஞ்சிற் பட்டு - எனது அறிவில்லாத மனத்தோடு சேர்ந்து.
1. நாணும் - (சிறந்த) நாணத்தையும்; மறந்தேன் - நான் மறந்து விட்டேன்.

தலைவி கூற்று

திருக்குறள் 1298 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

ஊடியிருந்த தலைவி ஊடல் நீங்கித் தலைவனோடு கூட வேண்டும் என்று, தலைவன் சார்பாய்ச் சொல்ல வந்த தோழிக்குத் தலைவி சொல்லியது.

எள்ளின் இளிவாம்என்(று) எண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.

தெளிவுரை

காதலனை ஓயாது நினைக்கும் உயிர்க்காதல் கொண்டது என் நெஞ்சு. அவரை இகழ்தல் இழிவென்று கருதி, அவருடைய நற்பண்புகளையே நினைத்திருக்கும்.

கருத்து

என் மனம் காதலனை உயிராய்க் கருதி, காதலனின் நலன்களையே நினைக்கும்.

விளக்கம்

'காதலனை உயிராக என் மனம் நினைக்கிறது. ஆதலால், அவனை இகழ்ந்து பேசாது அவன் உயர்வுகளையே புகழ்கிறது' என்கிறாள் தலைவி.

குறிப்பு

காதலனின் நற்பண்புகளையே மனம் பேசுவதால் தலைவி, தான் ஊடல் கொள்ள முடியவில்லை என மனத்தைக் காரணமாக்கித் தான் ஊடல் தவிர்ந்ததைக் குறிப்பாய்ப் புலப்படுத்துகிறாள்.

சொற்பொருள்

2. உயிர்க் காதல் நெஞ்சு - (காதலனை ஓயாது நினைக்கும்) உயிர்க் காதல் கொண்டது என் நெஞ்சு.
1. எள்ளின் - (பிரிந்த காதலரை) இகழ்ந்தால்; இளிவுஆம் - இழிவாகும்; என்று எண்ணி - என்று நினைத்து.

1-2. அவர் திறம் உள்ளும் - அவரது நற்பண்புகளையே நினைக்கும்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1299 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன் மேல் தவறு எதுவும் இல்லையென்று தெளிவுபடுத்தியும் தலைவி ஊடல் தீராதபோது தலைவன் தன்னுள் சொல்லியது.

துன்பத்திற்(கு) யாரே துணைஆவார் தாம்உடைய
நெஞ்சம் துணைஅல் வழி?

தெளிவுரை

ஒருவர்க்குத் துன்பம் வந்தபோது, அதை நீக்குதற்கு அவர் நெஞ்சமே அவருக்குத் துணையாகாவிட்டால், வேறு யார் துணை ஆவார்? (என் மனமே நீயே சொல்!)

கருத்து

தன் மனமே தனக்குத் துணையாகாவிடத்துத் துன்பத்தில் வேறு யார் துணை இருப்பர்?

விளக்கம்

"(நான் உணர்த்தியும் தணியப் பெறாத இவள் ஊடலால்) நான் துன்புறும்போது எனக்கு உரிமை வாய்ந்த என் நெஞ்சமே துணையாக இல்லையெனின், வேறு யார்தாம் எனக்குத் துணையாவர்? ஆதலால், இத்துன்பத்தை நான் உற்றே தீரவேண்டும்" என்று, தலைவியின் ஊடல் தீராதபோது, தலைவன் தனக்குள் கூறிக் கொள்கிறான்.

குறிப்பு

இவ்விளக்கம், குறளுக்குக் கொடுத்துள்ள கூற்றுக்கு ஏற்பக் கூறப்பட்டது. ஆனால் இக்கூற்று, காதலர் இருவர்க்குமே பொதுவானது. 'தன்னால் நேசிக்கப்பட்ட ஒருவர் தன்னை நேசியாது போயினும், தான் நேசித்தலை விடலாகாது' என்ற பொது உண்மையை இக்குறள் கூறுகிறது.

சொற்பொருள்

1. துன்பத்திற்கு - (ஒருவர்க்குத்) துன்பம் வந்தபோது.
1-2. தாம் உடைய நெஞ்சம் - தம்முடைய நெஞ்சமே.
2. துணை அல்வழி - துணையாகாதபோது.
1. யாரே துணை ஆவார் - வேறு எவர் துணையாக இருப்பர்?

தலைவன் கூற்று

திருக்குறள் 1300 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன் மேல் தவறு எதுவும் இல்லையென்று தெளிவுபடுத்தியும் தலைவி ஊடல் தீராதபோது தலைவன் தன்னுள் சொல்லியது.

> தஞ்சம் தமர்அல்லர் ஏதிலார், தாம்உடைய
> நெஞ்சம் தமர்அல் வழி.

தெளிவுரை

தன்னிடம் உரிமை கொண்ட தன் மனமே தனக்கு உறவாகாத போது, அயலார் உறவு இல்லாதவராய் இருப்பது இயல்பே!

கருத்து

எனக்குரிய நெஞ்சமே! நீயே எனக்கு உறவாகாதபோது, மற்றவர் எப்படி உறவாக முடியும்?

விளக்கம்

ஒருவர்க்கு அவருடைய மனமே உதவியற்றதாகிவிட்டால், மற்ற யாரும் உதவி செய்ய மாட்டார். ஆதலால் என் மனமே! நீதான் எனக்கு உதவி செய்ய வேண்டும்.

குறிப்பு

ஒருவர்க்கு அவருடைய நெஞ்சமே உறவற்ற பகையாகிவிட்டால் அயலார் ஒருக்காலும் துணையாகார் என்னும் பொது உண்மையை இக் குறள் கூறுகிறது.

தலைவியே தன்னுடைய நெஞ்சம் என்பதால் அன்பு காட்டுவாள் என்று, தலைவன் தன்னுள் கூறிக் கொள்கிறான்.

சொற்பொருள்

1-2. தாம் உடைய நெஞ்சம் - தம்முடைய நெஞ்சமே!

2. தமர் அல் வழி - உறவு ஆகாத போது.

1. ஏதிலார் - அயலார்; தமர் அல்லர் - உறவில்லாதவராய் இருப்பது; தஞ்சம் - எளிதே.

தலைவன் கூற்று

குறுந்தொகை 19 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.

(உணர்ப்பு வயின் வாரா ஊடல் - உணர்த்தியும் தணியப் பெறாத ஊடல்).

கூற்று விளக்கம்

தனது பரத்தமை காரணமாக ஊடியிருக்கும் தலைவியைத் தலைவன் நெருங்கி, 'நான் தவறிலேன்' எனப் பணிந்து பலவாறு உணர்த்தியும் அவள் ஊடல் தீரவில்லை. அப்போது தன் நெஞ்சை நோக்கித் தலைவன் வருந்திக் கூறியது.

எவ்வி இழந்த வறுமையாழ்ப் பாணர்
பூஇல் வறுந்தலை போலப் புல்லென்று
இனைமதி வாழிய நெஞ்சே! மனைமரத்து
எல்லுறும் மௌவல் நாறும்
பல்இருங் கூந்தல் யாரளோ நமக்கே?

தெளிவுரை

நெஞ்சே! வீட்டிலுள்ள மரத்தில் ஒளியுடன் மலர்ந்திருக்கும் முல்லை மலர்களை அணிந்து மணக்கும் அடர்ந்து கருத்த கூந்தலையுடைய இவள், ஊடல் தணியாமையால் இனி நமக்கு எப்படிப்பட்டவளாய் இருப்பாளோ அறியேன். எவ்வி என்ற வள்ளலை இழந்ததால், வறுமையுள்ள யாழ்ப்பாணர்களின் பொன் மலரை இழந்த வறிய தலையைப் போலப் பொலிவிழந்து வருந்துவாயாக!

கருத்து

இவள் இன்னும் ஊடல் தணியவில்லை. இனி நம்மிடம் எப்படி நடந்து கொள்வாளோ! நெஞ்சே! நான் அறியேன்.

குறிப்பு

வேள் எவ்வி சிறந்த கொடையாளன்; மிழலைக் கூற்றும் என்று பெயர் பெற்ற நாட்டின் தலைவன். மேலைக் கடற்கரையிலுள்ள 'நீழல்' என்பது இவனது ஊர்; பாணர்களுக்கு வாரி வழங்கி அவர்கள் வறுமையைப் போக்கியவன்; பாணர்கள் தலையில் சூடிக் கொள்ளப் பொன் மலரைக் கொடுப்பவன்.

கற்புள்ள பெண்கள் முல்லைக் கொடியை வளர்ப்பதும், அதன் மலர்களைச் சூட்டிக் கொள்வதும் முன்கால வழக்கம்.

சொற்பொருள்

1. எவ்வி - ஒரு வள்ளல்; பூ - பொன் பூ.
2. வறுந்தலை - வெறுந்தலை; புல்லென்று - பொலிவிழந்து.
3. இனைமதி - நீ வருந்து; மனை - வீடு.
4. எல்உறும் - ஒளி பொருந்திய; மௌவல் - முல்லை மலர்; நாறும் - மணக்கும்.
5. பல் இரும் - அடர்ந்து கருத்து.

அதிகாரம் 131 புலவி

தோழி கூற்று

திருக்குறள் 1301 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாகச் சென்ற தோழி, தலைமகள் வாயில் நேர்தற் பொருட்டு அவளொடு நகையாடிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியின் ஊடுதலை நீக்கித் தன்னை அவளுடன் சேர்த்து வைக்குமாறு தோழியைத் தலைவன் வேண்டினான். அதை ஏற்றுத் தலைவியிடம் சென்ற தோழி, தலைவியிடம் தலைவனைப் பரிகசித்துப் பேசுவதுபோலப் பேசி, அவனை ஏற்குமாறு சொல்லியது.

புல்லா(து) இராஅப் புலத்தை; அவர்உறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது.

தெளிவுரை

ஊடும்போது அவர் அடையும் துன்பநோயைச் சிறிது நேரம் காண்போம்; அதற்காக அவரைத் தழுவாமல் பிணங்கியிரு.

கருத்து

காதலன் துன்பமடைதலைக் காணச் சிறிது நேரம் புலவியுடன் இரு.

விளக்கம்

தோழி, தலைவன் துன்பமடைவதைக் காணத் தலைவியை 'ஊடல் கொள்' என்கிறாள். 'ஊடல் கொள்' என்று அவள் சொன்னாள் ஆயினும் தலைவனடையும் துன்பம், 'சிறிதே காண் போம்' என்றதால் 'ஊடலை நீளவிடக் கூடாது' என்பதையும் புலப்படுத்தினாள்.

குறிப்பு

தலைவன் பிரிந்திருந்தபோது தலைவி அடைந்த துன்பத்தைத் தலைவனும் சிறிது அறிதல் வேண்டும் என்பதற்காக 'ஊடல் கொள்' என்ற தோழி, ஊடல் நீளக் கூடாது என்பதையும் குறிப்பாற் புலப்படுத்தினாள்.

சொற்பொருள்

1. அவர் உறும் - காதலர் அடையும்.
2. அல்லல் நோய் - துன்ப நோயினை; சிறிது - சிறிது (நேரம்); காண்கம் - காண்போம் (அதனால்).

1-2. புல்லாது இராஅ - அவரைத் தழுவாது இருந்து; புலத்தை - பிணங்குவாய்.

தோழி கூற்று

திருக்குறள் 1302 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

புலவி தீர்ந்து வாயில்நேரும் வகை தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

ஊடலோடிருக்கும் தலைவியை, ஊடலை நீளவிடாது தலைவனைச் சேருமாறு தோழி கூறியது.

உப்புஅமைந்(து) அற்றால் புலவி; அதுசிறிது
மிக்குஅற்றால் நீள விடல்.

தெளிவுரை

ஊடல் உணவுக்கு இடம்பெறும் உப்பைப்போல அளவோடு இருத்தல் வேண்டும்; ஊடலைச் சிறிதளவு நீளவிட்டாலும், உணவில் உப்பின் மிகுதிபோலக் காதல் சுவை கெட்டுவிடும்.

கருத்து

உணவுக்கு உப்புப்போல, ஊடல் அளவுடன் அமைய வேண்டும்.

விளக்கம்

உப்பு அளவோடு இருந்தால் உணவுப் பொருள் சுவையாக இருக்கும்; உப்பு மிகுதிப்பட்டால் சுவை கெடும். அதுபோலவே ஊடல் அளவோடிருந்தால், கூடல் இன்பமாக இருக்கும்; அது நீட்டித்தால் கூடல் இன்பம் குறையும்.

குறிப்பு

உப்பில்லாத உணவு சுவையாய் இராது; ஊடல் இல்லாத கலவி இன்பமாய் இராது.

சொற்பொருள்

1. புலவி - பிணக்கு; உப்பு அமைந்து அற்றால் - உப்பு உணவில் அளவோடு அமைந்திருத்தல் போன்றது.

1-2. அது சிறிது நீளவிடல் - அதனைச் சிறிதளவு மிகவிடுதல்.

2. மிக்கு அற்றால் - (உணவில் உப்பு) மிகுதல்போலச் சுவையற்றதாக்கி விடும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1303 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

பிரிந்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் தலைவி துன்புற்றிருந்தாள். அவன் திரும்பிய போது, தான் அனுபவித்த துன்பத்தை ஊடலின் வாயிலாய்த் தலைவி உணர்த்தினாள். (அவள் ஊடலை நீக்கி இன்புறுத்துவது தன் கடமை எனத் தலைவன் கருதுகிறான்.)

அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால், தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

தெளிவுரை

“தன்னோடு ஊடியவரைத் தெளிவித்துத் தழுவாமல் விட்டு விடுதல், துன்பத்தால் முன்னே வருந்தியிருப்பவரை மேலும் மேலும் துன்பப்படுத்துவதுபோல ஆகும்” என்று தலைவன் எண்ணுகிறான். (ஆதலால், தலைவியின் துன்பத்தை உடனே களைவான்.)

கருத்து

ஊடியிருப்பவரை ஊடல் நீக்கிக் கூடுக.

விளக்கம்

தலைவன் பிரிவால் முன்னரே தலைவி துன்பம் அடைந்துள் ளாள். தலைவனைக் கண்டதும் தான் அனுபவித்த துன்பத்தை ஊடலின் வாயிலாய்த் தெரிவிக்கிறாள். தலைவன் அதனை அறிந்து அவள் ஊடலைப் போக்க வேண்டும். அவ்வாறு போக்காவிட்டால் அது தலைவியின் மனத்தில் மேலும் துன்பச் சுமையை ஏற்றுவித்தது போன்றதாகும்.

குறிப்பு

ஊடலை நீளவிடல், பிரிவுத் துன்பத்தால் முன்னரே வருந்தியிருப்பவரை மேலும் துன்பம் செய்து வருத்தினாற் போன்றது. இக்குறட்பாவின் கூற்று, தலைவன், தலைவி இருவர்க்கும் பொருந்தும்.

சொற்பொருள்

1-2.தம்மைப் புலந்தாரை - தம்மொடு பிணங்கியவரை (தலைவியை).
2. புல்லாவிடல் - (பிணக்கு நீங்கித்) தழுவாது விடுதல்.
1. அலந்தாரை - (முன்னரே) துன்பத்தால் வருந்தியவர்க்கு; அல்லல் நோய் - (அதன் மேலும் மிகுந்த) துன்பம்; செய்து அற்று - செய்வது போல ஆகும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1304 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

பிரிந்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் தலைவி துன்புற்றிருந்தாள். அவன் திரும்பிய போது, தான் அனுபவித்த துன்பத்தை ஊடலின் வாயிலாய்த் தலைவி

உணர்த்தினாள். (அவள் ஊடலை நீக்கி இன்புறுத்துவது தன் கடமை எனத் தலைவன் கருதுகிறான்.)

ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதல்அரிந் தற்று.

தெளிவுரை

பிணங்கிய மகளிரைப் பிணக்கு நீக்காமை, வாடிய கொடியை அடியிலேயே அறுத்ததுபோலாகும்.

கருத்து

ஊடியவரைக் கூடாது போதல், வாடிய கொடியை அடியில் அரிவது போலாம்.

விளக்கம்

வாடிய கொடிக்கு நீரூற்றினால் செழித்து வளர்ந்து பயன் தரும். நீரூற்றாது கொடியை அடியோடு அறுத்துவிட்டால், கிடைக்க வேண்டிய பயன் கிடைக்காது. அதுபோலத் தலைவியின் வாட்டமும் ஊடலும் கண்டதும் தலைவன் அவள் வாட்டம் தவிர்த்து ஊடலை நீக்கினால், காதலின்பமாகிய பயனைப் பெறலாம். ஊடல் நீக்காது பிரிவானானால், காதலின்ப நுகர்ச்சியாகிய பயனை இழப்பான்.

குறிப்பு

'வாடியிருக்கும் தலைவியைக் கூடாது நீங்கியிருத்தல், முன்னமே நீர் பெறாது வாடிய கொடியை அடியிலே அறுத்ததுபோல ஆகும்' என்று தலைவன் எண்ணுவதால், அவன் உடனே தலைவியின் ஊடலை நீக்கிக் கூடுவான் என்பது உறுதி. இக்குறட்பாவின் கூற்று, தலைவன் தலைவி இருவர்க்கும் பொருந்தும்.

சொற்பொருள்

1. ஊடியவரை - பிணங்கிய (தலைவியை); உணராமை - பிணக்கு நீங்காமை; வாடிய - வாடிய.
2. வள்ளி - கொடியை; முதல் அரிந்து அற்று - அடியிலே அறுத்தது போலும்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1305 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளைப் புலவி நீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியின் ஊடலை நீக்கிக் கூடினான். அக்கூடலில் பெற்ற பெருமகிழ்ச்சியில், அவன் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டது.

நலத்தகை நல்லவர்க்(கு) ஏஎர் புலத்தகை
பூஅன்ன கண்ணார் அகத்து.

தெளிவுரை

மலர்க்கண் படைத்த மங்கையரின் ஊடலைத் தணிப்பது, நல்ல இயல்புகள் அமைந்த ஆடவர்க்கு அழகு.

கருத்து

ஆடவர்க்கு அழகு ஊடலைத் தீர்த்தல்.

விளக்கம்

தலைவியின் ஊடலால் இன்பம் இழந்திருந்த தலைவன், அவள் ஊடல் தீர்ந்ததும் பேரின்பம் பெற்றான். இவ்வின்பம் பெற்றதற்கு, அவன், தன் காதலியின் ஊடலை நீக்கியதே காரணம்! அதனால் 'காதலனுக்கு அழகு, காதலியின் ஊடலைத் தீர்த்தலே' என்று, அவன் தன்னுள் சொல்லிக் கொள்கிறான்.

குறிப்பு

ஊடலைத் தணிவித்து மலர்ச்சியற்றிருந்த காதலியின் மலர்க் கண்களில், காதலன் மலர்ச்சியை ஏற்படுத்தினான்.

சொற்பொருள்

1. நலத்தகை நல்லவர்க்கு - நல்ல இயல்புகள் அமைந்த காதலனுக்கு; ஏஎர் - ஏர் - அழகாவது (அழகைத் தருவது).

2. பூ அன்ன - பூப்போன்ற; கண்ணார் அகத்து - கண்களையுடைய தன் காதலியிடம் உண்டாகும்.
1. புலத்தகை - ஊடல் (தீர்த்தலே)

தலைவன் கூற்று

திருக்குறள் 1306 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளைப் புலவி நீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியின் ஊடலை நீக்கிக் கூடினான். அக்கூடலில் பெற்ற பெருமகிழ்ச்சியில் அவன் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டது.

துனியும் புலவியும் இல்ஆயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று.

தெளிவுரை

காதல் வாழ்வில் பெரும் பிணக்கும் சிறு பிணக்கும், முதிர்ந்து நைந்த பழமும் இளங்காயும் போன்றவை.

கருத்து

ஊடலில்லாக் காமம் பயன்படாது.

விளக்கம்

முதிர்ந்து நைந்த பழம் இனிமை தராது. இளங்காயும் சுவை படாது. பக்குவப்பட்ட பழமே சுவையுடையது. அதுபோலக் காதலில் பெரும் பிணக்கும் கூடாது. பிணக்கு இல்லாமலும் இருத்தலாகாது; காமம், பெரும் பிணக்கு நேராமல் காத்தால் காதல் பக்குவமான இனிய கனி; சிறு பிணக்கும் நேராமல் போனால் அது துவர்க்கும் பிஞ்சு.

குறிப்பு

காதலன் பெரும் பிணக்கினால் துன்பத்தையும், சிறு பிணக்கினால் இன்ப நிறைவையும் உணர்ந்திருக்கிறான். ஆதலின் அளவான பிணக்கின் சிறப்பை எண்ணி மகிழ்கிறான்.

சொற்பொருள்

1. துனியும் - பெரும் பிணக்கும்; புலவியும் - சிறு பிணக்கும்; காமம் - காதலில்.
2. கனியும் - மிகப் பழுத்த பழமும்; கருக்காயும் - இளம் பிஞ்சும்; அற்று - போன்றது.
1. இல்ஆயின் - இவை இல்லை என்றால் (பக்குவமான பழத்தின் இனிமையை முற்றிலுமாய் உணர முடியாது.)

தலைவன் கூற்று

திருக்குறள் 1307 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளைப் புலவி நீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியின் ஊடலை நீக்கிக் கூடினான். அக்கூடலில் பெற்ற பெருமகிழ்ச்சியில் அவன் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டது.

ஊடலின் உண்(டு)ஆங்(கு)ஓர் துன்பம் புணர்வது
நீடுவ(து) அன்றுகொல் என்று.

தெளிவுரை

கூடி முயங்கிக் களித்திருக்கும் இன்பத்தைப் பெறக் காலம் நீளுமோ அல்லது குறைவான காலத்திலே கிட்டுமா என்று எண்ணச் செய்வதால் ஊடலிலும், ஒருவகைத் துன்பம் இருக்கின்றது.

கருத்து

கூடுவதற்கான காலம் நீளுமோ அல்லது விரைவில் கிட்டுமோ என்று எண்ணச் செய்வது, ஊடலில் ஒருவகைத் துன்பம்.

விளக்கம்

தலைவி ஊடல் கொண்டுள்ளாள். அப்போது தலைவன், அவள் ஊடல் நீங்கிக் கூடுவதற்கான காலம் நீளுமோ அல்லது விரைவிலேயே கிட்டுமா என்று எண்ணியவாறு இருக்கிறான். அந்தக் காலம் எப்போது நேரும் என ஏங்கி நிற்கிறான். அதனால் இன்பத்திற்கு இன்றியமையாத ஊடல் நேரத்தில், அவனுள் ஒரு வகையான துன்பமும் தோன்றுகிறது.

குறிப்பு

இவ்வெண்ணம் காதலர் இருவர்க்குமே பொது என்பதால், இக்குறட்பாவின் கூற்று இருவர்க்கும் பொருந்தும்.

சொற்பொருள்

1. புணர்வது - கூடுவதற்கான காலம் (புணர்ச்சி).
2. நீடுவது கொல்? - நீட்டிக்குமோ?; அன்று கொல்? - நீட்டியாதோ; என்று - என்று நினைப்பதால்.
1. ஊடலின் - (இன்பத்திற்கு இன்றியமையாது வேண்டும்) ஊடலிலேயும்; ஆங்கு ஓர் - (மனத்தில்) ஒரு வகையான; துன்பம் உண்டு - துன்பம் தோன்றும்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1308 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் குற்றம் எதுவும் இல்லை என்று தலைவிக்கு உணர்த்தித் தெளிவித்தும் அவள் ஊடல் தணியாததால், தலைவிமீது வருத்தம் கொண்டு தலைவன் தனக்குள் சொல்லியது.

நோதல் எவன்மற்று? நொந்தார்என்(று) அஃ(து)அறியும்
காதலர் இல்லா வழி.

தெளிவுரை

"என் தவறு எதுவுமில்லை என்று உணர்த்தியும் தணியப் பெறாது காதலி ஊடல் கொண்டுள்ள நிலையில், 'இவர் நம் பொருட்டன்றோ வருந்தியுள்ளார்' என்று என் வருத்தத்தினை அறியும் அன்புடையவர் இல்லாதபோழ்து, 'நீ வருந்துவதால் என்ன பயன்'?" என்று, காதலன் தன் நெஞ்சிடம் கூறிக் கொள் கிறான்.

கருத்து

நெஞ்சமே! உனக்காக வருந்துவார் இல்லாதபோது, நீ வருந்துவதால் என்ன பயன்?

விளக்கம்

காதலன் தன்னை உணர்த்தியும் காதலி ஊடல் தீரவில்லை. தன்னால்தானே இத்துன்பத்தை இவர் அடைந்துள்ளார் என்று காதலி காதலன் துன்பத்தை உணர்ந்து கொள்ளும் அன்புடைய வளாக இல்லை. அவ்வாறிருக்க, 'நெஞ்சே! நீ வருந்துவதால் என்ன பயன்?' என்று, காதலன் தன் நெஞ்சுக்குக் கூறுகிறான்.

குறிப்பு

காதலன் வருந்தும்போது அந்த வருத்தத்தை உணர்ந்தும் அதனை மாற்றும் இயல்பு காதலியிடம் இல்லையெனில், காதலன் வருந்துவதால் என்ன பயன்? என்பது காதலன் குறிப்பு.

இக்குறட்பாவின் கூற்று, இருவர்க்கும் பொது என்றும் கூறலாம்.

சொற்பொருள்

1. நொந்தார் என்று - இவர் நம் பொருட்டாக வருந்தியுள்ளார் என்று; அஃது அறியும் - அவ்வருத்தத்தினை அறியும்.
2. காதலர் இல்லா வழி - அன்புடையவரைப் பெறாத போழ்து.
1. நோதல் மற்று எவன்? - வருந்துவதால் என்ன பயன்?

தலைவன் கூற்று

திருக்குறள் 1309 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் குற்றம் எதுவும் இல்லை என்று தலைவிக்கு உணர்த்தித் தெளிவித்தும் அவள் ஊடல் தணியாததால், தலைவிமீது வருத்தம் கொண்டு தலைவன் தனக்குள் சொல்லியது.

நீரும் நிழல(து) இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது.

தெளிவுரை

நீரும் நிழலில் இருப்பின் இனிது; அதுபோல ஊடலும் அன்புடையாரிடமே இனிது.

கருத்து

நிழலில் உள்ள நீர்போல, அன்புடையாரின் ஊடலே இனிது.

விளக்கம்

நீர் குளிர்ந்தது; அதிலும் நிழலில் உள்ள நீர் மிகுதியும் குளிர்ந்திருக்கும். அதுபோல ஊடலும் அதை உணர்ந்து அன்பு காட்டுவாரிடமே இனிமை பயக்கும். (அன்பில்லாதவரிடத்தில் இனிமை பயக்காது).

குறிப்பு

குளிர்நீர் இனிது. அந்நீரே வெயிலில் இருந்தால் குளிர்ச்சி இராது. அதுபோலக் கலவிக்கு முதன்மையான ஊடலும், அன்பில்லாதவரிடம் இருந்தால் இனிமை பயக்காது.

தலைவன் கூற்றாய் இக்குறள் கூறப்பட்டிருப்பினும் இஃது இருவர்க்கும் பொது.

சொற்பொருள்

1. நீரும் - உயிர்க்கு இன்றியமையாது வேண்டும்) நீரும்; நிழலது இனிது - நிழலிருந்தால் இனிது; (அதுபோல்) புலவியும் - (புணர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டும்) ஊடலும்.
2. வீழுநர் கண்ணே - அன்புடையவர் இடத்தே; இனிது - இனிது. (அன்பில்லாதவரிடத்து இனிதாய் இராது).

தலைவி கூற்று

திருக்குறள் 1310 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

புலவி நீங்க வேண்டும் என்ற தோழிக்குத் தலைவி புலவி தீர்வாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனிடம் கொண்டுள்ள ஊடல் தீர வேண்டுமென்று தோழி தலைவியிடம் கூற, தலைவி தான் ஊடல் தீர்ந்தும் அவன் விலகி நிற்பதாய்க் கூறியது.

ஊடல் உணங்க விடுவாரோ(டு) என்நெஞ்சம்
கூடுவேம் என்ப(து) அவா.

தெளிவுரை

ஊடலைத் தணிக்காமல் ஒதுங்கியிருப்பவரோடு என் நெஞ்சம் 'கூடியிருப்போம்' என்று முயலுவதற்கு, அதன் அடங்காத ஆசையே காரணம்; வேறு அன்று.

கருத்து

நான் வாடி நிற்க, தான் ஒதுங்கி நிற்பவருடன் சேர நினைப்பதற்குக் காரணம் ஆசையே!

விளக்கம்

தலைவியின் ஊடலைத் தணிக்காமல் ஒதுங்கி நிற்கிறான், தலைவன். தலைவி ஊடல் தீர்ந்து கூட வேண்டுமென்று நினைக்கிறாள்; தோழியும் தலைவனோடு ஊடல் நீங்குமாறு தலைவியிடம் கூறுகிறாள். தலைவி, "என் நெஞ்சு கூடிடவே விழைகிறது. அவர் ஒதுங்கி நிற்கிறாரே! ஊடலைக் கோபம் என்று ஒதுக்கினால் ஆசை அழிந்து விடுமே! அவர் இதனை அறியவில்லையே" என்கிறாள்.

குறிப்பு

ஊடலில் ஒருவர் ஏங்க, மற்றொருவர் ஒதுங்கி நிற்பது ஊடலின் பயனை நல்காது.

சொற்பொருள்

1. ஊடல் உணங்க - (நான் தலைவனோடு) ஊடி வருந்தியிருக்கவும்; விடுவாரோடு - (என்னை) விட்டிருக்க வல்லவராய காதலரோடு.
2. கூடுவேம் என்பது - (அவரைக்) கூடுவோம் என்று முயல்வது.
1. என் நெஞ்சம் - என் மனத்தின்.
2. அவா - ஆசையே (அன்றி வேறில்லை).

அதிகாரம் 132 புலவி நுணுக்கம்

தலைவி கூற்று

திருக்குறள் 1311 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

உலாப்போய் வந்த தலைமகன் பள்ளியிடத்தானாகத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வந்து தன் வீட்டுப் படுக்கை அறையில் அமர்ந்திருந்தான். அப்போது தலைவனிடம் தவறு ஏதும் இல்லையாயினும், காதல் மிகுதியால் பொய்க்கோபம் கொண்டவளாய்த் தலைவி பிணங்கிக் கூறுதல்.

பெண்இயலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

தெளிவுரை

"பெண் இயல்பு உள்ள எல்லாப் பெண்களும் உன் அழகைக் கண்டு, தங்களுக்கும் பொது என்று நுகர்கின்றனர். நீ ஒரு பரத்தன்! ஆகையால், உன் மார்பை நான் தழுவ மாட்டேன்" என்று தலைவி (படுக்கையிலிருந்த தலைவனிடம் பிணங்கிக்) கூறினாள்.

கருத்து

எல்லாரும் கண்டு அனுபவிக்கும் உன் மார்பை நான் தழுவ மாட்டேன்.

விளக்கம்

"உன் அழகு எனக்கு மட்டுமே உரிமையானது. ஆனால், பெண் தன்மையுள்ள பலரும் கண்டு நுகர்ந்ததால், நீ அவர்கட்கெல்லாம் பொதுவாகி விட்டாய். (பலரும் உண்ட எச்சில் உன் மார்பு.) உன் மார்பை நான் தழுவ மாட்டேன்" என்று, இல்லாத குற்றத்தைக் காதலன்மீது சுமத்திக் காதலி ஊடுகிறாள்.

குறிப்பு

பிற பெண்டிர் காணா மார்பாய்த் தன் காதலர் மார்பு இருக்க வேண்டும் என்பதில் காதலி கவனமாய் இருக்கிறாள்.

சொற்பொருள்

2. பரத்த - பரத்தமைத் தன்மையுடையவனே!
1. பெண் இயலார் எல்லாரும் - பெண்ணியல்பு உள்ள எல்லாப் பெண்டிரும்; கண்ணின் - தம் கண்களால்; பொது உண்பர் - பொதுவாக உன்னை நுகர்வர்.
2. நின் மார்பு - (அவர் எச்சிலாகிய) உன் மார்பை; நண்ணேன் - பொருந்தேன்.

தலைவி கூற்று

திருக்குறள் 1312 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் நீக்கத்துச் சென்ற தோழிக்குத் தலைமகள் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் படுக்கையறையிலிருந்து வெளியே சென்றுவிட, அங்கு வந்த தோழியிடம், அறையில் தலைவனிருந்தபோது நிகழ்ந்ததைத் தலைவி கூறியது.

ஊடி இருந்தேமா, தும்மினார்; யாம்தம்மை
நீடுவாழ்(க) என்பாக்(கு) அறிந்து.

தெளிவுரை

தோழி! நான் ஊடல் கொண்டு அவரிடம் பேசாமல் இருந்தேன். நான் 'நீடு வாழ்க' என்று கூறுவேன் என்று அறிந்து, அவர் வேண்டுமென்றே தும்மினார்.

கருத்து

ஊடியிருந்த என்னைப் பேச வைக்க வேண்டுமென்பதற்காகவே அவர் தும்மினார்.

விளக்கம்

ஒருவர் தும்முங்கால் அருகிருப்பவர், 'நூறு ஆண்டு' என்று கூறுவது மரபு. நான் அவ்வாறு வாழ்த்துவேன் என்பதை அறிந்தே காதலர் தும்மினார். நானும் என்னை அறியாது அவர் மீதுள்ள அன்பினால் அவர் தும்மியபோது வாழ்த்தினேன். ஊடல் கொண்டு பேசாதிருந்த என்னைப் பேச வைத்துவிட்டார்.

◆

குறிப்பு

காதலிமேல் தனக்கு உள்ள அன்பு தோன்றக் காதலன் தும்ம, காதலன்மேல் தனக்குள்ள அன்பு தோன்றக் காதலி வாழ்த்தினாள். தும்மல் ஊடலைத் தோற்கடித்தது.

சொற்பொருள்

1. ஊடி - (நான் அவரோடு) பிணங்கி; இருந்தேம் ஆ - (பேசாது) இருந்தேன் ஆக.
2. நீடு வாழ்க - நெடுங்காலம் வாழ்க; என்பாக்கு அறிந்து - (என்று) சொல்லுவேன் என்று நினைத்து.
1. தும்மினார் - (காதலர்) தும்மினார்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1313 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளது புலவிக் குறிப்பினைக் கண்டு, 'நீவிர் கூடி ஒழுகி வரவும், இது நிகழ்தற்குக் காரணம் யாது?' என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனை நோக்கி, 'நீயும் தலைவியும் ஊடல் நீங்கிக் கூடி இருந்தீர்களே; ஆனால், இப்போது தலைவி ஊடற் குறிப்புடன் இருக் கிறாளே; இதற்கு என்ன காரணம்?' என்று தோழி வினவியபோது தலைவன் சொல்லியது.

கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று.

தெளிவுரை

"மரக்கிளையில் பூத்த பூக்களை நான் சூடினேன். உடனே, 'நீ விரும்பும் யாரோ ஒருத்திக்கு இவ்வழகைக் காட்டவே இப் பூக்களைச் சூடினீரோ?' என்று, காதலி என் மீது சினங்கொண் டாள்" என்று, காதலன் கூறுகிறான்.

கருத்து

என் தலையில் பூச்சூடினேன்; 'பிறள் ஒருத்திக்குக் காட்டவே சூடினீர்' என்று, அவள் வெகுண்டாள்.

விளக்கம்

காதலி ஊடுதற்கு எதுவும் காரணம் ஆகலாம். காதலன் தன் தலையில் பூச்சூடினான். அவ்வளவுதான். 'இவ்வழகை எவளுக்குக் காட்ட இதைச் சூடினீர்' என்று, காதலி சீறி விழுகிறாள்.

குறிப்பு

பூச்சூடியது ஊடலுக்குக் காரணமாயிற்று.

சொற்பொருள்

1. கோட்டுப் பூ - மரக்கிளையில் பூத்த பூ (வளைந்த மாலை என்றும் கொள்ளலாம்); சூடினும் - சூடினாலும்; ஒருத்தியை - உம்மால் விரும்பப்பட்ட ஒருத்திக்கு.
2. காட்டிய - (பூச்சூடியுள்ள அழகைக்) காட்டுதல் வேண்டி; சூடினீர் என்று - சூடிக் கொண்டீர் என்று.
1. காயும் - சினப்பாள்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1314 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளது புலவிக் குறிப்பினைக் கண்டு, 'நீவிர் கூடி ஒழுகி வரவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது?' என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனை நோக்கி, 'நீயும் தலைவியும் ஊடல் நீங்கிக் கூடி இருந்தீர்களே; ஆனால் இப்போது தலைவி ஊடற் குறிப்புடன் இருக்கிறாளே; இதற்கு என்ன காரணம்?' என்று, தோழி வினவியபோது தலைவன் சொல்லியது.

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.

தெளிவுரை

காதலன் தான் கொண்டுள்ள காதல் மிகுதியை வெளிப்படுத்த 'யாரையும் விட நாம் மிக்க காதல் கொண்டிருக்கிறோம்' என்றான். உடனே, காதலி, 'யாரை விட, யாரை விட?' என்று விடாது கேட்டு ஊடல் கொண்டாள்.

கருத்து

'யாரையும் விட நாம் மிகுதியும் காதலிக்கிறோம்' என்றான், காதலன். 'யாரை விட?' எனச் சினந்து ஊடினாள் காதலி.

விளக்கம்

'காதல் இன்பம் அனுபவித்தற்குரிய இருவராய் இருப்போரில் எல்லோரையும்விட நாம் மிகுந்த காதல் கொண்டுள்ளோம்' என்று, காதலியிடம் காதலன் கூறினான். அவளோ அதனை அவ்வாறு நினையாமல், 'நான் விரும்பியுள்ள மகளிர் பலருள்ளும் உன்னிடமே மிகுந்த காதல் கொண்டுள்ளேன்' என்று அவன் சொல்வதாய்க் கொண்டு, 'யார் யாரைவிட என்னிடம் மிகுந்த காதல் கொண்டுள்ளாய்?' என்று சொல்லி ஊடினாள்.

குறிப்பு

யாரினும் என்ற சொல்லைக் காதலன் ஒரு பொருளில் கூற, அதற்கு, வேறாகப் பொருள் கற்பித்துக் காதலி ஊடுகிறாள்.

சொற்பொருள்

1. யாரினும் - (காதல் இன்பம் துய்த்தற்குரிய இருவராயுள்ளவர்) எவரினும்; காதலம் என்றேனா - மிகுந்த காதலுடையவராய் உள்ளோம் என்று சொன்னேனாக (அவளோ என்னால் விரும்பப் பட்ட மகளிர் பலரையும் விட உன்னிடம் நான் மிகுந்த காதல் கொண்டுள்ளேன் என்று, நான் சொல்வதாய்க் கருத்தை உண்டாக்கிக் கொண்டு).
2. யாரினும் யாரினும் - யாரைவிட யாரைவிட.

2-1.என்று ஊடினாள் - என்று சொல்லி ஊடினாள்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1315 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளது புலவிக் குறிப்பினைக் கண்டு, 'நீவிர் கூடி ஒழுகி வரவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது?' என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனை நோக்கி, 'நீயும் தலைவியும் ஊடல் நீங்கிக் கூடி இருந்தீர் களே; ஆனால் இப்போது தலைவி ஊடற் குறிப்புடன் இருக்கிறாளே; இதற்கு என்ன காரணம்?' என்று, தோழி வினவியபோது தலைவன் சொல்லியது.

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண் டனள்.

தெளிவுரை

'இப்பிறவியில் நாம் பிரியோம்' என்று காதல் மிகுதியால் சொன்னேன். சொன்ன அவ்வளவிலே அப்படியானால், 'மறு பிறவியில் பிரிவேன்' என்று நான் கூறுவதாய்க் கொண்டு, அவள் கண்களில் நீர் நிறைந்து வழிய அழுது நின்றாள்.

கருத்து

'இப்பிறவியில் பிரியோம்' என்றேன்; 'அப்படியானால் அடுத்த பிறவியில் பிரிவாயோ' என அழுதாள்.

விளக்கம்

" 'இம்மைப் பிறப்பு' என்றால் 'இப்பிறவியில்' என்றுதானே ஆகிறது; 'ஏழேழ் பிறவி' அதாவது எப்பிறவியிலும் என்று சொல்லவில்லையே; அதனால் ஏனை மறு பிறவிகளில் 'பிரிவேன்' என்னும் கருத்துடையவனாய் உள்ளான்" எனத் தலைவி ஊடல் கொள்கிறாள்.

குறிப்பு

'இம்மை' என்கிறான் காதலன்; 'மறுமை' என் ஆவது என்று கேட்டு, அழுது நிற்கிறாள் காதலி.

எதிர்ச்சொல் ஊடலுக்குக் காரணமாகிறது.

சொற்பொருள்

1. இம்மைப் பிறப்பில் - இப்பிறப்பில்; பிரியலம் - நாம் பிரியோம்; என்றேன் ஆ - என்று சொன்னேனாக. (அதனால் ஏனை மறு பிறப்பிலே பிரிவேன் என்கிற கருத்துடன்).
2. கண் நிறை - கண்கள் நிறைய; நீர் கொண்டனள் - கண்ணீர் பெருக்கினாள்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1316 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளது புலவிக் குறிப்பினைக் கண்டு, 'நீவிர் கூடி ஒழுகி வரவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது?' என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனை நோக்கி, 'நீயும் தலைவியும் ஊடல் நீங்கிக் கூடி இருந் தீர்களே; ஆனால் இப்போது தலைவி ஊடற் குறிப்புடன் இருக்கிறாளே; இதற்கு என்ன காரணம்?' என்று, தோழி வினவியபோது தலைவன் சொல்லியது.

> உள்ளினேன் என்றேன்மற்(று) என்மறந்தீர் என்றென்னைப்
> புல்லாள் புலத்தக் கனள்.

தெளிவுரை

'நான் உன்னை நினைத்தேன்' என்றேன். அவளோ, 'மறந் திருந்ததால்தானே நினைத்தீர்' என்று சொல்லித் தழுவாது பிரிந்தாள்.

கருத்து

'மறந்ததால்தானே', 'நினைத்தேன்' என்று சொன்னாய் என்று கூறித் தழுவுதலை நீக்கினாள்.

விளக்கம்

'பிரிந்திருந்தபோது இடைவிடாமல் உன்னையே நினைத் திருந்தேன்' என்ற கருத்தால் காதலன் 'நினைத்தேன்' என்றான்; காதலியோ, 'மறந்ததால்தானே நினைக்க வேண்டியதாயிற்று' என்று கூறி, அவனைத் தழுவுதலை விடுத்துப் பிணங்கினாள்.

குறிப்பு

'நினைத்தேன்' என்று காதலன் சொல்ல, காதலி அதனை, 'மறத்தல்' என்ற எதிர்ச்சொல்லோடு இணைத்துப் பொருள் கொண்டு புலந்தாள்.

சொற்பொருள்

1. உள்ளினேன் - (பிரிவின்போது உன்னை இடைவிடாது நினைத்திருந்தேன் என்னும் கருத்தால்) நினைத்தேன் என்றான்; என் மறந்தீர் என்று - (நினைத்தேன் என்றதால்) ஏன் மறந்தீர் என்று சொல்லி.
2. புல்லாள் - தழுவாதவளாய்; புலத்தக்களள் - பிணங்கினாள்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1317 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளது புலவிக் குறிப்பினைக் கண்டு, 'நீவிர் கூடி ஒழுகி வரவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது?' என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனை நோக்கி, 'நீயும் தலைவியும் ஊடல் நீங்கிக் கூடி இருந்தீர்களே; ஆனால் இப்போது தலைவி ஊடற் குறிப்புடன் இருக்கிறாளே; இதற்கு என்ன காரணம்?' என்று தோழி வினவியபோது தலைவன் சொல்லியது.

வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்(து)அழுதாள்
யார்உள்ளித் தும்மினீர் என்று.

தெளிவுரை

நான் தும்மினேன்; என்னுடனிருந்த என் காதலி 'நூறாண்டு' என்று வாழ்த்தினாள். அங்ஙனம் வாழ்த்திய அவளே (தான் வாழ்த்தியதற்கு) மாறுபட்டு, 'உன்னை நினைந்து வருந்துகின்ற மகளிருள் யார் நினைத்ததால் தும்மினீர்' என்று சொல்லிப் புலந்து அழுதாள்.

கருத்து

யாரோ ஒருத்தி உம்மை நினைத்ததால்தானே தும்மினீர் என்று ஊடினாள்.

விளக்கம்

நெருங்கிய தொடர்பு கொண்டவர் நினைத்தால் அவ்வாறு நினைக்கப்பட்டவர்க்குத் தும்மல் வரும் என்பது நம்பிக்கை. காதலன் தும்மினான். உடனே காதலி தன் இயல்பு பற்றி வாழ்த்தினாள். வாழ்த்திய அவளே உடனே தான் வாழ்த்தியதை மாற்றி, 'என்னை விட உமக்கு நெருங்கியவர் உண்டு போலிருக் கிறது. இப்போது எவள் நினைத்ததால் நீர் தும்மினீர்?' என்று தூற்றி அழுதாள்.

குறிப்பு

தும்மலே வாழ்த்துதற்கும் தூற்றுதற்கும் அடிப்படையாய் அமைகிறது.

சொற்பொருள்

1. தும்மினேன் ஆக - நான் தும்மியதால்; வழுத்தினாள் - (உடனே) வாழ்த்தினாள்; அழித்து - (அதனை) மாற்றி.
2. யார் உள்ளித் தும்மினீர் என்று - யார் நினைத்ததால் தும்மினீர் என்று.
1. அழுதாள் - (புலந்து) அழுதாள்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1318 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளது புலவிக் குறிப்பினைக் கண்டு, 'நீவிர் கூடி ஒழுகி வரவும், இது நிகழ்தற்குக் காரணம் யாது?' என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனை நோக்கி, 'நீயும் தலைவியும் ஊடல் நீங்கிக் கூடி இருந் தீர்களே; ஆனால் இப்போது தலைவி ஊடற் குறிப்புடன் இருக்கிறாளே; இதற்கு என்ன காரணம்?' என்று தோழி வினவியபோது தலைவன் சொல்லியது.

தும்முச் செறுப்ப அழுதாள்; நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.

தெளிவுரை

தும்மல் வந்ததும் நான் அதை அடக்கினேன். அதைக் கண்ட காதலி, 'உம்மை விரும்பும் யாரோ உம்மை நினைப்பதை என்னிடம் மறைப்பதற்காகத்தானே தும்மலை அடக்குகின்றீர்?' என்று சொல்லி அழுதாள்.

கருத்து

உம்மை நினைப்பவளை என்னிடம் மறைப்பதற்காகவே தும்மலை அடக்குகின்றீர்.

விளக்கம்

முன்பு காதலன் தும்மியபோது, அவனை விரும்பும் வேறொருத்தி அவனை நினைப்பதாலேயே அவனுக்குத் தும்மல் தோன்றியது என்று காதலி புலந்தாள். மீண்டும் தும்மல் வந்தது. தும்மினால் காதலி முன்புபோலக் கூறுவாள் என்றெண்ணி அடக்கினான். காதலி அவன் தும்மலை அடக்குவதைக் கண்டு, 'உமக்கு வேண்டியவர் உம்மை நினைப்பதை என்னிடம் மறைப்பதற்காகவே தும்மலை அடக்குகின்றீர்' என்று அழுது புலந்தாள்.

குறிப்பு

காதலன் தும்மினாலும் ஊடல்; தும்மலை அடக்கினாலும் ஊடல். என் செய்வான்?

சொற்பொருள்

1. தும்முச் செறுப்ப - நான் தும்மலை அடக்கவும்; நுமர் உள்ளல் - உம்மவர் உம்மை நினைத்தலை.
2. எம்மை மறைத்திரோ - ('நான் அறியக் கூடாதென்று') என்னிடம் மறைக்கின்றீரோ; என்று - என்று சொல்லி.
1. அழுதாள் - (சினந்து) அழுதாள்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1319 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளது புலவிக் குறிப்பினைக் கண்டு, 'நீவிர் கூடி ஒழுகி வரவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது?' என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனை நோக்கி, 'நீயும் தலைவியும் ஊடல் நீங்கிக் கூடி இருந் தீர்களே; ஆனால் இப்போது தலைவி ஊடற் குறிப்புடன் இருக்கிறாளே; இதற்கு என்ன காரணம்?' என்று தோழி வினவியபோது தலைவன் சொல்லியது.

தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்கும்நீர்
இந்நீரர் ஆகுதிர் என்று.

தெளிவுரை

தன்மேல் ஊடல் கொண்டிருந்த காதலியைச் சமாதானப் படுத்தக் காதலன் அவளைப் பணிந்து, 'என்னைப் பொறுக்க வேண்டும்' என்றான். ஆனால் அவளோ, 'உன்னிடம் அன்புள்ள பெண்டிரின் ஊடலைப் போக்கவும் இப்படித்தானே கெஞ்சுவீர்' என்று சினம் கொண்டாள்.

கருத்து

தான் தவறில்லாதவன் என்று பணிந்து கெஞ்சினான்; 'பிறரிடமும் இப்படித்தானே கெஞ்சுவீர்' என்று சினம் கொண்டாள்.

விளக்கம்

ஊடல் கொண்டிருக்கும் தலைவியிடம் எப்படிப் பேசினாலும் அது மேலும் ஊடலுக்கே வழிவகுத்தது என்பதைக் கண்ட காதலன், 'என்னிடம் தவறில்லாதிருந்தும் ஊடல் கொள் கிறாயே' என்று பணிவாகப் பேசி, சமாதானப்படுத்த முயன்றும் அவனால் முடியவில்லை. அப்போதும் தலைவி, 'மற்றவரிடமும் இப்படித்தான் பணிந்து நடப்பீரோ?' என்று கேட்கிறாள்.

குறிப்பு

கெஞ்சினாலும் கொஞ்சுதலின்றிக் கோபமே வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. தன்னை உணர்த்தினும் - ஊடிய அவளை அவன் பணிந்து தன் தவறின்மையை உணர்த்திய போதும்; பிறர்க்கும் நீர் - பிற மகளிரிடத்தும் (அவர் ஊடிய வழி) நீர்.
2. இந்நீரர் - இவ்வாறு பணிந்து செல்லும் தன்மையுடையவராய்த்தான்; ஆகுதிர் - இருப்பீரோ (என்று சொல்லி).
1. காயும் - சினம் கொள்வாள்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1320 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளது புலவிக் குறிப்பினைக் கண்டு, 'நீவிர் கூடி ஒழுகி வரவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது?' என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனை நோக்கி, 'நீயும் தலைவியும் ஊடல் நீங்கிக் கூடி இருந்தீர்களே; ஆனால் இப்போது தலைவி ஊடற் குறிப்புடன் இருக்கிறாளே; இதற்கு என்ன காரணம்?' என்று, தோழி வினவியபோது தலைவன் சொல்லியது.

நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யார்உள்ளி நோக்கினீர் என்று.

தெளிவுரை

'இனி என்னதான் செய்வது' என்று அறியாது காதலன் ஏதும் பேசாமல் காதலியை அமைதியாக உற்றுப் பார்த்தவண்ணம் இருந்தான். ஆனால் அவளோ, 'நீர் உமக்கு வேண்டிய யாரை நினைந்து என்னையே உற்றுப் பார்க்கிறீர்?' என்று வெகுண்டாள்.

கருத்து

அவளை உற்றுப் பார்க்கினும், யாருடன் ஒப்பு நோக்குகின்றீர் எனச் சினப்பாள்.

விளக்கம்

காதலன் என்ன சொல்லியும் எவ்வாறு நடந்தும் காதலியின் ஊடல் தீரவில்லை; மாறாக வளர்ந்தே சென்றது. வேறு வழியில்லாததால், பணிந்து சமாதானப்படுத்தினான். அதிலும் பயன் கிட்டவில்லை. அதன் மேலும் செய்வதற்கு எதுவும் தோன்றாது, அவளை உற்றுநோக்கி அமைதியாக நின்றான். அப்போதும் அவள், 'யாருடன் ஒப்பிட்டு என்னை உற்றுப் பார்க்கிறீர்?' என்று கேட்டாள். இந்த ஊடலுக்கு முடிவே இல்லையா? (உண்டு. ஊடலுக்கானவை பொய்க் குற்றச்சாட்டுகள்தாமே! ஊடலின் நீடல் பின்னர்க் கூடலில் பேரின்பம் பெறுதற்காகவே!)

குறிப்பு

ஒருவரிடம் குற்றம் காணுவது என்று முடிவு செய்து விட்டால், அவர் செய்யும் எதுவும் குற்றமாகவே தோன்றும் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. நினைத்து - முன்பு நடந்தவற்றை எல்லாம் நினைத்து (அவற்றால் பயனில்லாமையை எண்ணி); நோக்கி - (இனிச் செய்வதற்கு வேறு ஒன்றுமில்லையென்பதால்) அவளையே உற்று நோக்கிப் (பார்த்துக் கொண்டிருந்தாலும்); அனைத்து - என் அவயவங்களையெல்லாம்.
2. நீர் யார் உள்ளி நோக்கினீர் - யாரை நினைத்து ஒப்பிட்டுப் பார்த்தீர்; என்று - என்று சொல்லி.
1. காயும் - வெகுள்வாள்.

அதிகாரம் 133 ஊடல் உவகை

தலைவி கூற்று

திருக்குறள் 1321 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி, அங்ஙனம், 'நீ புலக்கின்றது என்னை?' என்றாட்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவன் தவறு ஏதும் செய்யாதிருக்கவும், 'நீ அவனோடு ஊடியிருப்பது ஏன்?' என்று கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

இல்லை தவறுஅவர்க்(கு) ஆயினும் ஊடுதல்
வல்ல(து) அவர்அளிக்கு மாறு.

தெளிவுரை

அவரிடம் தவறு இல்லை என்றாலும் நான் கொள்ளும் ஊடுதல், அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பைப் பேரன்பாய்க் கொள்ளச் செய்யும்.

கருத்து

நான் கொண்டுள்ள ஊடல், அவர் என்மீது கொண்டுள்ள காதலை மிகுவிக்கும்.

விளக்கம்

காதலர்மீது எத்தவறும் இல்லை; என்றாலும் அவர் தவறு செய்ததுபோல நான் ஊடினால், அவர் என்மேல் அன்பு காட்டிச் சமாதானம் செய்வார். அதனால் என் ஊடல், அவர் அன்பு மிகுதிப்படக் காரணமாகிறது.

குறிப்பு

'தவறு' என்பது காதலி பொய்யாய்ப் புனைந்து கூறும் குற்றம்.

சொற்பொருள்

1. அவர்க்குத் தவறு இல்லை ஆயினும் - அவரிடம் தவறு இல்லை என்றாலும்; ஊடுதல் - (நான் கொண்ட) ஊடுதல்.
2. அவர் அளிக்குமாறு வல்லது - அவரைப் பேரன்பு கொள்ளச் செய்யும். (அளி - அன்பு - தலைவியை நெருங்கி ஊடலை நீக்குவதற்காகக் கூறும் அன்பு மொழி).

தலைவி கூற்று

திருக்குறள் 1322 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க அஃகிழந்து, புலவியான் வருந்துவதென்னை என்ற தோழிக்குச் சொல்லியது. (தலையளி - இன்பம்)

கூற்று விளக்கம்

'ஊடுதல் இன்றியே தலைவனிடம் மிக்க இன்பம் பெறலாம் என்றிருக்க, அதைவிடுத்துத் தலைவனை ஊடி வருத்துவது ஏன்?' என்று கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்அளி
வாடினும் பாடு பெறும்.

தெளிவுரை

தலைவனிடம் கொள்ளும் சிறு ஊடல் காரணமாகக் கூடல் சற்றே தாமதப்படினும், பின்னர் அதனால் பேரின்பம் விளையும்.

கருத்து

ஊடல் காரணமாகக் கூடல் சற்றே காலம் கடப்பினும், ஊடல் நீங்கிய பின் மிகுந்த இன்பம் கிடைக்கும்.

விளக்கம்

காதலன் காட்டும் அன்பை ஊடல் சிறிது நேரம் தடை செய்வதால், அப்போது அடையும் துன்பம் துன்பமாகாது.

ஏனெனில், ஊடல் நீங்கிய பின் காதலன் செய்யும் செயல்களால் கிடைக்கும் இன்பம், முன்பு பெற்று வந்த இன்பத்தினும் மிகுந்திருக்கும்.

குறிப்பு

சிறிது நேரத் தாமதம் உண்டாக்கும் வருத்தம் வருத்தமாகாது; அதுவே பேரின்பம் பெற்றுத் தருகிறது.

சொற்பொருள்

1. ஊடலில் தோன்றும் சிறுதுனி - பிணக்கிலே உண்டாகும் சிறிய துன்பத்தால்; நல்அளி - (காதலன் செய்யும்) நல்ல அருள்.
2. வாடினும் - வாடிவிடினும்; பாடு பெறும் - பெருமை பெறும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1323 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க அஃகிழந்து, புலவியான் வருந்துவதென்னை என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'ஊடுதல் இன்றியே தலைவனிடம் மிக்க இன்பம் பெறலாம் என்றிருக்க, அதைவிடுத்துத் தலைவனை ஊடி வருத்துவது ஏன்?' என்று கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

புலத்தலின் புத்தேள்நா(டு) உண்டோ நிலத்தொடு
நீர்இயைந்(து) அன்னார் அகத்து?

தெளிவுரை

நிலத்தோடு நீர் பொருந்தினாற்போல, நம்மோடு கலந்த அன்புடைய காதலருடன் ஊடுவதைக் காட்டிலும், தேவருலக இன்பம் சிறந்ததாகுமா?

கருத்து

உள்ளம் கலந்த காதலருடன் ஊடும் இன்பம் தேவருலகிலும் கிடையாது.

விளக்கம்

நிலத்தொடு கலக்கும் நீர் அந்நிலத்தின் தன்மையைப் பெறுவது போல, என்னுடன் ஒன்றாய்ப் பிணைந்திருக்கிறார், என் காதலர். அவருடன் ஊடல் கொள்வதே பேரின்பமாய் இருக்கிறது. இந்த இன்பத்திற்கு இணையான இன்பம், தேவருலகிலும் கிடையாது.

குறிப்பு

திருமால் உலகில் வாழும் இன்பம் காதலியின் தோளைத் தழுவித் தூங்கும் இன்பத்திற்கு இணையாகாது எனக் குறள் 1103 இல் இதே கருத்து கூறப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1-2. நிலத்தொடு நீர் இயைந்து அன்னார் அகத்து - நிலத்தொடு நீர் கலந்தாற்போல் ஒற்றுமையுடைய காதலரிடத்து.

1. புலத்தலின் - ஊடுதலை விட; புத்தேள் நாடு உண்டோ? - (இன்பந் தருகின்ற) தேவருலகம் உண்டா?

தலைவி கூற்று

திருக்குறள் 1324 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

அப்புலவி இனி யாதான் நீங்கும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழி தலைவியிடம், ‘நீ கொண்டுள்ள ஊடல் எதனால் நீங்கும்?’ என்று கேட்க, அதற்குத் தலைவி சொல்லியது.

புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்
உள்ளம் உடைக்கும் படை.

தெளிவுரை

காதலரை இறுகத் தழுவி, பின் அத்தழுவலை விடாதேயிருப் பதற்குக் காரணமாய் ஊடல் அமைகிறது; அந்த ஊடலில்தான் என் மன உறுதியைக் குலைக்கும் படைக்கலனும் இருக்கிறது.

கருத்து

காதலனின் கெஞ்சலும் பணிவான சொற்களும் ஊடலை உடைக்கின்றன.

விளக்கம்

காதலரைத் தழுவிப் பின் விடாதிருப்பதற்குக் காரணம் ஊடலால் உண்டாயது. ஊடலில் தலைவி கொண்டுள்ள மன உறுதியைத் தலைவனின் வணக்கமும் பணிவான சொற்களும் படைக்கலமாய்த் தோன்றி நீக்கிவிடுகின்றன.

குறிப்பு

என் உள்ளம் உடைக்கும் படைக்கலம் என்றது, தலைவனின் வணக்கமும் பணிவுமொழியும் என்பார் பரிமேலழகர்.

தலைவன் தலைவியின் ஊடற்காலத்தில் காட்டும் வணக்கமும் பணிவு மொழியும் படையாகி, தலைவி கொண்டுள்ள புலவியைத் தோற்கடிக் கின்றன.

இக்கருத்து, 'பன்மாயக் கள்வன் பணிமொழியன்றோ நம் பெண்மை உடைக்கும் படை' என்னும் குறட்பாவால் (1258) தெளிவாகிறது.

சொற்பொருள்

1. புல்லி - (காதலரைத்) தழுவிக் கொண்டு; விடா - (பின் அத்தழுவலை விடாதேயிருக்கும்; புலவியுள் - பிணக்கினுள்.
2. என் உள்ளம் உடைக்கும் - (புலவிமேற் சென்ற) என் உள்ளத்தை நீக்கும்; படை - ஆயுதம்; தோன்றும் - காணப்படும்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1325 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன், கழியுவகையனாய்த் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

ஊடல் கொண்டிருந்த தலைவியின் ஊடலைப் போக்கித் தலைவன் அவளோடு கூடியிருந்தபொழுது மகிழ்ச்சியுடன் அவன் தன்னுள்ளே சொல்லிக் கொள்வது.

தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்தோள்
அகறலின் ஆங்கொன்(று) உடைத்து.

தெளிவுரை

"நான் தவறு இல்லாதவனாய் இருந்தும் தவறுடையவன் போல ஊடலுக்கு ஆட்பட்டு, விருப்பத்திற்குரிய என் தலைவியின் மென்மையான தோள்களை நீங்கியிருக்கும்போதும் அதிலே ஒரு சுகம் இருக்கத்தான் செய்கிறது" என்று, ஊடல் நீக்கிக் கூடிய தலைவன் தன்னுள்ளே சொல்லிக் கொள்கிறான்.

கருத்து

தவறில்லாவிடத்துக் கொள்ளும் பொய் ஊடலும் இன்பமே.

விளக்கம்

ஒரு தவறும் இல்லாதபோதும் தான் விரும்பும் தலைவி ஊடிச் சற்று விலகியிருக்கும்போது, தலைவனுக்கு அத்தடையே ஓர் இன்பமாகவும் இருக்கும். அத்தடை, ஊடல் நீங்கிய பின்பு இன்பத்தைக் கூட்டுகிறது.

குறிப்பு

இவ்விரு வகை இன்பங்களையும் இத்தகையன என்று கூற இயலாது என்பதை, 'ஆங்கொன்று உடைத்து' என்று நயமாகக் கூறுகின்றான்.

சொற்பொருள்

1. தவறு இலர் - (ஆடவர்) தவறு இல்லாதவராயிருந்தாலும்; வீழ்வார் - விரும்புகின்றவரின் (காதலியின்).
2. அகறலின் - நீங்கி இருக்கும்போதும்; ஆங்கு ஒன்று உடைத்து - அங்கே தோன்றும் இன்பம் ஒன்று உள்ளது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1326 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன், கழியுவகையனாய்த் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

ஊடல் கொண்டிருந்த தலைவியின் ஊடலைப் போக்கித் தலைவன் அவளோடு கூடியிருந்தபொழுது அவன் தன்னுள்ளே சொல்லிக் கொள்வது.

உணலினும் உண்ட(து) அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது.

தெளிவுரை

மேலும் மேலும் உண்பதைவிட முன் உண்ட உணவு நன்றாகச் செரித்தபின் உண்பது இன்பமானது. அதுபோலக் கூடி மகிழ்தலை விட, ஊடல் கொண்டு அவ்வூடல் நீங்கிய பின் கூடுவது காமத்துக்கு இன்பமானது.

கருத்து

ஊடலுக்குப் பின் கூடலே பேரின்பம்.

விளக்கம்

உண்ட உணவு நன்றாகச் செரித்த பின் உண்ணும்போது உணவின் அளவும் மிகுதியாயிருக்கும்; உணவும் சுவையாக இருக்கும். அதுபோலக் காம வாழ்க்கையில் ஏற்கெனவே உள்ள

மனக் குறைகளைப் பேசி அவை தீர்ந்து மன ஒற்றுமை ஏற்பட்டவுடன் கூடினால், அக்கூடுதல் மிகவும் இன்பமாக அமையும்.

குறிப்பு

இச்செய்திகள் காமத்தை முறையாய் அனுபவித்தவருடைய பட்டறிவு.

சொற்பொருள்

1. உணலினும் - மேலும் மேலும் உண்பதைவிட; உண்டது - முன் உண்டது; அறல் - செரித்தல் இன்பமானது; (அதுபோல) காமம் - காமத்திற்கு.
2. (அதுபோலப்) புணர்தலின் - கூடி மகிழ்தலைவிட; ஊடல் - பிணங்கல்; இனிது - இன்பமானது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1327 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன், கழியுவகையனாய்த் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

ஊடல் கொண்டிருந்த தலைவியின் ஊடலைப் போக்கித் தலைவன் அவளோடு கூடியிருந்தபொழுது, அவன் தன்னுள்ளே சொல்லிக் கொள்வது.

ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும்.

தெளிவுரை

காம இன்பம் நுகர்தற்குரிய இருவருள், ஊடலின்போது தோற்றவர் வென்றவர் ஆவார். அஃது அப்பொழுது அறியப்

படாது ஆயினும், அது பின்னே பெறும் புணர்ச்சியின்போது அவரால் அறியப்படும்.

கருத்து

தோல்வியே வெற்றியாவது ஊடலில் மட்டுமே.

விளக்கம்

ஊடலில் தோற்றவர், கூடும்பொழுது மிகுந்த இன்பத்தைப் பெறுவார். முன்பு தோற்றதுபோல் தோன்றினாலும் அதுவே வெற்றி என்பது, புணர்ச்சியில் அவரால் அறியப்படும்.

குறிப்பு

ஊடலில் தோற்பது எப்பொழுதும் ஆடவரே; அதேபோல் ஊடலில் வெற்றி பெறுபவரும் ஆடவரே!

காதல் போரில் மட்டுமே, தோற்றவரே வெற்றி பெற்றவராகவும் இருப்பர்.

சொற்பொருள்

1. ஊடலில் தோற்றவர் - (காமம் அனுபவித்தற்குரிய இருவருள்) பிணக்கிலே தோற்றவர்; வென்றோர் - வெற்றி பெற்றவராவர்; அது - (அஃது அப்பொழுது அறியப்படாததாயினும்).
2. கூடலில் காணப்படும் - (பின்னே) புணர்ச்சியில் (அவரால்) அறியப் படும்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1328 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன், கழியுவகையனாய்த் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

ஊடல் கொண்டிருந்த தலைவியின் ஊடலைப் போக்கித் தலைவன் அவளோடு கூடியிருந்தபொழுது அவன் தன்னுள்ளே சொல்லிக் கொள்வது.

ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு.

தெளிவுரை

இப்போது என் நுதல் வெயர்க்கும்படி என்னை அணைத்து இவள் இன்பம் தருகிறாள். இப்பேரின்பத்தை இவள் ஊடல் கொண்டு அவ்வூடலைப் போக்கி, நான் மீண்டும் பெறுவேனா?

கருத்து

தலைவியின் நெற்றி வியர்க்குமாறு அவளைக் கூடியதனால் பெற்ற இன்பத்தினை, மீண்டும் ஒருமுறை அவள் ஊடுதல் மூலம் பெறுவேனா?

விளக்கம்

கூடியிருக்கும்பொழுது நெற்றியில் வியர்வை உண்டாவது காம இன்பத்தின் குறிப்பு. இந்த இன்பம் ஊடலினால்தான் கிடைத்தது. இவ்வளவு இன்பம் பெற வேண்டுமென்றால், மீண்டும் ஊடிக் கூடினால்தான் பெற முடியும். இயல்பாகக் கூடுதலைவிட ஊடிப் பின் கூடும் கூடலில்தான் இன்பம் மிகுதியாய் இருக்கும்.

குறிப்பு

'உப்பு'க்கு இனிமை என்ற பொருளும் உண்டு. கூடலில் தோன்றும் வியர்வை காதலனுக்கு உப்புக் கரிப்பாக இராது, இனிமைச் சுவையுடையதாய் இருக்கும்.

சொற்பொருள்

1. நுதல் வெயர்ப்ப - நெற்றி வியர்வை அரும்பும் வகையில்.
2. கூடலில் தோன்றிய - புணர்ச்சியில் உண்டாகிய; உப்பு - இனிமையை.
1. ஊடி - (இன்னுமொரு முறை இவளோடு) பிணங்கி; பெறுகுவம் கொல்? - (நான்) பெறுவேனா?

தலைவன் கூற்று

திருக்குறள் 1329 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகையனாய்த் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

ஊடல் கொண்டிருந்த தலைவியின் ஊடலைப் போக்கித் தலைவன் அவளோடு கூடியிருந்தபொழுது, அவன் தன்னுள்ளே சொல்லிக் கொள்வது.

ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா.

தெளிவுரை

ஒளி வீசும் அணிகலன்களை அணிந்த என் காதலி இன்னும் ஊடுவாளாக; அவள் ஊடலைத் தீர்த்தற்பொருட்டு, நான் இரந்து நிற்குமாறு இராக் காலம் இன்னும் நீட்டிப்பதாக.

கருத்து

ஊடல் நீடிக்கும் கால அளவுக்கு இரவும் நீளட்டும்.

விளக்கம்

ஊடல் தீர்க்க இரவில் நீண்ட நேரம் கழியுமானால், பின்னர் இணைந்திருக்கும் நேரம் மிகவும் குறைந்துவிடும். அதனால் தலைவன், 'தலைவியின் ஊடல் எத்துணை நேரம் நீண்டாலும்

நீளட்டும்; அந்த அளவுக்கு இரவும் நீளுமானால் என் கூடுதலில் குறையேதும் நிகழாது; முழு இன்பம் துய்ப்பேன்' என்று கூறு கின்றான்.

குறிப்பு

ஊடல் நீடித்தலாகாது என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. ஒளியிழை - ஒளி வீசும் அணிகலன்களை அணிந்திருக்கும் காதலி; ஊடுகமன் - இன்னும் என்னோடு பிணங்கட்டும்; யாம் இரப்ப - (அவள் பிணங்கியிருப்பதைத் தீர்த்தற் பொருட்டு) நான் இரந்து நிற்கும் வகையில்.
2. இரா - (இவ்) இரவு; நீடுக மன் - (விடியாது) நீட்டித்திருக்கட்டும்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1330 **திருவள்ளுவர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன், கழியுவகையனாய்த் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

ஊடல் கொண்டிருந்த தலைவியின் ஊடலைப் போக்கித் தலைவன் அவளோடு கூடியிருந்தபொழுது, அவன் தன்னுள்ளே சொல்லிக் கொள்வது.

ஊடுதல் காமத்திற்(கு) இன்பம் அதற்(கு)இன்பம்
கூடி முயங்கப் பெறின்.

தெளிவுரை

காம நுகர்ச்சிக்கு இன்பம் தருவது ஊடலே. அவ்வூடுதலுக்கு இன்பமாவது அதனை அளவறிந்து நீக்கித் தம்முள் கூடி, ஒருவரை ஒருவர் இறுகத் தழுவிக் கொள்ளுதல் ஆம்.

கருத்து

காமத்திற்கு இன்பம் ஊடுதல்; அவ்வூடுதலுக்கு இன்பம் கூடித் தழுவிக் கொள்ளுதல்.

விளக்கம்

ஊடல் காதல் வாழ்க்கையைச் சுவைபடுத்துகிறது; அவ்வூடல் தீர்ந்து புணர்ச்சியில் முடிய வேண்டும். அப்பொழுதுதான் ஊடலின் பயனைப் பெற்று இன்பம் துய்க்க முடியும். இந்த இன்பமே இல்லற வாழ்வின் இனிய இன்பம் எனக் காதலியை அணைத்தவண்ணம் காதலன் தன் மனத்துள் சொல்லிக் கொள்கிறான்.

குறிப்பு

ஊடலால் தோன்றும் இன்பம்; முயங்குதலால் தோன்றும் இன்பம் எனும் இவ்விரண்டின்பத்தையும் தலைவன் பெறுகிறான்.

சொற்பொருள்

1. **ஊடல்** - ஊடுதல்; காமத்திற்கு - காதல் நுகர்ச்சிக்கு; இன்பம் - இன்பமாகும்.
2. **கூடி** - (அதனை அளவறிந்து நீங்கித் தம்முள்) கூடி; முயங்கப் பெறின் - ஒன்றிணைந்து கூடித் தழுவிக் கொண்டால்.
1. அதற்கு - அவ்வூடுதலுக்கு; இன்பம் - இன்பமாகும்.

கைக்கிளை

காமம் சாலா இளமை யோள்வயின்
ஏமம் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே

என்னும் தொல்காப்பியர் நூற்பா 996, கைக்கிளையின் இலக்கணம் கூறுகிறது.

பருவம் எய்தாப் பெண்ணைப் பருவம் எய்தியவளாக மயங்கி ஒருவன் காதல் கொள்கிறான்; காதல் துன்பமும் படுகின்றான்; நன்மை எனவும் தீமை எனவும் அவளைத் தொடர்புபடுத்திச் செருக்குகின்றான்; அவளிடமிருந்து மறுமொழியாக ஒரு சொல்லும் பெறவில்லை; எனினும், தானே சொல்லி இன்புறுகிறான் என்பது இந்நூற்பாவின் பொருள்.

— மூதறிஞர் வ.சுப. மாணிக்கம்

'கைக்கிளை — கை + கிளை = சிறு உறவு.

இது சிறிதளவே தோன்றி மறையும் மன உணர்வு. இது பெருமையுடையதன்று.'

'கை — பக்கம்; கிளை — கிளைத்தல், தோன்றுதல். அஃதாவது ஆண்பால், பெண்பால் என்னும் இருவரில் ஒரு பக்கத்தே தோன்றும் அன்பாம். ஆகவே, கைக்கிளை ஒரு தலைக் காமம்'

என்று உரைப்பாரும் உளர்.

தலைவன் கூற்று

கலித்தொகை 56 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

"காமம் சாலா இளமை யோள்வயின்
ஏமம் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே"

(தொல். நூற்பா 996)

என்பதனால், தருக்கிச் சொல்லிச் சொல்லெதிர் பெறான் இன்புற்றது.

காமம் சாலா - காம உணர்வு நிரம்பாத; இளமையோள் வயின் - இளையவளிடம் (அதாவது மங்கைப் பருவம் எய்தியும் எய்தாத நிலை).
ஏமம் சாலா - இன்ப நிறைவு பெறாத; இடும்பை - துன்பம்.
திறத்தால் - வகையால்.
தருக்கிய புணர்த்து - மிகைபடப் பேசி.
சொல் எதிர் பெறாஅன் - மறுமொழி ஏதும் பெறாதவன்; சொல்லி - தனக்குள் பேசி.
புல்லித் தோன்றும் - சிறிதளவே தோன்றி (மறையும் மன உணர்வே கைக்கிளையின் அடையாளம்).

கூற்று விளக்கம்

சங்க இலக்கியத்துள் கைக்கிளைத் திணைக்கு உரியனவாக இடம் பெற்றிருப்பவை நான்கு பாடல்களே. நான்கும் கலித்தொகையிலேயே உள்ளன. நான்கனுள் மூன்று கபிலர் பாடியவை (குறி. கலி. 20, 21, 22). எஞ்சிய ஒன்று (முல். கலி. 10) நல்லுருத்திரனார் பாடியது. அகத்திணை ஏழு என்பது ஒருமுறை; அம்முறையில் முதலில் பெருந்திணையும், ஏழாவதாகக் கைக்கிளையும் இடம் பெறும். அகத்திற்குச் சிறப்புச் சேர்ப்பவை நடுவண் ஐந்திணையே (நடுவில் உள்ள ஐந்து திணைகள்) என்று சிறப்பிக்கப்படும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன அவை.

கை + கிளை - சிறு உறவு. கை - ஒரு பக்கம். பெண்ணின் இசைவு அறியுமுன்பே, ஆடவனிடம் மட்டும் தோன்றும் காதலுணர்வு. **கைக்கிளை என்பது ஒருதலைக் காதல்.** ஆடவன் தன்னையும் காம உணர்வு அமையாத பெண்ணையும் சேர்த்து நல்லதும் அல்லதுமான வற்றைச் சிறிது மிகைபடப் பேசுவான். அவள் மறுமொழி ஏதும் கூறாத போதும் தானே தனக்குள் பேசி இன்புறுவான். இலக்கியத்தில் இது மிகவும் அருகியே காணப்படும். (அவளும் காமம் உணர்ந்த பருவத்தளாய், நோக்குவான் நோக்குக்கு எதிர் நோக்கிக் கண்ணொடு கண் பேசும் நிலை ஏற்பட்டுக் காதல் வளருமாயின் அஃது அன்பின் ஐந்திணைப்பாற்படும்.)

தரவு

ஊர்க்கால் நிவந்த பொதும்பருள், நீர்க்கால்,
கொழுநிழல் ஞாழல் முதிர்இணர் கொண்டு,
கழும முடித்துக் கண்கூடு கூழை
சுவல்மிசைத் தாதொடு தாழ, அகல்மதி
தீங்கதிர் விட்டது போல, முகன்அமர்ந்து,
ஈங்கே வருவாள் இவள்யார்கொல்? ஆங்கே,ஓர்
வல்லவன் தைஇய பாவைகொல்? நல்லார்
உறுப்பெலாம் கொண்டு,இயற்றி யாள்கொல்? வெறுப்பினால்,
வேண்டுருவம் கொண்டதோர் கூற்றம்கொல்? ஆண்டார்,
கடிதுஇவளைக் காவா விடுதல்; கொடிஇயல்,
பல்கலைச் சில்பூங் கலிங்கத்தள், ஈங்குஇதோர்
நல்கூர்ந்தார் செல்வ மகள்!
இவளைச் சொல்லாடிக் காண்பேன், தகைத்து;
நல்லாய்! கேள்:

தாழிசை

ஆய்தூவி அனம்என, அணிமயில் பெடைஎனத்
தூதுணம் புறவுஎனத் துதைந்தநின் எழில்நலம்—
மாதர்கொள் மான்நோக்கின் மடநல்லாய்! நிற்கண்டார்ப்
பேதுறூஉம் என்பதை அறிதியோ? அறியாயோ?

நுணங்குஅமைத் திரள்என, நுண்இழை அணைஎன,
முழங்குநீர்ப் புணையென, அமைந்தநின் தடமென்தோள்—
வணங்குஇறை, வால்எயிற்று, அந்நல்லாய்! நிற்கண்டார்க்கு
அணங்குஆகும் என்பதை அறிதியோ? அறியாயோ?

முதிர்கோங்கின் முகைஎன, முகம்செய்த குரும்பைஎனப்
பெயல்துளி முகிழ்எனப் பெருத்தநின் இளமுலை–
மயிர்வார்ந்த வரிமுன்கை மடநல்லாய்!–நிற்கண்டார்
உயிர்வாங்கும் என்பதை உணர்தியோ? உணராயோ?

எனவாங்கு–

சுரிதகம்

பேதுற்றாய் போலப் பிறர்எவ்வம் நீஅறியாய்,
யாதொன்றும் வாய்வாளாது இறந்தூஉவாய்! கேள்,இனி:
நீயும் தவறிலை; நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமரும் தவறிலர்;
நிறைஅழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
'பறைஅறைந் தல்லது செல்லற்க!' என்னா
இறையே தவறுடை யான்.

தெளிவுரை

(ஓர் இளைய மகளைக் கண்ட காளை ஒருவன் தன்னுள் பேசுகிறான்.)

"ஊரில் உயர்ந்து வளர்ந்துள்ள பூஞ்சோலையின் வாய்க்கால் கரையில் நிற்கும் நிழல் நிறைந்த ஞாழல் மரத்தின் பூங்கொத்து களைச் சூடிக்கொண்டு, வாரி முடிக்கும் அளவில் வளர்ந்துள்ள சிறிய கூந்தல் தோளில் தவழ, முழு நிலாப் போல் ஒளி வீசும் முகம் மலர, இங்கு வருபவள் யாராக இருக்கும்?

"சிற்பக் கலைஞன் செய்து வைத்த பாவையோ? அல்லது பெண்களுக்குரிய சிறந்த உறுப்புகளையெல்லாம் அழகாகச் சேர்த்து அமைக்கப் பெற்றவளோ? அல்லது எமன் என் மீது கோபங் கொண்டு என் உயிரை வாங்குவதற்கு இவள் உருவத்தில் வந்துள்ளானோ?

"கொடி போன்ற இவள் இடையில் மேகலை அணிந் துள்ளாள். பூ வேலைப்பாடு பொருந்திய நூலாடையை உடுத்தி யுள்ளாள். இவள் மனிதப் பெண்தான். ஆனால் பிள்ளை யில்லாது வருந்தியவர்கள் நெடுநாள் கழித்துப் பெற்றெடுத்த செல்வ மகள் போலும். இவளுக்குப் பொறுப்பாக இருப்போர்

இவளைப் பாதுகாக்காமல் இவ்வாறு வெளியில் அனுப்புவது கொடுமையல்லவா?

நான் அவளைத் தடுத்து நிறுத்திப் பேச்சுக் கொடுத்துக் காண்பேன்" (என்று எண்ணியவன் அவளை, 'நல்லவளே! கேள்' என்று விளித்துப் பேசத் தொடங்கினான்.)

"உன்னைக் கண்டவர்க்கு மகிழ்வைத் தரும் மான் போன்ற பார்வையும் மடப்ப குணத்தையும் கொண்ட பெண்ணே! அன்னம் போன்ற நடையையும், மயில் போன்ற சாயலையும், புறாவைப் போன்ற இளமையழகையும் கொண்ட உன் அழகு, உன்னைப் பார்த்தார்க்குப் பித்தேற்றும் என்பதை நீ அறிவாயா?

"சிறிது வளைந்த மணிக்கட்டையும் மென்மையான பல் வரிசைகளையும் கொண்ட அழகிய பெண்ணே? உன் தோள்கள் மென்மை அமைந்த மூங்கில் போன்ற திரட்சி கொண்டவை; தலையணை போன்ற மென்மை கொண்டதும் காமக் கடலைப் கடப்பவர்க்குத் தெப்பமாய் உதவுவதுமான உன் பெரிய தோள்கள் உன்னைப் பார்ப்பவர்களைத் துன்புறுத்தும் என்பதை நீ அறிவாயா?

"நுண்ணிய மயிர் ஒழுங்கைக் கொண்ட முன்னங்கையைக் கொண்ட பெண்ணே! கோங்க மரத்தின் மொட்டுப் போலவும், அடிபரந்து விளங்கும் குரும்பையைப் போலவும், மழைத் துளியால் உண்டாகும் குமிழி போலவும் உள்ள உன் மார்பகம், பார்ப்பவர் உயிரைப் பருகும் என்பது உனக்குத் தெரியுமா?

"நான் உன்னைப் பற்றிப் பலவாறு கூறியவற்றைக் கேட்ட பின்னரும் எவ்வித விடையையும் சொல்லாமல் வாய் பேசாது திகைத்து மயங்கியவளைப் போல, என்னைக் கடந்து சென்று கொண்டிருக்கிறாயே! பிறர் படும் துன்பத்தை அறியும் தன்மை உனக்கு இல்லை போலும். இனியாவது நான் கூறுவதைக் கேள். உன் மேலும் எந்தத் தவறும் இல்லை; உன் வீட்டுக்கு வெளியே உன்னைப் போக விட்ட உன் உறவினரும் எத்தவறும் செய்திலர்; மதம் கொண்டு, எதிர்ப்படுபவரைக் கொல்லும் தன்மை கொண்ட பட்டத்து யானையை நீராட அழைத்துச் செல்லும் போழ்து அது வந்து கொண்டிருப்பதைப் பறைசாற்றி மக்களை

எச்சரிப்பர். அதுபோல, 'நீ வீதியிலே செல்லப் புறப்படுவதற்கு முன், ஆடவருக்கு எச்சரிக்கை தரும் பறையை ஒலிக்காமல் நீ செல்லக் கூடாது' என்று உனக்கு ஆணை பிறப்பிக்காத அரசனே தவறுடையவன்!" என்று கூறினான்.

கருத்து

அவள் மறுமொழி எதுவும் பேசாத நிலையில் அவன் தானாகவே தனக்குள் பேசிக்கொண்டான்.

விளக்கம்

காதலின்ப அனுபவத்திற்கு ஏற்ற முழுப் பக்குவம் பெறாத 'தலைவி'யைக் கண்டு தலைவன் அவளிடம் காதல் வேதனை உற்றுத் தனக்கும் அவளுக்கும் பொருந்தாத வகையில் தன் காதற் செருக்கொடு பேசுகிறான். அவள் இவனிடம் ஏதும் பேசும் நிலையில் இல்லை. அந்நிலையில் தானே பேசி, ஒருவகை இன்பத் தில் தலைவன் தோய்கிறான்.

சொற்பொருள்

1. ஊர்க்கால் - ஊரில்; நிவந்த - வளர்ந்த; பொதும்பர் - சோலை; நீர்க்கால் - வாய்க்கால் கரை.
2. ஞாழல் - ஒரு வகை மரம்; இணர் - பூங்கொத்து.
3. கழும - ஒன்றோடொன்று மயங்க; கண்கூடு - வாரி முடிக்கும் அளவுக்கு வளர்ந்துள்ள; கூழை - கூந்தல்.
4. சுவல் - தோள்; தாது - பூந்துகள்; தாழ - தவழ; அகல்மதி - முழு நிலா.
5. முகன்அமர்ந்து - முகம் மலர.
7. வல்லவன் - சிற்ப வல்லுநன்; தைஇ - செய்து வைத்த; பாவை - சிற்பம்.
8. வெறுப்பினால் - ஆடவர்மேல் உள்ள வெறுப்பினால்.
9. கூற்றம் - கூற்றுவன்; ஆண்டார் - இவளுக்குப் பொறுப்பாக இருப்பவர்.
10. காவா விடுதல் - பாதுகாக்காமல் வெளியே அனுப்புவது.
11. பல்கலை - பல மணிவடங்கள் கொண்ட மணியில் ஆன மேகலை; கலிங்கம் - உடை, ஆடை.
12. நல்கூர்ந்தார் - பிள்ளையில்லாமல் நெடிதுநாள் வாடியிருந்தவர்.

15. தூவி - சிறகு; அனம் -அன்னம்; அணி - அழகிய; மயில் பெடை - பெண் மயில்.
16. தூது - கல்; தூதுணம் - கல்லை உணவாகக் கொண்ட (புறா); துதைந்த - நிறைந்த.
17. மாதர் - அழகு, விருப்பம்; மடம் - இளமை; நிற்கண்டார் - உன்னைக் கண்டவர்.
18. பேதுறுதல்- பித்தடைதல்; அறிதியோ? - அறிவாயோ?
19. நுணங்குஅமை - மென்மை அமைந்த; திரள் - திரட்சி; அணை - தலையணை.
20. முழங்குநீர் - கடல்; புணை - தெப்பம்.
21. வணங்கு இறை - வளைந்த மணிக்கட்டு; வால்எயிறு - வெண்மையான பற்கள்.
22. அணங்குஆகும் - துன்புறுத்தும்.
23. கோங்கு - கோங்க மரம்; முகை - மலர் மொட்டு; முகம்செய் - அடி பரந்த.
24. பெயல்துளி - மழைத் துளி; முகை - நீர்க்குமிழ்.
25. வார்ந்த - படிந்த, ஒழுங்குள்ள.
28. பேதுற்றாய் - திகைத்து மயங்கியவள்; எவ்வம் - துன்பம்.
29. வாய்வாளாது - மறுமொழி ஏதும் கூறாது; இறந்துஈவாய் - கடந்து செல்வாய்.
30. புறங்கடை - வீட்டுக்கு வெளியே.
31. போதர விட்ட - போக விட்ட; நுமர் - உறவினர்.
32. நிறைஅழி - மதங் கொண்ட, இயல்பு மாறிய; நீர்க்கு விடுதல் - நீராடச் செல்லுதல்.
33. என்னா - என்று சொல்லாத.
34. இறையே - அரசனே!

தலைவன் கூற்று

கலித்தொகை 57 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

"காமஞ் சாலா இளமையோள்வயின், ஏமஞ் சாலா இடும்பையெய்தி, நன்மையுந் தீமையு மென்றிரு திறத்தால், தன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்து, சொல்லெதிர் பெறாஅன் சொல்லியின்புறல், புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே" என்பதனால், தருக்கிச் சொல்லிச் சொல்லெதிர் பெறான் இன்புற்றது.

கூற்று விளக்கம்

காதலை உணரும் பருவம் அடையாத இளைய கன்னி ஒருத்தியிடம் ஒருவன் காதல் கொண்டு, புகழ்ந்தோ அல்லது பழித்தோ தனக்கும் அவளுக்கும் ஒத்த சில செய்திகளை அவளிடம் கூறுகிறான்; அவளிடமிருந்து மறுமொழி எதுவும் கிடைக்கவில்லை; ஆயினும், அவ்வாறு சொல்லுதலிலேயே தான் மட்டும் இன்பம் காணுகின்றவன் சொல்லியது.

தரவு

வேய்எனத் திரண்டதோள்,வெறிகமழ் வணர்ஐம்பால்,
மாவென்ற மடநோக்கின், மயில்இயல், தளர்புஒல்கி,–
ஆய்சிலம்பு அரிஆர்ப்ப, அவிர்ஒளி இழைஇமைப்பக்
கொடிஎன, மின்என, அணங்குஎன, யாதொன்றும்
தெரிகல்லா இடையின்கண் கண்கவர்பு ஒருங்கோட,
வளமைசால் உயர்சிறப்பின் நுந்தைதொல் வியன்நகர்
இளமையான் எறிபந்தோடு இகத்தந்தாய்! கேள்,இனி;

தாழிசை

பூந்தண்தார்ப் புலர்சாந்தின், தென்னவன் உயர்கூடல்,
தேம்பாய அவிழ்நீலத்து அலர்வென்ற அமர்உண்கண்,
ஏந்துகோட்டு எழில்யானை ஒன்னாதார்க்கு அவன்வேலின்,
சேந்துநீ இனையையால்; ஒத்ததோ?– சின்மொழி!

பொழிபெயல் வண்மையான் அசோகந்தண் காவினுள்,
கழிகவின் இளமாவின் தளிர்அன்னாய்! அதன்தலைப்
பணைஅமை பாய்மான்தேர் அவன்செற்றார் நிறம்பாய்ந்த

கணையினும், நோய்செய்தல் கடப்புஅன்றோ?–கனங்குழாய்!
வகையமை தண்தாரான் கோடுஉயர் பொருப்பின்மேல்
தகைஇணர் இளவேங்கை மலர்அன்ன சுணங்கினாய்!
மதவலி மிகுகடாஅத்து அவன்யானை மருப்பினும்
கதவவால்– தக்கதோ? காழ்கொண்ட இளமுலை
எனவாங்கு–

சுரிதகம்

இனையன கூற, இறைஞ்சுபு நிலம்நோக்கி,
நினையுபு நெடிதொன்று நினைப்பாள்போல், மற்றுஆங்கே
துணைஅமை தோழியர்க்கு அமர்த்த கண்ணள்,
மனையாங்குப் பெயர்ந்தாள்,என் அறிவுஅகப் படுத்தே.

தெளிவுரை

இளைஞன் ஒருவன் ஓர் இளங்கன்னியைக் கண்டான். அவள் அழகு அவனைக் கவர்ந்தது. பேச முயன்றான். அவளிடம் எவ்விதச் சலனமும் இல்லாமையால் இவன் கொண்ட முயற்சி பயனற்றதானது. தனக்குள்ளே பேசிக்கொள்கிறான்:

"மூங்கில் போன்ற திரண்ட தோள்; ஐந்து வகையாகப் பிரித்துப் பின்னிய மணம் கமழும் கூந்தல்; மானைத் தோற் கடிக்கும் மருண்ட பார்வை; மயில் போன்ற சாயல்; இவற்றை உடையவளாய்ச் சிலம்பு ஒலிக்க, அணிகலன்கள் ஒளி வீச, இது கொடியா? மின்னலா? தெய்வமா? என்று சிறிது கூடத் தோன்றாத நிலையில் உள்ளாய். தெரியவே இயலாத இடை யுடன், உயர்ந்த சிறப்புடைய உன் தந்தையின் பழம் பெருமை கொண்ட பெரிய மாளிகையிலிருந்து இளமை வேகத்துடன் பந்தினை வெளியில் எறிந்தாய். அப்பந்தின் பின்னாலேயே ஓடி வந்தாய்! இப்போது நான் கூறுகின்ற இதனைக் கேள்" என்கிறான்.

(மறுமொழி இல்லாததால் மேலும் பேசுகிறான்.)

"சில சொற்களை மட்டும் பேசும் இயல்புடையவளே! ஆடவர்கள் மாலையணிந்து சந்தனம் பூசி மகிழ்ந்து வாழும் பாண்டியன் நகரான மதுரையில் மலரும் நீலமலரைத் தோல்வி அடையச் செய்யும், உனது மையுண்ட கண்கள்; வளர்ந்த

தந்தங்களையும் வலிமையான யானைகளையும் உடைய பகைவர்களைப் பாண்டியன் வேல் துன்புறுத்துவது போல, உன்னைக் கண்டவர்களைத் துன்புறுத்துமாறு நீ இருக்கின்றாய். இஃது உன் இளமைக்கு ஏற்றதாகுமா?

"காதில் பொற்குழை அணிந்தவளே! மழையைப் போல் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்ட பாண்டிய மன்னனின், அசோகஞ் சோலையில் நிற்கும் மாமரத்தின் தளிரை ஒத்த நிறமுடையவளே! தேர்களை உடைய பகைவரின் மார்பில் பாயும் பாண்டியனின் அம்பைப் போல உன் தளிர்மேனி துன்பம் தருகின்றனவே, இது கொடுமையல்லவா?

"குளிர்ந்த மாலையை அணிந்த பாண்டியரின் பொதிகை மலையில் உள்ள வேங்கை மரத்தில் கொத்தாகத் தொங்கும் பூக்களைப் போன்ற தேமலைக் கொண்டவளே! முத்துமாலை அசையும் உனது மார்பகம் வலிமை மிக்கதும் மதம் சொரி வதுமான யானையைவிடக் கோபம் உடையதாக இருக்கின்றதே. இது தக்கதா?

"இப்படியெல்லாம் நான் நீண்ட நேரமாகப் பழி கூறியும் அவள் பதில் ஏதும் கூறவில்லை. தலைகுனிந்து தரையைப் பார்த்து ஏதோ ஒன்றைச் சிந்திப்பவள்போலத் தன் தோழியரைப் பார்த்தவாறு என் அறிவையும் தன்வயப்படுத்திக் கொண்ட வளாகத் தன் வீடு நோக்கிச் சென்றாள்" என்று கூறி அவன் வருந்துகிறான்.

கருத்து

அவள் பார்வையால் ஈர்க்கப்பட்டேன்; அப்பார்வை எனக்குத் துன்பத்தைத் தந்தது; தன் அழகால் என் மனத்தைத் தன்வயப்படுத்திக் கொண்டாள்.

விளக்கம்

இளைஞன் ஒருவன் வீதி வழியே சென்று கொண்டிருந்தான். அந்த வீதியில் பழம்பெருமை கொண்ட செல்வச் செழிப்போடு விளங்கும் வீட்டின் உள்ளிருந்து ஒரு பந்தை வெளியே எறிந்து அதன் பின்னரே வெளியே ஓடி வந்தாள், ஓர் இளம் கன்னி. அவள் கண்களும் மேனியும் அழகால் தன்னை வருத்துவதை

இளைஞன் விரிவாக அவளிடம் கூறினான். அவளோ, மறுமொழி ஏதும் கூறாது, தன் தோழியரைப் பார்த்தவாறே, தான் வெளியே போட்டிருந்த பந்தினை எடுத்துக்கொண்டு வீட்டினுள்ளே சென்றுவிட்டாள். இளைஞன் வருத்தத்தோடு நின்றான்.

சொற்பொருள்

1. வேய் - மூங்கில்; வெறி - மணம்; வணர் - வளைவு; ஐம்பால் - ஐந்தாக வகுத்து அழகுபடுத்தப் பெற்ற கூந்தல்.
2. மா - மான்; மடநோக்கு - மருண்ட பார்வை; இயல் - சாயல்; ஒல்குதல் - தளர்தல்.
3. அரி - பரல்; இழை - அணிகலன்; இமைப்ப - ஒளி வீச.
5. தெரிகல்லா - (இன்னதென்று) நிச்சயிக்க முடியாத.
6. நுந்தை - உன் தந்தை; தொல் வியன்நகர் - பழமையான அகன்ற மாளிகை.
7. இகத்தந்தாய் - வெளியே ஓடி வந்தாய்.
8. தென்னவன் - பாண்டியன்; உயர்கூடல் - பெருமை கொண்ட மதுரை நகரம்.
9. அலர் - மலர்; அமர் - விருப்பம் தரும்.
10. கோடு - கொம்பு; ஒன்னாதார் - பகைவர்.
11. சேந்து - செவ்வரி படர்ந்து; இனையையால் - இத்தன்மை கொண்டனை; ஒத்ததோ?- தகுமோ?; சின்மொழி - சிலவாகப் பேசும் இயல்பினைக் கொண்டவள்.
12. பொழிபெயல் - பெய்யும் மழை; வண்மை - கொடை; அசோகம் - அசோக மரம்; கா - மரச்சோலை.
13. கழிகவின் - மிகுஅழகு, பேரழகு; மா - மா மரம்.
14. பணைஅமை - பந்தியில் (கொட்டடியில்) நிற்கும்; பாய்மான் - விரைந்து செல்லும் குதிரை; செற்றார் - கொல்லப்பட்டவர்; நிறம் - மார்பு.
15. கணை - அம்பு; கடப்பு - மிக்கது.
16. வகை அமை - வகையாக அமைந்த; தாரான் - (வேப்ப) மாலையினை யுடையவன்; கோடு - மலை உச்சி; பொருப்பு - மலை (பொதிய மலை).
17. தகைஇணர் - அழகிய பூங்கொத்து; சுணங்கு - தேமல்.
18. கடாஅம் - மதம்; மருப்பினும் - தந்தத்தினும்.
19. கதவ - கோபமுடையது; காழ் - முத்து வடம்.

21. இனையன - இவ்வாறு; இறைஞ்சுபு - கவிழ்ந்து.

24. அகப்படுத்து - கைப்பற்றிக் கொண்டு, உள்ளத்தே சிறைப்படுத்திக் கொண்டு.

தலைவன் கூற்று

கலித்தொகை 58 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

"காமஞ் சாலா இளமையோள்வயின், ஏமஞ் சாலா இடும்பையெய்தி, நன்மையுந் தீமையு மென்றிரு திறத்தால், தன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்து, சொல்லெதிர் பெறாஅன் சொல்லியின்புறல், புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே" என்பதனால், தருக்கிச் சொல்லிச் சொல்லெதிர் பெறான் இன்புற்றது.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவி இருவர் உள்ளமும் இணைதல் அன்பின் ஐந்திணையாகும்; கைக்கிளை ஒருபாற் காதலாகும்; 'காமஞ்சாலா...' என்ற நூற்பாவில் கைக்கிளைக்குரிய இலக்கணம் கூறுவார், தொல்காப்பியர்; தலைவன் தனக்கும் அவட்கும் ஒத்தன பல கூறினான். அவளிடத்திருந்து சொல் எதிர்பெறானாகித் தானே தனக்குள் சொல்லி இன்புற்றான். கைக்கிளை உரிப்பொருள்.

தரவு

வார்உறு வணர்ஐம்பால், வணங்குஇறை நெடுமென்தோள்,
பேர்எழில் மலர்உண்கண், பிணைஎழில் மான்நோக்கின்
கார்எதிர் தளிர்மேனி, கவின்பெறு சுடர்நுதல்,
கூர்எயிற்று முகைவெண்பல், கொடிபுரையும் நுசுப்பினாய்!
நேர்சிலம்பு அரிஆர்ப்ப, நிரைதொடிக்கை வீசினை,
ஆருயிர் வௌவிக்கொண்டு அறிந்தீயாது இறப்பாய்!கேள்:

தாழிசை

உளனா,என் உயிரைஉண்டு, உயவுநோய் கைம்மிக,
இளமையான் உணராதாய்! நின்தவறு இல்லானும்,
களைநர்இல் நோய்செய்யும் கவின்அறிந்து, அணிந்து,தம்
வளமையான் போத்தந்த நுமர்தவறு இல்லென்பாய்.

நடைமெலிந்து, அயர்வுறீஇ, நாளும்என் நலியும்நோய்
மடமையான் உணராதாய்! நின்தவறு இல்லானும்,
இடைநில்லாது எய்க்கும்நின் உருவறிந்து, அணிந்து,தம்
உடைமையால் போத்தந்த நுமர்தவறு இல்லென்பாய்.

அல்லல்கூர்ந்து அறிவுற, அணங்காகி அடரும்நோய்
சொல்லினும் அறியாதாய், நின்தவறு இல்லானும்,
ஒல்லையே உயிர்வௌவும் உருவறிந்து, அணிந்து,தம்
செல்வத்தால் போத்தந்த நுமர்தவறு இல்லென்பாய்.

எனவாங்கு—

சுரிதகம்

ஒறுப்பின்,யான் ஒறுப்பது நுமரை;யான், மற்றுஇந்நோய்
பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயின், பொலங்குழாய்!
மறுத்துஇவ்வூர் மன்றத்து மடல்ஏறி,
நிறுக்குவென் போல்வல்யான், நீபடு பழியே.

தெளிவுரை

ஐந்து வகையாக வாரிவிடப்பட்ட முனை சுருண்ட கூந்தல்; வளையும் தன்மை கொண்ட முன் கைகள்; நீண்ட மென்மையான தோள்கள்; பேரெழில் கொண்ட மலரைப் போன்று விளங்கும் மை தீட்டப் பெற்ற கண்கள்; எழில்மிக்க பெண்மானின் மருண்ட பார்வை; மழை பெற்றுத் தழைத்த மரங்களில் தோன்றும் தளிர் போன்ற மேனி; அழகுற்று ஒளிபெறத் திகழும் நெற்றி; விழுந்த பின் முளைத்துக் கூர்மையானதும், விழாது மொட்டுப் போல் விளங்குவதும் ஆகிய வெண்மை நிறங்கொண்ட பற்கள்; கொடி போன்று காணப்பெறும் இடுப்பு; இத்தகைய எழில் நலம் கொண்ட இளம் பெண்ணைக் கண்டான், இளைஞன் ஒருவன்.

அவன் அவளை நோக்கி, "எழில் நலம் பலவும் கொண்ட பெண்ணே! உன் காலுக்கு ஏற்ற சிலம்பை அணிந்து அதனுள் திகழும் பரல்கள் பலவும் ஒலி எழுப்புமாறு நடந்து போகிறாய்; போகும்போதே நிறைந்த வளையல்களை அணிந்த கைகளை யும் வீசிக்கொண்டே செல்கிறாய். அத்துடன் என்னுடைய ஆருயிரையும் பறித்துக்கொண்டு, அதை அறியாதவள் போல என்னைக் கடந்து செல்கின்றாயே! நான் கூறுவதையும் கேட்டுச்

செல்" என்கிறான். (அவளிடம் எவ்வித அசைவும் இல்லை. அவனே தொடர்ந்து பேசினான்.)

"என் உடல் இங்கே இருக்கும்போது நீ என் உயிரைக் கவர்ந்து கொண்டதோடு மட்டுமின்றிக் காம நோயினையும் மிகுதியாகத் தந்துவிட்டாய்; உன் இளமை காரணமாக அதை அறியாத வளாக உள்ளாய்; இச்செயல் உன் தவறு என்று நான் எண்ண மாட்டேன்; உன் காம நோயால் வரும் துன்பத்தை உன்னையன்றி வேறு யாராலும் நீக்க முடியாது என்பதை உன் பெற்றோர் அறிந்தவராய் இருந்தும், பேரழகியாகிய உன்னைத் தம் செல்வச் செருக்கினால் அணிகலன்களாலும் அழகுபடுத்தி வீதியிலே உலவவிட்டது அவர்களுடைய தவறல்லவா? தவறன்று என நீ சொல்வாயா?

"உன்னைக் கண்டு நான் நடை தளர்ந்து சோர்வுற்றுக் காணப்படுகிறேன். நீ தரும் காமநோயால் நலிந்து கொண்டே யிருக்கிறேன். இதனை உன் இளமை காரணமாக உணராதவளே! நான் நலிவதற்குக் காரணமான நீ இங்கே உலா வருவது உன் தவறன்று. உன் சுற்றத்தார் செய்த தவறேயாகும். உன் உடலின் எழில் ஊட்டும் உறுப்புகளைத் தாங்கி நிற்கவே உன்னுடைய இடுப்பு வலிமையின்றி மெலிந்துள்ள நிலையினை உன் சுற்றத்தாரும் அறிந்திருப்பர். அப்படி அறிந்திருந்தும் தம் செல்வச் செருக்கை ஊராருக்கு உணர்த்த உனக்குப் பல்வேறு அணிகலன்களை அணிவித்து உலவச் செய்தது அவர்களின் தவறல்லவா? தவறில்லை என்று உன்னால் சொல்ல இயலுமா?

"நீ எனக்களித்த காமநோய் என் துன்பத்தை மிகுதிப்படுத்தி நான் அழிந்தே போகுமாறு என் உயிரையே கவர்ந்து கொன்று விடக்கூடியது. இதை நான் சொல்லியும் அறியாத நிலையில் இளமையாக இருக்கின்றவளே! இத்தகைய காமநோயை நீ எனக்குத் தந்தது உன் தவறில்லை என்று நானும் உணர்கிறேன். உன்னுடைய உருவம் காண்போரின் உயிரை விரைந்து கவர்ந்து கொள்ளும் என்பதை உணர்ந்திருந்தும், உன் சுற்றத்தார் தம் செல்வச் செழிப்பைப் பிறரும் அறியவேண்டும் என்று எண்ணி உன்னை இவ்வாறு உலவிவரச் செய்துள்ளனர். இஃது அவரின் தவறன்று என நீ சொல்லுவாயோ?

"எனக்குத் துன்பம் தந்த காரணத்திற்காகத் தண்டிக்க வேண்டும் என்று நான் எண்ணுவேனேயானால், நான் உன்னைத் தண்டிக்க மாட்டேன்; உன் சுற்றத்தாரைத்தான் தண்டிப்பேன். பொன்னால் செய்யப் பெற்ற குழையை அணிந்தவளே! உன்னைத் தண்டிக்கக் கூடாது என்பதற்காக இந்தக் காமநோயை எந்த அளவுக்குப் பொறுத்துக் கொள்ள இயலுமோ அந்த அளவுக்குப் பொறுத்துக் கொள்ளத் தயங்கமாட்டேன்; ஆனால் என் பொறுமையின் எல்லையைத் தாண்டி விட்டால், எனது கருத்தை மாற்றிக் கொண்டு இவ்வூர் மன்றத்தில் மடலேறி நீ பழியை அடையுமாறு செய்யத் தயக்கம் கொள்ள மாட்டேன்" என்று கூறினான்.

கருத்து

காம உணர்வு இன்னும் எய்தப் பெறாத கன்னி ஒருத்தியைக் கண்ட கட்டிளங் காளை ஒருவன் காதல் மொழிகள் பலவும் பேசினான். அவன் பேசியதன் கருத்தினை அறியாதவளாய் அக்கன்னி சென்று விட்டாள்.

விளக்கம்

இளம் பெண் ஒருத்தியும், இளைஞன் ஒருவனும் ஒருவரை ஒருவர் கண்டனர்.

அவள் செல்வச் செழிப்பிலே வளர்ந்த அழகியாகக் காட்சியளிக்கிறாள். அவளின் உடலுறுப்புகளின் எழில் நலங்களைக் கண்டு அவன் அவளைக் காதலிக்கிறான். அவளோ காதல் என்றால் என்னவென்று அறியாத இளம் பெண். என்றாலும், எழில்நலம் பலவும் கொண்ட ஏந்திழையாகக் காணப்படுகிறாள். அவள் காம நோயால் தன்னை வருத்துவதை அவன் அவளிடம் கூறுகிறான்.

அவன் கூறியதை அவள் கேட்டுக் கொண்டே இருந்தாள் எனினும், எந்தவித மாற்றத்தையும் கூறாமல் அந்த இடத்தை விட்டு அகன்றாள். இதனை அகநூலார் 'சொல்லெதிர் பெறாஅன் சொல்லியின் புற்றது' என்பர். அவளும், அவள் சுற்றத்தாரும் தனக்குத் தீங்கு செய்ததாகவும், அவளுக்காகத் தன் உயிரையே கொடுக்கும் நன்மையைத் தான் செய்வதாகவும் அவன் கூறி இன்புற்றான்.

சொற்பொருள்

1. வார் - நுண்மை; வணர் - வளைவு; வணங்கு - வளையும் தன்மை கொண்ட; இறை - முன் கை.
2. பிணைமான் - பெண் மான்.
3. கார் - மழை; எதிர் - ஏற்றுக்கொண்ட.
5. நேர் - காலுக்கு ஏற்ற; அரி - பரல்; நிரைதொடி - வரிசையான வளையல்.
6. வெளவுதல் - பறித்துக் கொள்ளுதல்; இறப்பாய் - செல்கின்றாய்.
7. உயவு நோய் - காமநோய்; கைம்மிக - மிகுதியாக.
9. களைஞர் - நீக்குபவர்; கவின் - அழகு; அணிந்து - அணிகலன்களை அணிவித்து.
10. போத்தந்த - வெளியே விட்ட; நுமர் - உறவினர், பெற்றோர்.
11. அயர்வு உறுதல் - தளர்ச்சி அடைதல்; நலியும் - வருத்தும்.
12. மடமையால் - உன் இளமையால்.
13. இடை நில்லாது - இடை தாங்கி நிற்க முடியாது; எய்க்கும் - தளரும், வருந்தும்.
14. உடைமையால் - செல்வ வளத்தால்.
15. அடரும் - நெருக்கும்.
17. ஒல்லை - விரைவு.
20. ஒறுத்தல் - தண்டித்தல்.
21. வரைத்து - அளவினை உடையது; பொலங்குழாய் - பொன்னால் செய்யப் பெற்ற குழையை அணிந்தவளே!
22. மறுத்து - என் கருத்தை மாற்றிக் கொண்டு; மடல் ஏறி - பனங்கருக்கால் ஆன குதிரை மேல் ஏறி.
23. நிறுக்குவென் - நிலை நிறுத்துவேன்.

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல் வரி 23 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

காமம் சாலா இளமையோள் வயின் ஏமஞ்சாலா இடும்பையோன் கூறியது.

கூற்று விளக்கம்

காமக் குறிப்புத் தகுதியில்லாத ஒருத்தியைத் தன் மனைக்கிழத்தியாகக் கொள்ள வேண்டும் எனக் கருதிப் பெருந்துயர் கொண்ட ஒருவன் தனக்குள் பேசியது.

சேரல் மடஅன்னம் சேரல் நடைஒவ்வாய்!
சேரல் மடஅன்னம் சேரல் நடைஒவ்வாய்!
ஊர்திரைநீர் வேலி உழக்கித் திரிவாள்பின்!
சேரல் மடஅன்னம் சேரல்நடை ஒவ்வாய்!

தெளிவுரை

இளம் அன்னமே! அவளோடு நடக்காதே! கடல் சூழ்ந்த உலகில் உள்ளாரைத் தன் அழகால் கலக்கித் திரிகிறாளே, அவளோடு நடக்காதே! அவளுக்கு ஒப்பாக உன்னால் நடக்க முடியாது; ஆகவே அவளோடு நடக்காதே.

கருத்து

பெண்களுடைய நடை அன்னத்தின் நடையை ஒக்கும் என்று சொல்வர்; ஆயினும் நீ அவளுடைய நடைக்கு இணையாக மாட்டாய்.

சொற்பொருள்

1. சேரல் - சேராதே; மடஅன்னம் - இள அன்னம்.
3. ஊர்திரை - நீர் வேலி - கடல்; உழக்கி - கலக்கி.

தலைவி கூற்று

கலித்தொகை 122 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

இஃது 'காமஞ்சாலா இளமையோள்வயின்' பின் களவொழுக்கம் ஒழுகிய தலைமகன் இடையிட்டுப் பிரிந்து, தொன்முறை மனைவியரொடு புணர்ச்சி யெய்தி இருந்தானாக (தொல்.பொருள். 151), அதனையறிந்து ஆற்றாளாய தலைமகள் ஆற்றாமையைக் கண்டு வினாய தோழிக்கு, அத்தலைமகள் அவனொழுகின்றவாறுந் தன்னெஞ்சு அவன் வயத்ததாயவாறுங் கூறியது. 'மறையின் வந்த மனையோள் செய்வினை, பொறையின்று பெருகிய பருவரற்கண்ணும்' (தொல்.பொருள். 151) என்பதனானும், 'பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவை' (தொல்.பொருள். 173) என்பதனானும் உணர்க.

கூற்று விளக்கம்

காமம் நிறையாத இளையாளிடத்தே களவு ஒழுக்கம் ஒழுகிய தலைவன் இடையிலே பிரிந்து சென்று தொன்முறை மனைவியரோடு புணர்ச்சி எய்தி இருந்தனன். இதனை அறிந்து ஆற்றாது நின்ற தலைவியைத் தோழி நிகழ்ந்தது வினவ, தலைவி அவன் ஒழுகுகின்ற முறையையும் தன் நெஞ்சு தலைவன் மாட்டு ஆகிய தன்மையையும் கூறியது.

காமம் நிறையாத இளமையோளிடம் தலைவன் இன்பம் அனுபவித்த செய்தியும், அது களவொழுக்கமாக அமைந்தது என்ற செய்தியும், பின் அவளை நீங்கித் தன் மனைவியரோடு வாழத் தொடங்கிவிட்டான் என்ற செய்தியும், அதனையறிந்து இளமைகொண்ட தலைவி ஆற்றாளாகி வருந்தினள் என்ற செய்தியும், அவள் வருந்துவதை அறிந்த தோழி அவளை வினவிய செய்தியும், அந்தத் தோழிக்குத் தன் நிலையைக் கூறித் தன்னிடம் இன்பம் கொண்டவனைத் தனக்கு மணம் செய்து வைக்கும் பணியில் ஈடுபடுமாறு வேண்டிய செய்தியும் இப்பாடலில் அமைந்துள்ளன.

தரவு

'கோதை ஆயமும் அன்னையும் அறிவுறப்,
போதுஎழில் உண்கண் புகழ்நலன் இழப்பக்
காதல்செய்து அருளாது துறந்தார்மாட்டு, ஏதுஇன்றிச்
சிறிய துனித்தனை; துன்னாசெய்து, அமர்ந்தனை;

பலவுநூறு அடுக்கினை; இனைபுஏங்கி அழுதனை;
அலவலை உடையை என்றி தோழி!

கேளினி:

தாழிசை

மாண்எழில் மாதர் மகளிரோடு அமைந்தவன்
காணும்பண் பிலன்ஆதல் அறிவேன்மன்; அறியினும்,
பேணி அவன்சிறிது அளித்தக் கால்,என்
நாண்இல் நெஞ்சம் நெகிழ்தலும் காண்பல்.

இருள்உறழ் இருங்கூந்தல் மகளிரோடு அமைந்தவன்
தெருளும்பண் பிலனாதல் அறிவேன்மன்; அறியினும்
அருளி அவன்சிறிது அளித்தக் கால்,என்
மருளி நெஞ்சம் மகிழ்தரும் காண்பல்.

ஒள்இழை மாதர் மகளிரோடு அமைந்தவன்
உள்ளும்பண் பிலனாதல் அறிவேன்மன்; அறியினும்,
புல்லி அவன்சிறிது அளித்தக் கால்என்
அல்லல் நெஞ்சம் அடங்கலும் காண்பல்.

அதனால்,

சுரிதகம்

யாம நடுநாள் துயில்கொண்டு ஒளித்த
காம நோயில் கழீஇய நெஞ்சம்
தான்அவர் பாற்பட்ட தாயின்,
நாம்உயிர் வாழ்தலோ நகைநனி உடைத்தே.

தெளிவுரை

"தலைவன் முன்பு உன்னை விரும்பியிருந்தான். இப்போது தோழியரும், தாயும் அறியும்படியாக உன் கண்கள் அழகு இழப்ப, உனக்கு அன்பு செய்யாதும் அருளாதும் பிரிந்து விட்டான். அதனால் அவனிடம் சிறிதே ஊடல் கொண்டு வெறுத்துள்ளாய். அவன் நமக்குப் பொருந்தாத குறைகளைச் செய்ததனால் அவன் குறைகளைப் பல நூறாக அடுக்கிக் கூறுகிறாய்; வருந்தி ஏங்கி அழுகிறாய்; அதனால் மனம் சுழன்று நிற்கிறாய்!" என்று தோழி கூற, அது கேட்ட தலைவி கூறுகிறாள்:

"தோழி! இனி நான் சொல்வதைக் கேள்; என்னைக் காதலித்த என் தலைவன், என் வருத்தத்தை நினையாதவனாய்த் தன் தொன்முறை மனைவியருடன் வாழ்ந்து, அவர்களின் காதலையும், அழகையுமே பெரியதாய் எண்ணி, என்னை நோக்காதவனாகி விட்டான்; இதனை நான் நன்கு அறிந்து உணர்ந்திருப்பினும், என் நெஞ்சம் அவனையே நாடுகின்றது; சிறிது நேரம் என்னிடம் வந்து அவன் எனக்கு அருள் தந்தாலும் கூட, என் நாணமற்ற உள்ளம் என்னை நீங்கி அவனிடத்திலே நெருங்கி நெகிழ்கின்றதே! நான் என் செய்வேன்!

"இருளனைய கரிய கூந்தலை உடைய மகளிரான அவனுடைய மனைவியருடன் வாழ்ந்து கொண்டு, என் மனநிலையை அறிய முயலாத பண்பற்றவனாகி விட்டான் என் தலைவன் என்பதையும் நான் அறிந்தவள்தான்; அறிந்தும் என்ன பயன்? அவன் சிறிது நேரம் என்னைத் தழுவி அன்பு காட்டினால்கூட, என் அறிவின்றி மயங்கும் நெஞ்சம் மகிழ்வைக் கொள்கின்றதே! நான் என் செய்வேன்!

"ஒளி மிகுந்த அணிகலன்களை அணிந்துள்ள மகளிரான அவனுடைய மனைவியருடன் வாழ்ந்து கொண்டு என்னை எண்ணும் பண்பற்றவனாக என் தலைவன் ஆகிவிட்டான் என்றாலும், அவன் என்னைச் சிறிது தழுவி, அன்பு காட்டி விட்டால், என் வருந்தும் நெஞ்சம் தன் வருத்தத்திலிருந்து நீங்கிவிடுகின்றதே! நான் என்ன செய்ய இயலும்?

"இத்தகைய காரணங்களால், நள்ளிரவில் நான் தூங்கும் போது, என் நெஞ்சம், காமநோய் வயப்பட்டு, என் உயிரையே எடுத்துக் கொண்டு அவன்பால் சென்றுவிடுகிறது; இனியும் நான் உயிர் வாழ்வது நகைப்பிற்கிடனாகும்" என்று கூறினாள்.

கருத்து

தலைவி கூறியதன் பொருள், தோழி, தலைவனிடம் சென்று, தலைவியின் நிலையைக் கூறி, அவன் அவளை வரைந்துகொண்டு வாழவழி வகுத்தல் வேண்டும் என்பதே.

குறிப்பு

மனைவியர் சிலருடன் வாழும் ஒருவன், காமம் பற்றியறியாத சிறுமியையும் காதலித்து உறவு கொண்டான் என்ற செய்தி, அக இலக்கியத்தில் பாடலாகியிருப்பது பொருத்தமற்றதாய் உள்ளது. எனினும், பாடல் இடம் பெற்றுவிட்டது.

சொற்பொருள்

1. கோதை ஆயம் - மாலைபோல வரிசையாக நின்று விளையாடும் தோழியர் கூட்டம்.
2. போது - மலர்; நலன் - அழகு.
3. ஏதின்றி - வெளிப்படையான காரணமின்றி.
4. துனித்தனை - வெறுத்தாய்; துன்னா - பொருந்தாதன; அமர்ந் தனை - அதிலேயே ஆழ்ந்து விட்டாய்.
5. இனைபு - வருந்தி.
6. அலவல் - அல்லற்படுதல், அலமருதல்.
8. மாதர் மகளிர் - தொன்முறை மனைவியர்.
10. அளித்தல் - அருளல்.
11. உறழ் - ஒத்த; மகளிர் - மனைவியர்.
13. தெருளும் - தெளியும்.
15. மருளி - மருட்சி மிக்க.
17. உள்ளும் - நினைக்கும்.
18. புல்லி - புணர்ந்து, தழுவி.
19. அல்லல் - வருத்தம்.
21. நடுநாள் - நடு யாமம்.
22. கழீஇய - மிகுதியான.
23. அவர்பாற்பட்டது - அவனிடம் சென்றடைந்து விட்டது.
24. நகை நனி உடைத்து - மிகுதியும் நகைப்பிற்கிடமாகும்.

தலைவன் கூற்று

கலித்தொகை 117 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

ஆற்றிடைத் தலைமகன் தலைமகளைக் கையது வினாய்ச் சேர்ந்தது.

(கையது வினாய் - கையில் இருப்பது என்ன என்று கேட்டு)

கூற்று விளக்கம்

வழியிடையே தலைவியைக் கண்ட தலைவன், அவள் கையில் இருப்பது என்ன என்று கேட்டவாறு, தலைவியைச் சேர்ந்தது.

'கையில் உள்ளது யாது?' எனத் தலைவியைத் தலைவன் வினாவுதல்

மாண உருக்கிய நன்பொன் மணிஉறீஇ,
பேணித் துடைத்தன்ன மேனியாய்! கோங்கின்
முதிரா இளமுகை ஒப்ப, எதிரிய
தொய்யில் பொறித்த வனமுலையாய்! மற்று,நின்
கையது எவன்,மற்று உரை.

தலைவியின் விடையும், தலைவனின் வினாவும்

'கையதை, சேரிக் கிழவன் மகளேன்யான்; மற்றுஇஃதோர்
மாதர் புலைத்தி விலையாகச் செய்ததுஓர்
போழின் புனைந்த வரிப்புட்டில்–புட்டிலுள் என்உள?
காண்தக்காய்! எற்காட்டிக் காண்.

தலைவி

காண்,இனி: தோட்டார் கதுப்பின்என் தோழிஅவரொடு
காட்டுச்சார்க் கொய்த சிறுமுல்லை, மற்றுஇவை.

தலைவன்

முல்லை இவைஆயின்! முற்றிய கூழையாய்
எல்லிற்றுப் போழ்தாயின் – ஈதோளிக் கண்டேனால்;
'செல்'என்று நின்னை விடுவேன்யான் மற்றுஎனக்கு
மெல்லியது, ஓராது அறிவு.

தெளிவுரை

தலைவன் : *பத்தரை மாற்றுத் தங்கத்தை உருக்கி அதில் நீலமணியைப் பதித்துக் கலந்த அவ்விரண்டின் நிறமும் ஒளி வீசுமாறு பளபளக்கும் உடலினைக் கொண்டவளே! கோங்கின் முதிராத இளமொட்டுகளை ஒத்த தொய்யில் எழுதிய அழகிய மார்பைக் கொண்டாய். உன் கையில் உள்ளது எது? அதைக் கூறு.*

தலைவி : *என் கையில் உள்ளது பனை ஓலையால் முடைந்த புட்டில் (சிறுகூடை). நான், இந்தச் சேரிக்குத் தலைவன் மகள்; ஆதலின், ஒரு புலைச்சி எனக்கு இதனை அன்போடு கொடுத்தாள்.*

தலைவன் : *அழகு கொண்டவளே! அப்புட்டிலில் என்ன இருக்கின்றது? நான் காணுமாறு காட்டு.*

தலைவி : *இதோ, நீயே பார்த்துக் கொள். மலர் சூடிய என் தோழி, பிற தோழியரோடு காட்டில் சென்று கொய்துவந்து கொடுத்த சிறு முல்லை மலர்கள்.*

தலைவன் : *வாரி முடித்துப் பின்னும் அளவுக்கு வளர்ந்த கூந்தலைக் கொண்டவளே! இவை முல்லை மலர்கள். கதிரவன் மறையும் அந்தி நேரம் வந்துவிட்டது. இந்த முல்லை மலர்களை உன் கூந்தலில் சூட்டி விட விருப்பமாயுள்ளது. இங்குத் தனியே உன்னைக் கண்ட நான், உன்னைப் போக விடுவதுதான் முறை. ஆனால் என் அறிவு மெலிவு கொண்டதாய் இருக்கிறது; ஆதலால் உன்னைப்போகவிட என் அறிவு (நெஞ்சம்) எண்ணவில்லை.*

(இத்தகைய உரையாடலுக்குப் பின் தலைவியும் தலைவனும் விரும்பிக் கூடும் இடம் சென்றனர். தலைவன் தலைவி இருவர்க்கும் புணர்ச்சி உவகை பிறந்ததை இப்பாடல் கூறுகிறது.)

கருத்து

தலைவி தோட்டம் சென்று பூக்கொய்து கொண்டு திரும்பும்போது, தலைவன் அவளை வழிமறித்துக் கூடையில் உள்ள பொருள் என்ன என்று

கேட்கிறான். தலைவன் தலைவி இருவர்க்கும் உரையாடல் நடைபெறு கிறது. இறுதியில் தலைவி, தலைவனோடு கூட இசைகிறாள்.

சொற்பொருள்

1. மாண - மாட்சிமைப்பட; உறீஇ - பதித்து.
2. துடைத்தன்ன - துடைத்துப் பளபளப்பேற்றியது போன்ற; கோங்கு - கோங்க மரம்.
3. எதிரிய - தோன்றிய.
4. தொய்யில் - பெண்கள் உடலில் குங்குமக் குழம்பு கொண்டு ஓவியம் வரைதல்.
5. கையது எவன்? - கையில் இருப்பது என்ன?
6. கிழவன் - தலைவன்.
7. விலையாகச் செய்தது - விற்றது (அன்போடு தந்தது என்றும் கொள்ள லாம்.)
8. போழில் புனைந்த - பனை ஓலையால் செய்யப்பட்ட; புட்டில் - சிறு கூடை.
10. தோட்டார் - மலர் சூடிய; கதுப்பு - கூந்தல்.
12. முற்றிய கூழை - வாரி முடித்துப் பின்னும் அளவுக்கு வளர்ந்த கூந்தல்.
13. எல்லிற்றுப் போழ்து - மாலைப் பொழுதாய் உள்ளது; ஈதோளி - இங்கு (வழக்கு இழந்த சொல்).

பெருந்திணை

ஏறிய மடல்திறம், இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.

[தொல். நூற்பா 997]

இந்நூற்பா பெருந்திணை இலக்கணம் கூறுகிறது. பெருந்திணை நான்கு கூறுகளாகச் சுட்டப்பெற்றுள்ளது.

1. ஏறிய மடல்திறம் – மடலேறுதல்.

தலைவியைப் பெற இடையூறுகளுற்ற நிலையில் தலைவன் மடலேறுவான்.

2. இளமை தீர்திறம் –

இளமை வறிதே தீர்ந்தபின் கூடுவது அனையன இளமை தீர்திறம்.

3. தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் –

பிரிவினை ஆற்றியிருக்க முடியாமல் காமமிகுதியால் கூறுவன.

4. மிக்க காமத்து மிடல் –

காமமிகுதியினால் வலிதிற் கூடுவது.

அளவின் அமைந்தவை ஐந்திணை; அளவை மீறியவை பெருந்திணை.

தலைவி கூற்று

கலித்தொகை 62 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இஃது "ஏறிய மடற்றிறம்" என்னுஞ் சூத்திரத்து, "மிக்க காமத்து மிடல்" என்றதனால் தலைமகனுந் தலைமகளும் உறழ்ந்து கூறித் தலைமகள் கூடக் கருதிய பெருந்திணை.

கூற்று விளக்கம்

கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்று ஏழு வகையான ஒழுக்க நெறிகளை அகத்திணையாகக் கூறுவர். அவற்றுள் கைக்கிளையாவது ஒருதலைக் காதல்; குறிஞ்சி முதலிய ஐந்திணைகளும் உருவும், திருவும், குலனும், கல்வியும் ஆகியவற்றுள் ஒத்துவிளங்கும் ஆணும், பெண்ணும் தம்முள் காதல் கொண்டு வாழும் வாழ்வைக் கூறுவன. பெருந்திணையாவது பொருந்தாக் காமம் என்பர்; உருவு முதலியவற்றால் பொருத்தமற்றவர் கூடும் வாழ்வைக் குறிக்கும்.

இப்பாடலில் புலவர் கபிலர் பொருந்தாக் காமம் கொண்ட தலைவியையும், தலைவனையும் உரையாட வைத்து இறுதியில் இருவரும் கணவன் மனைவியராக வாழ்ந்தனர் என்று கூறுகிறார். இந்தப் பாடலுக்கு, 'தலைவனும் தலைவியும் உறழ்ந்து கூறித் தலைவி கூடக் கருதிய பெருந்திணை' என்று நச்சினார்க்கினியர் துறை வகுத்துள்ளார்.

'ஏறிய மடல் திறம்' எனத் தொடங்கும் நூற்பா, பெருந்திணையின் விளக்கம் கூறுவது. பெருந்திணை என்னும் 'பொருந்தாக் காமம்' என்பது பொது இலக்கணம். அத்திணையின் கூறுகள் நான்கு என்பது இங்குச் சுட்டிய நூற்பாவின் செய்தி. அவற்றுள் நான்காவது 'மிக்க காமத்து மிடல்'; அதற்கு நச்சினார்க்கினியர் தந்த பொருள்: 'காம மிகுதியானே எதிர்பட்டுழி வலிதிற் புணர்ந்த இன்பம்.'

இப்பாடல் 'தலைவன்', 'தலைவி' இருவரும் தம்முள் முரண்பட்ட நிலையில் பேசும் உரையாடல் அமைப்பில் அமைகிறது.

தலைவி

ஏஎ! இஃதுஒத்தன், நாண்இலன்– தன்னொடு
மேவேம்என் பாரையும் மேவினன் கைப்பற்றும்.

தலைவன் பதிலும், தலைவி வேட்கை மறுத்து உரைத்தலும்

மேவினும், மேவாக் கடையும், அஃதெல்லாம்
நீஅறிதி; யான்அஃது அறிகல்லேன்; பூஅமன்ற
மெல்லிணர் செல்லாக் கொடியன்னாய்! நின்னையான்
புல்இனிது ஆகலின், புல்லினென், எல்லா—

தலைவி

தமக்குஇனிது என்று, வலிதின் பிறர்க்குஇன்னா
செய்வது நன்றாமோ மற்று?

மகளிரை வலிதிற் புணர்தலும் அறநூல்
வழக்கு எனத் தலைவன் மொழிதல்

கடர்த்தொடீ! போற்றாய், களை,நின் முதுக்குறைமை போற்றிக்கேள்!
வேட்டார்க்கு இனிதாயின் அல்லது, நீர்க்கு இனிதென்று
உண்பவோ, நீர்உண் பவர்?

தலைவி

செய்வது அறிகல்லேன்; யாதுசெய் வேன்கொலோ—
ஐவாய் அரவின் இடைப்பட்டு, நைவாரா?

தலைவன்

மையில் மதியின் விளங்கு முகத்தாரை
வெளவிக் கொளலும் அறன்எனக் கண்டன்று.

புணர்ச்சிக்கு உடம்பட்டு, தலைவி நெஞ்சொடு கூறுதல்

அறனும் அதுகண்டற்று ஆயின், திறன்இன்றிக்
கூறும்சொல் கேளான், நலிதரும்; பண்டுநாம்
வேறல்லம் என்பதுஒன்று உண்டால்; அவனொடு
மாறுண்டோ, நெஞ்சே! நமக்கு?

தெளிவுரை

தலைவி : *(தனக்குள் தான் சொல்லிக் கொள்பவளாய்த் தலைவன் கேட்கும்படி சொல்லுகிறாள்) ஏஏ! இதோ ஒருத்தன்; இவன் வெட்கமில்லாதவன். விரும்பாதவர்களை வலிந்து கைப்பற்றிக் கொள்வான். (அதனால், பழிக்கு அஞ்சாதவன்.)*

தலைவன் : *விரும்புதல், விரும்பாமை அதுவெல்லாம் உன் பாடு. எனக்குத் தெரியாது. பூங்கொத்துகள் நிறைந்த கொடி போன்றவளே! உன்னை அணைப்பது எனக்கு இனிதாக இருப்பதால் உன்னை அணைத்தேன்.*

தலைவி : *(அதுகேட்ட, அவள் அவனை நோக்கி,) "ஏடா, தமக்கு இன்பம் தருவதாய் இருக்கின்றது என்பதால், பிறருக்கு இன்பம் தராத செயலை வலிந்து செய்வது அறமாகுமா?" என்று கேட்டாள்.*

தலைவன் : *(அவனோ, அவளை நோக்கி,) "ஒளி உமிழும் வளையல்களை அணிந்தவளே! உன் அறிவுடைமையைப் பெரி தென்று போற்றாமல் நான் கூறுவதைக் கேள்; தாகம் கொண்ட வர்கள் தண்ணீரைக் கண்டதும் அருந்துகின்றனர். அவ்வாறு அருந்துவது அவர்களுக்கு இனிதாக உள்ளது. தாகம் எடுத்தவர் களுக்கு நீர் இனியது என்பதற்காக நீர் பருகுவார்களே தவிர, நீருக்கு இனியது என்பதற்காக யாராவது நீர் பருகுவார்களா?*

தலைவி : *நான் ஐந்து தலைப் பாம்பின் வாயில் அகப்பட்டவள் போல ஆகிவிட்டேன். என்ன செய்வது என்று எனக்குத் தெரிய வில்லை.*

தலைவன் : *மறுவுற்ற மதி போன்ற முகத்தாளை வலிந்து மணந்து கொள்ளலாம் என்று அறநூல்கள் கூறுகின்றன.*

தலைவி : *ஏ! நெஞ்சமே! அறநூலும் இவனது செயலை ஏற்றுக் கொண்டுள்ளது என்கிறான். நான் தடுத்துக் கூறினாலும் கேளாத நிலையில் நலிந்து போகின்றான். ஒருவேளை முற்பிறவியில் நானும் அவனும் வேறாக இன்றி ஒன்று சேர்ந்து இருந்திருப்போமோ? அந்த உணர்வால்தான் அவன் நம்மிடம் இப்படி நடக்க நேரிட்டு விட்டதோ? இனி அவன் விருப்பத்திற்கு மாறாக நடக்க முடியுமா? என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு தலைவனிடம் தன்னை ஒப்படைக்க உடன்பட்டாள்.*

குறிப்பு

தலைவன் தலைவியைத் தழுவுதல் இனிது எனக் கூற அதற்குத் தலைவி, 'உனக்கு இனிதாக இருக்கலாம்; பிறர்க்கு இன்னா செய்வது' என்று கூறுதலின், இரு மனமும் ஒரு மனப்படா நிலையில் இது பெருந்திணை ஆயிற்று.

தாகம் கொண்டவன் தண்ணீரைப் பருகுவதுபோலக் காமம் கொண்டவன் கன்னியை நுகரலாம் என்பது அந்நாளைய ஆணாதிக்கச் சிந்தனை ஆகும்.

சொற்பொருள்

1. ஒத்தன் - ஒருவன்
2. மேவேம் - பொருந்த மாட்டோம்.
4. அமன்ற - நெருங்கிய.
5. இணர் - பூங்கொத்து.
6. புல் - தழுவு, அணைத்துக் கொள்.
7. வலிதின் - வலிந்து.
9. முதுக்குறை - பேரறிவு.
10. வேட்டார் - விரும்பியவர்.
13. ஐவாய் அரவு - ஐந்து தலைப் பாம்பு; நைவாரா ?- வருந்துவாரா.?
14. மையில் - குற்றமற்ற.
15. வௌவிக் கொளல் - கைப்பற்றிக் கொள்ளுதல்.
17. நலிதரும் - வருந்தும்.
18. வேறல்லம் - வேறாய் இருந்தவர் அல்லர், ஒன்றாயிருந்திருக்கிறோம்.

சான்றோர் கூற்று

கலித்தொகை 99 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

அரசன் தலைமகனாயவன், தலைமகளை நீங்கி இருந்ததற்குத் தலைமகள் புலவி நீட்டித்து ஆற்றாளாயவழி, அவட்கு நிகழ்ந்த காமத்து மிகு திறத்தை அவ்வரசனை நோக்கிச் சான்றோர் கூறியது. இது பெருந்திணை.

கூற்று விளக்கம்

அரசன் தலைவன்; தலைவியை நீங்கி இருந்தனன்; தலைவி கொண்ட ஊடல் அவனால் தணிக்கப் பெறாமல் நீண்டது; தலைவி காமநோயைப் பொறுத்துக் கொள்ள இயலாதவளானாள். அவளது காமத்தின் மிகுதன்மையைச் சான்றோர் அரசனிடத்தில் கூறியது.

தரவு

நறவினை வரைந்தார்க்கும் வரையார்க்கும், அவைஎடுத்து,
அறவினை இன்புறூஉம் அந்தணர் இருவரும்
திறம்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது,
குழவியைப் பார்த்துஉறூஉம் தாய்போல், உலகத்து
மழைசுரந்து அளித்துஓம்பும் நல்லூழி யாவர்க்கும்
பிழையாது வருதல்நின் செம்மையின் தர,வாய்ந்த
இழைஅணி கொடித்திண்தேர், இனமணி யானையாய்!

தாழிசை

அறன்நிழல் எனக்கொண்டாய், ஆய்குடை; அக்குடைப்
புறநிழற்கீழ்ப் பட்டாளோ, இவள்? இவள் காண்டிகா
பிறைநுதல் பசப்புஊரப் பெருவிதுப்பு உற்றாளை

பொய்யாமை நுவலும்,நின் செங்கோல்;அச் செங்கோலின்
செய்தொழிற்கீழ்ப் பட்டாளோ, இவள்?இவள் காண்டிகா
காமநோய் கடைக்கூட்ட வாழுநாள் முனிந்தாளை!

ஏமம்என்று இரங்கும்,நின் எறிமுரசம்; அம்முரசின்
ஏமத்து இகந்தாளோ, இவள்?இவள் காண்டிகா
வேய்நலம் இழந்ததோள் கவின்வாட உழப்பாளை!

ஆங்கு –

சுரிதகம்

நெடிதுசேண் இகந்தவை காணினும், தானுற்ற
வடுக்காட்டக் கண்காணா தற்றாக, என்தோழி
தொடிகொட்ப நீத்த கொடுமையைக்
கடிதுஎன உணராமை கடிந்ததோ, நினக்கே?

தெளிவுரை

சான்றோளாகிய தோழி அரசனை நோக்கி, "அறநெறியை வகுத்த அந்தணர்களான பிரகஸ்பதி எனப்படும் வியாழனும், சுக்கிராச்சாரியார் எனப்படும் வெள்ளியும், முறையே தேவ குருவாகவும், அசுர குருவாகவும் உள்ளனர். கள் உண்ணக் கூடாது என்றவர் தேவகுரு; உண்ணலாம் என்றவர் அசுர குரு. இரு குருக்களும் அந்தணர்களே! அத்தகைய அந்தணர்கள் இருவரும் வெவ்வேறு வகையாக வகுத்துத் தந்த அறநெறிகளைக்

கடைப்பிடிப்பவனாகத் தப்பாமல் ஆட்சி புரிபவன் நீ. ஒரு குழந்தையின் முகம் பார்த்துப் பசியறிந்து பாலூட்டி மகிழும் தாய்போல, மக்களின் துன்பமறிந்து அதனை நீக்கி மக்களை மகிழ்விப்பவனாக இருக்கிறாய்; தேவையறிந்து பொழிந்து உலகைக் காக்கும் மழைபோல, மக்களின் தேவைக்கேற்ப உதவி செய்பவனாகவும் உள்ளவன் நீ; நடுவுநிலை தவறாது ஆட்சி புரியும் சிறப்பை உணர்த்தும் அணிகள் நிறைந்த கொடியைக் கொண்ட திண்ணிய தேரையும், நல்வின மணிகளைக் கட்டிக் கொண்டிருக்கும் யானையையும் உடையவனே!

“அறத்தைக் காப்பாற்றும் தன்மை கொண்ட உன் வெண் கொற்றக்குடை, மறத்தை நீக்கி அறத்தை அளிக்கவல்லது. பிறை நுதல் கொண்ட உன் மனைவியைப் பார்! இவள் நடுக்குறு கின்றாளே, அது ஏன்? உன் வெண்கொற்றக்குடை நிழலில் இருந்து இவள் நீக்கப்பட்டாளோ?

“உன் செங்கோல் பொய்யாத நடுநிலை கொண்டது என்பர். உன் செங்கோலாட்சிக்கு உட்படாத தன்மையளோ உன் மனைவி? நீ அவளைக் காணாத நிலையால், அவள் காமநோய் கொண்டு வருந்தி வாழ்க்கையையே வெறுத்தவளாய் உள்ளாள். இக்கொடுமையை நீ ஏன் பாராமல் உள்ளாய்!

“உன்னுடைய முரசொலி முழக்கம் இவ்வுலகத்தைக் காக்கும் என்பர்; அந்தக் காவல் எல்லைக்குள் உன் மனைவியாகிய இவள் வரவில்லையா? இவளுடைய தோள்களைப் பார்; மூங்கிலை யொத்து அழகுடன் மிளிர்ந்தவை நலமிழந்து வருந்துகின்றனவே! இவளிடம் கருணை காட்டக் கூடாதா?

“நீண்ட தொலைவில் உள்ள பொருள்களைக் கண் காண்பதா யினும், அது தனக்குள் உள்ள குற்றத்தைக் காண இயலாது. அதுபோல என் தலைவியின் தொடிகள் கழன்று விழும்படியாக நீ கைவிட்ட கொடுமையைக் கொடிதென்று உணராது இருக் கின்றாயே. இந்தக் கொடுமையைக் கொடுமை என்று உணரக் கூடாது என உன் சான்றோரால் உரைக்கப்பட்ட அற நூல் கூறி யுள்ளதோ?” என்று தலைவனாகிய அரசனிடம் தோழியாகிய சான்றோள் வினவினாள்.

கருத்து

ஓர் அரசன் தன் மனைவியாக உள்ள அரசியின் இல்லத்துக்கு வாராமல், தன் அரசுப் பணிகளிலேயே ஈடுபட்டிருந்தான். அரசன் தன்னிடம் அன்பற்றவன் ஆனான் என்று எண்ணிய அரசி காமநோய் உற்று வாடி இளைத்தாள். இதை அறிந்த அவளுடைய உயிர்த்தோழியாகிய சான்றாண்மை மிகுந்த சான்றோள், அரசனை அணுகி, அரசியின் நிலையை எடுத்துரைத்து அரசனுக்குரிய இல்லறக் கடமையையும் சுட்டிக் காட்டி, 'அரசியின் நோய் நீக்க முற்படுவாய்' என அறிவுரை கூறினாள்.

குறிப்பு

சங்க இலக்கியத்துள் கூறப்பெறும் அகத்திணைச் செய்திகளில் தலைவன் தலைவியராகக் கூறப் பெறுவோர் பெரும்பாலும் குடிமக்களாகவே இருப்பர்; சிலர் சமுதாயத் தலைமை கொண்டவர்களாகவும் இருப்பர்; அரசனையே தலைவனாகவும், அரசியையே தலைவியாகவும் கொண்ட பாடல்கள் அருகியே உள்ளன.

இப்பாடலுக்குத் திணை, துறை, கிளவிகளை வகுத்துக் கூறியிருப்போர் இதன் கருத்துப் பெருந்திணையாக உள்ளது என்றும், எனினும், காமத்து மிகு திறத்தான் அரசனை நோக்கிச் சான்றோள் கூறுவது போல உள்ளதால், இப்பாடல் மருதத்திணையாயிற்று என்றும் கூறியுள்ளனர்.

இப்பாடல் யாரால் யாருக்கு உரைக்கப் பெற்றது என்பதில் ஐயம் எழுகின்றது. அரசியின் காம மிகுதியை அரசனிடம் ஒரு சான்றோன் சென்று கூறினான் எனக் கொள்வதைவிட, ஒரு சான்றோள் கூறினாள் என்று கொள்வது சிறப்பு. சான்றோர் என்ற சொல் இருபாலாரையும் குறிக்கும் என்பதில் ஐயம் கொள்ளத் தேவையில்லை. ஒரு பெண் சான்றோளாகத் திகழ்வது இயல்பே. இப்பாடல் சான்றோளாகிய தோழியின் கூற்று என்று கொள்வதே சாலப் பொருத்தமாக உள்ளது. இக்கருத்துக்குத் துணையாக இருப்பது பாடலில் உள்ள 'என் தோழி' என்ற சொல்லாகும். இப்பாடலைப் போன்றதாகவே அடுத்த பாடலும் உள்ளது; இவை மருதக் கலியின் இறுதிப் பாடல்களாகவும் இருக்கின்றன. எனவே, இவ்விரு பாடல்களின் கருத்துகளையும் நோக்கி ஆராயின், இந்த இரு பாடல்களும், சான்றோளாகிய தோழியின் கூற்றென்றே கொள்ளலாம். இத்தோழி அரசியின் உயிர்த்தோழியாக இருப்பவள் எனலாம்.

வடமொழியில் வியாழ பகவானாகிய பிரகஸ்பதி இயற்றிய அரசியல் நூல் பெயர் அறியப்படவில்லை. வெள்ளியாகிய சுக்கிராச்சாரியார் இயற்றிய நூல் ‘சுக்கிர நீதி’ எனப்படும்.

சொற்பொருள்

1. நறவு - கள்; வரைந்தார் - நீக்கியோர்.
2. அந்தணர் - பிரகஸ்பதி (வியாழன்), சுக்கிராச்சாரியார் (வெள்ளி).
3. திறம் வேறு செய்தி - வேறு வேறு வழிகள் கூறப்பட்ட; நூல் - அரசியல் கூறும் நூல்.
4. குழவி - குழந்தை.
5. ஓம்பும் - பாதுகாக்கும்; நல்லூழி - நல்ல முறை.
6. செம்மை - நடுவு நிலைமை.
7. இழைஅணி - அணிகலன் நிறைந்த.
8. அறன்நிழல் - அறத்தைச் செய்யும் நிழல்; குடை - வெண்கொற்றக் குடை; ஆய்குடை - அழகிய குடை.
9. புறநிழல் - நிழலுக்கு வெளியே; காண்டிகா - காண்பாயாக.
10. விதுப்பு - நடுக்கம்.
11. நுவலும் - சொல்லும்.
13. கடைக் கூட்ட - இறுதி நாளைக் கொண்டுவந்து தர; முனைதல் - முற்படுதல்.
14. ஏமம் - பாதுகாப்பு; எறி - முழங்குகின்ற, அடிக்கப்படுகின்ற.
15. இகந்தாளோ - கடந்து அப்பாற்பட்டாளோ, நீங்கினாளோ.
16. வேய் நலம் - மூங்கில் போன்ற அழகு; கவின் - அழகு.
18. சேண் - தொலைவு; இகந்தவை - எல்லை கடப்பினும்.
19. வடு - குற்றம்; அற்றாகா - அவ்வாறாக.
20. தொடி கொட்ப - வளையல் வீழ.
21. கடிந்ததோ? - (அறநூல்கள்) நீக்கினவோ?

சான்றோர் கூற்று

கலித்தொகை 100 — **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

அரசன் தலைமகனாயவன் தலைவியை நீங்கி இருந்ததற்குத் தலைமகள், புலவி நீட்டித்து ஆற்றாயவழி அவட்கு நிகழ்ந்த காமத்து மிகுதிறத்தை அவ்வரசனை நோக்கிச் சான்றோர் கூறியது. இது பெருந்திணை.

கூற்று விளக்கம்

அரசன் தலைவன்; தலைவியை நீங்கி இருந்தனன்; தலைவி கொண்ட ஊடல் அவனால் தணிக்கப் பெறாமல் நீண்டது; தலைவி பிரிவைப் பொறுக்க இயலாதவளானாள். அவளுடைய காமத்தின் மிகுதன்மையைச் சான்றோள் அரசனை நோக்கிக் கூறியது.

தரவு

ஈண்டு,நீர் மிசைத்தோன்றி இருள்சீக்கும் சுடரேபோல்,
வேண்டாதார் நெஞ்சுஉட்க, வெருவந்த கொடுமையும்,
நீண்டுதோன்று உயர்குடை நிழல்எனச் சேர்ந்தார்க்குக்
காண்தகு மதிஎன்னக் கதிர்விடு தண்மையும்,
மாண்டநின் ஒழுக்கத்தால், மறுவின்றி, வியன்ஞாலத்து
யாண்டோரும் தொழுதேத்தும் இரங்குஇசை முரசினாய்

தாழிசை

ஐயம்தீர்ந்து யார்கண்ணும் அருந்தவ முதல்வன்போல்
பொய்கூறாய்' எனநின்னைப் புகழ்வது கெடாதோதான்?
நல்கி நீ தெளிந்தசொல் நசைஎனத் தேறியாள்
பல்இதழ் மலர்உண்கண் பனிமல்கக் காணுங்கால்.

'சுரந்தவான் பொழிந்தற்றாச் சூழநின்று யாவர்க்கும்
இரந்தது நசைவாட்டாய்' என்பது கெடாதோதான்?
கலங்குஅஞர் உற்று,நின் கமழ்மார்பு நசைஇயாள்
இலங்குகோல் அவிர்தொடி இறைஊரக் காணுங்கால்.

'உறைவரை நிறுத்தகோல், உயிர்திறம் பெயர்ப்பான்போல்,
முறைசெய்தி' எனநின்னை மொழிவது கெடாதோதான்?

அழிபடர் வருத்த,நின் அளிவேண்டிக் கலங்கியாள்
பழிதபு வாள்முகம் பசப்புஊரக் காணுங்கால்.
ஆங்கு–

சுரிதகம்

தொன்னலம் இழந்தோள்,நீ துணைஎனப் புணர்ந்தவள்;
இன்னுறல் வியன்மார்ப!' இனையையால்; கொடிது!'என,
நின்னையான் கழறுதல் வேண்டுமோ?
என்னோர்கள் இடும்பையும் களைந்தீவாய் நினக்கே.

தெளிவுரை

"கடலில் தோன்றி, உலக இருள் நீக்கும் கதிரவனைப் போன்றவன் நீ; பகைவர் நெஞ்சம் கலங்குமாறு செய்யும் பேராற்றல் கொண்டவன். நீண்டு உயர்ந்து தோன்றும் உன் வெண்கொற்றக் குடையைத் தம் நிழல் என்று கருதி வந்தவர்க்கு மதி போன்று தண் அருள் செய்பவனும் நீ. உன் சிறந்த மாண்பு கொண்ட அரசியல் ஒழுக்கத்தால் பரந்த உலகத்தைக் குற்றமின்றிப் பாதுகாத்து மக்கள் எல்லோரும் போற்றும் வண்ணம், வெற்றி முரசம் உடையவனாகவும் நீ இருக்கின்றாய்.

" 'உன்னைப் பிரிய மாட்டேன்' என்று நீ சொன்ன சொற்கள் உண்மையானவை என்று எண்ணி தன்னை உனக்குத் தந்தாள், என் தோழி. பல இதழ் பெற்ற நீலமலர் போன்ற அவள் மையுண்ட கண்களில் கண்ணீர் நிறைந்து காணப்படுகிறதே. அருந்தவ முதல்வன்போல நீ யாரிடத்தும் பொய் சொல்ல மாட்டாய் என்று உலகத்தார் உன்னைப் புகழ்கின்றனரே. அந்தப் புகழ் இந்தச் செயலால் கெட்டுவிடாதோ?

"மணங்கமழும் மார்பை விரும்பிய உன் மனைவியின் தோள் வளைகள் அவள் மனம் வருந்தக் கழன்று விழுகின்றனவே! தன்னைச் சூழ்ந்து நிற்கும் அனைவருக்கும் கார்மேகம் நீரைப் பொழிவதைப் போல, கேட்டதை விரும்பியவாறு கொடுக்கும் இயல்புடையவன் என்று உன்னைப் புகழ்கின்றனரே! அப்புகழ் உன் செயலால் கெட்டு விடாதோ?

"குற்றமற்ற ஒளி பெற்ற முகத்தைக் கொண்டவள், உன் மனைவி. அவள் உள்ளத்தில் துன்பம் வருத்துகின்ற காரணத்தால்

முகத்தில் பசலை படர்ந்து காணப்படுகிறாள். உயிர்களின் கால எல்லையை அறிந்து அவற்றைப் பாரபட்சமின்றிக் கொண்டு போகும் கூற்றுவனைப் போல, அறமுறையின் வரையறைப்படி செங்கோல் செலுத்தி நீதி வழங்குபவன் என்று உன்னை உலகோர் போற்றிப் புகழ்கின்றனர். அந்தப் புகழ் உன்னைவிட்டு நீங்கிப் போகாதோ?

"அனைவரின் துன்பங்களையும் நீக்கி அவர்களுக்கு அருள் செய்யும் பெருமகனே! நீயே துணை என்று ஒரே துணையைக் கொண்ட உன் மனைவி, உன்னைக் கூடி முயங்கியதால் தன்னுடைய பழைய நலன்களை இழந்து வாடுகின்றாள். இவள் துன்புறுவது கொடிதிலும் கொடிது. இதனை நான் வந்து உன்னிடம் கூறவும், இரந்து கேட்கவும் வேண்டுமா? உலக மெல்லாம் பாதுகாக்கும் நீ, உன்னையே தன் கதி என நம்பிய இவளைப் புறக்கணித்தல் அறமா?" என்று கேட்கின்றாள், சான்றோளாகிய தோழி.

கருத்து

ஓர் அரசன் தன் மனைவியாக உள்ள அரசியின் இல்லத்துக்கு வாராமல், தன் அரசுப் பணிகளிலேயே ஈடுபட்டிருந்தான். அரசன் தன்னிடம் அன்பற்றவன் ஆனான் என்று எண்ணிய அரசி காமநோய் உற்று வாடி இளைத்தாள். இதை அறிந்த அவளுடைய உயிர்த்தோழியாகிய சான்றாண்மை மிகுந்த சான்றோள், அரசனை அணுகி, அரசியின் நிலையை எடுத்துரைத்து அரசனுக்குரிய இல்லறக் கடமையையும் சுட்டிக்காட்டி, 'அரசியின் நோய் நீக்க முற்படுவாய்' என அறிவுரை கூறினாள்.

சொற்பொருள்

1. ஈண்டு நீர் - கடல்; மிசை - மேல்; *சீக்கும்* - போக்கும்.
2. உட்க - அஞ்ச.
3. உயர்குடை - வெண்கொற்றக் குடை.
4. மதி - நிலவு; தண்மை - குளிர்ச்சி.
5. மாண்ட - மாட்சிமைப்பட்ட; வியன்ஞாலம் - அகன்ற உலகம்.
6. யாண்டோரும் - எங்குமுள்ளோரும்; இரங்குதல் - ஒலித்தல்.
9. நல்கி - அருளி; தெளிந்த சொல் - 'உன்னைப் பிரியேன்' என்று தெளிவாகச் சொன்ன சொல்; நசை - விருப்பத்திற்குரியது.

10. பனி மல்க - கண்ணீர் நிறைய.
11. சுரந்தவான் - நீரைச் சுரந்த மேகம்.
12. வாட்டாய் - துன்புறுத்தாய்.
13. அஞர் - துன்பம்; நசைஇயாள் - விரும்பியாள்.
14. இறையூர்தல் - முன் கையிலிருந்து நழுவி விழுதல்.
15. உறைவரை - வாழ் நாள் எல்லை; திறம் பெயர்த்தல் - உடம்பில் இருந்து மாறுதல்.
18. பழிதபு - குற்றமில்லாத.
20. தொன்னலம் - தொன்மை நலம்.
21. இனையை - இவ்வாறு இருப்பது.
22. கழறுதல் - கண்டித்தல்.
23. இடும்பை - துன்பம்.

தலைவன் கூற்று

கலித்தொகை 138 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

மடலூர்ந்து தலைமகளை எய்திய தலைமகன் தான் மடலூர்ந்தவாறும் அவளை எய்தியவாறும் தனக்குப் பாங்காயினார்க்குக் கூறியது. (மடலேறியதைச் சொல்லுவதால் பெருந்திணை எனப்பட்டது.)

கூற்று விளக்கம்

மடலூர்ந்து அதனால் ஊராரின் இரக்கத்தைப் பெற்றுத் தலைவியை அடையப் பெற்ற தலைவன் ஒருவன், அச்செய்தியைத் தன் தோழர்களுக்குக் கூறியது. (மடலேறியதைச் சொல்லுவதால் பெருந்திணை எனப்பட்டது.)

எழில்மருப்பு எழில்வேழம் இகுதரு கடாத்தால்
தொழில்மாறித் தலைவைத்த தோட்டிகை நிமிர்ந்தாங்கு,
அறிவும்,நம் அறிவுஆய்ந்த அடக்கமும், நாணொடு,
வறிதாகப் பிறர்என்னை நகுபவும், நகுபுடன்
மின்அவிர் நுடக்கமும் கனவும்போல், மெய்காட்டி–
என்நெஞ்சம் என்னோடு நில்லாமை நனிவௌவித்,
தன்நலம் கரந்தாளைத் தலைப்படுமாறு எவன்கொலோ?

மணிப்பீலி சூட்டிய நூலொடு, மற்றை
அணிப்பூளை, ஆவிரை, எருக்கொடு, பிணித்துயாத்து,
மல்லல்ஊர் மறுகின்கண் இவள்பாடும், இஃது ஒத்தன்
எல்லீரும் கேட்டீமின் என்று,

படரும், பனைஈன்ற மாவும் – சுடரிழை,
நல்கியாள், நல்கி யவை.

பொறைஎன் வரைத்தன்றிப் பூநுதல் ஈத்த
நிறைஅழி காமநோய் நீந்தி, அறைஉற்ற
உப்பியல் பாவை உறைஉற் றதுபோல,
உக்கு விடும்,என் உயிர்.
பூளை, பொலமலர் ஆவிரை–வேய்வென்ற
தோளாள் எமக்குஈத்த பூ.
உரிதுஎன் வரைத்தன்றி ஒள்ளிழை தந்த
பரிசுஅழி பைதல்நோய் மூழ்கி, எரிபரந்த
நெய்யுள் மெழுகின் நிலையாது, பைபயத்
தேயும் – அளித்துஎன் உயிர்.
இளையாரும், ஏதி லவரும் உளைய,யான்.
உற்றது உசாவும் துணை;

என்றுயான் பாடக் கேட்டு,
அன்புறு கிளவியாள் அருளிவந்து அளித்தலின்,
துன்பத்தில் துணையாய மடல்இனி இவள்பெற,
இன்பத்துள் இடம்படல்என்று இரங்கினள் அன்புற்று,
அடங்கரும் தோற்றத்து அருந்தவம் முயன்றோர்தம்
உடம்புஒழித்து உயர்உலகு இனிதுபெற் றாங்கே.

தெளிவுரை

தலைவன் தான் மடலூர்ந்து தன் தலைவியை அடைந்த செயல்கள் பற்றித் தன் தோழர்களுக்குக் கூறுகிறான்.)

"மின்னல் கொடியோ? கனவோ? எனக் கருதும் நிலையில் அவள் புன்னகையுடன் என் முன் வந்து என்னோடு இணைந்து பின்னர் மறைந்தாள்.

அவளை எப்படி நான் அடைந்தேன் என்பதைத் தோழர்களே நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்.

அழகிய தந்தங்களை உடைய யானை, மதம் கொண்டமையால் பாகனின் ஏவலைக் கேளாமல் தன்னை அடக்கும் அங்குசத்தையும் மீறி ஓடுவது போல என் அறிவும், அறிவினால் ஏற்படும் அடக்கமும் நாணமும் என்னைவிட்டு நீங்கின. பிறர் என்னைக் கண்டு எள்ளி நகையாடும் தன்மையில் மின்னலைப் போன்றும், கனவைப் போலும் தோன்றி என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு சென்று விட்டாள். பின்பு அவளைக் காண்பது அரிதாயிற்று.

"அவளை எவ்வாறு காண்பேன்? அதற்கு ஒரு வழியை மேற் கொண்டேன். மணிபோலும் நிறம் கொண்ட மயில் இறகுகளை நூலில் கட்டிப் பூளைப் பூ, ஆவிரம் பூ, எருக்கம் பூ ஆகியவற்றைத் தொடுத்து மடல் குதிரையின் கழுத்தில் கட்டினேன். அப் பெண்ணின் ஊர்த் தெருவில் அம்மடலை ஊர்ந்து, 'இங்குள்ள எல்லோரும் இவளைப்பற்றி நான் பாடுவதைக் கேளுங்கள்' என்று கூறிப் பாடத் தொடங்கினேன்.

மடல் பாடல் : "ஒளிபொருந்திய அணிகலன்களை அணிந்தவள் என் காதலுக்குப் பரிசாக விரும்பித் தந்தவை, கவலையும் கருக்கு நிறைந்த இப்பனைமடல் குதிரையுமே ஆகும்.

"அன்பின் ஏமாற்றத்தால் அவள் தந்த காதல் நோய் என் மனத்திட்பத்தை உடைத்தது. அத்துன்பமாகிய கடலில் நீந்திக் கரையேற முயன்ற என் உயிர் உப்பளத்தில் கிடக்கும் உப்புக் குவியலின் மீது மழைத்துளி விழ, அது சிறிது சிறிதாய்க் கரைவது போலத் தேய்ந்து வருகிறது.

"நான் அவளுக்குக் காதல் பரிசாகக் கொடுத்த மணமலர்களுக்கு மாறாக, மூங்கிலினை வென்ற தோளினைக் கொண்ட அவள் எனக்கு அளித்த பூக்கள், வெறும் பூளையும் ஆவிரையுமே ஆகும்.

"என் காதலி எனக்களித்த ஏமாற்றத்தால் என் இயல்புகள் அழிந்து கொண்டிருக்கின்றன. அதனால், என் உயிர் அழிந்து

அடுப்பில் நெருப்புப் படர்ந்த ஒரு சட்டியில் கிடக்கும் மெழுகென உருகி மெல்ல மெல்லத் தேய்கின்றது.

"இப்பொழுது எனக்குத் துணையாக உள்ளோர், காதல் பற்றி யாதும் அறியாத சிறுவரும், என் செயலுக்குத் தொடர்பற்ற அயலவருமே ஆவர் என்று இவ்வாறு நான் பாடினேன்."

இயற்கைப் புணர்ச்சியின்போது என்னிடம் அன்பு கொண்டு பேசியவளாகிய, அம்மங்கை, அதனைக் கேள்வியுற்றுத் தன் முன்னை அன்பை நினைவு கூர்ந்து எனக்கு அருள் செய்தாள். (நான் பெறக் கிடைத்தாள்.)

" 'இவன் தன்னைத் துன்பத்துக்கு ஆளாக்கிக் கொண்ட போது துணையாய் நின்ற மடலே, நீ இன்பத்துள் நீந்தவும் துணையாக இருப்பாய்' என்று கூறினாள். அதனால் அரிய தவம் செய்தோர் தம் பூத உடல் நீங்கி விண்ணுலக வாழ்வினை இனிதாய்ப் பெறுவதுபோல், துன்பத்துக்குத் துணையாய் நின்ற இம்மடல், இனி இவனுக்கு இன்பத்துக்கு இடமாய் அமை யட்டும்" என்று இரங்கினாள். 'நானும் மடல்மாவை நீக்கிவிட்டு அவளைச் சேர்ந்தேன்' என்று தலைவன், தான் தன் காதலியை அடைந்த விதத்தைத் தோழர்களிடம் கூறினான்.

கருத்து

தலைவன் தான் மடலூர்ந்து, தன் தலைவியை அடையப் பெற்றதைத் தன்னுடைய தோழர்களுக்கு எடுத்துரைக்கிறான்.

சொற்பொருள்

1. இகுதரு - சொரியும்; கடாஅம் - மத நீர்.
2. தொழில் மாறுதல் - பாகன் ஏவுவதைக் கேளாமல்; தோட்டி - அங்குசம்; நிமிர்ந்தாங்கு - அடங்காததுபோல்.
4. வறிதாக - பயனின்றிப் போக; நகுபவும் - எள்ளி நகையாடவும்.
5. நுடக்கம் - அசைவு; மெய்காட்டி - தன் உருவத்தை எனக்களித்து.
6. நனி வெளவி - மிகவும் கவர்ந்து, கொள்ளை கொண்டு.
7. நலம் - அழகு; கரத்தல் - மறைத்தல்; தலைப்படுமாறு - காண்பது, அடைவது.
8. மணிப் பீலி - மணிபோலும் நிறங்கொண்ட மயில் தோகை.

9. பூளை - பூளைப் பூ; ஆவிரை - ஆவிரம் பூ; எருக்கு - எருக்கம் பூ; பிணித்து யாத்து - (மடல் குதிரையின் கழுத்தில்) இறுக்கமாய்க் கட்டி.
10.மல்லல் - வளப்பம்; மறுகு - வீதி, தெரு; இவள் பாடும் - நான் காதலிக்கும் இவளைப் பற்றிப் பாடுவேன்; ஒத்தன் - ஒருவன்.
11.எல்லீரும் - எல்லோரும், கேட்டீமின் - கேளுங்கள்.
12.படர் - துன்பம்; பனை ஈன்ற மா - பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரை.
13.நல்கியவை - கொடுத்தவை.
14.பொறை - பொறுமை; வரைத்தன்றி - என் வழி நில்லாமல், என்னை நீக்குமாறு.
15.நிறை - மனத்திட்பம், அறை - (உப்புநீர்ப்) பாத்தி.
16.உப்பியல் பாவை - உப்புக் குவியல்; உறை - மழைத்துளி.
17.உக்கு விடும் - கரையும்.
18.பொலம் மலர் - பொன்னிறப் பூ.
21.பரிசு - இயல்பு; பைதல்நோய் - வருத்தம்; எரிபரந்த - நெருப்புச் சூழ்ந்த, எரிக்கின்ற.
22.நெய்யுள் - எண்ணெயுள் (கிடக்கும்); நிலையாது - உருகி; பைபய - சிறிது சிறிதாக.
23.அளித்து - இரங்கத்தக்கது.
24.இளையார் - சிறுவர்; ஏதிலர் - அயலார்.
27.கிளவியாள் - பேசியவள்.
28.இவள் பெற - காதலியாகிய இவளைப் பெற்றதால்.
31.உயர் உலகு - சுவர்க்கம்.

தலைவன் கூற்று

கலித்தொகை 139 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

மடலேறுகின்ற தலைமகன் சான்றோர்க்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பெற மடலேற முற்பட்ட தலைவன், ஊரிலிருக்கும் சான்றோர்களிடம் கூறியது.

சான்றவிர் வாழியோ சான்றவிர் என்றும்
பிறர்நோயும் தம்நோய்போல் போற்றி அறன்அறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன்ஆனால் இவ்விருந்த
சான்றீர்! உமக்குஒன்று அறிவுறுப்பேன் மான்ற
துளியிடை மின்னுப்போல் தோன்றி ஒருத்தி
ஒளியோடு உருவுஎன்னைக் காட்டி அளியள்என்
நெஞ்சாறு கொண்டாள் அதற்கொண்டும் துஞ்சேன்
அணியலங்கு ஆவிரைப் பூவோடு எருக்கின்
பிணையல் அம்கண்ணி மிலைந்து, மணிஆர்ப்ப
ஓங்குஇரும் பெண்ணை மடல்ஊர்ந்து,என் எவ்வநோய்
தாங்குதல் தேற்றா இடும்பைக்கு உயிர்ப்பாக
வீங்கிழை மாதர் திறத்துஒன்று நீங்காது,
பாடுவேன், பாய்மா நிறுத்து;

'யாமத்தும் எல்லையும் எவ்வத் திரைஅலைப்ப,
மாமேலேன்' என்று மடல்புணையா நீந்துவேன்
தேமொழி மாதர் உறாஅது உறீஇய
காமக் கடல்அகப் பட்டு.

உய்யா அருநோய்க்கு உயலாகும் மையல்
உறீஇயாள் ஈத்தஇம் மா.

காணுநர் எள்ளக் கலங்கி, தலைவந்துஎன்
நாண்எழில் முற்றி உடைத்துஉள் அழித்தரும்
மாணிழை மாதராள் ஏர்எனக், காமனது
ஆணையால் வந்த படை.

காமக் கடும்பகையின் தோன்றினேற்கு ஏமம்
எழில்நுதல் ஈத்தஇம் மா.

அகையெரி ஆனாது, என்ஆருயிர் எஞ்சும்
வகையினால், உள்ளம் சுடுதரும் மன்னோ
முகைஏர் இலங்குஎயிற்று இன்னகை மாதர்
தகையால் தலைக்கொண்ட நெஞ்சு;
அழல்மன்ற காம அருநோய், நிழல்மன்ற
நேரிழை ஈத்தஇம் மா.

ஆங்கதை,
அறிந்தனி ராயின் சான்றவிர்! தான்தவம்
ஒரீஇத் துறக்கத்தின் வழீஇ, ஆன்றோர்
உள்ளிடப் பட்ட அரசனைப் பெயர்த்துஅவர்
உயர்நிலை உலகம் உறீஇ யாங்குஎன்
துயர்நிலை தீர்த்தல் நும்தலைக் கடனே.

தெளிவுரை

(தலைவி அவனுக்குக் கிடைக்க வேண்டும் என்னும் காரணத்தால் அவள் ஊருக்குச் சென்று மடலேறிய தலைவன், அவ்வூர்ச் சான்றோர்களை நோக்கிப் பேசுகிறான்:)

“நற்பண்புகளைக் கொண்ட சான்றோரே! வாழ்க! பிறர் துன்பத்தைத் தம் துன்பம் போல் எண்ணி, அறவழியில் நின்று அவரது துன்பங்களைக் களைவதே சான்றோரின் கடமை என்பதறிந்த சான்றோரே! உமக்கு ஒன்றைத் தெரிவிக்கின்றேன். மழையிடையே தோன்றும் மின்னல் போல ஒளியும் எழிலும் உடையாள் ஒருத்தி வந்து எனக்கு அருள் செய்து என் நெஞ்சில் இடங்கொண்டாள். அதனால் பல நாள்கள் உறக்கமின்றி வருந்தி அவளைப் பெற மடலேறத் துணிந்தேன்.

“அழகிய ஆவிரம் பூ மாலையை மார்பில் அணிந்து, எருக்கம் பூக் கண்ணியைத் தலையில் சூடி, பனங்கருக்குக் குதிரைக்கு மணிகட்டி, அதைக் குதிரையாகவே பாவித்து அதன் மேல் ஏறுகிறேன். அப்பெண் தந்த துன்பத்தைப் பொறுக்க முடியாத காரணத்தால்தான் இந்த மடல்மா ஏறும் துன்பச் செயலைச் செய்கிறேன். இந்நிலையில் அவள் காதில் விழுமாறு ஒரு பாடலைப் பாடுகிறேன். அதனை நீங்களும் கேளுங்கள்.

“இனிய சொற்களைப் பேசிய அப்பெண் என்னைக் காமக்கடலில் தள்ளிவிட்டாள். அக்கடலில் மூழ்கி இரவும் பகலும் துன்ப அலைகள் மோத இந்த மடற்குதிரையைத் தெப்பமாகக் கொண்டு கரையேற முயல்கின்றேன். ‘தப்ப முடியாத இந்தத் துன்பத்திற்கு மருந்தாக அவள் இப்போது தந்திருப்பது, இம்மடற்குதிரையே ஆகும்.’

"இயற்கை அழகுடன் அணியழகும் எய்தி, மன்மதன் விடுத்த படையென வந்த அவள், பிறர் என்னைக் கண்டு சிரிக்கும் நிலையில் நான் வருந்த எனது நாணமாகிய உயர்ந்த கோட்டை மதிலைத் தாக்கி அதனை உடைத்து உள்புகுந்து என் இயல்புகளை அழிக்கின்றாள். இக்காமப் பகையைப் போக்க, இப்போது எனக்குத் துணையாய் இருப்பது இம்மடற்குதிரையே ஆகும்.

"முல்லை மொட்டைப் போன்ற பல் வரிசையையும் அழகிய புன்னகையையும் கொண்ட அவளை என் நெஞ்சம் மறக்க இயலவில்லை. என் உயிர் மெல்ல மெல்லத் தேயும்படி காமத்தீ கொழுந்து விட்டெரிகிறது.

"அக்காமக் கொடுநெருப்பு என்னை எரித்துச் சுடுவதிலிருந்து காக்கும் நிழலாக இப்போது இருப்பது இம்மடற்குதிரையே ஆகும்.

"சான்றோரே! என் துன்பம் பற்றி உங்களுக்கு அறிவித்து விட்டேன். தவம் செய்து நற்கதி அடைய முயன்ற ஒரு மன்னன், பெரியோர் காட்டிய ஒழுக்கத்தினின்றும் வழுவியதால், அவன் விண்ணுலகப் பேற்றினை அடைய இயலாமற் போனது. அப்போது பெரியோர் அவனை மீண்டும் நன்னெறியில் நிறுத்தித் துயர் தீர்த்து, அவ்விண்ணுலகப் பேற்றையும் பெறச் செய்தனர். அந்த ஆன்றோர்களைப் போன்ற சான்றோர் களாகிய நீங்கள் என்னையும் துன்பத்தினின்று காப்பாற்ற வேண்டியது உங்களுடைய கடமை அன்றோ?" என்று தலைவன் அவர்களைக் கேட்டான்.

கருத்து

'சான்றோர்களாகிய நீங்கள்தான் என்னை இத்துன்பத்தினின்றும் காக்க வேண்டும்' என்று தலைவன் சான்றோரிடம் கூறினான்.

சொற்பொருள்

1. சான்றவிர் - சான்றோர்கள்.
2. போற்றி - கருதி.
3. இவ்விருந்த - இங்கு வாழும்.

4. அறிவுறுப்பேன் - தெரிவிக்கின்றேன்; மான்ற - மயங்கிய, கண்ணை மறைத்துப் பெய்யும்.
5. துளி - மழை; மின்னு - மின்னல்.
6. ஒளியோடு உருவு - ஒளி பொருந்திய வடிவு.
7. நெஞ்சாறு கொண்டாள் - உள்ளத்தில் இடம் கொண்டாள்; அதற்கொண்டு - அது முதலாக; துஞ்சேன் - உறக்கம் இழந்தேன்.
8. அணியலங்கு - அழகு விளங்கும்; எருக்கு - எருக்கம் பூ.
9. பிணையல் - பின்னிய மாலை; மிலைந்து - சூடி; ஆர்ப்ப - ஒலிக்க.
10. ஓங்கு இரும் பெண்ணை - உயர்ந்த கரிய பனை மரம்.
11. தேற்றா - இயலாத; இடும்பை - துன்பம்; உயிர்ப்பாக - இளைப் பாறுதலாக.
13. பாய்மா நிறுத்து - பனை மடல் குதிரையை நிறுத்தி அதன்மேல் ஏறி.
14. யாமம் - இரவு; எல்லை - பகல்; எவ்வத்திரை - துன்ப அலை.
15. மடல் புனையா - மடற்குதிரையைத் தெப்பமாகக் கொண்டு.
18. உய்யா - தப்ப இயலாத; உயல் ஆகும் - தீர்வு ஆகும்.
19. உறீஇயாள் - தந்தவள்; மா - (மடல்) குதிரை.
21. நாண் எழில் - நாணமாகிய கோட்டையை; முற்றி - தாக்கி.
22. ஏர் - எழில்.
24. ஏமம் - துணை.
25. எழில் நுதல் - அழகிய நெற்றியைக் கொண்ட அவள்.
26. அகை எரி - கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு; (அகை - கிளை.)
28. முகைஏர் - முல்லை மொட்டுப் போன்ற அழகு; இன்னகை - புன்னகை.
29. தகை - அழகு; தலைக்கொண்ட - கட்டுண்ட.
30-31. அவள் தந்த காமநோய் அழலுக்கு, இம்மடல் ஒரு நிழல்.
34. ஓரீஇ - கைவிட்டு; துறக்கம் - சுவர்க்கம்; வழீஇ - வழுவி - தவறி.
35. பெயர்த்து - மீண்டும்.
36. உயர்நிலை உலகம் - சுவர்க்கம்; உறீஇயாங்கு - சேர்த்ததுபோல.
37. தலைக்கடன் - முதன்மையான கடமை.

தலைவன் கூற்று

கலித்தொகை 140 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

மடலேறுவேனென்ற தலைமகன் கண்டார்க்குக் கூறியது.

கூற்று விளக்கம்

மடலேறத் துணிந்த தலைவன் தன் எண்ணத்தை, அவனைக் காணவந்து கூடியுள்ளவர்க்குக் கூறியது.

கண்டவிர் எல்லாங் கதுமென வந்து,ஆங்கே,
பண்டறியா தீர்போல நோக்குவீர்; கொண்டது.
மாவென் றுணர்மின்; மடலன்று; மற்றிவை
பூவல்ல; பூளை, உழிஞையோடு, யாத்த
புனவரை யிட்ட வயங்குதார்ப் பீலி,
பிடியமை நூலொடு மெய்ம்மணி கட்டி,
அடர்பொன் அவிர்ஏய்க்கும் ஆவிரங் கண்ணி;
நெடியோன் மகன்நயந்து தந்தாங்கு அனைய
வடிய வடிந்த வனப்பின்,என் நெஞ்சம்
இடிய இடைக்கொள்ளுஞ் சாயல் ஒருத்திக்கு
அடியுறை காட்டிய செல்வேன்; மடியன்மின்;
அன்னேன் ஒருவனேன் யான்.

என்னானும், பாடெனிற் பாடவும் வல்லேன்,சிறிதுஆங்கே.
ஆடெனில் ஆடலும் ஆற்றுகேன்; பாடுகோ–
என்னுள் இடும்பை தணிக்கும் மருந்தாக,
நன்னுதல் ஈத்தஇம் மா?–

திங்கள் அரவுறின், தீர்க்கலா ராயினும்,
தங்காதல் காட்டுவர் சான்றவர் இன்சாயல்
ஒண்டொடி நோய்நோக்கிற் பட்டஎன் நெஞ்சநோய்
கண்டும்கண் ணோடாது,இவ் வூர்.

தாங்காச் சினத்தொடு காட்டி உயிர்செகுக்கும்
பாம்பும் அவைப்படில், உய்யுமாம் – பூங்கண்,

வணர்ந்தொலி ஐம்பாலாள் செய்தஇக் காமம்
உணர்ந்தும், உணராது,இவ் வூர்.
வெஞ்சுழிப் பட்ட மகற்குக் கரைநின்றார்
அஞ்சலென் றாலும் உயிர்ப்புண்டாம் அஞ்சீர்ச்
செறிந்தஏர் முறுவலாள் செய்தஇக் காமம்
அறிந்தும், அறியாது,இவ் வூர்.

ஆங்க—
என்கண் இடும்பை அறீஇயினென்; நுங்கண்
தெருளுற நோக்கித் தெரியுங்கால், இன்ன
மருளுறு நோயொடு மம்மர் அகல,
இருளுறு கூந்தலாள் என்னை
அருளுறச் செயின்,நுமக்கு அறனுமா ரதுவே.

தெளிவுரை

"நான் மடல் ஊர்தலைக் கண்ட நீங்கள் எல்லாரும் வந்து கூடி முன்பு என்னை அறியாதோர்போல மருண்டு பார்க்கின்றீர். நான் இப்போது ஏறியிருப்பது வெறும் மடல் என்று கருதாதீர்; உண்மைக் குதிரை என்றே கருதுங்கள். பூளையும், உழிஞையும் சேர்த்து அவற்றுடன் நான் அணிந்திருப்பவை வெறும் பூ என்று எண்ணாதீர். பூளை, உழிஞை, பொன்னிறமுள்ள ஆவிரம் ஆகிய பூக்களால் ஆன மாலை; மலைச்சாரலில் மயில்கள் உதிர்த்த பீலிகளையும் சேர்த்துத் தொடுத்துள்ளேன்.

"நான் இக்குதிரையின் மீது ஏறியிருக்கும் காரணத்தை நீங்கள் அறியவேண்டும். காமன் வடித்தெடுத்த அழகு மகள் ஒருத்தி; அவள் என் நெஞ்சினுள் புகுந்து, அதன் வலிமையை இடித்து விட்டாள். மென்மையான சாயலைக் கொண்ட அவளை வழிபடும் அடிமையாகி விட்டேன். இதனை இவ்வூரார்க்குக் காட்டுவதற்காகவே இம்மடலை ஊர்கின்றேன். காதலால் இத்தகையவன் ஆனேன். ஆதலின் என்னை வெறுத்தொதுக்கும் தன்மையினைக் கொள்ளாதீர்" என்று ஊராரை வேண்டினான். மேலும் சொன்னான்:

"இந்நிலையிலே உள்ள என்னை நீங்கள் பாடச் சொல்லினும் பாடுவேன்; ஆடச் சொல்லினும் ஆடுவேன். இந்த மடல்மாவின்

மேல் நின்று என் காமநோயைத் தீர்க்க அவள் அளித்துள்ள மருந்துதான் இக்குதிரை. இக்குதிரையைப் பற்றி நான் பாடுகிறேன்" என்று பாடத் தொடங்குகிறான்.

மடற்பாடல் : "சந்திரனைக் கேது (பாம்பு) பற்றினால் சான்றோர் அதனை விடுவிக்க இயலாவிடினும் அதற்கு இரங்குவர். ஆனால் ஒளி வீசும் வளையலணிந்த அழகிய மங்கையின் துன்பம் விளைக்கும் பார்வையில் அகப்பட்டு நான் வருந்துவதைக் கண்டும் இவ்வூர் மக்கள் இரங்காதிருக்கின்றனரே.

"அடங்காச் சினத்துடன் வந்து உயிரைப் போக்கும் பாம்பு சான்றோர் கூடிய அவையில் தோன்றினால் சாகாமல் தப்பும் என்பர். ஆனால், இவ்வூர் மக்களோ, பூப்போன்ற கண்ணும் தழைத்துச் சிறிதே சுருண்ட கூந்தலும் கொண்டவள் தந்த இக்காமநோயைக் கண்டும் அதைத் தீர்க்கும் வழி அறியாது உள்ளனரே.

"ஆற்றின் நீர்ச் சுழியில் அகப்பட்ட ஒருவனை, கரையில் நின்றவர், நீரில் இறங்கி மீட்கா விட்டாலும் 'நீ பயப்படாதே' என்று கூறினாலே துன்பம் தீர்ந்தாற்போல் ஆறுதல் பெறுவான். ஆனால், இவ்வூர் மக்களோ புகழத்தக்க அழகும் அழகிய புன்னகையும் கொண்டவள் தந்த காமநோயை அறிந்தும் தீர்க்க இயலாவிடினும் கருணையேனும் காட்டாதிருக்கின்றனரே."

இவ்வாறு பாடியவன் ஊராரை நோக்கி, "உமக்கு என் துன்பத்தை அறிவித்து விட்டேன். நீங்கள் தெளிவாகச் சிந்தித்து அம்மங்கையால் நான் பெற்ற துன்பம் நீங்க எனக்கு அருள் செய்யுங்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் அறவழியில் சென்றவராவீர்" என்று தலைவன் கூறினான்.

கருத்து

'சான்றோரே! நான் அவளை அடையுமாறு செய்யுங்கள். அதுவே அறவழி' என்றான் தலைவன்.

சொற்பொருள்

1. கண்டவிர் - கண்டவர்கள்; கதுமென - விரைந்து.
2. பண்டறியாதீர் - முன்பு அறியாததுபோல.

3. மா - குதிரை.
4. பூளை, உழிஞை - மலர்கள்; யாத்து - தொடுத்து.
5. புனவரை - தினைப்புனம் உள்ள மலை; இட்ட - மயில் உதிர்த்த; வயங்குதல் - விளங்குதல்; பீலி - மயில் தோகை.
7. அடர்பொன் - பொன் தகடு; அவிர் ஏய்க்கும் - வீசும் ஒளியைப் போன்ற; ஆவிரங்கண்ணி - ஆவிரம் பூவினால் ஆன தலைமாலை.
8. நெடியோன் மகன் - திருமாலின் மகனாகிய மன்மதன்; நயந்து - விரும்பி.
9. வடிய வந்த வணப்பு - (காமன்) வடித்தெடுத்த அழகு.
10. இடிய - அழிபட.
11. அடியுறை - வழிபடும் அடிமை; மடியன்மின் - (வெறுப்பினால்) மனம் குவியாதீர்.
12. அன்னேன் - அத்தகையவன்.
13. என்னானும் - என்ன நேரினும்; பாடெனில் - பாடு என்றால்.
14. ஆடெனில் - ஆடு என்றால்.
16. நன்னுதல் - அழகிய நெற்றியைக் கொண்ட தலைவி; மா - மடற் குதிரை.
17. திங்கள் - நிலவு; அரவு உறின் - பாம்பு சேர்ந்தால் (இராகு, கேது கவ்வினால்); தீர்க்கலார் - தீர்க்க முடியாதவர்.
19. நோய் நோக்கு - காமப் பார்வை.
20. கண்ணோடாது - இரங்காது.
21. செகுக்கும் - போக்கும்.
22. அவை - சான்றோர் அவை; உய்யும் - பிழைக்கும், தப்பும்.
23. வணர்ந்து - சுருண்டு; ஒலி - தழைத்த; ஐம்பாலாள் - ஐந்தாக வகுக்கப்பட்டுப் பின்னிய கூந்தலையுடையவள்.
25. வெஞ்சுழி - கொடுமையான நீர்ச்சுழி.
26. உயிர்ப்பு - ஆறுதல்.
30. அறீஇயினென் - அறிவித்துவிட்டேன்.
31. தெருள்உற - தெளிவாக; தெரியுங்கால் - ஆராய்ந்து பார்த்தால்.
32. மருள்உறு - மயக்கத்தை உண்டாக்கும்; மம்மர் - மயக்கம்.
34. அறனுமாரதுவே - அறம் அதுவே ஆகும்.

கண்டோர் கூற்று

கலித்தொகை 141 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

இரந்து பின்னின்ற தலைமகன் மடலேறியவழி அவள்தமர் அஞ்சித் தலைமகளைக் கொண்டுவந்து கொடுத்தலைக் கண்டோர் கூறியது.

கூற்று விளக்கம்

தன் காதல் நிறைவேறத் தலைவியின் இசைவைப் பெற இயலாத தலைவன் மடலேறினான். அதைப் பார்த்துத் தலைவியின் சுற்றத்தார் அஞ்சி அவனுக்குத் தலைவியைத் திருமணம் செய்விக்க ஒப்புக் கொண்டனர். அதனைக் கண்டோர் கூறியது.

அரிதினில் தோன்றிய யாக்கை புரிபுதாம்
வேட்டவை செய்து,ஆங்குக் காட்டிமற்று ஆங்கே,
அறம்பொருள் இன்பம்என்று அம்மூன்றின் ஒன்றன்
திறஞ்சேரார் செய்யுந் தொழில்கள் அறைந்தன்று–
அணிநிலைப் பெண்ணை மடல்ஊர்ந்து, ஒருத்தி
அணிநலம் பாடி வரற்கு.

ஒரொருகால் உள்வழியள் ஆகி, நிறைமதி
நீருள் நிழல்போல், கொளற்குஅரியள் – போருள்
அடல்மாமேல் ஆற்றுவேன் என்னை மடன்மாமேல்
மன்றம் படர்வித் தவள்;வாழி, சான்றீர்!

பொய்தீர் உலகம் எடுத்த கொடிமிசை,
மையறு மண்டிலம் வேட்டனள், வையம்
புரவுஊக்கும் உள்ளத்தேன் என்னை இரவுஊக்கும்
இன்னா இடும்பைசெய் தாள்,அம்ம சான்றீர்!

கரந்தாங்கே இன்னாநோய் செய்யும்மற்று இஃதோ–
பரந்த சுணங்கின் பணைத்தோளாள் பண்பு?

இடியுமிழ் வானத்து, இரவுஇருள் போழும்
கொடிமின்னுக் கொள்வேன்என் றன்னள் – வடிநாவின்
வல்லார்முன் சொல்வல்லேன் என்னைப் பிறர்முன்னர்க்

கல்லாமை காட்டி யவள்,வாழி, சான்றீர்!

என்றாங்கே,
வருந்தமா ஊர்ந்து, மறுகின்கண் பாடத்
திருந்திழைக்கு ஒத்த கிளவிகேட்டு, ஆங்கே,
பொருந்தாதார் போர்வல் வழுதிக்கு அருந்திறை
போலக் கொடுத்தார் தமர்.

தெளிவுரை

(தலைவியைத் தனக்குத் திருமணம் செய்து கொடுக்குமாறு வேண்டியும் அவள் பெற்றோர் இசையாமல் போகவே, மடலேறலை மேற்கொண்ட தலைவன் கூறுகிறான்:)

“பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்று அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றின் திறம் தெரிந்து வாழ்தல் கடமையாகும். அக்கடமையுள் ஒன்றைச் செய்யாதார் படும் துன்பங்கள் சொல்லில் அடங்காதவை. முற்பிறப்பில் அறத்தினால் ஆகும் நன்மையைப் பெறாதவர், இப்பிறப்பில் துன்பம் தரும் தொழில்களுள் ஒன்றாக மடல் மாவை ஊர்ந்து ஒருத்தியின் அழகைப் பாடித் தெருவில் வருவதை நூல்கள் கூறுகின்றன. ஆதலால் நானும் அதுவே துணிந்து மடலேறிப் பாடியவாறு உள்ளேன்.

“ஒருத்தி என் நினைவில் நின்றும் அகலாது, நீரில் தோன்றும் நிழலைப்போல் பற்றுதற்கு அரியவளாய் இருக்கின்றாள். போர்க் களத்தில் வெற்றியைத் தரும் குதிரை மீதேறி வீரச்செயல் செய்யும் என்னை அவள் இம்மடற்குதிரைமேல் ஏறி மன்றத்தில் நிற்கச் செய்துவிட்டாள். என்னை இவ்வாறு ஆக்கிய அவள் வாழ்க!

“பொய்யற்ற நன்மக்கள், காலை நேரத்தில் கீழ்த்திசையில் வழிபடுகின்ற சூரியனைப் பற்றிக்கொண்டு வரவேண்டும் என்று சிலர் விரும்பினால் அது பெறுவதற்கு அரிதாகிறது. அதைப்போல அரிதாக இருக்கின்ற இவள், இந்த உலகத்தையே பாதுகாக்கும் வலிமையைக் கொண்ட என்னைப் பிறரிடம் இரந்து வாழும் நிலைக்கு ஆளாக்கி விட்டாள்.

"அவள் தன்னை மறைத்துக் கொண்டு எனக்குக் காமநோய் தந்து கொடுமை புரிகின்றாள். பரவிய தேமலையும் மூங்கில் போன்ற தோள்களையும் கொண்ட அவளின் பண்பு இதுவோ?

"இரவுக் காலத்தில் சூழ்ந்த மேகத்தால் இடிஇடித்துப் பாயும் மின்னல் கொடியைப் பற்றிக் கொணர்வேன் என்று விரும்பினாற் போலப் பெறுவதற்கு அரிதாக இருக்கின்றாள், இவள். நாவன்மை கொண்டார் முன் சொலல்வல்லவனாகிய என்னைக் கல்லாதவரிடத்தும் அறிவற்றவன் என்று கருதுமாறு மடலேறச் செய்துவிட்டாள். அவள் வாழ்க" என்று இவ்வாறு தலைவன் துன்பத்தோடு மடல் ஊர்ந்து தெருவில் பாடியிருந்தான். அவன் தம் பெண்ணைப் பற்றியே பேசுகிறான் என்பதை உணர்ந்த தலைவியின் சுற்றத்தார், பகைவர்கள் போரில் வல்ல பாண்டிய மன்னனுக்குத் திறை கொடுத்ததுபோலத் தலைவியை அவனுக்கு மணம் செய்வித்தனர். அக்காட்சியைக் கண்டோர் வியந்து கூறினர்.

கருத்து

தலைவியைத் தனக்குத் திருமணம் செய்து கொடுக்குமாறு அவள் பெற்றோரிடம் தலைவன் வேண்டியும் பயன் இல்லாமல் போயிற்று. அதனால் தான் விரும்பியவளை அடைய, நூலோர் வகுத்த வழியான, மடலேறலைக் கைக்கொண்டான். மடலேறிய தலைவன் கூறியதைக் கேட்டும், அவன் துன்பத்தைக் கண்டும், தலைவியின் சுற்றத்தார் தலைவியைத் தலைவனிடம் ஒப்படைத்தனர். இக்காட்சியைக் கண்டவர் வியந்து கூறினர்.

சொற்பொருள்

1. யாக்கை - உடல், மனிதப் பிறவி; புரிபு - விரும்பி.
2. வேட்டவை - விரும்பியவை.
3. ஒன்றன் திறம் - அறத்தின் நன்மை.
4. செய்யும் தொழில் - செய்யும் தொழில் (பற்றி); அறைந்தன்று - (நூல்கள்) சொல்லியுள்ளன.
7. ஒரொருகால் - சில வேளை; உள்வழியள் - நினைப்பில் நிற்பவள்; நிறைமதி - முழு மதி.
8. போருள் - போர்க்களத்தில்.

9. அடல் - வெற்றி; மா - குதிரை; ஆற்றுவேன் - போர் புரிவேன்; மடல் மா மேல் - பனங்கருக்குக் குதிரையின்மேல்.
10. மன்றம் - ஊர்ப் பொது இடம்; படர்வித்தவள் - செல்லச் செய்தவள்.
11. கொடிமிசை - கீழ்த்திசை.
12. மையறு - குற்றமற்ற; மண்டிலம் - சூரியன்.
13. புரவு ஊக்கும் - பாதுகாக்கும் வலிமை; இரவு ஊக்கும் - இரந்து நிற்கும் நிலை.
14. இடும்பை - துன்பம்.
15. கரந்து - மறைந்து.
17. உமிழ் - வெளிப்படுத்தும், இடிக்கும்; போழ்தல் - பிளந்து செல்லுதல்.
18. மின் - மின்னல்; கொள்வேன் - பற்றிக் கொண்டு வருவேன்; என்றன்னள் - என்று சொல்லுதல் போன்ற அருமை வாய்ந்தவள்.
19. வல்லார்முன் - நாவன்மை உடையவர் முன்; பிறர் முன்னர் - மற்றவர் முன்.
20. கல்லாமை காட்டியவள் - கல்லாதவன் என்று கருதுமாறு (மடலேறச்) செய்துவிட்டாள்.
21. என ஆங்கே - என்று இவ்வாறு.
22. வருந்த - வருந்தி; மாஊர்ந்து - மடல் மா செலுத்தி; மறுகின் கண் - தெருவிடத்தில்; பாட - பாடியிருக்க.
23. திருந்திழைக்கு ஒத்த கிளவி - திருத்தமான அணிகலன் அணிந்த தம்முடைய மகளைக் குறித்த பேச்சு.
24. பொருந்தாதார் - பகைவர்; போர்வல் - போரிற் சிறந்த; வழுதிக்கு - பாண்டியனுக்கு; திறை - கப்பம்.
25. தமர் - (அவளுடைய) சுற்றத்தார்.

கண்டோர் கூற்று

கலித்தொகை 142 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடைப் பிரிந்து நீட்டித்துழித் தலைமகள் பிரிவாற்றகில்லாது, நாணு வரையிறந்து கலங்கி மொழிந்து அறிவழிந்துழி அவன் வந்து சாரத் தெளிந்தமை கண்டார் கூறியது.

கூற்று விளக்கம்

நாணு வரையிறத்தல் - நாணத்தின் தடையை மீறுதல். இத்துறை, 'தேறுதல் ஒழித்த காமத்து மிகுதிறம்' (தொல். நூற்பா 997) என்னும் பெருந்திணையைச் சாரும். இதன் பொருள் மனத்தெளிவு பெறாத மிகுதியான காம நோய் என்பதாம். பெருந்திணையும் அகத்திணையுள் ஒன்றாதலின் கலித்தொகை ஆசிரியர் அத்திணைக்கும் பாடல் செய்தனர்.

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிவு நீட்டித்த இடத்துத் தலைவி, பிரிவை ஆற்றாளாகி, நாணம் கடந்து உள்ளங்கலங்கிப் பொழுதொடு புலம்பியும் கூறத் தகாதன கூறியும் அறிவு அழிந்து மொழிந்தனள். தலைவன் வந்து சேர்ந்த அளவில் அவள் கலக்கம் ஒழிந்திடத் தெளிவு பெற்றாள். இதனைக் கண்டவர் கூறியது.

புரிவுண்ட புணர்ச்சியுள் புல்ஆரா மாத்திரை
அருகுவித்து, ஒருவரை அகற்றலின், தெரிவார்கண்
செயநின்ற பண்ணினுள் செவிசுவை கொள்ளாது
நயம்நின்ற பொருள்கெடப் புரியறு நரம்பினும்
பயனின்று மன்றுஅம்ம காமம்! இவள்மன்னும்

ஒண்ணுதல் ஆயத்தார் ஓராங்குத் திளைப்பினும்
முள்நுனை தோன்றாமை முறுவல்கொண்டு அடக்கித்தன்
கண்ணினும் முகத்தினும் நகுபவள்; பெண்ணின்றி
யாவரும் தண்குரல் கேட்ப, நிரைவெண்பல்
மீஉயர் தோன்ற நகாஅ நக்காங்கே
பூஉயிர்த் தன்ன புகழ்சால் எழில்உண்கண்
ஆய்இதழ் மல்க அழும்;

ஒஓ! அழிதகப் பாராதே அல்லல் குறுகினம்
காண்பாம் கனங்குழை பண்பு.

என்று, எல்லீரும் என்செய்தீர்? என்னை நகுதிரோ?
நல்ல நகாஅலிர் மற்கொலோ! யான்உற்ற
அல்லல் உறீஇயான் மாய மலர்மார்பு
புல்லிப் புணரப் பெறின்.

எல்லா!நீ, உற்றதுஎவனோ மற்று? என்றீரேல், 'எற்சிதை
செய்தான் இவன்'என, 'உற்றது இது'வென
எய்த உரைக்கும் உரன்அகத்து உண்டாயின்,
பைதல வாகிப் பசக்குவ மன்னோ?என்
நெய்தல் மலரன்ன கண்.

கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதுஒன்று
நாடுவேன் கண்டனென் சிற்றிலுள்; கண்டாங்கே
ஆடையால் மூஉய் அகப்படுப்பேன்; சூடிய
காணான், திரிதருங் கொல்லோ? மணிமிடற்று
மாண்மலர்க் கொன்றை யவன்.

'தெள்ளியேம்' என்றுரைத்துத் தேராது, ஒருநிலையே
வள்ளியை ஆகென நெஞ்சை வலியுறீஇ,
உள்ளி வருகுவர் கொல்லோ? உளைந்துயான்
எள்ளி யிருக்குவேன் மற்கொலோ? நள்ளிருள்
மாந்தர் கடிகொண்ட கங்குல் கனவினால்
தோன்றின னாகத் தொடுத்தேன்மன் யான்தன்னைப்
பையெனக் காண்கு விழிப்ப,யான் பற்றிய
கையுளே மாய்ந்தான் கரந்து.

கதிர்பகா ஞாயிறே! கல்சேர்தி யாயின்,
அவரை நினைத்து, நிறுத்துஎன்கை நீட்டித்
தருகுவை யாயின், தவிரும்என் நெஞ்சத்து
உயிர்திரியா மாட்டிய தீ.

மையில் சுடரே! மலைசேர்திநீ யாயின்,
பௌவநீர்த் தோன்றிப் பகல்செய்யும் மாத்திரை
கைவிளக் காகக் கதிர்சில தாராய்!என்
தொய்யில் சிதைத்தானைத் தேர்கு.

சிதைத்தானைச் செய்வது எவன்கொலோ? எம்மை
நயந்து நலஞ்சிதைத் தான்.

மன்றப் பனைமேல் மலைமாந் தளிரே!நீ
தொன்றுஇவ் வுலகத்துக் கேட்டும் அறிதியோ?
மென்தோள் ஞெகிழ்த்தான் தகையல்லால், யான்காணேன்
நன்றுதீது என்று பிற.

நோய்எரி யாகச் சுடினும், சுழற்றிஎன்
ஆயிதழ் உள்ளே கரப்பன், கரந்தாங்கே
நோய்உறு வெந்நீர் தெளிப்பின் தலைக்கொண்டு
வேவது அளித்துஇவ் வுலகு.

மெலியப் பொறுத்தேன்; களைந்தீமின் சான்றீர்!
நலிதரும் காமமும் கௌவையும் என்று,இவ்
வலிதின் உயிர்காவாத் தூங்கியாங்கு, என்னை
நலியும் விழுமம் இரண்டு.

எனப்பாடி,
இனைந்துநொந்து அழுதனள்; நினைந்துநீடு உயிர்த்தனள்;
எல்லையும் இரவும் கழிந்தனஎன்று எண்ணி;எல்இரா
நல்கிய கேள்வன் இவன்மன்ற! மெல்ல
மணியுள் பரந்த நீர்போலத் துணிவாம்
கலம்சிதை இல்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போல் தெளிந்து, நலம்பெற்றாள்,
நல்லெழில் மார்பனைச் சார்ந்து.

தெளிவுரை

தலைவியாகிய இவள் சிறுமியாய் இருந்தபோது தன் தோழியரோடு கூடி விளையாடுவாள்; அப்போதுகூடத் தன் வாய் திறந்து பல்லின் நுனிகூடத் தோன்றாமல் முகத்திலும், கண்ணிலும் மகிழ்ச்சிக் குறிப்பைக் காட்டுவாள். இன்றோ, தன் பெண் தன்மையைக்கூட மறந்து, சொற்களைப் பலரும் கேட்கக் கூறுகிறாள்; மேற்பல்லின் எயிறு தோன்றத் தன் பற்கள் தெரியுமாறு சிரிக்கின்றாள். உடனே பூ வெடித்தாற்போன்ற அழகிய மையுண்ட கண்ணின் இமைகளில் கண்ணீர் ததும்ப

அழுகின்றாள். ஒருவர் உள்ளத்தை ஒருவர் புரிந்துகொண்டு, உடலுறவு மேற்கொள்ளும் நிலைமை ஏற்பட்ட பின்பும் தழுவியனுபவிக்கும் அவா நிறைவுபெறாத நிலையில், ஊழ் அவ்விருவருள் ஒருவர் மற்றவரைக் காண இயலாதவராய்ச் செய்து, காம இன்பத்தைக் கெடுக்கின்றது. இத்துன்பம் எத்தகையது என்று ஆராய்ந்தால், யாழில் ஒரு பண்ணினுள் தோன்றிய இனிமையைக் கேட்போர் அதனைக் கேட்டு அனுபவிக்கும் முன்னே, நரம்பு அறுபட்டு, நினைத்தவாறு இசையைக் கேட்டு அனுபவிக்க இயலாதபோது உண்டாகும் துன்பத்தைப் போன்றதாகும்.

(இவ்வாறு அந்தத் தலைவியைக் கண்டார், அவளுக்கு நேர்ந்த அல்லல்களை உணராமலேயே அவளைப்பற்றி அறிய அவளை அணுகினர். அவள் அச்சான்றோரைப் பார்த்துப் பின்வருமாறு கூறினாள்:)

"சான்றோரே! 'இப்பெண்ணின் துன்பம் நம்மை வருத்தும் என்றும் கருதாமல், நம் நெஞ்சம் கசியுமாறு இவளைச் சந்தித்திருக்கிறோம். இவள் துயர் முழுவதையும் கேட்டறி வோம்' என்பது போல இங்கு வந்துள்ளீர். அவ்வாறு வந்த நீங்கள் என்ன செய்கின்றீர்? என் துயர நிலையைப் பார்த்து எள்ளிச் சிரிக்கின்றீரா? எனக்குத் துன்பத்தை உண்டாக்கிய வனின் மாய மார்பை (தோன்றாமல் மறைதலால் துன்பத்தையும், தோன்றுவதால் இன்பத்தையும் தரும் மாய மார்பு) நான் தழுவி மகிழ்ந்தாலும் அது கண்டு மகிழாமல் இகழ்வீர்களோ" என்று கூறினாள்.

" 'உனக்கு அவனால் ஏற்பட்ட துன்பம் யாது?' என்று நீங்கள் கேட்பீராயின், என் அழகைச் சிதைத்தவன் இவன் என்றும், அவனால் யானுற்ற துன்பம் இதுவென்றும் தெளிவுற எடுத் துரைக்கும் அறிவு எனக்கு இருந்திருக்குமேயானால், இத்துணை அளவுக்கு வருந்தியிருப்பேனா? நெய்தல் மலர் போன்ற என் கண் வருந்தி அழுது வெளுத்திருக்குமா?" என்று சொன்னவள் மேலும் கூறுகிறாள்:

(அவள், மணலில் கூடல் இழைத்ததுபற்றி அச்சான்றோரிடம் பின்வருமாறு கூறினாள்:)

“பெரியோரே! தலைவன் என்னை நினைத்து வருவானா என்பதை வேறொரு வழியால் அறிய எண்ணி, மணலில் கூடல் இழைத்தேன். நான் வரைந்த பிறைச்சந்திரனின் இரு முனைகளும் கூடவில்லை. ஆகவே, அவன் வரமாட்டான் என்று அறிந்தேன். அப்பிறைச்சந்திரன் வளர்ந்து முழு நிலவாகி என்னை வருத்தும் என்று, அது தப்பிப் போகாதவாறு என் ஆடையால் மூடிச் சிறைப்படுத்தினேன். உடனே, சிறந்த கொன்றை மாலையைச் சூடிய நீலகண்டப்பெருமான் தன் சடையில் சூடுதற்குப் பிறைமதியைத் தேடுவானே என்று உணர்ந்து, என் நெஞ்சை நோக்கி, ‘மனமே, நாம் தெளிவுடனுள்ளோம். ஆதலின், எதிர் காலத்தில் வரும் இடும்பையை எண்ணாமல் அப்பிறைமதியை அப்பெருமானுக்கே கொடுத்து நீ ‘வள்ளல்’ என்னும் புகழை அடைவாயாக’ என்று கூறிப் பிறையை விடுவித்தேன்” என்றாள்.

(பின்னரும் தொடர்ந்து கூறினாள்:)

“தலைவன் என்னை நினைத்து வருவானா, அவன் வரும் பொழுது நான் மன வருத்தத்தால் அவனைப் புறக்கணித்து அமர்ந்திருப்பேனோ என்று எண்ணியிருந்தபோது, ஊர்க்காவல் மிகுந்த இராக்காலம் தோன்றியது. சற்று நேரம் உறங்கினேன். தலைவன் என் கனவிலே தோன்றினான். அது கனவு என்று அறியாமல் அவனை வளைத்துப் பிடித்துக் கொண்டு மெல்ல விழித்தேன். நான் பிடித்த கை பிடித்தவாறே இருக்க, அவன் மறைந்துவிட்டான்” என்றாள்.

(பிறகு நடந்தவற்றைக் கூறுகின்றாள். அவற்றுள், அவள் சூரியனை நோக்கிக் கூறியவை:)

“கதிர்களை வேறு சுடர்களுக்குப் பிரித்து வழங்காத ஞாயிறே! நீ மறையும் நேரம் இது. அதற்குமுன் என்பொருட்டு என் தலைவனை அவன் உள்ள இடத்தில் நிறுத்திப் பிடித்து, உன் கதிர்களை நானிருக்கும் இடம்வரை நீட்டி, என் கையில் ஒப்படை. அவ்வாறு நீ செய்வாயாயின், என் நெஞ்சமாகிய

அகலில் உயிரைத் திரியாய் இட்டுக் கொளுத்திய காமச்சுடர் அவியும்' என்றாள்.

(ஞாயிறு அதற்கு விடை கூறாதிருக்கவே,)

"குற்றமற்ற சுடர்த்தெய்வமே! மேற்கு மலையில் சேரத் திருவுள்ளம் கொண்டாய். ஆதலால், நீ கீழ்க்கடலில் மீண்டும் தோன்றிப் பகலை உண்டாக்கும்வரை, என் தொய்யிலைச் சிதைத்தவனாகிய தலைவனை நான் தேடுவதற்குக் கைவிளக்காக, உன் கதிர்கள் சிலவற்றைத் தருக' என்றாள்.

(பின்பு மங்கிவரும் மாலை வெயிலை நோக்கி,)

"உலகெங்கும் இருள் மெல்லிதாய்க் கவிய, மன்றத்தில் நிற்கும் பனைமரத்தின் மேலே மட்டும் மாமரத்தின் தளிர் போலத் தோன்றும் வெயிலே! என்னை முதலில் விரும்பி அன்பு செய்து, பின்பு வாராமையால் என் அழகைக் குலைத்தவன் இப்பொழுது வந்தால் நான் என்ன செய்வது? ஒருகால், நான் அவனிடம் ஊடல் கொள்வேனோ என்று அவனைத் தேடித்தர மறுக்கின்றாயா? மெல்லிய என் தோளை மெலிவித்தவன் அழகை விரும்பிக் காண்பேனேயன்றி, அவன் செய்த நல்லது கெட்டது எதையும் காண மாட்டேன். நான் மட்டுமா இப்படி? பழங்காலம்முதல் மகளிர் தம் கணவரைக் கண்டால் கூடுவது அன்றி ஊடியிருந்தார் என்று நீ கேள்விப்பட்டதேனும் உண்டா?" என்று கேட்டாள்.

"கவலையால் வாட்டும் என் மனத்தைக் காமநோய் நெருப்பாய்ச் சுட்டு எரித்தாலும், அதை என் மனத்தினுள்ளேயே மறைப்பேன். அதனால் என் கண்ணில் திரண்ட கண்ணீரையும் இமைகளுக்குள் அடக்குவேன். ஏனென்றால், அந்தச் சூடான கண்ணீர் தரையில் விழுந்தால் இவ்வுலகம் வெந்துவிடும் என்று எண்ணியதால்தான் தாங்கொணாத் துயரத்தை ஒருவாறு பொறுத்துக் கொண்டிருந்தேன்.

"சான்றோர்களே! என்னைத் துன்புறுத்தும் காமமும் ஊராரின் பழிச்சொல்லும் என் உயிரைக் காவடியாய்க் கொண்டு

இருபுறமும் பாரமாய்த் தொங்கி என்னை வருத்துகின்றன. என் உயிரும் உடலும் மெலிகின்றன. நான் இறப்பதற்கு முன் என் துன்பத்தை நீக்குங்கள்' என்று கூறி, வருந்தி அழுதாள்; பகலும் இரவும் பயனின்றிக் கழிகின்றன என்று நெடிது நினைத்து, நொந்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள்.

அந்நிலையில், "ஓர் இரவில் அவள் அருகில் அன்போடு அமர்ந்திருக்கும் ஒருவனைக் கண்டோம். அவன்தான் தலைவன் போலும்! அவன் இவளது அழகிய மார்பைத் தழுவ, தேற்றாங் கொட்டையினால் தெளிவிக்கப்பட்ட தண்ணீரைப்போலத் துன்பம் நீங்கி, நலம் பெற்றாள். நாங்களும் மணியும், அதன் ஒளியும் போல இருவரும் மனம் ஒன்றுபட்ட காதலர் என்று மெல்லத் தெளிந்துகொண்டோம்" என்று அவர்களைக் கண்ட சான்றோர் கூறினர்.

கருத்து

'தலைவி ஒருத்தி தன் காதலன் பிரிவு தன்னைக் காமநோயில் ஆழ்த்தி விட்டது என்று அழுதுகொண்டிருந்தாள். அதனைக் கண்ட சான்றோர் அவளுக்காக இரக்கமுற்று வருந்துகின்றனர். அந்நிலையில் தலைவன் வந்து தலைவிக்கு ஆறுதல் கூறித் தழுவி இன்புற்றான்; வருந்தியிருந்த தலைவி பெருமகிழ்ச்சி கொண்டாள்' என்பதே இப்பாடலின் கருத்து.

குறிப்பு

தலைவன் பிரிவால் தான் வாடிக்கொண்டிருப்பதைத் தலைவியே கூறுவாளாயின், அவள் கையிகந்த காமத்தவள் என்றும், நாணம் இல்லாதவள் என்றும் அவளை ஊரார் பழிதூற்றுவர். இவ்வாறு, தன்னடக்கமின்றிப் புலம்பும் தன்மை பெருந்திணையின்பாற்படும் என்பர் அகநூலார். எனினும், அகன்ஐந்திணை என்று கூறப்பெறும் திணை களுள்ளும் வழுவமைதியாய்ப் பெருந்திணைக்கூற்று நிகழ்வதுண்டு என்றும் அகப்பொருள் கூறுகின்றது. அத்தகைய கூற்றே இப்பாடலில் இடம்பெற்றுள்ளது.

தலைவி தன் ஊராரிடமும், ஞாயிறு, திங்கள் முதலியவற்றிடமும் தன் துன்பங்களைக் கூறுவதுபோல அமைப்பது மரபு.

சொற்பொருள்

1. புரிவுண்ட புணர்ச்சி - விருப்பம் அமைந்த புணர்ச்சி (புணர்ச்சியில் தலைவிக்கும் தலைவனுக்கும் ஒத்த விருப்பம் அமைதல்); புல் - புல்லுதல்; ஆரா - நிறையாத.
2. அருகுவித்து - அரியராகும்படி செய்து; தெரிவார் - ஆராய்ந்து பார்ப்பார்.
3. பண்ணினுள் - இசையினுள்.
4. புரியறு - நரம்பின் முறுக்கு அறுந்துவிட்ட.
6. திளைத்தல் - மகிழ்தல், விளையாடுதல்.
7. முள்நுனை - பல்லின் நுனி.
8. பெண்ணின்றி - பெண் தன்மையின்றி.
9. யாவரும் குரல் கேட்ப - எல்லார்க்கும் கேட்கும்படியாக; தண்குரல் - அடங்கிய குரல்.
10. மீஉயர் தோன்ற - மேற்பல் தோன்ற; நகாஅ - சிரிப்பாள்.
12. ஆய் இதழ் மல்க - இமைநீர் மிகும்படி.
15. நகுதிரோ? - சிரிப்பீரோ?
16. நல்ல நகாஅலிர் - நன்றாய்ச் சிரிக்கின்றீர்கள்.
17. உறீஇயான் - தந்தவன், செய்தவன்.
19. எற்சிதை - என்னைச் சிதைத்தவன் (துன்பம் தந்தவன்).
20. உற்றது - நடந்தது.
21. உரன் - மன வலிமை; உண்டாயின் - இருக்குமென்றால்.
22. பைதல் - வருத்தம்.
24. கோடுவாய் கூடாப் பிறை - களவுக்காலத்தில் தலைவரைப் பிரிந்த பெண்டிர், அவர் வருவாரா என்பதை அறிவதற்குக் குறி பார்ப்பதுபோல், கண்ணை மூடிக்கொண்டு மணலில் பிறைபோல் வரைவர்; இதற்குக் கூடலிழைத்தல் என்பது பெயர். கோட்டின் இரு முனைகளும் கூடினால் வருவார், அன்றெனில் வரமாட்டார் எனக் கொள்வர்.
26. மூஉய் - மூடி; சூடிய காணான் - சிவபெருமான் தான் சூடியிருக்கும் பிறையைப் பார்க்க இயலாது.
27. மணிமிடறு - கறுத்த கழுத்து.
29. தேராது - ஆராயாது.
31. உளைந்து - வருந்தி.
33. கடி - காவல்.
34. தொடுத்தேன் - வளைத்துப் பிடித்தேன்.

36. கரந்து - மறைந்து.
37. பகா - பிரித்து வழங்காத; கல் - மலை.
42. பௌவம் - கடல்; மாத்திரை - அளவில்.
44. தேர்கு - தேடுவதற்கு.
49. தகை - அழகு.
53. வெந்நீர் தெளிப்பின் - சூடான கண்ணீரைச் சிந்தினால்.
54. வேவது அளித்து - வெந்துவிடும்.
57. காவு - காவுதடி, தண்டு; தூங்கி - தூக்கி.
58. விழுமம் - துன்பம்.
62. கேள்வன் - துணைவன்.
63. நீர் - குணம், ஒளி, தன்மை (இங்கு ஒளியாகிய தன்மை).
64. காழ்கொண்டு - விதையுற்று (தேற்றாங்கொட்டை கொண்டு); தேற்ற - தெளிவிக்க.

கண்டோர் கூற்று

கலித்தொகை 143 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடைப் பிரிந்து நீட்டித்துழித் தலைமகள் பிரிவாற்றகில்லாது, நாணு வரையிறந்து கலங்கி மொழிந்து அறிவழிந்து அவன் வந்து சாரத் தெளிந்தமை கண்டார் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிவு நீட்டித்த இடத்துத் தலைவி, பிரிவை ஆற்றாளாகி, நாணம் கடந்து உள்ளம் கலங்கி, பொழுதொடு புலம்பியும், கூறாதன கூறியும் அறிவு அழிந்து மொழிந்தனள். தலைவன் வந்து சேர்ந்த அளவில் அவள் கலக்கம் ஒழிந்திட தெளிவு பெற்றாள். இதனைக் கண்டார் கூறியது.

தலைவன் பிரிவால் தான் வாடிக்கொண்டிருப்பதைத் தலைவியே கூறுவாளாயின், அவள் கையிகந்த காமத்தவள் என்றும், நாணம் இல்லாதவள் என்றும் அவளை ஊரார் பழிதூற்றுவர். இவ்வாறு தன்னடக்கமின்றிப் புலம்பும் தன்மை பெருந்திணைப்பாற்படும் என்பர் அகநூலார். எனினும், அகன்ஐந்திணை என்று கூறப்பெறும் திணை களுள்ளும் வழுவமைதியாய்ப் பெருந்திணைக் கூற்று நிகழ்வதுண்டு

என்றும் அகப்பொருள் கூறுகின்றது. அத்தகைய கூற்றே இப்பாடலில் கூறப்பெற்றுள்ளது.

அகல்ஆங்கண், இருள்நீங்கி, அணிநிலாத் திகழ்ந்தபின்,
பகல்ஆங்கண் பையென்ற மதியம்போல், நகல்இன்று
நல்நுதல் நீத்த திலகத்தள், மின்னி
மணிபொரு பசும்பொன்கொல்? மாஈன்ற தளிரின்மேல்
கணிகாரம் கொட்குங்கொல்? என்றாங்கு அணிசெல,
மேனி மறைத்த பசலையள், ஆனாது
நெஞ்சம் வெறியா நினையா, நிலன்நோக்கா,
அஞ்சா, அழாஅ, அரற்றா, இஃதுஒத்தி,
என்செய்தாள் கொல்?என்பீர்–கேட்டீமின் – பொன்செய்தேன்.

மறையில்தன் யாழ்கேட்ட மானை அருளாது,
அறைகொன்று, மற்றுஅதன் ஆர்உயிர் எஞ்ச,
பறைஅறைந் தாங்கு,ஒருவன் நீத்தான்–அவனை
அறைநவ நாட்டில்நீர் கொண்டுதரின், யானும்
நிறைஉடையேன் ஆகுவேன் மன்ற – மறையின்என்
மென்தோள் நெகிழ்த்தானை மேஎய் – அவன்ஆங்கண்
சென்று,சேட் பட்டது,என் நெஞ்சு.

'ஒன்றி, முயங்கும்'என்று, என்பின் வருதிர்;மற்று ஆங்கே,
'உயங்கினாள்' என்று,ஆங்கு உசாதிர்,மற்று அந்தோ,
மயங்கினாள்! என்று மருள்தீர், கலங்கன்மின்;
இன்உயிர் அன்னார்க்கு எனைத்து ஒன்றும் தீதுஇன்மை
என்உயிர் காட்டாதோ மற்று?

'பழிதபு ஞாயிறே! பாடுஅறியா தார்கண்
கழியக் கதழ்வை' எனக்கேட்டு, நின்னை
வழிபட்டு இரக்குவேன் வந்தேன்,என் நெஞ்சம்
அழியத் துறந்தானைச் சீறுங்கால், என்னை,
ஒழிய விடாதீமோ என்று.

அழிதக, மாஅந்தளிர் கொண்ட போழ்தினான் இவ்வூரார்
தாஅம் தளிர்சூடித் தம்நலம் பாடுப;
ஆஅம் தளிர்க்கும் இடைச்சென்றார் மீள்தரின்,

யாஅம் தளிர்க்குவேம் மன்.

நெய்தல் நெறிக்கவும் வல்லன்; நெடுமென்தோள்
பெய்கரும்பு ஈர்க்கவும், வல்லன்; இளமுலைமேல்
தொய்யில் எழுதவும் வல்லன்;தன் கையில்
சிலைவல்லான் போலும் செறிவினான்; நல்ல
பலவல்லன் – தோள்ஆள் பவன்.

நினையும்என் உள்ளம்போல், நெடுங்கழி மலர்கூம்ப,
இனையும்என் நெஞ்சம்போல், இனங்காப்பார் குழல்தோன்றச்
சாயஎன் கிளவிபோல், செவ்வழியாழ் இசைநிற்ப,
போயஎன் ஒளியேபோல் ஒருநிலையே பகல்மாய,
காலன்போல் வந்த கலக்கத்தோடு என்தலை
மாலையும் வந்தன்று, இனி.

இருளொடுயான் ஈங்குஉழப்ப, என்இன்றிப் பட்டாய்;
அருள்இலை; வாழி! – சுடர்!

ஈண்டுநீர் ஞாலத்துள் எம்கேள்வர் இல்லாயின்,
மாண்ட மனம்பெற்றார் மாசுஇல் துறக்கத்து
வேண்டிய வேண்டியாங்கு எய்துதல் வாய்எனின்,
யாண்டும், உடையேன் இசை.

ஊர்அலர் தூற்றும்;இவ் உய்யா விழுமத்துப்
பீர்அலர் போலப் பெரிய பசந்தன –
நீர்அலர் நீலம் என,அவர்க்கு அஞ்ஞான்று,
பேர்அஞர் செய்தஎன் கண்.

தன்உயிர் போலத் தழீஇ, உலகத்து
மன்உயிர் காக்கும்இம் மன்னனும் என்கொலோ –
இன்உயிர் அன்னானைக் காட்டி, எனைத்துஒன்றும்
என்உயிர் காவா தது;

எனஆங்கு,
மன்னிய நோயொடு மருள்கொண்ட மனத்தவள்,
பன்மலை இறந்தவன் பணிந்துவந்து அடிசேரத்
தென்னவன் தெளிந்த தேஎம்போல,
இன்நகை எய்தினள், இழந்ததன் நலனே.

தெளிவுரை

(பிரிவாற்றாமையால், தலைவி எவ்வாறெல்லாம் துன்புறுகின்றாள் என்பதை அவள் வாயிலாகவே கேட்ட சான்றோர் வருந்தியிருக்கின்றனர். அவர்கள் வருந்தியிருக்கும் அந்நேரத்தில் தலைவன் வந்துவிட, அவள் மிகவும் மகிழ்ச்சி கொள்ள, அது கண்ட சான்றோர்களும் மகிழ்ந்தனர் என இப்பாடல் கூறுகிறது.)

"சான்றோரே! 'அகன்ற இந்த ஊரில், இருளையகற்றும் அழகிய சந்திரன் போன்ற முகத்தைக் கொண்டவளாய் இருந்த இவள் இப்போது பகலிலே தோன்றும் சந்திரனைப் போன்று ஒளியற்ற முகத்துடன் தோன்றுகின்றாளே! நெற்றியில் எப்பொழுதும் திகழுகின்ற திலகத்தையும் இழந்து நிற்கிறாளே! மாணிக்கக்கல் பதிக்கப்பெற்ற பசுமையான பொன் போன்ற ஒளியைக் கொண்டிருந்தாளே! மாந்தளிரின்மேல் கோங்கு மலரின் தாது படிந்தது போன்ற அழகுடன் விளங்கினாளே! இப்போது இவள் அழகுத்தோற்றம் கெட்டுப் பசலை படரத் தோன்றுகிறாளே. இன்பம் தரும் பொருள்களைக் கண்டால் வெறுக்கின்றாளே. தன் நிலைக்காக வெட்கப்பட்டுப் பிறரை நேரே பார்க்காது குனிந்து நிலத்தைப் பார்க்கிறாளே. நாணமிகுதியால் அஞ்சி அழுகின்றாளே. மனக்குறைகள் பல கூறுகின்றாளே. இவள் உற்ற துன்பம் யாது? இவள் என்ன செய்யவிருக்கிறாள்?' என்று கேட்கின்ற சான்றோர்களே!" என்று கூறிய தலைவி, அவர்களை நோக்கி மேலும் கூறத் தொடங்கினாள்.

"அசுணமா என்னும் ஒரு விலங்கு நல்லிசையைக் கேட்டு மயங்கும்; கடும் இசை கேட்டால் சாகும். இதையறிந்த வஞ்சகன், அந்த அசுணத்தை அகப்படுத்த எண்ணி, முதலில் யாழிசை எழுப்ப, அது கேட்டு அசுணம் மயங்கி நிற்க, அப்போது பறையொலியை எழுப்பி அதைச் சாகுமாறு செய்து அகப்படுத்துவான். அந்த வஞ்சகனைப் போல என் தலைவன் எனக்கு இன்பம் தந்து என்னைத் தன் வயப்படுத்தினான். அவன் பிரிந்ததால் என் மெல்லிய தோள்கள் நெகிழ்ந்து அழகிழந்து விட்டன. எனினும், என் நெஞ்சம் அவனையே நாடிச் சென்றும்

யாஅம் தளிர்க்குவேம் மன்.

நெய்தல் நெறிக்கவும் வல்லன்; நெடுமென்தோள்
பெய்கரும்பு ஈர்க்கவும், வல்லன்; இளமுலைமேல்
தொய்யில் எழுதவும் வல்லன்;தன் கையில்
சிலைவல்லான் போலும் செறிவினான்; நல்ல
பலவல்லன் – தோள்ஆள் பவன்.

நினையும்என் உள்ளம்போல், நெடுங்கழி மலர்கூம்ப,
இனையும்என் நெஞ்சம்போல், இனங்காப்பார் குழல்தோன்றச்
சாயஎன் கிளவிபோல், செவ்வழியாழ் இசைநிற்ப,
போயஎன் ஒளியேபோல் ஒருநிலையே பகல்மாய,
காலன்போல் வந்த கலக்கத்தோடு என்தலை
மாலையும் வந்தன்று, இனி.

இருளொடுயான் ஈங்குஉழப்ப, என்இன்றிப் பட்டாய்;
அருள்இலை; வாழி! – சுடர்!

ஈண்டுநீர் ஞாலத்துள் எம்கேள்வர் இல்லாயின்,
மாண்ட மனம்பெற்றார் மாசுஇல் துறக்கத்து
வேண்டிய வேண்டியாங்கு எய்துதல் வாய்எனின்,
யாண்டும், உடையேன் இசை.

ஊர்அலர் தூற்றும்;இவ் உய்யா விழுமத்துப்
பீர்அலர் போலப் பெரிய பசந்தன –
நீர்அலர் நீலம் என,அவர்க்கு அஞ்ஞான்று,
பேர்அஞர் செய்தஎன் கண்.

தன்உயிர் போலத் தழீஇ, உலகத்து
மன்உயிர் காக்கும்இம் மன்னனும் என்கொலோ –
இன்உயிர் அன்னானைக் காட்டி, எனைத்துஒன்றும்
என்உயிர் காவா தது;

எனஆங்கு,
மன்னிய நோயொடு மருள்கொண்ட மனத்தவள்,
பன்மலை இறந்தவன் பணிந்துவந்து அடிசேரத்
தென்னவன் தெளிந்த தேஎம்போல,
இன்நகை எய்தினள், இழந்ததன் நலனே.

தெளிவுரை

(பிரிவாற்றாமையால், தலைவி எவ்வாறெல்லாம் துன்புறுகின்றாள் என்பதை அவள் வாயிலாகவே கேட்ட சான்றோர் வருந்தியிருக்கின்றனர். அவர்கள் வருந்தியிருக்கும் அந்நேரத்தில் தலைவன் வந்துவிட, அவள் மிகவும் மகிழ்ச்சி கொள்ள, அது கண்ட சான்றோர்களும் மகிழ்ந்தனர் என இப்பாடல் கூறுகிறது.)

"சான்றோரே! 'அகன்ற இந்த ஊரில், இருளையகற்றும் அழகிய சந்திரன் போன்ற முகத்தைக் கொண்டவளாய் இருந்த இவள் இப்போது பகலிலே தோன்றும் சந்திரனைப் போன்று ஒளியற்ற முகத்துடன் தோன்றுகின்றாளே! நெற்றியில் எப்பொழுதும் திகழுகின்ற திலகத்தையும் இழந்து நிற்கிறாளே! மாணிக்கக்கல் பதிக்கப்பெற்ற பசுமையான பொன் போன்ற ஒளியைக் கொண்டிருந்தாளே! மாந்தளிரின்மேல் கோங்கு மலரின் தாது படிந்தது போன்ற அழகுடன் விளங்கினாளே! இப்போது இவள் அழகுத்தோற்றம் கெட்டுப் பசலை படரத் தோன்றுகிறாளே. இன்பம் தரும் பொருள்களைக் கண்டால் வெறுக்கின்றாளே. தன் நிலைக்காக வெட்கப்பட்டுப் பிறரை நேரே பார்க்காது குனிந்து நிலத்தைப் பார்க்கிறாளே. நாணமிகுதியால் அஞ்சி அழுகின்றாளே. மனக்குறைகள் பல கூறுகின்றாளே. இவள் உற்ற துன்பம் யாது? இவள் என்ன செய்யவிருக்கிறாள்?' என்று கேட்கின்ற சான்றோர்களே!" என்று கூறிய தலைவி, அவர்களை நோக்கி மேலும் கூறத் தொடங்கினாள்.

"அசுணமா என்னும் ஒரு விலங்கு நல்லிசையைக் கேட்டு மயங்கும்; கடும் இசை கேட்டால் சாகும். இதையறிந்த வஞ்சகன், அந்த அசுணத்தை அகப்படுத்த எண்ணி, முதலில் யாழிசை எழுப்ப, அது கேட்டு அசுணம் மயங்கி நிற்க, அப்போது பறையொலியை எழுப்பி அதைச் சாகுமாறு செய்து அகப்படுத்துவான். அந்த வஞ்சகனைப் போல என் தலைவன் எனக்கு இன்பம் தந்து என்னைத் தன் வயப்படுத்தினான். அவன் பிரிந்ததால் என் மெல்லிய தோள்கள் நெகிழ்ந்து அழகிழந்து விட்டன. எனினும், என் நெஞ்சம் அவனையே நாடிச் சென்றும்

அவனைக் காணவில்லை. அவன் நவகண்டம் என்று கூறப் பெறும் நாட்டில் இருந்தாலும் அவனைத் தேடிக் கொண்டுவந்து சேர்த்தால் நான் பிற மகளிரைப் போல் மன உறுதியோடு இருப்பேன்" என்றாள்.

"பெரியீர்! என்றேனும் ஒரு நாள் இவள் தன் காதலனைக் கூடுவாள் என்று எனக்குத் தொடர்ந்து ஆறுதல் கூறி வருகின்றீர். தலைவன் சென்ற இடத்தில் அவனுக்கு ஏதாவது தீங்கு நிகழ்ந்ததோ என்று என்னையே கேட்கின்றீர். அதனால் இவள் மயங்குகின்றாள் என்று எண்ணி, நீர் வீணே கலங்காதீர். அவனுக்கு ஒரு தீங்கும் நேர்ந்திராது; நேர்ந்திருந்தால் என் உயிர் நிலைத்திருக்குமோ? நான் உயிருடன் உலாவுகின்றேன் என்பதே அவன் உயிரோடுதான் உள்ளான் என்பதை உங்களுக்கு அறிவுறுத்தும்" என்றிவ்வாறெல்லாம் தலைவி சான்றோரிடம் கூறிக்கொண்டிருந்தாள்.

பெரியோர், "அவன் உன்னை வருத்துவதால் நடுநிலை நிற்கும் ஞாயிறு அவனை வருத்தும்" என்றனர்.

அவள் சூரியனை நோக்கி, "யாவரையும் ஒத்தவராய்க் கருதும் கதிரவனே! உலகில் நடுநிலையற்றவரை விரைந்து சென்று தண்டிப்பாய் என்று இவர்கள் கூறுகின்றனர். ஆனால், என்னைப் பிரிந்தவனைத் தண்டிக்கும்போது என்னை மறவாதே. எனது உயிரும் அவன் உயிரும் ஒன்று. அவன் உயிர் நீங்கின் நானும் இறப்பேன். அதனால் உன்னை வேண்டி வழிபடு கின்றேன்; அவனைத் தண்டித்துவிடாதே" என்று இவ்வாறு அவள் கதிரவனை வேண்டிக்கொண்டிருந்த நிலையில் கதிரவன் மறைந்துகொண்டிருந்தான்.

அவள் தொடர்ந்து சான்றோரிடம், 'பிரிந்தவர் நெஞ்சம் துன்புற மாந்தளிர் போன்ற நிறத்துடன் மாலை வந்து சேர்ந்தது. காதலனுடன் கூடியிருப்போர், மாலையணிந்து இன்ப வாழ்வின் நலத்தைப் பாடி மகிழ்கின்றனர். ஆச்சா மரம் தளிர்க்கும் காட்டு வழியிலிருந்து தலைவன் மீண்டு வந்தால் நானும் அவர்களைப் போல மகிழ்வேன்" என்று அவள் சொல்லிக்கொண்டிருந்த நிலையில் கதிரவன் முற்றிலும் மறைந்து மாலைக்காலம் வந்தது.

"சான்றோரே! என் தலைவன் வரவு நிகழவில்லை. அவன் வந்தால் நான் எவ்வாறெல்லாம் மகிழ்ச்சியடைவேன் என்றறிய நீங்கள் ஆவலாய் உள்ளீரா? அப்படியானால் நான் கூறுவதைக் கேளுங்கள்" என்றாள், தலைவி.

அந்த நிலையில் தலைவி, "என் தலைவன் எனக்கு நெய்தற்பூவின் புறவிதழைப் போக்கித் தருவான்; நீண்ட மென்தோள்களில் கரும்புபோலத் தொய்யில் எழுதுவான்; அவன் தன் கையிலே வில்லுடன் காமனை ஒத்த அழகுடன் விளங்குவான்; நல்ல பல கலைகளிலும் வல்லவன்; அவனே என் தோள் ஆள்பவன். அவனை நினைந்து என் உள்ளம் குவிவது போல, இங்கே காணப்படும் நீண்ட கடற்கழியின் சோலையில் மலர்ந்த மலர்கள் குவிந்து கூம்புகின்றன; கோவலர்களின் குழலில் எழும்பி வரும் இசைகூட என் உள்ளத்தில் உள்ள இரங்கல் ஒலியைக் கொண்டதாகவே உள்ளது. இங்கே மலர்களில் தேனுண்ணுகின்ற வண்டுகளின் ஓசை செவ்வழிப் பண்போல இருக்கும்; ஆனால், இப்பொழுது, அஃது என் வருத்த மொழிகள் போலச் சீர்கெட்டுள்ளது. கெட்டுவிட்ட என் அழகு போலப் பகல் ஒளி மங்கியுள்ள இந்த நேரத்தில், கலக்கத்துடன் வந்த காலனைப் போல இந்த மாலை வந்துள்ளது; இனி எவ்வாறு நான் அமைதி கொள்ள இயலும்?" என்று கூறிக் கொண்டிருந்தாள்.

இவ்வாறு, அவள் கூறிக்கொண்டிருக்கும்போழ்தே மேற்கு மலையில் கதிரவன் முற்றிலுமாய் மறைந்ததைக் கண்ட தலைவி, "சுடரே! நான், இங்கு இருளோடு வாடுகின்றேன்; நீயோ அதுபற்றி எந்தவித எண்ணமுமின்றி மறைந்து அருள் இல்லாதவனாய்த் தோன்றுகின்றாய். எனினும், நீ வாழ்க!" என்றாள்.

கதிரவனை வாழ்த்திய தலைவி, மீண்டும் பலவாறு கூறி வருத்தம் கொள்ளத் தொடங்கினாள். "நீர்சூழ் இந்த உலகத்தில், தம் கணவரைக் கூடப்பெறாமல், தனித்திருந்து அவரையே எண்ணி இறுதிவரை வாழ்ந்து இறந்துவிடும் மாட்சிமை

கொண்ட மகளிர், சொர்க்கம் சென்று தாம் விரும்பியவற்றை விரும்பியவாறே அடைவர் என்று நூல்கள் கூறுகின்றன. அதனை உண்மை என்றே கருதி, நானும் அவன்மீதே எப்பொழுதும் வேட்கை கொண்ட உள்ளத்தோடு இறந்து, சொர்க்கம் சென்று, நான் எண்ணியாங்கு புகழைக் கொள்வேன். எனவே, இனி நான் வருந்த வேண்டியதில்லை" என்று தன்னைக் கண்டோர் கேட்குமாறு கூறினாள்.

"நீரில் மலர்ந்த நீலம் என்று அந்நாளில் தலைவர் புகழ, அவருக்கு மிகுந்த வருத்தத்தைச் செய்த கண்கள் இப்போது பீர்க்கம்பூவைப் போல மிகவும் பசந்தன. அதனையும் என் வருத்தத்தையும் கண்டு அருளின்றி என்னை இவ்வூரும் அலர் தூற்றுகிறது" என்றாள், தலைவி.

மேலும், "இவ்வுலகத்து மக்களைத் தன்னுயிர்போல் காப்பவன், மன்னவன். அவன் உயிர் போன்ற என்முன் தோன்றி அவன் என்னைக் காக்காததும் ஏனோ?" என்றாள், தலைவி.

இவ்வாறு கூறியவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந் தனர், சான்றோரான அயலார்.

அப்பொழுது மலைகள் பல கடந்து சென்ற அவள் காதலனாகிய தலைவன், தன் தவறுணர்ந்து, தலைவியை நாடிவந்து, தான் செய்த பிழையைப் பொறுக்குமாறு கூறிப் பணிந்து நின்றான். பாண்டிய மன்னனிடம் நட்புடன் உறவாடிய பிற நாட்டு மக்கள் வளம் பெற்று வாழ்வது போல, தலைவியும் தான் இழந்த நலத்தை எய்தித் தலைவன் வரவை எண்ணி மகிழ்ந்தாள். 'இஃது என்ன வியப்போ' என்று கண்டார் கூறினர்.

கருத்து

பிரிவாற்றாமையால் தலைவி எவ்வாறெல்லாம் துன்புறுகிறாள் என்பதை அவள் வாயிலாகவே கேட்ட சான்றோர் வருந்தியிருந்த நேரத்தில் தலைவன் வந்துவிட, தலைவி மிகவும் மகிழ்ச்சி கொள்ள, அது கண்ட சான்றோரும் மகிழ்ந்தனர்.

குறிப்பு

1. தலைவனுக்கும் தலைவிக்கும் உயிர் ஒன்றே என்பதை இப்பாடல் சிறப்பாய்ப் புலப்படுத்தியுள்ளது. 'என் உயிர் போகாமல் இருப்பதே, தலைவன் உயிரோடு உள்ளான் என்பதைக் காட்டும்' என்னும் கூற்று மிக்க நுண்பொருள் கொண்டது.

2. கணவர் இறந்த பின்பு கற்புடைப்பெண்டிர் வானுலகில் அவரை மீண்டும் தம் கணவராய்ப் பெறுவர் என்னும் நம்பிக்கை இப்பாடலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சொற்பொருள்

1. அகல் ஆங்கண் - அகன்ற ஊரினிடத்து.
2. நகல் - ஒளி.
3. திலகம் - நெற்றிப்பொட்டு.
4. மணிபொரு - மாணிக்கக்கல் பொருத்தப்பட்ட; பசும்பொன் - பசுமையான பொன்.
5. கணிகாரம் - கோங்க மலரின் தாது; கொட்குதல் - படர்தல், கொட்டுதல்.
7. வெறியா - இனியனவற்றை வெறுக்கின்றாள்.
8. இஃது ஒத்தி - இங்கே ஒருத்தி.
9. பொன் செய்தேன் - சங்க காலத்தில் 'என் செய்தாய்?' என்ற வினாவுக்கு உடனடியாக, 'பொன் செய்தேன்' என்று கூறுவது மரபு.
10. மா - அசுணமா என்னும் விலங்கு.
11. அறை - வஞ்சனை.
13. நவநாடு - புது நாடு.
16. சேட்பட்டது - நெடுங்காலம் ஆயிற்று.
18. உயங்கினாள் - வருந்தினாள்; உசாதிர் - வினவுகின்றீர்.
19. மருள்தீர் - மயங்காதீர்.
22. பழி தபு ஞாயிறு - தீயோரைத் தண்டிக்கும் ஞாயிறு; தபு - நீக்கு; பாடு - ஒழுக்கப் பண்பாடு.
23. கதழ்வை - விரைவாய் (விரைந்து சினப்பாய்).
25. சீறுங்கால் - தண்டிக்கும்போது.
27. மா - மரம்.
29. ஆ - ஆச்சா மரம்.
31. நெறித்தல் - (இதழை) முரித்தல்.
32. பெய்கரும்பு ஈர்தல் - கரும்பு வடிவில் தொய்யில் எழுதுதல்.

34. சிலைவல்லான் - மன்மதன் (சிலை - வில்).
36. கூம்ப - குவிய.
37. இனையும் - வருந்தும்; இனங்காப்பார் - பசு இனம் காக்கும் ஆயர்.
38. சாய - தேய்ந்து.
40. காலன் - எமன்.
42. பட்டாய் - மறைந்தாய்.
43. சுடர் - சூரியன்.
44. கேள்வர் - துணைவர், கணவர்.
45. துறக்கம் - சுவர்க்கம்.
46. வாய் - உண்மை.
47. இசை - புகழ்.
49. பீர்அலர் - பீர்க்கம் பூ.
50. அலர் - மலரும்.
51. அஞர் - துன்பம்.
52. தழீஇ - தழுவி.
57. மன்னுதல் - நிலைபெறுதல்.
59. தென்னவன் - பாண்டியன்; தேஎம் - தேசம், நாடு.

கண்டோர் கூற்று

கலித்தொகை 144 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடைப் பிரிந்து நீட்டித்துழித் தலைமகள் பிரிவாற்றகில்லாது, நாணு வரையிறந்து கலங்கி மொழிந்து அறிவழிந்து அவன் வந்து சாரத் தெளிந்தமை கண்டார் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிவு நீட்டித்த இடத்துத் தலைவி, பிரிவை ஆற்றாதாளாகி, நாணம் கடந்து உள்ளம் கலங்கி, பொழுதொடு புலம்பியும், கூறாதன கூறியும் அறிவு அழிந்து மொழிந்தனள். தலைவன் வந்து சேர்ந்த அளவில் அவள் கலக்கம் ஒழிந்திடத் தெளிவு பெற்றாள். இதனைக் கண்டார் கூறியது.

தலைவன் பிரிவால் தான் வாடிக்கொண்டிருப்பதைத் தலைவியே கூறுவாளாயின், அவள் கையிகந்த காமத்தவள் என்றும், நாணம் இல்லாதவள் என்றும் அவளை ஊரார் பழிதூற்றுவர். இவ்வாறு தன்னடக்கமின்றிப் புலம்பும் தன்மை பெருந்திணைப்பாற்படும் என்பர் அகநூலார். எனினும், அகன்ஐந்திணை என்று கூறப்பெறும் திணை களுள்ளும் வழுவமைதியாய்ப் பெருந்திணைக் கூற்று நிகழ்வதுண்டு என்றும் அகப்பொருள் கூறுகின்றது. அத்தகைய கூற்றே இப்பாடலில் கூறப்பெற்றுள்ளது.

நன்னுதால்! காண்டை; நினையா; நெடிதுஉயிரா,
என்உற்றாள் கொல்லோ? இஃதுஒத்தி—பல்மாண்
நகுதரும்—தன்நாணுக் கைவிட்டு, இகுதரும்
கண்ணீர் துடையா, கவிழ்ந்து, நிலன்நோக்கி,
அன்ன இடும்பை பலசெய்து, தன்னை
வினவுவார்க்கு ஏதில சொல்லிக் கனவுபோல்,
தெருளும் மருளும் மயங்கி வருபவள்
கூறுப கேளாமோ, சென்று?

'எல்லா?நீ, என்அணங்கு உற்றனை? யார்நின் இதுசெய்தார்?
நின்உற்ற அல்லல் உரை,'என என்னை
வினவுவீர்! தெற்றெனக் கேண்மின்; ஒருவன்,
'குரல்கூந்தால், என்உற்ற எவ்வம் நினக்குயான்
உரைப்பஅனைத் தங்கிற்று,என் இன்உயிர்' என்று.
மருவுஊட்டி, மாறி யதற்கொண்டு, எனக்கு
மருவுஉழிப் பட்டது, என் நெஞ்சு.

எங்கும் தெரிந்துஅது கொள்வேன், அவன்உள்வழி.
பொங்குஇரு முந்நீர் அகம்எல்லாம் நோக்கினை
திங்களுள் தோன்றி இருந்த குறுமுயால்—
எம்கேள் இதன்அகத்து உள்வழிக் காட்டீமோ?

காட்டீயாய் ஆயின், கதநாய் கொளுவுவேன்;
வேட்டுவர் உள்வழிச் செப்புவேன்; ஆட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் – மதிதிரிந்த
என்அல்லல் தீராய் எனின்.

என்றுஆங்கே, உள்நின்ற எவ்வம் உரைப்ப, மதியொடு
வெண்மழை ஓடிப் புகுதி; சிறிதுஎன்னைக்
கண்ணோடி னாய்போறி, நீ.

நீடுஇலைத் தாழைத் துவர்மணற் கானலுள்
ஓடுவேன்; ஓடி ஒளிப்பேன்! பொழில்தொறும்.
நாடுவேன்; கள்வன் கரந்திருக்கற் பாலன்கொல்?

ஆய்பூ அடும்பின் அலர்கொண்டு, உதுக்காண்,எம்,
கோதை புனைந்த வழி.

உதுக்காண்–சாஅய் மலர்காட்டி, சால்பிலான், யாம்ஆடும்
பாவைகொண்டு ஓடி யுழி;

உதுக்காண்–தொய்யில் பொறித்த வழி.
உதுக்காண்– 'தையால் தேறு'எனத் தேற்றி, அறனில்லான்
பைய முயங்கி யுழி.

அளியஎன் உள்ளத்து உயவுத்தேர் ஊர்ந்து,
விளியாநோய் செய்து,இறந்த அன்பி லவனைத்
தெளிய விசும்பினும் ஞாலத் தகத்தும்
வளியே! எதிர்போம் பலகதிர் ஞாயிற்று
ஒளிஉள் வழிஎல்லாம் சென்று; முனிபுஎம்மை
உண்மைநலன் உண்டு ஒளித்தானைக் காட்டீமோ;
காட்டாயேல், மண்ணகம் எல்லாம் ஒருங்கு சுடுவேன்,என்
கண்ணீர் அழலால் தெளித்து.

பேணான், துறந்தானை நாடும் இடம்விடாய் ஆயின் –
பிறங்குஇரு முந்நீர்! வெறுமணல் ஆகப்
புறங்காலின் போக இறைப்பேன்; முயலின்,
அறம்புணை யாகலும் உண்டு.

துறந்தானை, நாடித் தருகிற்பாய் ஆயின், நினக்குஒன்று
பாடுவேன், என்நோய் உரைத்து.

புல்லிய கேளிர் புணரும் பொழுதுஉணரேன்–
'எல்லிஆக' எல்லை,என்று ஆங்கே, பகல்,முனிவன்,

எல்லிய காலை, இரா,முனிவன் யான்உற்ற,
அல்லல் களைவார் இலேன்.

ஓஒ!கடலே! தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற இமைஎடுத்துப்
'பற்றுவேன்' என்றுயான் விழிக்குங்கால் மற்றும்என்
நெஞ்சத்துள் ஓடி ஒளித்து,ஆங்கே துஞ்சாநோய்,
செய்யும், அறனில் லவன்.

ஓஒ!கடலே! ஊர்தலைக் கொண்டு கனலுங் கடுந்தியுள்
நீர்பெய்தக் காலே சினந்தணியும்; மற்றுஇஃதோ
ஈரம்இல் கேள்வன் உறீஇய காமத்தீ
நீருள் புகினுஞ் சுடும்.

ஓஒ!கடலே! எற்றமி லாட்டிஎன் ஏமுற்றாள்? என்றுஇந்நோய்,
உற்றுஅறியா தாரோ நகுக! நயந்தாங்கே
இற்றா அறியின், முயங்கலேன், மற்றுஎன்னை
அற்றத்துஇட்டு ஆற்று அறுத்தான் மார்பு.

ஆங்கு—
கடலொடு புலம்புவோள் கலங்குஅஞர் தீரக்
கெடல்அருங் காதலர் துணைதரப் பிணிநீங்கி,
அறன்அறிந்து ஒழுகும் அங்க ணாளனைத்
திறன்இலார் எடுத்த தீமொழி எல்லாம்
நல்அவை யுள்படக் கெட்டாங்கு,
இல்லா கின்று,அவள் ஆய்நுதல் பசப்பே.

தெளிவுரை

தன் காமநோயைக் கட்டுப்படுத்திக்கொண்டு ஆறுதல் பெற வியலாத தலைவி ஒருத்தி தன் காதலன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றமையை எண்ணி வருந்தி, சற்றும் நாணமின்றித் தன் துன்பங்களைப் பிறர் காணவும் கேட்கவும் இயலுமாறு நடந்து கொண்டாள். அதனைக் கண்ட சான்றோர், "அழகிய நெற்றியைக் கொண்ட இவள் என்ன துன்பமுற்றாளோ? மிகுதியாய் நினைத்துப் பெருமூச்சு விடுகிறாள். வெட்கத்தை விட்டு அடிக்கடி சிரிக்கிறாள். வழியும் கண்ணீரைத் துடைத்துத் தலைகவிழ்ந்து தரையைப் பார்க்கிறாள். இவைபோன்று

துன்பத்தை வெளிப்படுத்தும் பல மெய்ப்பாடுகளைக் கொண்டவளாய் இருக்கிறாள். 'நன்னுதால் நீ உற்றது என்ன?' என்று கேட்போருக்குப் பொருத்தமின்றி விடை கூறி, கனவு கண்டவள் போல் தெளிவும், மயக்கமும் கொண்டு விளங்குகிறாள். அவள் என்ன கூறுகிறாள் என்று நாம் கேட்போமா?" என்று அவள் அருகில் சென்றனர். அவர்களைத் தன்னருகே கண்ட தலைவி,

" 'பெண்ணே! உன் துயரமென்ன, அதை உண்டாக்கியவர் யார்' என்று பெரியோராகிய நீங்கள் கேட்கின்றீர். நான் சொல்வதைக் கேளுங்கள்" என்று கூறத் தொடங்கினாள். "நான் தனித்து நின்ற போது ஒருவன் வந்து, 'கொத்தாய் நிற்கும் கூந்தலைக் கொண்டவளே! என் காதல்நோயை உனக்குச் சொல்லும்வரை என் உயிர் நிற்குமா என்று ஐயுற்றேன். நல்ல வேளையாக உயிர் நீங்கவில்லை' என்று மயக்குமொழி கூறினான். அவன் கூறியதை நம்பி அவனோடு உறவு கொண்டேன். 'உன்மீதுள்ள அன்பை ஏற்றுக்கொண்டு எனக்கு அருள் செய்தால் உயிரோடிருப்பேன்' என்று கூறி உறவு கொண்டான்.

"பின்பு அவன் பிரிந்தான். அன்றுமுதல் என் நெஞ்சு அவன் சென்றுள்ள இடங்களுக்கெல்லாம் சென்றுள்ளது. எவ்வாறேனும் அவனைத் தேடிப் பிடித்து அழைத்துக்கொள்வேன்" என்று கூறினாள்.

சான்றோரிடம் ஆற்றாது பேசியவள் மதியைக் கண்டு அதனுள் இருக்கும் குறுமுயலோடு பேசலுற்றாள். "திங்களுள் தோன்றும் குறுமுயலே! பொங்கி எழும் பெருங்கடல் சூழ்ந்துள்ள இடமெல்லாம் செல்லுகின்ற தகுதி உனக்கு உண்டு. எனக்கு அருள் செய்து, அன்பின் மிகுதியைத் தந்து பிரிந்த, அன்பில்லாத தலைவனை நீ தேடிக் கண்டு எனக்குக் காட்டு. அவ்வாறு காட்டாயாயின் உனக்குப் பகையான வேட்டுவனிடம் கூறி, உன்மீது அந்த வேட்டை நாயை ஏவிடச் செய்வேன்; அது மட்டுமன்றி நீ அரணாய்ப் பெற்றுள்ள திங்களைக் கௌவிக் கொள்ளுமாறு பாம்பை அனுப்புவேன்" என்றாள்.

இவ்வாறு தலைவி புலம்பிக்கொண்டிருந்தபோது சந்திரன் மேகத்தினுள் மறைந்தது. அது கண்டு, "என் மனத்தில் மாறாது

நின்ற துன்பத்தை நான் கூற, நீ சந்திரனோடு வெண்மேகத்தினுள் புகுகின்றாய்; என்மீது சிறிது இரக்கம் கொண்டு நீயும் தேடுகிறாய் போலும்" என்று கூறினாள். பின்பு, தன் தலைவனைத் தேடுதற்குரிய வழியை அம்முயலுக்குக் கூறக் கருதி,

"அவன் எங்கேனும் மறைந்திருப்பானோ என்று அவனைக் காண்பதற்காகத் தாழைச்செடி விளங்கும் சிவந்த மணலைக் கொண்ட கானலில் சோலைதோறும் ஓடிச்சென்று பார்ப்பேன்; சற்று ஒளிந்திருந்து காண்போம் என்று மறைந்தும் இருப்பேன். நீயும் அவ்வாறே தேடு" என்று கூறினாள்.

"அவன் என்னோடிருந்த இடங்களையும் நீ அறிந்துகொள். அதோ பார்! இந்த இடத்திலேதான், அவன் எனக்காக அடும்பு மலர்களை மாலையாய்த் தொடுத்துக்கொண்டிருந்தான். அம் மாலையை எனக்கு அணிவித்தும் அமைதி கொள்ளாது, நான் விளையாடும் கோரைப்புல் பொம்மைகளையும் மலர்களையும் எனக்குக் காட்டி, அவற்றை என்னிடம் தாராமல் போக்குக் காட்டி ஓட, நானும் அவன்பின் ஓடி நின்ற இடம் இதுதான்; இதையும் நீ காண்க. அதோ பார்! அந்த இடத்திலேதான் அவன் எனக்குத் தொய்யில் எழுதி மகிழ்ந்தான்; தன் மனத்தில் அறநெறிச் சிந்தனையே இல்லாத அவன் என்னிடம், 'நின்னைப் பிரியேன்; நீ மனந்தேறியிரு' என்று கூறிய இடம் இதுதான்; இவ்வாறு சொல்லித்தான் இந்த இடத்திலே என்னைத் தழுவினான்" என்று முயலிடம் சொல்லிக்கொண்டிருக்கும் போது, முயல் முழுவதுமாய் மேகத்தில் மறைந்தது.

ஆதலால், அதனிடம் பேசுவதைவிட்டு, தன்மீது வீசிய காற்றை நோக்கி, "காற்றுத்தெய்வமே! சந்திரனைப்போல் அன்றி விண்ணும் மண்ணும் பரவும் கதிர்களைக் கொண்ட ஞாயிற்றின் ஒளி பரவும் இடமெல்லாம் செல்லும் தகுதி உனக்கு உண்டு. தன்னால் மட்டுமே நீக்கக்கூடிய காம நோயை எனக்குத் தந்துவிட்டு என்னை விட்டுப் பிரிந்து போன அன்பில்லாத என் காதலனை நீ தேடிக் கண்டு வந்து காட்டு; அவ்வாறு காட்டாயாயின் என் கண்ணீரைத் தெளித்து அதில் எழும்

தீயினால் உன்னை மட்டுமன்றி இவ்வுலகத்தையும் ஒருங்கே எரிப்பேன்" என்று கூறினாள்.

பின்னர் அக்காற்றைக் காணாமையால், அவள் கடலை நோக்கி, "அலையெழுந்து வரும் பெருங்கடலே! என்னைப் பேணாது கைவிட்டவனை நான் தேடுதற்கு இடம் விடு. விடவில்லையேல், என் புறங்காலினால் உன்னிடமுள்ள நீரையெல்லாம் இறைத்து மணல்மேடாய் ஆக்கிவிடுவேன். அவ்வாறு செய்ய இயலுமா என்று எண்ணாதே. முயன்றால் அறமே முன்நின்று தெப்பமாய் எனக்குத் துணை புரியும். அதற்குத் தேவையின்றி நீயே அவனைத் தேடித் தருவாயாயின் உனக்காக இப்பொழுதே என் துன்பத்தை விளக்கிப் பாடல் ஒன்று பாடுவேன்" என்றாள்.

கடலை நோக்கி அவள் பாடியது:

"ஓ! கடலே! காலம் எதுவுமே உணரேன். இப்போது இரவை இரவென்றும், பகலைப் பகலென்றும் உணரேன்! இரவென்று பகலை வெறுப்பேன்; பகலென்று இரவை வெறுப்பேன். கடலே! இந்நிலையில் என் துன்பத்தைப் போக்குவார் உன்னைத் தவிர வேறு எவரும் இலர்.

"ஓ! கடலே! நான் படுத்திருக்கும்போது அறமில்லாத அவன் என் கண்ணுக்குள் தெளிவாய் வந்து தோன்றுவான். (அவன் நிற்பது போலவே உண்மையில் தோன்றும்.) அவனைப் 'பிடி' என்று நான் கண் விழித்தால், ஓடிப்போய் நெஞ்சினுள்ளே மறைவான். (தோற்றத்தை விட்டு நினைவாய் நிலைப்பான்.) மறைந்து, நான் துயிலாதபடி துன்பத்தைத் தருகின்றான்.

"ஓ! கடலே! ஊரைச் சூழ்ந்து பற்றி எரியும் பெருநெருப்புக் கூட நீரைச் சொரிந்தால் அவிந்துவிடும். ஆனால், அருளில்லாத என் தலைவன் எனக்கு உண்டாக்கிய இக்காமத் தீ நீரினுள் நான் நுழைந்தாலும் என்னைச் சுடுகின்றதே!

"ஓ! கடலே! இக்காமநோயை உற்றறியாதோர், 'இவள் மனத் திட்பமில்லாதவள்; ஆதலால், மனங்கலங்கிப் பித்தேறினாள்'

என்று என்னை எள்ளி நகையாடுகின்றனர். உண்மை அறியாதவர் சிரிக்கட்டும்! இக்காமநோய்க்குத் துணையாவார் எவரும் இல்லாத சூழ்நிலையில் என் வலிமையைக் கெடுத்தவன் மார்பை, 'இத்தகையது' என்று நான் அவனை விரும்பிய அக்காலத்தே அறிந்திருந்தால் தழுவியிருக்க மாட்டேன். ஆனால், அந்தோ, அஃதை அறியாது போனேன்" என்றாள்.

இப்படி அவள் கடலோடு புலம்பிக்கொண்டு இருந்ததைச் சான்றோர் கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில் அவளைத் தவிக்கச் செய்த, கெடுதல் ஏதும் அறியாத தலைவனும் கலக்கம் கொண்ட அவள் துன்பம் தீருமாறு விரைந்து வந்து சேர, அவளும் மகிழ்ந்தாள்.

அதனைக் கண்ட சான்றோர், "கண்ணோட்டம் கொண்ட அறநெறியாளன் ஒருவனைப் பற்றித் தீயோர் சிலர் சேர்ந்து கூறிய பழிச்சொற்கள், நன்மக்கள் கூடிய மன்றத்துள் நீங்கி அழிந்தன போல, இவளின் அழகிய நுதலில் படர்ந்திருந்த பசப்பு நீங்கி மகிழ்ச்சியோடு காணப்படுகின்றாள்" என்று கூறினர்.

கருத்து

தலைவன் பிரிவாற்றாமையைத் தாங்கவியலாத தலைவி நிலவில் தோன்றும் முயலையும், தன்மீது வீசிய காற்றையும், கண் முன்னே தோன்றிய கடலையும் நோக்கித் தன் துன்பங்களையெல்லாம் கூறிக்கொண்டிருந்த போது தலைவன் வந்து சேரவே, அவனைத் தழுவி மகிழ்ந்தாள். அவள் வருத்தத்தைக் கண்டு, அதற்காக இரங்கியிருந்தோரும் அவள் வருத்தம் தீர்ந்தது கண்டு மகிழ்ந்தனர்.

குறிப்பு

1. 'தான் காதலித்தவனைத் தேடித் தாராவிட்டால், நிலவுக் குறுமுயல்மீது வேட்டை நாயை ஏவுவேன்' என்பதும், கடலை, 'மணல்மேடாய்த் தூர்த்துவிடுவேன்' என்பதும் தலைவியின் உள்ள வேகத்தை இயல்பாய்ச் சுட்டுகின்றன.
2. 'காமத் தீ நீரினுள் புகினும் சுடும்' என்பது சிறந்த தொடர்.

3. தலைவன் திரும்பி வந்த நிலையில் தலைவியிடத்துப் பரவியிருந்த பசலை விரைந்து மறைந்தமைக்கு, “அறநெறியாளன் ஒருவனைப்பற்றி அழுக்குடையார் சிலர் சேர்ந்து கூறிய பழிச்சொற்கள், நன்மக்கள் கூடியுள்ள இடத்தைச் சென்றடையும்போதே நீங்கி அழியும்” எனச் சிறந்த உவமை கூறப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. காண்டை - காண்பாய்; உயிரா- பெருமூச்சு விடுதல்.
2. பல்மாண் - பலமுறை.
3. இருதரும் - சொரியும்.
6. ஏதில - பொருத்தமற்ற சொற்கள்.
9. அணங்கு - வருத்தம்.
11. தெற்றென - தெளிவாய்.
12. குரல் - கூந்தலில் ஒரு வகை (கொத்து).
13. உரைப்பனை - சொல்லுகின்ற காலம்வரை.
14. மருவு - மயக்கம்; மாறி - என் மனம் மாறி.
15. மருவுஉழி - புணர்ந்த காலத்து.
16. உள்வழி - உள்ள இடம்.
17. அகம் - உலகம்.
19. எம் கேள் - என் தலைவன்.
20. கதநாய் - வேட்டை நாய்; கொளுவுவேன் - ஏவுவேன்.
25. வெண்மழை - வெண் மேகம்.
26. கண்ணோடுதல் - இரக்கம் காட்டுதல்; போறி - போலும்.
27. துவர்மணல் - சிவந்த மணல்.
29. கரந்திருத்தல் - மறைந்திருத்தல், ஒளிந்திருத்தல்.
30. அடும்பு - அடும்பங்கொடி; உதுக்காண் - சேய்மையும் அண்மையுமின்றி இடையில் உள்ள இடம். இதனைக் குறிப்பதற்குப் பழந்தமிழில் ‘உ’ கரத்தைப் பயன்படுத்தினர்.
32. சாஅய் - கோரைப்புல்.
36. பைய - மெதுவாய்.
37. உயவு - பிழைக்கும் வழி.
42. உண்மை நலன் - இயற்கை அழகு.
47. புறங்கால் - புற அடி.
50. நோய் - துன்பம்.

51. புல்லிய கேளிர் - சிறுமையான உறவினர் (தலைவன்).
52. முனிதல் - வெறுத்தல்.
55. இமை எடுத்து - இமைகளை விழித்து.
61. ஈரம்இல் கேள்வன் - அன்பு இல்லாத தலைவன்.
63. எற்றம் - மனத்துணிவு; ஏமுறுதல் - பித்தேறுதல்.
65. அறியின் - இப்படியென அறிந்தால்; அற்றம் - துணையற்ற நிலை.
66. ஆற்றறுத்தான் - வலியழித்தான்.
69. துணைதர - விரைந்து வர.
70. அங்கணாளன் - அறச்சிந்தனையாளன்.
71. திறனிலார் - தீயோர்; எடுத்த - கூறிய.
72. பட - நீங்கி.

கண்டோர் கூற்று

கலித்தொகை 145 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடைப் பிரிந்து நீட்டித்துழித் தலைமகள் பிரிவாற்றகில்லாது, நாணு வரையிறந்து கலங்கி மொழிந்து அறிவழிந்து அவன் வந்து சாரத் தெளிந்தமை கண்டார் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்து நீட்டித்த இடத்து, தலைவி பிரிவை ஆற்றாதவளாகி, நாணம் கடந்து, உள்ளம் கலங்கி, இயற்கைப்பொருள்களோடு கூறத்தகாதன கூறி, அறிவு அழிந்து மொழிந்தனள். தலைவன் வந்து சேர்ந்த அளவில் அவள் கலக்கம் ஒழிந்திடத் தெளிவு பெற்றாள். இதனைக் கண்டார் கூறியது.

துனையுநர் விழைதக்க சிறப்புப்போல், கண்டார்க்கு
நனவினுள் உதவாது நள்ளிருள் வேறாகும்
கனவின் நிலையின்றால், காமம்; ஒருத்தி

உயிர்க்கும்; உசாஅம்; உலம்வரும், ஓவாள்
கயல்புரை உண்கண் அரிப்ப அரிவாரப்
பெயல்சேர் மதிபோல, வாள்முகம் தோன்ற,
பலஒலி கூந்தலாள், பண்பெல்லாம் துய்த்துத்

துறந்தானை உள்ளி, அழூஉம்; அவனை
மறந்தாள்போல் ஆலி நகூஉம்; மருளும்
சிறந்ததன் நாணும் நலனும் நினையாது

காமம் முனைஇயாள், அலந்தாள்என்று எனைக்காண
நகான்மின்; கூறுவேன், மாக்காள் மிகாஅது
மகளிர், தோள்சேர்ந்த மாந்தர் துயர்கூர நீத்தலும்,
நீள்சுரம் போகியார் வல்லைவந்து அளித்தலும்,
ஊழ்செய்து, இரவும் பகலும்போல், வேறாகி,

வீழ்வார்கண் தோன்றும்; தடுமாற்றம் ஞாலத்துள்
வாழ்வார்கட்கு எல்லாம் வரும்.

தாழ்பு, துறந்து தொடிநெகிழ்த்தான் போகிய கானம்
இறந்துஎரி நையாமல், பாஅய் முழங்கி–
வறந்துஎன்னை செய்தியோ, வானம்? சிறந்தஎன்–
கண்ணீர்க் கடலால், கனைதுளி வீசாயோ
கொண்மூக் குழீஉ முகந்து?

நுமக்குஎவன் போலுமோ? ஊரீர்! எமக்கும்எம்
கண்பாயல் கொண்டுஉள்ளாக் காதலவன் செய்த
பண்பு தரவந்த என்தொடர் நோய்வேது
கொல்வது போலும், கடும்பகல் ஞாயிறே!
எல்லாக் கதிரும் பரப்பிப் பகலொடு
செல்லாது நின்றியல் வேண்டுவல்; நீசெல்லின்,
புல்லென் மருள்மாலைப் போழ்துஇன்று வந்துஎன்னைக்
கொல்லாது போதல் அரிதால்; அதனொடுயான்
செல்லாது நிற்றல் இலேன்.

ஒல்லைஎம், காதலர்க் கொண்டு, கடல்ஊர்ந்து, காலைநாள்,
போதரின் காண்குவேன் மன்னோ – பனியொடு
மாலைப் பகைதாங்கி, யான்?

இனியன்என்று, ஓம்படுப்பன் ஞாயிறு, இனி!
ஒள்வளை ஓடத் துறந்து, துயர்செய்த
கள்வன்பால் பட்டன்று, ஒளித்துஎன்னை, உள்ளி–
பெருங்கடல் புல்லெனக் கானல் புலம்ப,
இருங்கழி நெய்தல் இதழ்பொதிந்து தோன்ற,
விரிந்துஇலங்கு வெண்ணிலா வீசும் பொழுதினான்,
யான்வேண்டு ஒருவன்; என்அல்லல் உறீஇயான்
தான்வேண்டு பவரோடு துஞ்சும்கொல்? துஞ்சாது
வானும், நிலனும், திசையும், துழாவும்!என்
ஆனாப் படர்மிக்க நெஞ்சு.

ஊரவர்க்கு எல்லாம் பெருநகை ஆகிஎன்
ஆர்உயிர் எஞ்சும்மன்; ஆங்குநீ சென்றீ–
நிலவுஉமிழ் வான்திங்காள்!– ஆய்தொடி கொட்ப,
அளிபுறம் மாறி, அருளான் துறந்தஅக்
காதலன் செய்த கலக்குறுநோய்க்கு ஏதிலார்
எல்லாரும் தேற்றார், மருந்து.
வினைக்கொண்டுஎன் காமநோய் நீக்கிய ஊரீர்!
எனைத்தானும் எள்ளினும்; எள்ளலன், கேள்வன்
நினைப்பினும், கண்ணுள்ளே தோன்றும்; அனைத்தற்கே
ஏமராது, ஏமரா ஆறு.

கனைஇருள் வானம்!–கடல்முகந்து, என்மேல்
உறையொடு நின்றீயல் வேண்டும், ஒருங்கே–
நிறைவளை கொட்பித்தான் செய்த துயரால்
இறைஇறை பொத்திற்றுத் தீ.

எனப்பாடி,
நோயுடை நெஞ்சத்து எறியா, இனைபுஏங்கி,
'யாவிரும் எம்கேள்வற் காணீரோ?' என்பவட்கு,
ஆர்வுற்ற பூசற்கு அறம்போல, எய்தந்தார்;
பாயல்கொண்டு உள்ளா தவரை வரக்கண்டு,
மாயவன் மார்பில் திருப்போல் அவள்சேர,
ஞாயிற்று முன்னர் இருள்போல மாய்ந்தது,என்
ஆயிழை உற்ற துயர்.

தெளிவுரை

(தலைவனைப் பிரிந்த ஒருத்தி, தன் காமநோயைப் பொறுத்துக் கொள்ள இயலாதவளாகித் தன் உயிரினும் சிறந்த நாணத்தையும் அகற்றிப் புலம்பத் தொடங்கினாள். அவளைக் கண்டார் இப்படியும் ஒருத்தி இருப்பாளா என்று எண்ணினர். அவர் களிடம் தலைவி, தன் நிலைமைபற்றிக் கூறுகின்றாள். இவ்வா றெல்லாம் புலம்பிக் கலங்கிக்கொண்டிருந்த அவள், தன் தலைவனைக் கண்டதும், அவனைப்பற்றிக் கூறிய குறைகளைப் பற்றிச் சிறிதும் பொருட்படுத்தாமல், அவனைத் தழுவி முயங்கி மகிழ்ந்தாள். அதனைக் கண்டார் கூறுவதாய் இப்பாடல் அமைந்துள்ளது.)

"நள்ளிருளில் கண்ட கனவு, நனவில் தோன்றாது வேறுபட்டுப் பயனற்றுவிடும். விரைந்து ஏற்கும் தலைமை நிலைபெற்று நிற்காததுபோலக் கனவும் நிலை பெற்று நிற்பதில்லை. காமம் கொண்ட ஒருத்தி தன்னைப் பிரிந்தவனைக் கனவில் காண்ப துண்டு; அது நனவிலும் நடக்கும் என்று எதிர்பார்ப்பாள்; நடவாமற்போகும். அந்த நிலையில் உள்ள ஒருத்தி, தழைத்த கூந்தலைக் கொண்டவளாய் உள்ளாள். தன் பெண்மை நலன்களை நுகர்ந்து, பின்னர்த் தன்னைக் கைவிட்டுப் பிரிந்தவனை எண்ணி எண்ணிப் பெருமூச்சு விடுகின்றாள். அவனை எவ்வாறு அடைவது என்று சிலரிடம் விசாரிக் கின்றாள்; பின்னர், நெஞ்சம் கலங்கி நிற்கின்றாள்; மழை பொழியும் நேரத்தில் காணப்படுகின்ற சந்திரன் போன்று முகம், ஒளி இழந்து காணப்படுகின்றது; கயல் போன்ற அவள் கண்கள் நீரைச் சொரிகின்றன; தன் தலைவனை எண்ணி அழும் அவள், சில வேளைகளில், அவனை மறந்தவள் போலச் சிரிக்கின்றாள். பெண் ஒருத்திக்குச் சிறந்ததான நாணம் முதலிய பண்பு நலன்களைக் கொள்ளாமல், காமநோய் மிகும் தன்மையை வெளிப்படுத்தி வருந்தி நிற்கின்றாள்." இவ்வாறு, வருந்திப் புலம்பும் தலைவியைப்பற்றி அவளைக் கண்டார் பலவாறு கூறினர்.

அவ்வாறு கூறியவர்களை நோக்கித் தலைவி, "என்னைக் கண்டு எள்ளி நகையாடாதீர்; அப்படி நகைத்தீர்களேயானால் நீவிர் ஐயறிவுடையவரே! நான் ஏன் இவ்வாறெல்லாம் புலம்பிக் கொண்டிருக்கின்றேன் என்பதைக் கூறுகின்றேன்; கேளுங்கள்! பெண்களை நுகர்ந்த ஆண்கள், அந்தப் பெண்கள் வருந்துமாறு, பிரிந்து, பாலைவனத்தையும் கடந்து செல்வதும், திரும்பி விரைந்து வந்து அப்பெண்களுக்கு அருள் புரிதலும் இரவும் பகலும் முறையாக வருதல் போன்றதே! இன்பம் நிலையற்றது; தடுமாற்றத்தைக் கொண்டது. இந்நிலை எனக்கு மட்டுமன்றி, இந்த உலகத்தில் வாழும் எல்லோர்க்குமே ஏற்படக்கூடியதே" என்று கூறினாள்.

இவ்வாறு கூறிய தலைவி, அழுதவாறே வானத்தை நோக்கினாள். அங்குக் காணப்பெற்ற வறண்ட மேகங்களை நோக்கி, "ஏ மேகங்களே! மழையைத் தாராது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? என் தலைவன் என்னைப் பிரிந்து காட்டு வழியே சென்றுகொண்டிருக்கிறான். காட்டுவெப்பத்தில் அவன் வாடாமல் இருக்க, மேகங்களாகிய நீங்கள் என் கண்ணீர்க் கடலில் படிந்து நீரை முகந்துகொண்டு வானத்திலே பரவிச் சென்று, அவன் செல்லும் கானகத்தில் மழையாய்ப் பொழி யுங்கள்" என்றாள்.

அங்ஙனம் கூறியவள், அவ்வூரில் வாழும் மக்களை நோக்கி, "இவ்வூரில் வாழ்வோரே! என் உறக்கம் கெடுமாறும் என்னை நினையாதும் என் காதலன் பிரிந்து சென்றுள்ளான். நீங்கிச் சென்ற என் காதலன் எனக்குத் தந்து சென்ற காமநோயால் நடுங்கும் எனக்கு இப்பகலில் எரிக்கும் வெயில், வேது ஒற்றுவது போல உள்ளது; உங்களுக்கு எப்படி உள்ளது?" எனக் கேட்ட தலைவி, பின்னர் ஞாயிற்றை நோக்கிப் பேசுகிறாள்.

"ஞாயிறே! உன் கதிர்களையெல்லாம் பரப்பிப் பகலைத் தரும் நீ, பகலுடன் சேர்ந்து மறைந்துவிடாதே! நீ மறைந்தால் மயக்கம் தரும் மாலை வரும்; அஃது என்னைக் கொல்லாமல் போகாது. என் உயிரைக் காத்துக்கொள்ளும் ஆற்றலும் எனக்கில்லை.

“நீ என் பேச்சைக் கேட்காமல், மறைந்துவிட்டால், நாளைக் காலை கடலிலிருந்து நீ தோன்றும்போது என் காதலனையும் தேடிக் கொண்டுவந்து என் முன் நிறுத்துவாய் என்னும் நம்பிக்கையுடன் மாலையாகிய இந்தப் பகையைப் பொறுத்துக் கொள்வேன்; என் காதலன் இனியவன் என்று என் நெஞ்சுக்குச் சொல்லி, அதையும் பாதுகாப்பேன்” என்றும் கூறினாள்.

இங்ஙனம் ஞாயிற்றை நோக்கித் தலைவி கூறிக்கொண்டிருந்த நேரத்தில் ஞாயிறு மறைந்து மாலையும் திங்களும் தோன்றின; தலைவியின் துயரை மிகுத்தன. “என் வளையல்களெல்லாம் கழலும்படி என்னை மெலிய வைத்து வருத்தம் தந்த என் தலைவனாகிய கள்வன்பற்றியே என் நெஞ்சம் நினைத்து, அவனைத் தேடிச் சென்றுவிட்டது. பெருங்கடல் பொலிவற்றுக் காணப்படுகிறது; கடற்கழியில் நெய்தல் மலர்கள் குவிந்துள்ளன. அவனைத் தேடிச் சென்ற நெஞ்சம், வானத்தே பரவிய வெண்ணிலவில், எல்லாத் திசைகளிலும் சென்று தலைவனைத் தேடியவண்ணம் இருக்கிறது. அவன் தன்னை விரும்பும் என்னோடு உறங்காமல் தனியே உறங்குவானோ? அன்றி உறங்காது தவிப்பானோ?” என்று புலம்பினாள்.

புலம்பிய தலைவி, வானத்தேயுள்ள திங்களை நோக்கி, “நிலவொளியை உமிழ்ந்துகொண்டிருக்கும் திங்களே! என் வளையல் கழலுமாறு, எனக்கு அருள் செய்தலைக் கைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டான், என் காதலன். அவன் தந்த நோயை நீக்கும் மருந்தொன்றை எவரும் எனக்கு அளிக்கவில்லை; எனினும், ஊரார் என்னை இகழ்ந்து நோக்குகின்றனர். அதனால், நீயாவது என் தலைவனைத் தேடி எனக்கு அருள மாட்டாயா?” என்று வேண்டினாள்.

அவள் வேண்டியதை அந்தத் திங்கள் உணர்ந்துகொள்ள வில்லை. ஊர் மக்களே, தன் துன்பத்தைத் தீர்த்தற்கு உரியராவர் எனக் கருதி, “ஊரீரே! என் காமநோய் கண்டு நீங்கள் என்னை இகழ்கின்றீர்; என் தலைவன் என்னை எப்பொழுதும் இகழவே மாட்டான். என்னைத் தழுவிப் புணர்ந்த என் தலைவன்,

என் நெஞ்சம் நினைத்தவாறு என் முன்னால் தோன்றாவிடினும், என் கண்ணுள்ளேயே தோன்றி நின்றுகொண்டேயிருக் கின்றான்; ஆகவே, ஊர்மக்களாகிய நீங்கள், உங்கள் கடமை களுள் ஒன்றாகக் கருதி என் தலைவனைத் தேடி என்னிடம் ஒப்படைத்து என் காமநோயை நீக்குங்கள்" என்றாள்.

இங்ஙனம் கூறிய தலைவி, வானத்தில் ஓடும் மேகங்களைக் கண்டு, "ஏ மேகங்களே! என் தோள்வளையல்கள் கழலுமாறு என்னை மெலியச்செய்து, என் உடலின் மூலை முடுக்குகளி லெல்லாம் காமத் தீயை மூட்டியுள்ளான், தலைவன். அவன் என்னிடம் வரும்வரை, எனக்குள் உண்டாக்கியுள்ள வெப்பம் தணியுமாறு நீங்கள் சென்று, கடலில் நீர் முகந்துவந்து என் மேல் மழையாகச் சொரியுங்கள்" என்று வேண்டினாள்.

இவ்வாறெல்லாம் புலம்பிக்கொண்டிருந்தவள், தன் எதிரே உள்ள சான்றோர்களை நோக்கி, "உங்களுள் எவருமே என் தலைவனைத் தேடிக் கொண்டுவரவில்லையா?" என்று வினவினாள். அந்த வேளையில், "மிகுதியான துன்பமுற்றோர்க்கு அறக்கடவுளே வந்து உதவியதுபோல, தலைவன் அவளிடம் வந்து சேர்ந்தான். இலக்குமியைப் போன்ற அவள், திருமால் போன்ற அவன் மார்பிலே சாய்ந்து ஒன்றினாள். கதிரவன்முன் தோன்றிய இருள் மறைவதுபோல ஆயிழையாகிய அவள் துன்பங்களெல்லாம் மாய்ந்தன. இது எவ்வாறோ?" என்று அவளைக் கண்டவர்கள் வியந்தனர்.

கருத்து

தலைவனைப் பிரிந்த தலைவி, பிரிவைப் பொறுக்கவியலாதவளாய் ஊர் மக்களையும், ஞாயிற்றையும், மேகத்தையும், நிலவையும், கடலையும் நோக்கித் தன் ஆற்றாமையைக் கூறி அழுதுகொண்டிருந்தாள். அவ் வேளையில், பிரிந்திருந்த தலைவன் வந்து சேர்ந்தான். தலைவி மகிழ்ந்தாள்; அதைக் கண்ட ஊராரும் மகிழ்ந்தனர்.

குறிப்பு

தலைவன் மார்பிடைத் தலைவி சேர்ந்ததற்குத் திருமாலைச் சேர்ந்த திருமகள் உவமையாய்க் கூறப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. துனையுநர் - விரைபவர்.
4. உயிர்க்கும் - பெருமூச்சு விடுவாள்; உசாஅம் - விசாரிக்கும்; உலம் வரும் - சுழலும்.
5. அரி - கண்ணீர்; வார - சொரிய.
6. பெயல் - மழை.
8. துறந்தானை - விட்டுப் பிரிந்தவனை.
9. ஆலி - ஆரவாரித்து, உரக்க.
11. முனைஇயாள் - முனைப்புடன் நினைத்தவள்; அலந்தாள் - வருந்தினாள்.
12. நகான்மின் - சிரிக்காதீர்கள்.
14. வல்லை - விரைந்து; அளித்தல் - அருளுதல்.
15. ஊழ்செய்து - முறை தவறாது.
16. வீழ்வார் - விரும்புவார்.
18. தாழ்பு - விரும்பி.
19. இறந்து - மிகுந்து; நையாமல் - வருத்தாமல்.
21. கனை - மிகுதி.
22. கொண்மூ - மேகம்.
24. கண்பாயல் - தூக்கம்.
25. வேது - ஒத்தடம்.
32. ஒல்லை - விரைவு; ஊர்ந்து - பரந்து.
33. பனி - நடுக்கம்.
35. ஓம்படுப்பன் - வாழ்த்துவேன்.
36. ஓட - கழல.
38. புல்லென - பொலிவிழந்து; புலம்ப - தனிமை கொள்ள.
41. உறீஇயான் - உற்றவன்.
43. துழாவுதல் - தேடுதல்.
46. சென்றீ - சென்று என் குறை முடிப்பாயாக.
47. கொட்ப - கழன்று விழ.
48. அளிபுறம் மாறி - அருள் செய்தலைக் கைவிட்டு.
50. தேற்றார் - தெளிவித்துக் கூறார்.
56. உறை - மழை.
57. கொட்பித்தான் - கழலச்செய்தவன்.

58. இறை - அளவில் சிறுமை; பொத்திற்று - மூண்டது.
60. இனைபு - வருத்தம்.
62. பூசல் - துன்பம்; எய் தந்தார் - வந்து சேர்ந்தார்.
64. மாயவன் - திருமால்; திரு - திருமகள்.

கண்டோர் கூற்று

கலித்தொகை 146 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடைப் பிரிந்து நீட்டித்துழித் தலைமகள் பிரிவாற்றகில்லாது, நாணு வரையிறந்து கலங்கி மொழிந்து அறிவழிந்து அவன் வந்து சாரத் தெளிந்தமை கண்டார் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்து நீட்டித்த இடத்து, தலைவி பிரிவை ஆற்றாதவளாகி, நாணம் கடந்து, உள்ளம் கலங்கி, இயற்கைப் பொருள்களோடு கூறத் தகாதன கூறி, அறிவு அழிந்து மொழிந்தனள். தலைவன் வந்து சேர்ந்த அளவில் அவள் கலக்கம் ஒழிந்திடத் தெளிவு பெற்றாள். இதனைக் கண்டார் கூறியது.

தலைவன் பிரிவால் தான் வாடிக்கொண்டிருப்பதைத் தலைவியே கூறுவாளாயின், அவள் கையிகந்த காமத்தவள் என்றும், நாணம் இல்லாதவள் என்றும் அவளை ஊரார் பழிதூற்றுவர். இவ்வாறு தன்னடக்கமின்றிப் புலம்பும் தன்மை பெருந்திணைப்பாற்படும் என்பர் அகநூலார். எனினும், அகன்ஐந்திணை என்று கூறப்பெறும் திணைகளுள்ளும் வழுவமைதியாய்ப் பெருந்திணைக் கூற்று நிகழ்வதுண்டு என்றும் அகப்பொருள் கூறுகின்றது. அத்தகைய கூற்றே இப்பாடலில் கூறப்பெற்றுள்ளது.

உரைசெல உயர்ந்துஓங்கிச் சேர்ந்தாரை ஒருநிலையே
வரைநில்லா விழுமம்உறீஇ நடுக்குஉரைத்துத் தெறல்மாலை
அரைசினும் அன்பின்றாய் காமம்; புரைதீர
அன்னமென் சேக்கையுள் ஆராது அளித்தவன்
துன்னி அகலத் துறந்த அணியளாய்,

நாணும் நிறையும் உணர்கல்லாள், தோள்ஞெகிழ்பு,
பேர்அமர் உண்கண் நிறைமல்க, அந்நீர்தன்,
கூர்எயிறு ஆடி, குவிமுலைமேல் வார்தர,
தேர்வழி நின்று தெருமரும்; ஆயிழை
கூறுப கேளாமோ, சென்று?

எல்லிழாய்! எற்றி வரைந்தானை, நாணும் மறந்தாள்என்று,
உற்றனிர் போல, வினவுதிர்! மற்றுஇது
கேட்டீமின், எல்லீரும் வந்து.

வறம்தெற மாற்றிய வானமும் போலும்;
நிறைந்து என்னை மாய்ப்பதுஓர் வெள்ளமும் போலும்—
சிறந்தவன் தூஅற நீப்பப் பிறங்கிவந்து,
என்மேல் நிலைஇய நோய்.

'நக்கு நலனும் இழந்தாள், இவள்'என்னும்
தக்கவிர் போலும்! இழந்திலேன் மன்னோ—
மிக்கஎன் நாணும், நலனும்,என் உள்ளமும்
அக்கால் அவனுழை ஆங்கே ஒழிந்தன!
உக்காண் – இஃதோ உடம்புஉயிர்க் கூற்றாக,
செக்கர்அம் புள்ளித் திகிரி அலவனொடு,யான்
நக்கது, பன்மாண் நினைந்து.

கரைகாணா நோயுள் அழுந்தா தவனைப்
புரைதவக் கூறிக் கொடுமை நுவல்வீர்!
வரைபவன் என்னின் அகலான் – அவனைத்
திரைதரும் முந்நீர் வளாஅகம் எல்லாம்,
நிரைகதிர் ஞாயிற்றை, நாடுஎன்றேன்; யானும்
உரைகேட் புழிஎல்லாம் செல்வேன்; புரைதீர்ந்தான்
யாண்டுஒளிப் பான்கொல்லோ மற்று?

மருள்கூர் பிணைபோல் மயங்க,வெந்நோய் செய்யும்
மாலையும் வந்து, மயங்கி எரிநுதி
யாமம் தலைவந்தன்று ஆயின், அதற்குஎன்நோய்
பாடுவேன், பல்லாருள் சென்று,

யான்உற்ற எவ்வம் உரைப்பின் பலர்த்துயிற்றும்
யாமம்நீ துஞ்சலை மன்.
எதிர்கொள்ளும் ஞாலம், துயில்ஆராது ஆங்கண்
முதிர்புஎன்மேல் முற்றிய வெந்நோய் உரைப்பின்,
கதிர்கள் மழுங்கி, மதியும் அதிர்வதுபோல்
ஓடிச் சுழல்வது மன்.

பேரூர் மறுகில் பெருந்துயிற் சான்றீரே!
நீரைச் செறுத்து, நிறைவுற ஓம்புமின்—
கார்தலைக் கொண்டு பொழியினும், தீர்வது
போலாது, என்மெய்க் கனலும் நோய்.

இருப்பினும் நெஞ்சம் கனலும்; செலினே,
வருத்துறும் யாக்கை; வருந்துதல் ஆற்றேன்;
அருப்பம் உடைத்து,என்னுள் எவ்வம் பொருத்திப்,
பொறிசெய் புனைபாவை போல, வறிதுஉயங்கிச்
செல்வேன், விழுமம் உழந்து.

எனஆங்குப் பாட, அருள்உற்று,
வறங்கூர் வானத்து வள்உறைக்கு அலமரும்
புள்ளிற்கு அதுபொழிந் தாங்கு, மற்றுத்தன்
நல்லெழில் மார்பன் முயங்கலின்,
அல்லல் தீர்ந்தன்று, ஆயிழை பண்பே.

தெளிவுரை

“காதல் வாழ்க்கையில் ஆடவர் மகளிரிடம் சில வேளை அன்பின்றி நடந்துகொள்கின்றனர். அது, தன் புகழ் உயருமாறு அறிவுரை கூறும் அமைச்சரை அளவின்றித் துன்புறுத்தியும், அவர்மீது கொடுஞ்சொல் கூறியும், அவருக்குக் கொலைத் தண்டனை விதித்தும் ஆட்சி செய்யும் கொடுங்கோல் மன்னனைக் காட்டிலும் கொடியதாகும்.

“அஃது எவ்வாறெனின், ஆராய்ந்தெடுத்த அணிகலன்களைக் கொண்ட இந்தப் பெண்ணுக்கு அன்னத்தூவியால் செய்யப் பெற்ற படுக்கையில் அருள் செய்த தலைவன் அவ்வன்பு நிரம்பா முன்பே பிரிந்து சென்றுவிட்டதால் இவள் தன் அணிகலன்

களை நீக்கி விட்டாள்; பெண்ணுக்கு இயல்பாகிய நாணத்தை யும், மனவுறுதியினையும் கைவிடல் ஆகாது என்பதையும் மறந்துவிட்டாள்; தன் தோள் மெலிந்திட, மையுண்ட கண்களில் நீர் பெருகிட, அந்நீர் கூரிய பற்களில் பட்டுத் தன் குவிமுலைமேல் வடிந்திட நின்றுகொண்டிருக்கிறாள். தலைவனின் தேர் வரும் வழியை நோக்கி மனச்சுழற்சி கொண்டு நிற்கிறாள்" என்று அவளைக் கண்டவர் கூறினர். (பின்னர், அவள் துன்பம் என்ன என்று அவளிடமே கேட்டறிய அவளிடம் சென்று பேசினர்; அவள் அவர்களிடம் கூறியது:)

" 'ஒளி திகழும் அணிகலன்களுக்கு உரியவளே! உன்னைப் பிரியேன் என்று உன்னிடம் உறுதி கூறியவன் அதனை மீறினான் என்று வருந்தி, நாணத்தையும் மறந்து நிற்கும் நீ யார்' என்று கேட்டு அறிய விரும்புகிறீர்கள். நீவிர் எல்லோரும் வந்து நான் கூறுவதைக் கேளுங்கள்.

"எனக்குச் சிறந்தவனாகிய அவன் என் வலிமை நீங்குமாறு பிரிந்தான். உடனே என் மனத்தில் பெருகி எழுந்த துயரம், கோடையின் வெப்பத்தைக் குறைக்கப் பெய்யாமற்போன மேகம் உண்டாக்கும் துயரத்தைப் போலவும், என்னை மூழ்கடித்துக் கொல்லும் வெள்ளத்தைப் போலவும் தோன்றுகிறது.

" 'இவள் அவனோடு உறவுகொண்டு மகிழ்ந்து, இப்போது தன் நாணத்தையும், சிந்திக்கும் ஆற்றலையும் இழந்தது மட்டுமன்றித் தன் இயற்கை அழகையும் இழந்தாள்' என்று நீங்கள் கருதுவதாய்த் தோன்றுகிறது. என் தலைவன் அன்பில்லா தவன் அல்லன். நானும் எதையும் இழக்கவில்லை. நான் கடற்கரையில் அவனோடு இணைந்தபோது (இயற்கைப் புணர்ச்சியின்போது) அவன் கடற்கரையில் திரிந்த நண்டுகளை எனக்குக் காட்டி, 'அவற்றைப் பார். சிவந்த நிறத்தையும் புள்ளிகளையும் கொண்டு தேர்ச்சக்கரம்போலத் தோன்றும் இந்த ஆண்நண்டும், பெண்நண்டும் தம் உடம்பில் உயிர் தழைக்குமாறு நடத்தும் காதல் விளையாட்டுகளை நான் உன்னிடத்தில் நடத்துவதாய்க் கற்பனை செய்துகொண்டு இவற்றைப் பார்' என்றான். அதைக் கேட்டே அவனது

அன்பினை உணர்ந்து நான் உறவு கொண்டேன். அப்பொழுது என் நாணும், அழகும், உணர்வும் எங்கள் புணர்ச்சியால் பெருகின; ஆயினும், அவன் நீங்கிய பொழுதே அவனிடத்தில் சென்று நிலை குத்திவிட்டன. அதனால்தான் என் துன்பமும் மிகுதியாகிறது. ஆகவே, நான் அவற்றை இழந்தேன் என்று கருதாதீர்!

"அவன் கடமைமேற்சென்றான். ஆதலின், என்னைப்போல் கரையேற வழியின்றித் துன்பக்கடலுள் அழுந்தவில்லை. அத்தகையவனை அவனது உயர்ச்சி கெடுமாறு 'கொடியவன்' என்று கூறுகின்றீர். அவன் என்னைத் தன் வாழ்க்கைத் துணையென்று உறுதி கொண்டவன். ஆதலின், என்னை விட்டு என்றும் நீங்கான். நான் அவனைக் காண விரும்பி, மிகுந்த கதிர்களைக் கொண்ட ஞாயிற்றை நோக்கி, 'இந்தக் கடல் வளாகம் முழுதும் அவனைத் தேடு' என்று வேண்டினேன். அவன் உள்ளதாகக் கேள்விப்படும் இடத்திற்கெல்லாம் நானும் செல்வேன். மாசற்ற அவன் எங்குத்தான் ஒளிந்துகொள்வான்?" என்று கூறினாள்.

(அந்த அளவில் மாலை வேளையும், அதை அடுத்து இரவுக் காலமும் வருவதை உணர்ந்து கூறுகின்றாள்:)

"மயங்கிய பெண்மான்போல் நான் மருண்டு திரியக் கொடிய காமநோயை உண்டாக்கும் மாலைக்காலம் வருகிறது. அதனுடன் இணைந்தே தீக்கொழுந்துபோலக் கொடிய இராக்காலமும் வருகிறது. இவ்வேளையில் எனக்குற்ற வருத்தத்தை என்போல் வருந்தும் மகளிரிடத்தே சென்று கூறுவேன். 'பலரையும் உறங்கச்செய்யும் இராக்காலமே! உன்னிடம் அதைக் கூறினால், நீயும் வருந்தி உறங்காதிருந்து விடுவாய் என்பதால் என் வருத்தத்தை உன்னிடம் கூற மாட்டேன்.

"இந்த முழுநிலா பிறையாயிருந்தபோது மகளிரால் தொழப் பட்டது. அது வளர்ந்து நிறைநிலாவாகிய பின்போ, பெண் மகளாகிய என்னை வந்து வளைத்துக்கொண்டு உறங்க வியலாதவாறு துன்புறுத்துகின்றது. அத்துன்பத்தை அதனிடமே

கூறினாலும், அது தன் ஒளி மழுங்கி நடுங்குவதுபோல் தோன்றிப் பிறகு ஓடி மறையும். ஆதலால், என் துன்பத்தை உங்களுக்கன்றி அதற்கும் உரையேன்" என்றாள்.

பிறகு, "இப்பெரிய ஊரில் நான் துயரமுற்றுத் தெருவில் திரிய, அதை நீக்காமல் வாளாவிருக்கும் சான்றோரே! மேகம் வந்து மழை பொழிந்தாலும் என் உடம்பில் கனலும் காமத் தீ அணையாது. ஆதலால், உலகத்தில் உள்ள நீரையெல்லாம் அணை கட்டி ஓரிடத்தில் தேக்கி வையுங்கள்! (நான் அதில் ஆடி வெம்மை தணியப்பெறுவேன்.)

"தலைவன் என் நெஞ்சில் உண்டாக்கிய காமத் தீ அணையாது காந்துகிறது. ஒருவேளை அவனை நினையாது சற்று மறந்தால், இப்பொழுதே வேதனையுறும் என் உடம்பு மேலும் வேதனைப் படுவதைப் பொறுக்க மாட்டேன்; துன்பம் என் மனத்திட்பத்தை உடைத்துவிட, விசையினால் இயங்கச்செய்த ஒரு பாவை அவ் விசையற்று வாளாகிடப்பதுபோலச் செயலற்றுப்போவேன்" என்னும் பொருள்படப் பாடினாள்.

அந்நேரம் தலைவன் அங்கு வந்து சேர்ந்து அவளைத் தழுவினான். வறட்சிக்காலத்தில் மழைத்துளிக்கு ஏங்கும் வானம்பாடிக்கு மேகம் மழை பொழிந்ததுபோல அவள் துன்பங்கள் அனைத்தும் தீர்ந்தன. இக்காட்சியைக் கண்ட ஊரார் மகிழ்ந்தனர்.

கருத்து

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் உரிய காலத்தில் திரும்பி வந்து சேரவில்லை. பிரிவு அளித்த காமநோய் அவளை மிகவும் வருத்தியது. அந்தக் காமநோய் எத்தகைய கொடுமை வாய்ந்தது என்பதைத் தன்னைக் கண்டார் உணருமாறு தலைவி கூறினாள்.

குறிப்பு

1. இப்பாடலுள் நண்டுகள் தம் முன் ஓடியாடிய காட்சியைத் தலைவன் தலைவிக்குக் காட்டித் தாமும் அவ்வாறு இருத்தல்வேண்டும் என்னும் குறிப்பை அவன் வெளியிட்டதாய்க் கூறியிருப்பது சிறந்த காட்சியாகும்.

2. தலைவி தன் துயரைப்பற்றி இரவிடம் கூறப்போவதில்லை என்கிறாள். துயரைச் சொல்லத் தொடங்கினால் இரவு முழுவதும் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும். அதனால் இரவால் தூங்க இயலாது; இரவு தூங்கவில்லையென்றால் ஊராரைத் தூங்க வைக்க இயலாது என்று கருதிய தலைவியின் உள்ளம் போற்றுதற்குரியது.

சொற்பொருள்

1. உரைசெல - புகழ் எங்கும் பரவ.
2. வரைநில்லா - எல்லையற்ற; விழுமம் - துயரம்; தெறல் - கொல்லுதல்.
4. அன்னமென் சேக்கை - அன்னத்தூவியினால் அமைந்த மென்மை யான படுக்கை.
6. நிறை - மனவுறுதி.
7. நிறை மல்க - நீர் மிகுந்து நிற்க.
8. வார்தர - வழிந்தோட.
9. தெருமரும் - வருந்தும்.
11. எற்றி - உறுதிமொழி கூறி.
13. எல்லீரும் - எல்லோரும்.
14. வறம் - வெம்மை; தெற - சுட.
16. தூஅற - வலிமையழிய; பிறங்கி - குவிந்து.
19. தக்கவிர் - தகுதிப்பாட்டினை உடையீர்.
23. திகிரி - சக்கரம்; அலவன் - நண்டு.
24. பன்மாண் - பலமுறை.
26. புரை - உயர்வு; தவ - குன்றல்.
28. முந்நீர் வளாஅகம் - கடல்சூழ் உலகம்.
29. நாடு - தேடு.
30. புரை - குற்றம்.
33. எரிநுதி - தீக்கொழுந்து.
36. துயிற்றும் - தூங்க வைக்கும்.
38. ஆராது - கொள்ளாது.
40. அதிர்வது - நடுங்குவது.
43. செறுத்து - தேக்கி.
46. கனலும் - சுடும்.
48. அருப்பம் - கோட்டை.
49. பொறி - எந்திரம்.

50. விழுமம் - வருத்தம், துன்பம்.

52. வறங்கூர் வானம் - கோடைக்காலத்து வானம்; வள் உறை - வளமான மழை.

53. புள் - பறவை (வானம்பாடி).

கண்டோர் கூற்று

கலித்தொகை 147 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடைப் பிரிந்து நீட்டித்துழித் தலைமகள் பிரிவாற்றகில்லாது, நாணு வரையிறந்து கலங்கி மொழிந்து அறிவழிந்து அவன் வந்து சாரத் தெளிந்தமை கண்டார் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்து நீட்டித்த இடத்து, தலைவி பிரிவை ஆற்றாதவளாகி, நாணம் கடந்து, உள்ளம் கலங்கி, இயற்கைப் பொருள்களோடு கூறத் தகாதன கூறி, அறிவு அழிந்து மொழிந்தனள். தலைவன் வந்து சேர்ந்த அளவில் அவள் கலக்கம் ஒழிந்திடத் தெளிவு பெற்றாள். இதனைக் கண்டார் கூறியது.

தலைவன் பிரிவால் தான் வாடிக்கொண்டிருப்பதைத் தலைவியே கூறுவாளாயின், அவள் கையிகந்த காமத்தவள் என்றும், நாணம் இல்லாதவள் என்றும் அவளை ஊரார் பழிதூற்றுவர். இவ்வாறு தன்னடக்கமின்றிப் புலம்பும் தன்மை பெருந்திணைப்பாற்படும் என்பர், அகநூலார். எனினும், அகன்ஐந்திணை என்று கூறப்பெறும் திணை களுள்ளும் வழுவமைதியாய்ப் பெருந்திணைக் கூற்று நிகழ்வதுண்டு என்றும் அகப்பொருள் கூறுகின்றது. அத்தகைய கூற்றே இப்பாடலில் கூறப்பெற்றுள்ளது.

ஆறுஅல்ல மொழிதோற்றி, அறவினை கலக்கிய,
தேறுகள் நறவுஉண்டார் மயக்கம்போல், காமம்
வேறுஒருபாற்று ஆனது கொல்லோ? சீறடிச்
சிலம்புஆர்ப்ப, இயலியாள்– இவள்மன்னோ, இனிமன்னும்

புலம்புஊரப் புல்லென்ற வனப்பினாள்— விலங்குஆக,
வேல்நுதி உறநோக்கி, வெயில்உற உருகும்,தன்,
தோள்நலம் உண்டானைக் கெடுத்தாள்போல், தெருவில்பட்டு,
ஊண்யாதும் இலள்ஆகி, உயிரினும் சிறந்ததன்
நாண்யாதும் இலள்ஆகி, நகுதலும் நகூஉம்;ஆங்கே
பெண்மையும் இலள்ஆகி அழுதலும் அழூஉம்; தோழி!ஓர்
ஒண்ணுதல் உற்றது உழைச்சென்று கேளாமோ,

இவர்யாவர் ஏமுற்றார் கண்டீரே? ஒஓ!
அமையும் தவறிலீர் மற்கொலோ? நகையின்
மிக்கதன் காமமும் ஒன்றுஎன்ப; அம்மா

புதுநலம் பூவாடி யற்றுத்தாம் வீழ்வார்
மதிமருள நீத்தக் கடை.

என்னையே மூசிக் கதுமென நோக்கன்மின், வந்து.

கலைஇய கண்,புருவம், தோள்,நுசுப்பு, ஏஎர்,
சிலமழைபோல் தாழ்ந்துஇருண்ட கூந்தல், அவற்றை
விலைவளம் மாற அறியாது, ஒருவன்
வலைஅகப் பட்டதுஎன் நெஞ்சு.
வாழிய, கேளிர்!
பலவும்சூள் தேற்றித் தெளித்தவன் என்னை
முலையிடை, வாங்கி முயங்கினன், நீத்த

கொலைவனைக் காணேன் கொல்,யான்,
காணினும், என்னை அறிதிர்; கதிர்பற்றி,
ஆங்குஎதிர் நோக்குவன்— ஞாயிறே எம்கேள்வன்—
யாங்குஉளன் ஆயினும் காட்டீமோ? காட்டாயேல்,
வானத்து எவன்செய்தி, நீ?

ஆர்இருள் நீக்கும் விசும்பின் மதிபோல,
நீருள்ளும் தோன்றுதி, ஞாயிறே! அவ்வழித்
தேரை தினப்படல் ஓம்பு.

நல்கா ஒருவனை நாடியான் கொள்வனை,
பல்கதிர் சாம்பிப் பகல்ஒழியப் பட்டீமோ—

செல்கதிர் ஞாயிறே! நீ

அறாஅல் இன்றுஅரி முன்கைக் கொட்கும்
பறாஅப் பருந்தின்கண் பற்றிப் புணர்ந்தான்
கறாஅ எருமைய காடுஇறந்தான் கொல்லோ?
உறாஅத் தகைசெய்து,இவ் வூர்உள்ளான் கொல்லோ?

செறாஅது உளனாயின், கொள்வேன்; அவனைப்
பெறாஅது யான் நோவேன்; அவனைஎற் காட்டிச்
சுறாஅக் கொடியான் கொடுமையை, நீயும்
உறாஅ அரைச!நின் ஓலைக்கண் கொண்டீ
மறாஅ அரைச!நின் மாலையும் வந்தன்று.
அறாஅ தணிக, இந்நோய்.

தன்நெஞ்சு ஒருவற்கு இனைவித்தல், யாவர்க்கும்
அன்னவோ— காம!நின் அம்பு;

கையாறு செய்தானைக் காணின், கலுழ்கண்ணால்
பையென நோக்குவேன்; தாழ்தானை பற்றுவேன்,
ஐயங்கொண்டு, என்னை அறியான் விடுவனேல்,
ஒய்எனப் பூசல் இடுவேன்மன், யான்,அவனை
மெய்யாகக் கள்வனோ என்று.
வினவன்மின் ஊரவிர்! என்னைஎஞ் ஞான்றும்—
அடாஅ நறவுஉண்டார் போல, மருள
விடாஅது உயிரொடு கூடிற்று,என் உண்கண்
படாஅமை செய்தான் தொடர்பு.

கனவினால் காணிய, கண்படா, ஆயின்
நனவினால், ஞாயிறே; காட்டாய்நீ ஆயின்,
பனைஈன்ற மாஊர்ந்து, அவன்வரக் காமன்
கணைஇரப்பேன், கால்புல்லிக் கொண்டு

எனஆங்கு
கண்இனைபு, கலுழ்பு ஏங்கினள்;
தோள்நெகிழ்பு, வளைநெகிழ்ந்தனள்;
அன்னையோ! எல்லீரும் காண்மின்; மடவரல்

மெல்நடைப் பேடை துணைதரத் தற்சேர்ந்த
அன்னவான் சேவல் புணர்ச்சிபோல், ஒண்ணுதல்
காதலன் மன்ற அவனை வரக்கண்டு,ஆங்கு
ஆழ்துயரம் எல்லாம் மறந்தனள், பேதை.

நகைஒழிந்து, நாணுமெய் நிற்ப, இறைஞ்சி,
தகைஆகத் தையலாள் சேர்ந்தாள், நகைஆக
நல்லெழில் மார்பன் அகத்து.

தெளிவுரை

தலைவனைப் பிரிந்து புலம்பும் தலைவியைக் கண்டவர்கள் தம் உடனிருந்தவர்களைத் 'தோழியே!' என்று விளித்துப் பேசத் தொடங்கினர்.

"தோழியே! மக்கள் தம் அறியாமையால் கள், மது ஆகிய வற்றைப் பருகி, அறவழியல்லாச் சொற்களைக் கூறவும், அறச் செயல் செய்யும் நல்லெண்ணத்தைக் குலைக்கவும் காரணமான மயக்கத்தைப் பெறுகின்றனர். அதுபோல் காமமும் உலகியலுக்கு மாறானதாய் ஆகிவிட்டதோ?

"முன்பு தன் சிறிய அடிகளில் சிலம்பொலிக்க அழகுற நடந்த இப்பெண், இப்போது தனிமை வருத்தப் பொலிவிழந்திருக் கிறாள். முன்பு வேலின் முனை போன்ற கூர்மையான பார்வையால் சிறக்கணித்துத் தலைவனை நோக்கி அவன் உள்ளத்தை உருகச் செய்தவள், இன்று வெயிலில் நடந்து உருகுகின்றாள். தன் நலனை நுகர்ந்த தலைவனைப் பிரிந்து விட்டாள் போலும்! அதனால் அவனைத் தேடுபவளாய்த் தெருவில் நின்று, உண்ணாமலும் உயிரினும் சிறந்த நாணத்தை விட்டும் திரிகின்றாள். பெண் தன்மைக்கு மாறாய்ப் பலரும் காண அழுகிறாள். இவளுக்கு உற்ற துன்பத்தை நாம் கேட்போம்" என்று அவள் அருகில் சென்று வினவினர்.

'உனக்கு நேரிட்டது என்ன?' எனக் கேட்டவரை நோக்கிய தலைவி, "ஓஒ! பைத்தியத்தைக் காண்பவர்போலப் பார்க் கின்றீரே! 'யார் இவள்' என்று கருதுகிறீர்களா? எனக்கு ஏற்பட்ட நிலைமை உங்களுக்கும் ஒரு காலத்தில் ஏற்பட்டே தீரும். நூல்கள்

காதல் வகைகளுள் ஒன்றாய், 'தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்' என்பதைக் கூறுகின்றன. அந்நிலையில் நானும் பைத்தியமானேன். ஆடவர் தமது அன்புக்குரிய மகளிர் மனம் மயங்குமாறு பிரிந்த போது அம்மகளிர், அழகிய புதுமலர் வாடி அழகு குன்றியதுபோல ஆவர். நீங்கள் விரைந்து என்னை மொய்த்து நோக்காதீர்.

"என் தலைவனோடு இணைந்ததால் கண், புருவம், தோள், இடை, மேகம் போன்ற கரிய நீண்ட கூந்தல் எனப் பெண்மைக்கு அழகூட்டும் அனைத்தையும் அவனிடம் கொடுத்து விட்டேன். என் உறவினரைப் போன்றோரே! அவன் பல உறுதிமொழி களைக் கூறி என்னைத் தெளிவித்தாள். என்னை முலையோடு சேர்த்து முயங்கினான். இப்பொழுது அவனை எங்கும் காணவில்லை. நான் இனி அவனைக் காணவே மாட்டேனோ? ஒருவேளை, அவன் என்னைக் கண்டானாயினும் அவனால் நான் பொலிவுறுவதை நீங்கள் எங்கே கவனிக்கப்போகிறீர்கள்?"

இவ்வாறு கூறியவள் பின்னர், சூரியனை நோக்கிப் பேசினாள்:

"கதிரவனே! அவனைக் காண விரும்பும் நான் உன் கதிர்களின் துணையால் காணமுடியும். அவன் எங்கிருந்தாலும் எனக்குக் காட்டு. அவ்வாறு காட்டாவிட்டால் நீ வானத்தின்மீதிருந்து என்ன பயன்? அதைவிட இருளை நீக்குகின்ற சந்திரனைப் போல இங்கு நீரினுள் நிழலாய்த் தோன்றுவாய். அங்கு நீ தேரைக்கு உணவாகிவிடாமல் உன்னைப் பாதுகாத்துக்கொள்.

"எனக்கருள் செய்யாத தலைவனைத் தேடிக் கண்டுபிடிக்க உன் கதிர்கள் பயன்படவில்லை என்றால் ஓடி மறைவாயாக. வளைகள் நீங்க என்னைப் பிரிந்தவன் எனக்கு உரிமையானவன்; கறக்காத எருமைகள் திரியும் காட்டினைக் கடந்து சென்றானோ? என்மீது அன்பின்றி இவ்வூரில் இருந்தானோ? அறியேன். அவனைப் பெறாது வருந்துகின்றேன். அவன் இப்போது வந்தால் கோபிக்காது ஏற்றுக்கொள்வேன். அதனால் கதிரவனே! அவனை எனக்குக் காட்டு" என்று கேட்டாள். அப்போது கதிரவன் மறைந்துவிட்டான்.

கதிரவன் மறைய, கூற்றுவனை மனத்தில் நினைத்து அவனை நோக்கிப் பேசுகின்றாள். "நடுவுநிலைமையோடு ஒரு பக்கம் சாராத காலதேவனே! மன்மதன் எனக்குச் செய்யும் கொடுமை களை நீ உன் ஓலையில் எழுதி வைத்துக்கொண்டு அவனைத் தண்டித்திடுக. ஆனால், அவன் எம் வழிபடுதெய்வம்; அதனால் அவனைத் தண்டிக்காதே. உயிர்களுக்கு வாழ்நாள் முடிந்ததும் தவறாமல் கொண்டுசெல்லும் காலதேவனே! நீ என் உயிரைக் கொல்ல அனுப்பிய ஓலையும் வந்தது. இனி என் நோய் நீங்காது. நீயும் மன்மதன்மீது கொண்ட சினம் தணிக" என்றாள்.

பிறகு, காமனை நோக்கி, "காமதேவா! ஒருவன் பிறிதொரு வரின் காரணமாய் நெஞ்சம் நொந்து வருந்தச்செய்தல் என்பது உன் மலர் அம்புகளால் உலகில் யாவருக்கும் பொதுவோ?" என்று கூறினாள்.

"இரவில் உன் அம்புகளால் இறவாமல் நான் உயிரோடு இருக்க அருள்வாயானால் நான் களைப்புற்றுத் தூங்கிக் கலங்கிய கண்களால் என்னைத் துன்புறுத்தியவனைக் கனவில் கண்டால் கண்ணை விழித்துப் பார்ப்பேன். அவன் தப்பி ஓடாதபடி அவனது ஆடை நுனியைப் பிடித்துக்கொள்வேன். மாறிவிட்ட என் நிலையைக் கண்டு, நான் அவன் தலைவியோ என்று ஐயுற்று என்னைக் கைவிட்டால் நாணம் முதலிய குணங்களையும், அழகையும் கவர்ந்த கள்வன் இவன் என்று பலரும் அறியக் கூறுவேன்" என்று, ஊர்மக்களை நோக்கிப் பேசுகின்றாள். "ஊர் மக்களே! என்னை ஒன்றும் கேட்க வேண்டா. என் தூக்கத்தை நீக்கிய நோயையும், உயிரையும் நலியச்செய்த மயக்கத்தையும் நீக்க வழி உண்டாயின் என் உயிரைக் காப்பீராக."

அதற்கு அவர்கள் மறுமொழி சொல்லாதிருக்க, கதிரவனை யும் காமனையும் மீண்டும் நினைத்து, இரவில் கனவிலாயினும் தலைவனைக் கண்டு ஆறுதல் கொள்ளலாம் என்று முடிவு செய்தாள். "மன்மதனின் கொடுமையால் கண் உறக்கம் கொள்ளவில்லையாயின் கதிரவனே! நீ அவனை நனவிலாவது எனக்குக் காட்டு. அவ்வாறு காட்டாயாயின் தலைவன் என்னை நினைத்துப் பைத்தியமாகிப் பனைமரக்குதிரையாகிய மடல்

ஏறட்டும். மலர் அம்புகளை அவன்மீது தொடுக்கும்படி நான் மன்மதனைப் பாதம் தொட்டு வேண்டுவேன்" என்றாள்.

"இவ்வாறு அந்தப் பெண் படும் துன்பத்தை எல்லோரும் பாருங்கள். கண்ணீர் விட்டு அழுகின்றாள். தோள்கள் மெலிய வளைகள் நீங்கப்பெற்றாள். இந்த நிலையில் அன்னப்பேடை ஒன்று தன்னை நோக்கி, விரைந்து வந்த ஆண் அன்னத்தோடு இணைந்து மகிழ்வதுபோல அவள் காதலன் வந்து இவள் துன்பத்தை நீக்கினான். ஊரில் உள்ளார் எள்ளி நகையாடிய இகழ்ச்சியை வென்றாள். அவள் நாணம் மீண்டும் வரத் தலை குனிந்து அழகு பெற்றுத் தலைவனோடு இணைந்தாள். இம் மகிழ்ச்சியையும் நீங்கள் பாருங்கள்."

கருத்து

பிரிந்த கணவன் உரிய காலத்தில் வாராததால் புலம்பிக்கொண்டிருக்கும் மங்கை ஒருத்தியைக் கண்டோர், அவளது துன்பத்துக்கு மனமிரங்கி, அவள் துன்புறுதற்குரிய காரணத்தைக் கேட்டனர். அவள் தன் தலைவன் தன்னை நீங்கித் தனக்குத் துன்பம் தந்ததாகவும், காமத் தீ தன்னைச் சுட்டெரித்துக் கொண்டிருப்பதாகவும், அதிலிருந்து மீள முயன்று கொண்டிருப்பதாகவும் கூறுகின்றாள். மேலும், ஞாயிறு முதலியவற்றிடம் தன் தலைவனைத் தேடிக் கண்டுபிடித்துத் தன்னிடம் அளிக்குமாறு வேண்டிக்கொள்கின்றாள். அவளைக் கண்டோர் அவள் சொல் கேட்டு வருந்துகின்றனர். அந்த நிலையில் வந்து சேர்ந்த தலைவன் அவளைத் தழுவி அவள் துன்பத்தைப் போக்குகின்றான். துன்பம் நீங்கிய நிலையில் தலைவி, தன் பெண்மைக்குரிய நாணம் முதலிய நற்பண்புகளை மீண்டும் பெற்று, அழகு நலம் கொண்டு மகிழ்கிறாள் என அவளைக் கண்டோர் கூறுகின்றனர்.

சொற்பொருள்

1. ஆறு அல்ல - அறவழி அல்லாத.
2. தேறுகள் - தெளிந்த கள்; நறவு - மது.
3. வேறொரு பாற்று - உலகியலுக்கு மாறாய்; சீறடி - சிறிய அடி.
4. இயலியாள் - நடந்து வருபவள்.
5. விலங்கு ஆக - எதிரே இல்லாமல் விலகி, குறுக்காய்.
6. வேல் நுதி - வேல் நுனி.
9. நாண் - நாணம்.
10. பெண்மை - பெண் தன்மை.

11. உழைச் சென்று - அருகே சென்று.
12. ஏமுற்றார் - பித்தர், பைத்தியக்காரர்.
16. மதிமருள - மனம் மயங்குமாறு.
17. மூசி - மொய்த்து, சூழ்ந்து.
19. மழை - மேகம்.
20. விலைவளம் - ஒரு பொருளை எவ்வளவு கொடுத்து வாங்க வேண்டுமென்ற தன்மை.
23. சூள் - உறுதிமொழி; தெளித்தவன் - தெளிவித்தவன்.
25. கொலைவன் - கொலைகாரன்.
28. காட்டீமோ - காட்ட மாட்டாயா?
29. எவன் செய்தி - என்ன செய்கிறாய்?
32. தேரை - தவளை; தினப்படல் - தின்னப்படுதலை.
34. சாம்பி - சுருங்கி.
36. அறாஅல் - கையினின்றும் அகலாது; அரி - நுண்ணிய மயிர்; கொட்கும் - சுழலும்.
37. பறாஅப் பருந்து - முன் கை வளையல் (பருந்து என்பது பருந்து, வளையல் என்னும் பொருள்களைக் கொண்டது, வளையலைப் பறாஅப் பருந்து என்றார்.)
38. கறாஅ - பால் கறக்கப்படாத.
40. செறாஅது - கோபியாது.
42. சுறாக் கொடியான் - சுறாமீனைக் கொடியாய்க் கொண்ட மன்மதன்; சுறா - மகர மீன்.
44. மறாஅ - தவறாத.
45. அறாஅ - தண்டியாது.
48. கையாறு - செயலற்ற நிலை.
49. தானை - ஆடை.
53. ஊரவிர்! - ஊரிலுள்ளீர்!
54. அடாஅ நறவு - சமைக்கப்படாத கள் - அஃதாவது, தேன்.
56. படாஅமை - துயிலாமை.
58. பணை ஈன்ற மா - பனை மடலால் செய்யப்பட்ட குதிரை.
60. கணை - அம்பு; கால் புல்லிக் கொண்டு - காலைப் பிடித்துக்கொண்டு.
62. இனைபு - வருத்தம்.
65. துனை - விரைவு.

கண்டார் கூற்று

கலித்தொகை 148 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

இது ‘வெளிப்படை தானே கற்பினொ டொப்பினும் ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக, வரையாது பிரிதல் கிழவோற்கு இல்லை’ என்பதனான், அரசன் மண்கோடற்கு ஏவுதலின், வாளா ணெதிரும் பிரிவின்கண், தலைமகன் வரைவிடை வைத்து வேந்தற்குற்றுழிப் பிரிந்துழி, அவள் வருத்தமிகுதி கண்டார் கூறியது.

கூற்றில் கூறப்பட்டிருப்பது தொல்காப்பிய நூற்பா (1087). இதன் பொருள்: “களவு வெளிப்பட்டாலே அது கற்பின்பாறபடும். ஆயினும், திருமணமாகாத அந்நிலையில், ‘வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்’ எனப் பரிசம் போடுவதற்குப் பொருள் தேடத் தலைவன் பிரிதலுண்டு. முன்பு கூறிய ஓதல், பகை, தூது ஆகிய மூன்றனுக்காக, திருமணம் செய்துகொள்ளுமுன் பிரிதல் தலைவனுக்கு இல்லை. (ஞாங்கர்க்கிளந்த - முன்னே கூறிய).

கூற்று விளக்கம்

அரசன் பகைவனின் நாட்டைப் பிடிக்க ஏவியமையால் வீரனாகிய ஆடவன் போரின்மேல் செல்வது என்னும் வகையில் தலைவன் வரைவிடை வைத்து வேந்தர்க்கு உற்றுழிப் பிரிகின்றான். அஃதாவது, வேந்தனின் ஆணையை நிறைவேற்றப் பிரிகின்றான். அப்பொழுது தலைவியின் வருத்தமிகுதியைக் கண்டார் கூறியது.

தொல்இயல் ஞாலத்துத் தொழில்ஆற்றி, ஞாயிறு,
வல்லவன் கூறிய வினைதலை வைத்தான்போல்,
கல்அடைபு, கதிர்ஊன்றி, கண்பயங் கெடப்பெயர,
அல்லது கெடுப்பவன் அருள்கொண்ட முகம்போல,
மல்லல்நீர்த் திரைஊர்பு, மால்இருள் மதிசீப்ப,
இல்லவர் ஒழுக்கம்போல், இருங்கழி மலர்கூம்ப,
செல்லும்என் உயிர்ப்புறத்து இறுத்தந்த மருள்மாலை

மாலைநீ—
இன்புற்றார்க்கு இறைச்சியாய் இயைவதே செய்தாய்மன்!
அன்புற்றார் அழ,நீத்த அல்லலுள், கலங்கிய

துன்புற்றார்த் துயர்செய்தல் தக்கதோ, நினக்கு?
மாலைநீ–
கலந்தவர் காமத்தைக் கனற்றலோ செய்தாய்மன்!
நலங்கொண்டு நல்காதார் நனிநீத்த புலம்பின்கண்
அலந்தவர்க்கு அணங்குஆதல் தக்கதோ, நினக்கு?

மாலைநீ–
எம்கேள்வன் தருதலும் தருகல்லாய் துணையல்லை;
பிரிந்தவர்க்கு நோயாகிப் புணர்ந்தவர்க்குப் புணையாகித்
திருந்தாத செயினல்லால் இல்லையோ, நினக்கு;

எனவாங்கு –
ஆயிழை மடவரல் அவலம் அகலப்
பாயிருட் பரப்பினைப் பகல்களைந் ததுபோலப்
போயவர் மண்வெளவி வந்தனர் –
சேயுறை காதலர் செய்வினை முடித்தே.

தெளிவுரை

கதிரவன் தன் வழக்கப்படி உலகத்தில் பகலை உண்டாக்கி, மன்மதன், 'நான் பிரிந்திருப்பவரை வருத்த வேண்டும், நீ சென்றுவிடு' என்று கூறிய ஏவலைத் தலைமேல் கொண்டது போல மேற்கு மலையை அடைந்து, உயிர்கள் தம் கண்களால் பார்க்கும் பயன் கொள்ள இயலாத நிலையில் மறைந்தான். அப்போது தீமையை நீக்குபவனின் அருள் பொங்கும் முகம்போல நிலவு தோன்றி அடர்ந்த இருளை நீக்கியது. கணவனைப் பிரிந்தவர் வாடியிருப்பதுபோல உப்பங்கழியில் மலர்கள் கூம்பின. இந்நிலையில் என் உயிரைக் கொள்வதற்காக முற்றுகையிட்டு நிற்கின்ற மாலையே! நீ மிகவும் அறிவு மயங்கிய மாலையாய் இருக்கிறாய்.

மாலையே! நீ இணைந்த காதலர் மகிழ அவர்க்கு ஏற்றன வெல்லாம் செய்கிறாய். காதலர் பிரியத் தனிமையால் வாடும் காதலியரை வருத்துகின்றாய். ஏற்கெனவே கலங்கித் துன்புற் றிருக்கும் அவர்களை மேலும் துயரத்திற்கு ஆளாக்கி வருத்து கிறாய். இது நியாயமா?

காதலர் உடனிருக்கும்போது காதலியர்க்கு விருப்பத்தையும் வேட்கையையும் பெருக்கி இன்புறச்செய்கிறாய்; அக்காதலர் தொடர்ந்து அருள் செய்யாமல் பிரியும்போது தனிமையில் வாடும் காதலியரை மேலும் துன்புறுத்துகிறாய். மாலையே! இது நியாயமா?

மாலையே! என்னைப் பிரிந்து சென்ற என் தலைவனை எனக்குத் துணையாய், இங்கு இவ்வேளையில் கொண்டுவந்து சேர்க்கவும் மாட்டாய்! பிரிந்தோர்க்குத் துன்பமாயுள்ளது. ஆனால், இணைந்தோரை நீ இன்பக் கடலில் செலுத்தும் தோணியாய் இருக்கிறாய். இவ்வாறு நியாயமின்றி நடத்தலன்றி வேறு செயலைச் செய்ய அறிய மாட்டாயோ?

இங்ஙனம் அப்பெண் கூறி வருந்தியபோது, தொலைவில் பகைவரின் நாட்டைக் கைப்பற்றிய அவள் காதலன் திரும்பி வந்து, பரவிக் கிடக்கும் இருளைப் பகலவன் நீக்குவதுபோல அவள் பெரும் துன்பத்தை நீக்கினான்.

கருத்து

தலைவன் பிரிவால் மாலை நேரத்தில் தலைவி மயங்கிப் புலம்பியதைக் கேட்டு வருந்தியிருந்த மக்கள், தலைவன் திரும்பியபோது தலைவி மகிழ்ந்ததைக் கண்டு தாங்களும் மகிழ்ந்தனர்.

விளக்கம்

இப்பாடல் நெய்தல்திணைப் பாடலாய்த் தொகுக்கப்பெற் றிருப்பினும், இது பெருந்திணைப்பாற்படும் என்று உரை ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். அகத்துறை இலக்கண வல்லார் கூறியவண்ணம், படையெடுத்துச் சென்று நாடு கொள்ளும் அரசர்க்குத் துணையாய் வாளொடு எதிர் நின்று போரிடும் வீரன் ஒருவன், தன் களவுக்காலத்துப் பிரிதல் இல்லை என்பதால், வரைந்துகொண்ட பிறகே தலைவியைத் தலைவன் பிரிந்தான் என்க. ஆகவே, தலைவி தன் கற்புக் காலத்தில் பிறர் அறிய வருந்தி அரற்றுவதில்லை. இப்பாடலில் கண்டார் கேட்குமாறு தலைவி வருந்தியுள்ளதால் இப்பாடல் பெருந்திணையின்பாற்படும் என்றது இலக்கண விதிப்படி சரியானதேயாகும்.

தலைவனைப் பிரிந்து தலைவி ஆற்றாமை கொண்டு வருந்திப் புலம்புகின்றாள். அப்புலம்பலைக் கேட்டுக்கொண்டிருந்த வர்கள் தலைவிக்காக வருந்திக்கொண்டிருந்தபொழுது, பிரிந்து சென்ற தலைவன் வெற்றிவாகை சூடித் தலைவியைக் காண வந்தான். தலைவனைக் கண்டதும் தலைவியின் துன்பங்க ளெல்லாம் ஓடி ஒளிந்தன. இதனைக் கண்டோர் வியந்து கூறியதாய் இப்பாடல் அமைந்துள்ளது.

சொற்பொருள்

1. தொல்இயல் - பழமையான இயல்பாய் வரும் முறைமை; ஞாலம் - உலகம்.
2. வல்லவன் - (இங்கு) காமன்.
3. கல் - மேற்கு மலை; கண் பயன் கெட - கண்ணால் பார்க்க இயலாதவாறு.
4. அல்லது - நல்லது அல்லாதது, தீமை.
5. மல்லல் நீர் - வளப்பத்தைக் கொண்ட கடல்; மதி - நிலவு; *சீப்ப* - போக்க.
6. இல்லவர் - கணவனைப் பிரிந்து இருப்பவர்; கூம்ப - குவிய.
7. இறுத்தந்த - வந்து சேர்ந்த; மருள் - மயக்கம்.
9. இறைச்சி - நேயம், விருப்பம்.
10. நீத்த அல்லல் - காதலனைப் பிரிந்த துன்பம்.
13. கனற்றல் - மூண்டு எழச்செய்தல்.
15. அலந்தவர் - துன்பமுற்றவர்.
17. கேள்வன் - துணைவன்.
18. புணை - தெப்பம், துணை.
21. மடவரல் - மடப்பம் வருதலை உடையவள்; அவலம் - துன்பம்.
22. பாய் இருள் - பரவிய இருள்; பகல் - சூரியன்.
23. அவர் - பகைவர்; வெளவி (நாட்டைக்) கவர்ந்து.
24. சேய் - தொலைவு; செய்வினை - தான் செய்யும் போர்த்தொழில்.

தொழிலாளர் காதல்

பிறர் ஏவும் தொழில் செய்து வாழ்வோராகிய மக்கள் காதல்.

தலைவி கூற்று

கலித்தொகை 108 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

'அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினும் கடிவரைஇல புறத்து என்மனார் புலவர்' என்பதனால் பிறர் ஏவிய தொழிலைச் செய்தல்வல்ல அகப்புறத் தலைமகனும் தலைமகளும் முன்னொருகாற் கூடிப் பின்னர் அவன் எதிர்ப்பட்டுழி, அவன் வயின் பரத்தமையால் ஊடிப் பின்னர்க் குறி நேர்ந்தது.

இப்பாடலில் இடம்பெற்றுள்ள தலைமக்கள் பிறர் ஏவும் தொழில் செய்து இனிது வாழ்வோராகிய முல்லை நிலத்து மக்கள்.

கூற்று விளக்கம்

அகத்துறையில் கூறப்பெறும் தலைவன், தலைவி ஆகியோர் ஒரு கூட்டத்தார்க்குத் தலைவன், அல்லது தலைவி என்ற நிலையில் பெரும்பாலும் கூறப் பெறுவர். அங்ஙனமின்றி, பிறர் ஏவுகின்ற தொழிலைச் செய்வோரும் அகத்துறையில் தலைவன் தலைவி என்ற நிலையில் சொல்லப் பெறுவர். இச்செய்தி,

> அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினும்
> கடிவரை இலபுறந்து என்மனார் புலவர்

என்ற தொல்காப்பியர் நூற்பாவில் (தொல்.நூற்பா 969) உணர்த்தப் பட்டுள்ளது.

> அடியோர் - பிறர் ஏவியதைச் செய்வோர் (குற்றேவல் செய்வோர்);
> வினைவலர் - தாமாக ஒரு தொழில் செய்பவர் (கைவினைஞர்);

ஆகிய இருவரிடத்தும் உரிப்பொருள் புறத்தவாகிய கைக்கிளை, பெருந் திணைகள் நிகழ்வனவாகப் பாடப்படுவன நீக்கப்படா.

இந்நூற்பா விதியினால், தலைவனும் தலைவியும் ஏற்கனவே ஒருமுறை கூடி, இப்பொழுது அவன் எதிர்ப்பட, அவள் அவனது பரத்தமை காரணமாக ஊடல் கொண்டு, பிறகு ஒரு குறிப்பிட்ட இடத்தில் அவனைச் சந்திக்க இசைவு தெரிவித்தது.

தலைவன்

இகல்வேந்தன் சேனை இறுத்தவாய் போல—
அகல்அல்குல்,தோள், கண்,என மூவழிப் பெருகி,
நுதல்,அடி, நுசுப்பு,என மூவழிச் சிறுகிக்
கவலையால் காமனும் படைவிடு வனப்பினோடு,
அகல்ஆங்கண் அளைமாறி, அலமந்து, பெயருங்கால்,
'நகைவல்லேன் யான்'என்று—என் உயிரோடு படைதொட்ட
இகலாட்டி! நின்னை எவன்பிழைத்தேன், எல்லா!யான்

தலைவி

அஃது அவலம் அன்றுமன.
ஆயர் எமரானால், ஆய்த்தியேம் யாம்,மிகக்
காயாம்பூங் கண்ணிக் கருந்துவர் ஆடையை
மேயும் நிரைமுன்னர்க் கோல்ஊன்றி நின்றாய்,ஓர்
ஆயனை அல்லை; பிறவோ? அமரருள்
ஞாயிற்றுப் புத்தேள் மகன்!

தலைவன்

அதனான் வாய்வாளேன்,
'முல்லை முகையும் முருந்தும் நிரைத்தன்ன
பல்லும் பணைத்தோளும், பேரமர் உண்கண்ணும்,
நல்லேன்,யான்' என்று நலத்தகை நம்பிய,
சொல்லாட்டி நின்னொடு சொல்லாற்று கிற்பார்யார்?

தலைவி

சொல்லாதி.

தலைவன்

நின்னைத் தகைத்தனென்—

தலைவி

அல்லல் காண்மன்!
மண்டாத கூறி, மழகுழக்கு ஆகின்றே,
கண்ட பொழுதே கடவரைப் போல,நீ
பண்டம் வினாய படிற்றால் தொடீஇய,நிற்
கொண்டது எவன்—எல்லா!—யான்?

தலைவன்

கொண்டது:
அளைமாறிப் பெயர்தருவாய்— அறிதியோ? அஞ்ஞான்று,

தளவமலர் ததைந்ததோர் கானச்சிற் றாற்றுஅயல்,
இளமங்காய் போழ்ந்தன்ன கண்ணினால் என்நெஞ்சம்
களமாக்கொண்டு ஆண்டாய்;ஓர் கள்வியை அல்லையோ?

தலைவி

நின்நெஞ்சம், களமாக்கொண்டு யாம்ஆளல் எமக்குஎவன் எளிதாகும்?
புனத்துளான் என்னைக்குப் புகாஉய்த்துக் கொடுப்பதோ,
இனத்துளான் என்னைக்குக் கலத்தொடு செல்வதோ
தினைக்காலுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ?

தலைவன்

அனைத்தாக.

வெண்ணெய்த் தெழிகேட்கும் அண்மையால்,சேய்த்துஅன்றி,
அண்ணணித்து ஊராயின், நண்பகல் போழ்தாயின்,
கண்நோக்கு ஒழிக்கும் கவின்பெறு பெண்ணீர்மை
மயில்எருத்து வண்ணத்து மாயோய்! மற்றுஇன்ன
வெயிலொடு, எவன்விரைந்து சேறி? உதுக்காண்.
பிடிதுஞ்சு அன்ன அறைமேல, நுங்கின்
தடிகண் புரையும் குறுஞ்சுனை ஆடிப்
பனிப்பூந் தளவொடு முல்லை பறித்துத்
தனிக்காயாந் தண்பொழில், எம்மொடு வைகிப்
பனிப்படச் செல்வாய்,நும் ஊர்க்கு.

தலைவி

இனிச் செல்வேம், யாம்.
மாமருண் டன்ன மழைக்கண்சிற் றாய்த்தியர்
நீமருட்டும் சொற்கண் மருள்வார்க்கு உரைஅவை;
ஆமுனியா ஏறுபோல், வைகல், பதின்மரைக்
காமுற்றுச் செல்வாய்;ஓர் கண்குத்திக் கள்வனை;
நீஎவன் செய்தி, பிறர்க்கு?
யாம்எவன் செய்தும், நினக்கு?

தலைவன்

கொலை உண்கண் கூர்எயிற்றுக் கொய்தளிர் மேனி
இனைவனப்பின் மாயோய் நின்னிற் சிறந்தார்
நிலவுலகத்து இன்மை தெளிநீ வருதி

மலையொடு மார்புஅமைந்த செல்வன் அடியைத்
தலையினால் தொட்டுஉற்றேன் சூள்.

தலைவி

ஆங்கு உணரார் நேர்ப; அதுபொய்ப்பாய் நீயாயின்
தேம்கொள் பொருப்பன் சிறுகுடி எம்ஆயர்
வேந்துஊட்டு அரவத்து நின்பெண்டிர் காணாமல்,
காஞ்சித் தாது உக்கன்ன தாதுஎரு மன்றத்துத்
தூங்கும் குரவையுள் நின்பெண்டிர் கேளாமை
ஆம்பல் குழலால் பயிர்பயிர் எம்படப்பைக்
காஞ்சிக்கீழ்ச் செய்தேம் குறி.

தெளிவுரை

தலைவன் : *நீ அகன்ற அல்குலும் தோளும் கண்ணும் ஆகிய மூன்று உறுப்புகளும் பெரியனவாகக் கொண்டவள்; நெற்றி, பாதம், இடை ஆகிய மூன்று உறுப்புகளும் சிறியனவாய் உள்ளன. மன்மதன் உன்னைக் காண்பார் மீது மலர் அம்பு எய்து காமத்தையும் கவலையையும் உண்டாக்குவான். அத்தகைய அழகுடன் ஊர்த் தெருக்களில் திரிந்து மோர் விற்று உன் வீட்டிற்குத் திரும்புகின்றாய். 'புன்னகை செய்ய வல்லேன்' என்பது போலச் சிறிது நகை காட்டி, போர்க்களத்தில் அரசன் பகைவரின் உயிரைப் பறிக்கும் அம்பினை எய்வதுபோல என் உயிரைப் பறித்தாய். அதற்கு, உனக்கு நான் செய்த தவறு என்ன?*

தலைவி : *நான் மோர் விற்றுத் திரிவது என் குலத்தொழில். எம் சுற்றத்தாரும் நானும், ஆய்ச்சியர் குலமே. அதில் என்ன தவறு? நீ காயாம்பூக் கண்ணியையும் துவர் ஆடையையும் உடையவனாய், கையில் கம்பு கொண்டு ஆநிரை மேய்க்கின்றாய். ஆனால் நீ ஆயனாகத் தோன்றவில்லை. அவரின் வேறாகத் தேவருள் சூரியனின் மகன் கன்னன் என்று எண்ணலாமா?*

தலைவன் : *நீ இகழ்ந்து கூறுவதால் நான் எதுவும் கூற மாட்டேன். முல்லை அரும்பினையும் மயிற் பீலியின் அடிப்பகுதியையும் வரிசையாக வைத்தாற் போன்ற பல்லும், மூங்கிலை ஒத்த தோளும், பேரமர் செய்யும் மையுண்ட கண்ணும் கொண்டு, இவற்றால் நான் அழகி என்ற தற்பெருமை பாராட்டும் சொல்லை உடையவளே! உன்னோடு பேசி வெல்ல முடியுமா?*

தலைவி : அவ்வாறாயின் ஒன்றும் பேசாதே.

தலைவன் : பேசவில்லை; ஆனால் போகாமல் நான் மறிக்கின்றேன்.

தலைவி : இஃதென்ன தொல்லை? பொருத்தமின்றிப் பேசும் குழந்தையைப் போல் ஏதோ பிதற்றுகிறாய். கடன் கொடுத்தவன் அதனை வாங்கியவனைக் கண்டபொழுது பொருள் கேட்பது போல, நீயும் ஏதேதோ கேட்கிறாய். என் கூடையைப் பிடிப்பதற்கு, நான் உன்னிடம் கடன் என்ன பெற்றுள்ளேன்?

தலைவன் : நீ கொண்டதை அறியாயோ? ஒருநாள் மோர் விற்றுத் திரும்பும்போது முல்லைப் பூக்கள் நிறைந்த காட்டாற்றின் கரையில், மாவடுவைப் பிளந்தது போன்ற கண்ணினால் என்னைப் பார்த்து என் மனத்தைக் கொள்ளை கொண்டு விட்டாயே! என்னையே கவர்ந்து கொண்ட கள்வி அல்லவா நீ?

தலைவி : உன் மனத்தைக் கவர்ந்து உன்னை அடிமைப் படுத்துவது என்னால் எப்படி முடியும்? அது தினைப்புனத்தில் என் தந்தைக்கு உணவு கொண்டு செல்வதோ, ஆநிரைகளை மேய்க்கின்ற என் தமையனுக்கு உணவு கொண்டு செல்வதோ, அல்லது தினைப்புனத்தில் தாய்விட்ட கன்றுகளை மேய்ப்பதோ போன்று பயனுள்ளதா என்ன?

தலைவன் : அதுபோன்றதே ஆகட்டுமே! கடைந்த மோரைக் கையால் அளைந்து வெண்ணெய் எடுக்கும்போது எழும் சிறிய ஒலி கேட்குமளவு அருகில் உள்ளது, உன் ஊர். இப்பொழுது உச்சிப் பொழுதாய் உள்ளது. பார்ப்போர் கண்ணை வேறெ வரையும் பார்க்க விடாது தடுக்கும் அழகுடைய மேனியையும் மயிலின் கழுத்துப் போன்ற நிறத்தையும் கொண்டவளே! அதோ! காயாம் பூச்சோலையில், பெண் யானை கிடப்பதைப் போன்ற பாறையில், நுங்கின் கண் திறந்தது போன்ற சுனை இருப்பதைப் பார். அந்தச் சுனையில் நீராடிச் செம்முல்லை மலர்களையும், பிறவகை மலர்களையும் பறித்துச் சூடிக் கொண்டு என்னோடு தனியாகத் தங்கியிருந்து குளிர்ச்சி பொருந்திய மாலைப் பொழுதில் உன் ஊருக்குச் செல்லலாமே.

தலைவி : *நான் இப்பொழுதே செல்வேன். மான் போல் மருண்டு பார்க்கும் சிறு ஆயர் மகளிர் நீ கூறும் மயக்கும் சொற்களைக் கேட்டு மயங்குவர். அவரிடம் போய் இதைச் சொல்லு. பசுக்களை வெறுக்காமல் இணையும் காளையைப் போல நீ நாள்தோறும் பத்து மகளிரை விரும்பிச் செல்வாய். பிறர் கண் விழித்திருக்கும் போதே அவர் பொருளைத் திருடும் கண்குத்திக் கள்வனல்லவா, நீ! நீ பிறருக்கு என்ன நன்மை செய்வாய்? ஆதலின் உனக்கு நான் என்ன நன்மை செய்ய முடியும்?*

தலைவன் : *கொல்வது போல் பார்க்கும் பார்வையையும், கூர்மையான பல்வரிசையையும், மாந்தளிர் போன்ற மேனியையும் கொண்டு உன்னைக் காண்போரை வருத்தும் அழகும் கொண்டவளே! உன்னைவிடச் சிறந்தவள் ஒருத்தி எனக்கு இவ்வுலகில் இல்லை. இதை நீ தெளிவாக அறிந்து கொள். என் அருகே வா; மலையை ஒத்த மார்புடைய திருமாலின் திருவடியைத் தலையினால் வணங்கிக் கையினால் தொட்டுச் சத்தியம் செய்வேன்.*

தலைவி : *ஒன்றும் அறியாதவரே உன் சத்தியத்தை நம்புவர்; நீ சத்தியத்தை மீறுபவன். ஆனாலும் இப்பொழுது உன் துன்பத்தைப் பற்றிச் சிந்தித்தால் நான் அதற்கு உடம்பட வேண்டும் என்று தோன்றுகிறது. ஆதலால் எம் வீட்டின் புறக்கடையில் காஞ்சி மரத்தின் கீழே குறி செய்வேன். (சந்திப்பதற்காக அழைக்கின்றேன்). இரவில் நீ அங்கு வரும்பொழுது, தேன் நிறைந்த பொதியமலையைக் கொண்ட பாண்டிய மன்னனின் சிறுகுடியைச் சேர்ந்த எம் ஆயர்குல மக்கள் தம் வேந்தன் இனிதே வாழ, தெய்வத்தை வேண்டும் விழா ஆரவாரமாக நடைபெறும். அந்த நேரத்தில் உன்னுடைய பெண்டிர் உன்னைக் கண்டுவிடாமலும், காஞ்சிப்பூவின் மகரந்தப்பொடி உதிர்ந்தாற் போலப் பூந்துகள் உதிர்ந்து கிடக்கும் ஊர் மன்றத்தில் நிகழும் குரவைக் கூத்தில் பங்கு கொள்ளும் உன்னுடைய பெண்டிர் உனது வருகையைக் கேள்வியுறாமலும், ஆம்பல் என்னும் பண்ணைக் குழலில் இசைத்துக் குறி செய்து வருக. (நானும் காஞ்சி மரத்தை வந்தடைவேன்.)*

கருத்து

ஆயர் மகன் ஒருவன் ஆயர் மகள் ஒருத்தியைக் காதலித்துக் கூடி மகிழ்ந்தான். பின்னர், இருவரும் சந்திக்க வாய்ப்பில்லாமல் இருந்தது: ஒருநாள் ஆயர் மகள் மோர் விற்று வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, அவளை அவன் சந்தித்தான். அப்பொழுது, இருவரும் உரையாடி ஊடல் கொண்டு பின்னர், கூடி மகிழக் குறியிடம் சொன்னாள் அவள். அவர்களுக்குள் நடைபெற்ற உரையாடல்களே இப்பாடலின் செய்தி.

குறிப்பு

'வைகல், பதின்மரைக் காமுற்றுச் செல்வாய்' என்பது தலைவனின் பரத்தமையைக் குறிக்கிறது.

'நின் பெண்டிர் காணாமல், கேளாமல் வருக' என்றதனாலும், தலைவனின் பரத்தமைத் தன்மை புலனாகின்றது.

ஊடல் கொண்ட நிலையில் தலைவியின் பேச்சும் தலைவனின் மறுமொழியும் நடைமுறைப் போக்குடன் அமைந்துள்ளன.

இறுதியில் தலைவி கூட்டத்திற்கு உடன்பட்டு, இரவுக் குறியிடம் சுட்டினள்.

சொற்பொருள்

1. இகல் - மாறுபாடு; இறுத்தவாய் - தங்கிய இடம்.
3. நுசுப்பு - இடை.
4. காமன் - மன்மதன்; வனப்பு - அழகு.
5. அகல் - ஊர்; அளைமாறி - மோர் விற்று; அலமரல் - சுழலுதல், திரிதல்.
6. படை தொட்ட - (உயிரை வாங்கும்) அம்பினைத் தொடுத்த.
7. இகலாட்டி - மாறுபடுபவள்; எவன் - என்ன?
9. எமர் - உறவினர்.
10. கண்ணி - தலைமாலை; துவர்ஆடை - காவி உடை.
11. நிரை - பசுக்கூட்டம்.
12. அமரர் - தேவர்; புத்தேள் - கடவுள்.
13. ஞாயிற்றுப் புத்தேள் மகன் - கதிரவனின் மகனாகிய கன்னன்.
14. வாய் வாளேன் - வாய் திறக்க மாட்டேன்.
15. முகை - அரும்பு; முருந்து - மயிலிறகின் அடிப் பகுதி.
16. பேரமர் - பெரு விருப்பம்.
17. நலத்தகை - அழகு.

18. சொல்லாட்டி - சொல்லை ஆளுபவள்.
19. சொல்லாதி - சொல்லாதே.
20. தகைத்தனென் - போகவிடாமல் தடுத்தேன்.
21. மண்டாத - விரும்பி வேண்டாத; மழகுழக்கு - இளமையான குழந்தைக்கு.
22. கடவர் - கடன் கொடுத்தவர்.
23. படிறு - கொடுமை.
26. அளைமாறி - மோர் விற்று; பெயர்தருவாய் - பெயர்பவளே, நீங்குபவளே.
27. தளவம் - செம்முல்லை; கானச் சிற்றாற்று அயல் - சிறிய காட்டாற்றின் கரையில்; ததைதல் - நெருங்கியிருத்தல்.
28. இளமாங்காய் - மாவடு.
31. புனத்துளான் - தினைப்புனத்தில் உள்ளவன்; ஐ - தந்தை; புகா - உணவு.
32. இனத்துளான் - ஆநிரைகளோடு உள்ளவன்; ஐ - தமையன்; கலம் - சோற்றுக் கலம்.
33. யாய் - தாய்.
35. தெழி - மோர் கடையும்போது எழும் ஒலி.
37. நீர்மை - தன்மை.
39. உதுக்காண் - அதோ பார்.
40. பிடி - பெண் யானை; அறை - பாறை.
41. தடிகண் - பனை நுங்கை வெட்டியதும் உண்டாகும் குழி.
43. வைகி - தங்கி.
44. பனிப்பட - குளிர்ச்சி உண்டாக.
46. மா - மான்; சிற்றாய்த்தியர் - சிறு ஆய மகளிர்.
47. மருள்வார் - மயங்குவார்.
48. முனியா - வெறுக்காத; வைகல் - நாள்தோறும்.
55. மலையொடு மார்பமைந்த செல்வன் - திருமால்.
56. சூள் - சூளுறவு, சத்தியம்.
57. நேர்ப - இசைவர், ஒப்புவர்.
58. பொருப்பன் - மலை நாட்டைக் கொண்டவன்.
59. அரவம் - விழா ஒலி.
60. உக்கன்ன - உதிர்ந்ததுபோல.
61. தூங்கும் - ஆடும்; குரவை - குரவைக் கூத்து.
62. பயிர் - ஒலி; படப்பை - தோட்டம்.
63. காஞ்சி - காஞ்சி மரம்.

தலைவன் கூற்று

கலித்தொகை 109 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

இஃது வினைவல பாங்கின் தலைமகளைக் கண்ட வினைவல பாங்கின் தலைமகன் "காமஞ் சாலா, இளமையோள்வயின், ஏமஞ் சாலா இடும்பை எய்திக்" கூறியது.

கூற்று விளக்கம்

ஏவும் தொழில் புரியக் கூடிய தலைவியை, 'வினைவல பாங்கின் தலைவி' என்றும், அவ்வாறான தலைவனை, 'வினைவல பாங்கின் தலைவன்' என்றும் கூறுவது இலக்கண மரபு.

தொழில் வல்லார் இனத்தைச் சார்ந்த தலைவன் ஒருவன் அதே இனத்தைச் சேர்ந்த மிகவும் இளைய தலைவியைப் பார்த்து, காதல் உணர்வு நிரம்பப் பெறாத இளம்பருவத்தினாளாகிய அவள் காரணமாகத் தடுத்து நிறுத்த இயலாத துன்பம் எய்திக் கூறியது.

கார்ஆரப் பெய்த கடிகொள் வியன்புலத்துப்
பேராது சென்று, பெரும்பதவப் புல்மாந்தி,
நீரார் நிழல குடம்சுட்டு இனத்துள்ளும்,
போர்ஆரா ஏற்றின், பொருநாகு, இளம்பாண்டில்
தேர்ஊரச், செம்மாந் ததுபோல் மதைஇனள்–
பேரூரும் சிற்றூரும் கௌவை எடுப்பவள்போல்
மோரோடு வந்தாள்தகை கண்டை யாரோடும்
சொல்லியாள் அன்றே வனப்பு!
பண்ணித் தமர்தந்து, ஒருபுறம் தைஇய
கண்ணி எடுக்கல்லாக் கோடுஏந்து அகல்அல்குல்–
புண்இல்லார் புண்ணாக நோக்கும்; முழுமெய்யும்
கண்ணளோ?– ஆய மகள்
இவள்தான், திருத்தாச் சுமட்டினள் ஏனைத், தோள்வீசி,
வரிக்கூழ வட்டி தழீஇ, அரிக்குழை
ஆடல் தகையள்; கழுத்தினும் வாலிது
நுண்ணிதாத் தோன்றும், நுசுப்பு.
இடைதெரியா ஏஎர் இருவரும் தத்தம்

உடைவனப்பு எல்லாம் இவட்குஈத்தார் கொல்லோ?
படையிடுவான் மன்கண்டீர் காமன் மடையடும்
பாலொடு கோட்டம் புகின்.
இவள்தான் வருந்தநோய் செய்துஇறப்பின்
அல்லால் மருந்தல்லள்—
'யார்க்கும் அணங்காதல் சான்றாள்'என்று ஊர்ப்பெண்டிர்
'மாங்காய் நறுங்காடி கூட்டுவேம், யாங்கும்
எழுநின் கிளையொடு போக'என்று தத்தம்
கொழுநரைப் போகாமல் காத்து, முழுநாளும்,
வாயில் அடைப்ப, வரும்.

தெளிவுரை

(ஆயர் மகன் தன் நெஞ்சினை நோக்கிச் சொல்லுகின்றான்:)

"மழை பெய்து பொலிவாகத் தோன்றும் பரந்த புல்வெளி; அதில் அருகம்புல்லை வயிறு நிறையத் தின்று நீர்நிலைகளின் கரையில் மர நிழலில் தங்கியிருக்கும் ஆநிரைக் கூட்டம். அக்கூட்டத்தில் ஒவ்வொரு பசுவும் ஒரு குடம் பால் கறப்பவையாய் இருக்கும். அப்பசுக் கூட்டத்தில் உள்ள ஒரு காளையைப் புதிதாக வண்டியில் பூட்டியபோது அது செருக்குடன் செம்மாந்து நிற்பதுபோல் ஓர் ஆயமகள் இளமையும் அழகும் மிகுந்து காணப்படுகிறாள். அதனால் பேரூர், சிற்றூர் ஆகியவற்றில் ஆரவாரம் உண்டாகுமாறு மோர் விற்று வருகின்றாள். நெஞ்சே! அவளுடைய அழகைப் பார். யாரும் அவள் அழகுக்கு இணையில்லை.

"நெஞ்சமே! சுற்றத்தார் தந்த தலைமாலையைக் கூந்தலில் ஒருபுறம் சூடியுள்ளாள். அதுவே அவளுக்குப் பெருஞ்சுமையாக இருக்கிறது. பக்கம் உயர்ந்த இவளுடைய அல்குலைக் காணின், மனத்தில் காமம் என்னும் வேட்கையில்லாத முனிவரும் அவளைப் பார்க்குமாறு உள்ளாள். அவள் கண் மட்டுமின்றி உடல் முழுதுமே பிறர் மனத்தைத் துன்புறுத்தும் தகையவாய் உள்ளன. இவள் தனக்குப் பொருந்தாத ஒரு சும்மாட்டைத் தலையில் வைத்து மோர்ப் பானை சுமக்கிறாள். ஒரு கையில் நெல் நிறைந்த வட்டியைத் தழுவிக்கொண்டு மற்றொரு கையை வீசி

நடக்கிறாள். அவள் கைமட்டுமா அவள் காதில் குழையும் அழகாக ஆடுகிறது. அவள் தலைமாலையைச் சுமக்க முடியாத அளவு மெலிதாக உள்ளது, அவளது இடை.

உருப்பசியும் திலோத்தமையும், அவர்களுடைய அழகை எல்லாம் கூட்டி இவளுக்கு அளித்து விட்டனரோ? என்று தெரியவில்லை. படைப்பதற்காக இவள் காமன் கோவிலில் சென்றால், அவனும் இவள் அழகில் மயங்கித் தன் மலர் அம்புகளைக் கீழே போட்டு விடுவான்.

ஊர்ப் பெண்கள், இவள் பார்க்கும் யாருக்கும் காமநோயை உண்டாக்குவாள் என்று கருதி, 'இன்று மோருக்குப் பதிலாக மாவடு ஊறுகாயை வைத்துக் கொள்வோம். நீ வேறு எங்கும் மோரை விற்றுக் கொள். உன் சுற்றத்தோடு செல்' என்று கூறித் தத்தம் கணவன்மாரைத் தெருவில் செல்லாமல் காவல் செய்துகொண்டு நாள் முழுவதும் வாசலிலேயே நிற்பர். இவள் எனக்கு நோய் உண்டாக்கிச் செல்கின்றாளே தவிர அதற்கு மருந்தாக மாட்டாள்" என்று அவன் தன் மனத்துள் சொல்லிக் கொண்டான்.

கருத்து

இவள் தன்னைப் பார்ப்போருக்குக் காமநோயைத் தருபவளேயன்றி அந்த நோயைப் போக்கும் தன்மையள் அல்லள்.

விளக்கம்

ஆயர் மகள் ஒருத்தி மோர் விற்றுக் கொண்டு செல்கிறாள். அவள் இளமையும் பேரழகும் கொண்டவள். அவள்மீது காதல் கொண்ட ஓர் ஆயர் மகன் ஒருவன் அவளின் பேரெழிலை வருணிக்கிறான். அவள் காமத்தை உணரும் வயதினை அடையாத இளமை கொண்டவள் என்பதை உணர்ந்தபின் தன்னைத் தானே தேற்றிக் கொள்கிறான்.

குறிப்பு

'சுற்றத்தோடு செல்' என்றார், அவரோடு இவள் போகும்போது தம் கணவர், பின்செல்ல இயலாது என்றதால்.

சொற்பொருள்

1. கார் - மழை; கடி - விளக்கம்; வியன்புலம் - அகன்ற நிலம்.
2. பேராது - நெடிது நின்று (சென்று பேராது என மாற்றுக); பதவப்புல் - அறுகம்புல்; மாந்தி - உண்டு.
3. குடம் சுட்டும் - குடம் பால் கறக்கும்.
4. போர் ஆரா - போர் வெறி மிக்க; நாகு - பசு; பாண்டில் - எருது.
5. மதைஇனள் - அழகிலும் இளமையிலும் மிகுந்து.
6. கௌவை - ஆரவாரம்.
7. தகை - அழகு.
8. சொல்லியாள் - உவமித்துக் கூறத் தக்கவள்.
9. பண்ணுதல் - கட்டுதல்; தைஇய - சூடிக் கொண்ட.
10. கண்ணி - தலைமாலை.
11. புண்இல்லார் - கண் உடையவர்.
13. சுமடு - சும்மாடு.
14. வரிக்கூழ - வகை வகையான நெல்லை உடைய; வட்டி - கூடை.
16. நுசுப்பு - இடை.
17. இடைதெரியா ஏஎர் - இடை தெரியாத அழகுடைய; இருவரும் - உருப்பசியும் திலோத்தமையும்.
19. படையிடுவான் - தன் மலரம்புகளைக் கீழே போடுவான்; மடைஅடுதல் - பாலைக் காய்ச்சிப் படைத்தல்.
21. வருந்த நோய் செய்து - காம நோயை உண்டாக்கி; இறப்பவள் - செல்பவள்.
23. அணங்காதல் - வருத்தம் தரக் கூடியவள்.
24. காடி - ஊறுகாய்.
25. கொழுநரை - கணவரை; போகாமல் காத்து - வீட்டை விட்டு நீங்காமல் காத்து.
26. வாயில் - கதவு.

தலைவி கூற்று

கலித்தொகை 110 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

வினைவல பாங்கினால் வெண்ணெய் நொடைக்குச் சென்ற தலைமகளைக் கண்டு, வினைவல பாங்கின் தலைமகன் மெய்தீண்டித் தனது ஆற்றாமையை அறிவித்துழி, அவள், ஈண்டுப் பிறர் அறிவர். நாளைக் கன்றொடு சேறுமென இடங்கூறியது. (நொடை - விற்றல்.)

கூற்று விளக்கம்

வெண்ணெய் விற்கச் சென்ற தலைவியைத் தலைவன் வழியிடைக் கண்டு மெய்தீண்டித் தன் ஆற்றாமையை எடுத்துக் கூறினான். அது கேட்ட தலைவி, 'ஈண்டு என் உறவினர் காண்பர்; நாளை கன்றொடு புலத்துக்குச் செல்வேன்' என்று இடம் சுட்டிக் கூறியது.

(தலைவி வெண்ணெய் விற்கும் ஆயர் குடும்பத்தைச் சார்ந்தவள். அவளிடம் அவளை விரும்பும் ஆயர் மகன் உரையாடுகிறான்.)

கடிகொள் இரும்காப்பில் புல்லினத்து ஆயர்
குடிதொறும் நல்லாரை வேண்டுதி – எல்லா!–
இடுதேள் மருந்தோநின் வேட்கை தொடுதரத்
துன்னித் தந்தாங்கே, நகைகுறித்து, எம்மைத்
திளைத்தற்கு எளியமாக் கண்டை; 'அளைக்குஎளியாள்
வெண்ணெய்க்கும் அன்னள்' எனக்கொண்டாய்–ஒண்ணுதால்!
ஆங்குநீ கூறின்! அனைத்தாக; நீங்குக.
அச்சத்தான்மாறி, அசைவினால் போத்தந்து,
நிச்சயம் தடுமாறும் மெல்லியல் ஆய்மகள்!
மத்தம் பிணித்த கயிறுபோல், நின்நலம்
சுற்றிச் சுழலும் என் நெஞ்சு.

விடிந்த பொழுதினும் இல்வயில் போகாது,
கொடுந் தொழுவி னுள்பட்ட கன்றிற்குச் சூழும்
கடுஞ்சூல்ஆ நாகுபோல், நிற்கண்டு, நாளும்,
நடுங்குஅஞர் உற்றதுஎன் நெஞ்சு.

எவ்வம் மிகுதர, எந்திறத்து, எஞ்ஞான்றும்,
நெய்கடை பாலின் பயன்யாதும் இன்றாகிக்,
கைதோயல் மாத்திரை யல்லது, செய்தி
அறியாது – அளித்துஎன் உயிர்.

தலைவி

அன்னையோ? மன்றத்துக் கண்டாங்கே சான்றார் மகளிரை,
'இன்றி யமையேன்';என்று, இன்னவும் சொல்லுவாய்;
நின்றாய்; நீசென்றீ; எமர்காண்பர்; நாளையும்
கன்றொடு சேறும் புலத்து.

தெளிவுரை

ஆயர் மகள் : *தோழனே! கொடிய விலங்குகள் புகாவண்ணம் கடுமையான காவலுடைய ஊரில் வாழும் ஆட்டிடையருடைய மகளிரை நீ விரும்புகின்றாய். தேள் கொட்டிய உடனே மருந்திட்டுத் தீர்ப்பது போலக் காமவேட்கையும் தோன்றிய போதே தீர்க்கக் கூடிய ஒன்றா? இல்லையே! நீ சிறிது மகிழ்ச்சியாக இருக்கக் கருதி நான் நெருங்கி நின்று, நீ என்னைத் தொட்டுப் போகட்டுமே என்று நினைத்து இசைந்தால், என்னைப் புணர்ச்சிக்கும் எளியவள் என்பதாகக் கற்பனை செய்து விட்டாய். மோரை விரும்பியவர்க்கு அதனைச் சிறிது கொடுத்த வளிடம், வெண்ணெயைக் கேட்டால் அதனையும் தருவாள் என்று நினைப்பா?*

தலைவன் : *ஒளிவீசும் நெற்றியை உடையவளே! நீ இவ்வாறு கூறினாய். ஆதலால் உன் விருப்பப்படியே ஆகட்டும். நான் செல்வேன். ஆனால், என் மனம் நீ கூறுவதால் அஞ்சி உன்னிடம் இருந்து மீண்டாலும், மறுபடியும் உன்னிடத்தில் வருகிறது. மோர் கடையும் மத்தினைச் சுற்றிய கயிறு மீண்டும் சுற்றுவது போல் என் மனம் உன் அழகைச் சுற்றித் தடுமாறுகிறது.*

முதன்முதலாக ஈன்ற பசு நன்றாக விடிந்தாலும் மேய்வதற்குச் செல்லாமல் தொழுவில் கட்டிய கன்றை நினைத்து வெளியே போவதும், உள்ளே வருவதும் ஆகச் சுழலும். அதுபோல் உன்னைக் கண்டு மனம் சுழல்கின்றது.

துயரம் பெருகுவதால் இரங்கத்தக்கதாயுள்ளது, என்னுடைய உயிர். பாலைக் கடைந்து வெண்ணெய் எடுத்த பிறகு அந்தப் பால் பயனற்றதாகி விடும். உன்னைக் கையால் தழுவியது தவிர்த்து, வேறு இன்பத்தை உள்ளத்து நினைவு அறியாமலும் தடுமாறுகிறேன். (வெண்ணெய் அற்ற பால்போல உயிரற்ற உடலாகி உள்ளேன்.) என் உயிரை என்னிடம் தந்து அருள்புரி.

தலைவி : *நீ அத்தன்மை உடையவனா? நல்ல பண்புடைய பெண்களை மன்றத்தில் கண்ட போது (உன்னையன்றி) உயிர் வாழேன் எனக் கூறி நிற்கின்றாய். இங்கே எம் சுற்றத்தார் காண்பர். நாளையும் கன்று மேய்க்க மேய் புலத்திற்குச் செல்வேன். இப்போது நீ செல். நாளை இவை போன்றவற்றைச் சொல்.*

கருத்து

ஆயமகள் ஒருத்தி வெண்ணெய் விற்றுத் திரும்பி வரும் வேளையில் அவளை எதிர்கொண்ட அவளுடைய காதலன் அவளைக் கூடி மகிழ எண்ணுகிறான்.

அது கண்ட தலைவியாகிய ஆயமகள், அவனிடம், ‘இவ்விடத்தில் நாம் கூட இயலுமா? என் உறவினர் பார்த்தால் நம் நிலை என்னாகும்? நாளை நான் மேய்ச்சல் நிலப்பக்கம் கன்றுடன் வருவேன்; நீ அங்கு வந்து என்னைப் பார்’ என்றாள்.

குறிப்பு

ஆயமகள், ஆயமகன் பேச்சாக இருப்பவை, பால் மோர் பற்றிய உவமை களையே கொண்டிருப்பது தனிச் சிறப்பு.

சொற்பொருள்

1. கடி - காவல்; காப்பு - இருப்பிடம், சிற்றூர்.
2. நல்லார் - அழகிய பெண்கள்.
3. தொடுதர - தொடுவதற்கு.
4. துன்னி - நினைத்து; நகை - மகிழ்ச்சி.
5. திளைத்தல் - கூடி மகிழ்தல்; அளை - மோர்.
10. மத்தம் - தயிர் கடையும் மத்து; நலம் - அழகு.
12. இல்வயில் போகாது - வீட்டை விட்டுப் போகாது.
13. கொடுந்தொழுவு - வளைத்துக் கட்டப் பெற்ற தொழுவம்.

14. கடுஞ்சூல் - முதற் சூல்; ஆநாகு - பசு (நாகு - பசு).
15. அஞர் - துன்பம்.
16. எவ்வம் - நோய்.
18. செய்தி - செய்வது.
20. அன்னையோ - அத்தன்மை உடையவனோ?
22. சென்றீ - செல்; எமர் - எம் உறவினர்.
23. புலம் - மேய்ச்சல் நிலம்.

தலைவி கூற்று

கலித்தொகை 112 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

வினைவல பாங்கின் தலைமகளை ஆற்றிடைக் கண்டு வினைவல பாங்கின் தலைமகன் விலக்கி நகையாடி இருவருஞ் சில மொழி கூறிய வழி, அவள் கூட்டத்திற்கு உடம்பட்டது. இது கைக்கிளை. (வினைவல பாங்கின் தலைமகன் - பிறர் ஏவிய தொழிலைச் செய்பவனாகிய தலைவன் ஒருவன்.)

கூற்று விளக்கம்

பணியாளாகிய தலைவியை, பணியாளாகிய தலைவன் வழியிடைக் கண்டு வழிவிலக்கி நகைச்சுவைபடப் பேசினன். இருவரும் உரையாடிய பின்னர், தலைவி கூட்டத்திற்கு உடன்பட்டாள்.

தலைவி

யார்இவன், என்னை விலக்குவான்? நீர்உளர்
பூந்தா மரைப்போது தந்த விரவுத்தார்க்
கல்லாப் பொதுவனை; நீ!மாறு, நின்னொடு;
சொல்லல்ஓம்பு என்றார், எமர்.

தலைவன்

எல்லா! கடாஅய கண்ணால், 'கலைஇய நோய்செய்யும்
நடாஅக் கரும்புஅமன்ற தோளாரைக் காணின்,
விடாஅல்ஓம்பு' என்றார், எமர்.

தலைவி

கடாஅயார், நல்லாரைக் காணின், விலக்கி, நயந்துஅவர்,
பல்இதழ் உண்கண்ணும் தோளும் புகழ்பாட,
நல்லது கற்பித்தார் மன்ற; நுமர்பெரிதும்
வல்லர், எமர்கண் செயல்.

தலைவன்

ஓஒ! வழங்காப் பொழுது,நீ கன்றுமேய்ப் பாய்போல்,
வழங்கல் அறிவார் உரையாரேல், எம்மை
இகழ்ந்தாரே அன்றோ எமர்?

தலைவி

ஒக்கும்; அறிவல்யான்– எல்லா! விடு.

'என்னை முயங்கு' என்ற தலைவனை நோக்கித் தலைவி உரைத்தல்

'விடேன்யான்; என்நீ குறித்தது?– இருங்கூந்தால்!
நின்னை,என் முன்நின்று.
சொல்லல்ஓம்பு' என்றமை அன்றி, 'அவனைநீ
புல்லல்ஓம்பு என்றது உடையரோ? மெல்ல
முயங்கு;நின் முள்ளெயிறு உண்கும்: எவன்கோலோ?

தலைவி

மாயப் பொதுவன் உரைத்த உரையெல்லாம்
வாயாவ தாயின், தலைப்பட்டாம்; பொய்யாயின்,
சாயல்இன் மார்பில் கமழ்தார் குழைத்தநின்
ஆயிதழ் உண்கண் பசப்பத் தடமென்தோள்
சாயினும், ஏஎர் உடைத்து.'

தெளிவுரை

(ஆயர்மகள் ஒருத்தி கன்று மேய்த்துக் கொண்டிருந்தாள்; அப்பொழுது, அப்பக்கமாக வந்த ஆயர்மகன் ஒருவன் அவளை வழிமறிக்கின்றான். அப்பொழுது நடந்த உரையாடல்:)

அவன் : "*தண்ணீரில் வளரும் அழகிய தாமரைப் பூ முதலிய பல்வகை மலர்களைக் கொண்டு புனைந்த மாலையை அணிந்*

திருந்தும் ஆயர்களுக்குரிய பண்பாட்டிலிருந்து நீ மாறுபட்டுக் காணப்படுகிறாய்; உன் பண்பு பற்றி அறிந்ததனால் என்னைச் சார்ந்தவர்கள், உன்னிடம் பேச்சு வைத்துக்கொள்ளக் கூடாது என்று என்னிடம் கூறியுள்ளனர். நான் செல்வதற்கு வழிவிடு; விலகி நில்."

அவன் : *"உன்னைச் சார்ந்தவர்கள் சொல்லியது ஒரு பக்கம் இருக்கட்டும்; என்னைச் சார்ந்தவர்கள் உன்னைப் பற்றி என்ன சொல்லியுள்ளார்கள் தெரியுமா? 'ஆசையூட்டும் பார்வையால், உன் மனத்தைக் கொள்ளை கொண்டு, காமநோயை ஏற்படுத்தும் தோளிலே கரும்பு எழுதிய அவளை நீ கண்டால், அவளைத் தடுத்து நிறுத்து; அவளைக் கொண்டே உன் காமநோயைப் போக்கிக் கொள்' " என்று கூறியுள்ளனர்.*

அவள் : *"உன் சுற்றத்தார் அப்படியா சொல்லினர்? அழகான பெண் ஒருத்தியைக் கண்டால் அவளது பல்லையும், இதழையும், மையுண்ட கண்ணையும், தோளையும் புகழ்ந்து பாடச் சொல்லி நல்லதொரு தொழிலைத்தான் உன் சுற்றத்தினர் கற்பித்துள்ளனர். பண்பாடு கொண்ட ஆயர்களா அவர்கள்? வல்லவரானால், என் பெற்றோரிடம் அவர்கள் சொல்லிப் பார்க்கட்டும்.*

அவன் : *(தனக்குள்) "நீ அவ்வாறு நினைக்கிறாயா?"*

(அவளிடம்) "யாரும் வெளியில் வராத உச்சிப்போதில் நீ கன்று மேய்ப்பவளைப் போல இவ்வாறு தெருவில் திரிவதை என் வீட்டார் அறிந்திருந்தும் என்னிடம் மேற்கண்டவாறு கூறவில்லையாயின் என்னைப் புறக்கணித்தவராக அன்றோ ஆய்விடுவர்?"

அவள் : *"இருக்கலாம்! எல்லாம் எனக்குத் தெரியும். ஏடா! வழியை விட்டு விலகி நில்."*

அவன் : *"கரிய கூந்தலை உடையவளே! விடமாட்டேன்! நீ என்ன கருதுகிறாய்? என்னிடம் பேச வேண்டா என்று உங்கள் வீட்டார் சொன்னார்களே அல்லாமல், 'அவனைத் தழுவ வேண்டா' என்றா கூறினர்? ஆகவே என்னை மெல்லத் தழுவிக் கொள். உன் கூரிய பல்லில் ஊறும் அமிழ்தத்தை உண்பேன்?"*

அவள் : "*(தனக்குள்) மாயம் நிறைந்த இந்தப் பொதுவன் கூறியவையெல்லாம் உண்மையானால், நான் இவனுக்கு வாழ்க்கைப்படுவேன் என்பது உறுதி. அதுவன்றிப் பொய்யாகிப் போனால், நெஞ்சே! நீ அணிந்த மாலையின் மென்மை கருகி அழியும்; மையுண்ட உன் கண்கள் பசலை பாயும். பெரிய தோள் மெலியும். நீ வருந்திக் கொண்டிருக்க நேரும். அவ்வாறு நேரினும் அதுவும் ஓர் அழகுடையதே!" (இதனால் அவள் இசைகிறாள் என்பது தெரிந்து அவன் மகிழ்கிறான்.)*

கருத்து

ஆயர் மகன் ஒருவன் ஆயர் மகள் ஒருத்தியைக் கண்டு உரையாடிய போது முரண்பாடுகள் ஏற்பட்டு, இறுதியில், ஒன்றுபட்ட செய்தி கூறப் படுகிறது.

விளக்கம்

கைக்கிளைத் திணை என்பது ஒருதலைக் காதல் ஒழுக்கம் ஆகும். இப்பாடலில், தலைவன், தலைவி மீது காதல் கொண்டு, அவள் அதுபற்றி அறியாத நிலையில் இருந்தாள். பின்னர் அவன் அவளைச் சந்தித்துத் தன் காதல் நிலையைக் கூறிய பிறகு அவள் உடன்பட்டாள். இப்பாடலைக் கைக்கிளை என்று வகைப் படுத்திய நச்சினார்க்கினியரே இதனைப் பெருந்திணைப்பாற் படுத்தியும் கூறியுள்ளார். மிக்க காமம் கொள்ளலையும், பொருந்தாக் காமத்தையும் பெருந்திணையாகக் கூறுவது மரபு.

திருமணத்திற்கு உடன்படுகிறாள்; ஆயினும் திருமணம் நடை பெறும் என்பது உறுதியன்று; இதனை ஆயர் மகளே கூறு கிறாள். ஆதலின் இது கைக்கிளை ஆயிற்று என்பர்.

சொற்பொருள்

1. உளர் - அசையும், வளரும்.
2. போது - மலர்; விரவுத்தார் - பல மலர்களைக் கொண்டு கட்டிய மாலை.
3. பொதுவன் - இடையன்; நீ மாறு - நீ மாறுபட்டிருக்கிறாய்.
5. கடாஅய - சொன்னார்கள்; கலைஇயநோய் - காம நோய்.

6. நடாக் கரும்பு - நிலத்தில் நடப்படாத கரும்பு - அதாவது தோளில் எழுதப்பட்ட தொய்யில் கரும்பு; அமன்ற - பொருந்திய; தோளார் - தோள்களை உடையவர்.
7. விடாஅல் - விட்டுவிடாதே, தடுத்திடு.
8. கடாஅயார் - அப்படியா சொன்னார்; நல்லார் - பெண்கள்; விலக்கி - தடுத்து; நயந்து - விரும்பி.
9. புகழ்பாட - புகழ்ந்து பேச.
11. வல்லர் - வல்லவரானால்; எமர்கண் செயல் - எம் பெற்றோரிடம் சொல்லிப் பார்க்கட்டும்.
12. வழங்காப் பொழுது - யாரும் வெளியே வராத உச்சிப் பொழுது.
13. வழங்கல் அறிவார் - நீ இவ்வாறு தெருவில் திரிவதை அறிந்திருந்தும்.
15. ஒக்கும் - இருக்கலாம்; விடு - என்னைப் போகவிடு.
16. என்நீ குறித்தது?- நீ என்ன சொல்வது?
18. என்றமை அன்றி - என்று சொன்னாரே அன்றி.
19. புல்லல் ஓம்பு - தழுவாதே.
20. முள் எயிறு - கூரிய பல்; உண்கும் - உண்பேன்.
22. வாயாவதாயின் - வாய் ஆவது ஆயின் - உண்மை என்றால்; தலைப் பட்டாம் - இவனுக்கு வாழ்க்கைப்படுவேன் (மணந்து கொள்வேன்).
23. சாயல் - மென்மை; குழைத்த - கருகி அழியும்.
24. பசப்ப - பசப்பு அடையும்; தடமென் தோள் - பெரிய மென்மையான தோள்.
25. சாயும் - மெலியும்; ஏஎர் - அழகு.

தலைவி கூற்று

கலித்தொகை 113 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

வினைவல பாங்கின் தலைமகளை ஆற்றிடைக் கண்டு, அவளை வினைவல பாங்கின் தலைமகன் விலக்கி, அவளோடு சிறிது கூறிய வழி, அவள் கூடலுறுகின்றாள் கூறியது. இது கைக்கிளை.

கூற்று விளக்கம்

தன் பணியினை முடித்துத் திரும்பும் ஒருத்தியை அவ்வாறே தன் பணியினை முடித்துவரும் ஒருவன் கண்டான். அவன் அவளைத் தடுத்து

நிறுத்திப் பேசினான். இருவரும் உரையாடிய பின்னர்த் தலைவி கூட்டத்திற்கு உடன்பட்டனள்.

அவன்

நலம்மிக நந்திய நயவரு தடமென்தோள்,
அலமரல் அமர்உண்கண், அணிநல்லாய்! நீஉறீஇ,
உலமரல் உயவுநோய்க்கு உய்யுமாறு உரைத்துச்செல்

அவள்

பேரேமுற் றார்போல, முன்நின்று, விலக்குவாய்
யார்!எல்லா— நின்னை அறிந்ததூஉம் இல்வழி?

அவன்

தளிரியால்! என்னறிதல் வேண்டின், பகைஅஞ்சாப்
புல்லினத்து ஆயர் மகனேன், மற்றுயான்.

அவள்

ஒக்கும் மன்,
புல்லினத்து ஆயனைநீ ஆயின், குடஞ்சுட்டு,
நல்லினத்து ஆயர், எமர்.

அவன் கூற்றும் அவள் மாற்றமும்

எல்லா!
நின்னொடு சொல்லின், ஏதமோ இல்லைமன்.
'ஏதம்அன்று எல்லை வருவான்விடு.'

அவன்

விடேன்.
உடம்பட்டு நீப்பார் கிளவி, மடம்பட்டு,
மெல்லிய வாதல் அறியினும், மெல்லியால்!
நின்மொழிகொண்டு, யானோ விடுவேன்மற்று என்மொழிகொண்டு
என்நெஞ்சம் ஏவல் செயின்?

அவன்

'நெஞ்சுஏவல் செய்யாது எனநின்றாய்க்கு' எஞ்சிய,
காதல்கொள் காமம் கலக்ுற' ஏதிலார்
பொய்ம்மொழி தேறுவது என்?

அவள்

தெளிந்தேன், தெரியிழாய்! யான்.
பல்கால்,யாம் கான்யாற்று அவிர்மணல், தண்பொழில்,
அல்கல் அகல்அறை, ஆயமொடு ஆடி
முல்லை குருந்தொடு முச்சிவேய்ந்து, எல்லை
இரவுற்றது, இன்னங் கழிப்பி;
அரவுற்று, உருமின் அதிரும்குரல்போல், பொருமுரண்
நல்லேறு நாகுடன் நின்றன,
பல்லான் இனநிரை; நாம்உடன் செலற்கே.

தெளிவுரை

அவன்

நன்மை மிகப்பெருகிய விருப்பம் தருகின்ற அழகிய தோளும், அலைபாய்ந்து பொருகின்ற மையுண்ட கண்ணும், அழகு மேனியும் கொண்ட மங்கையே! நான் மனம் சுழன்று வருந்துமாறு நீ தந்த காமநோயினின்றும் நான் பிழைக்குமாறு மருந்து கூறிச் செல்வாய்.

அவள்

அடே! முன்பு பார்த்தறியாத என்னிடம் பெரும்பித்துக் கொண்டவன்போல நின்றுகொண்டு வழி மறிக்கிறாயே! யார் நீ?

அவன்

தளிர் போன்ற மென்மையளே! என்னை யாரென்று நீ அறிய விரும்பினால், அறிந்து கொள். நான் ஆட்டு மந்தையைக் கொண்ட பகைவர்க்கு அஞ்சாத ஆயர் இனத்தில் தோன்றியவன்.

அவள்

புல்லினத்து ஆயனோ நீ! அவ்வாறாயின், என் சுற்றத்தார் ஒவ்வொன்றும் குடம்பால் கறக்கின்ற பசுக் கூட்டத்தைக் கொண்ட நல்லினத்து ஆயர் ஆவர்.

அவன்

அவ்வாறா! செல்வக்குடியில் பிறந்த உன்னோடு உரையாடினால் குற்றமோ? இல்லையன்றோ?

அவள்

இருவரும் ஒத்தகுடியாயின் என்ன குற்றம்? இப்பொழுது என்னைப் போக விடு. நான் நாளை வருவேன்.

அவன்

மெல்லியலே! அவ்வாறு விடமாட்டேன். நீ எனக்கு உடன்படுபவள் போலப் பேசிப் பிரிந்து போக எண்ணுகிறாய். நீ மென்மையாகப் பேசிக்கொள்ளும் சொல் என் காதில் ஒலிக்கின்றது. உன் பேச்சைக் கேட்டு விட்டுவிடுவேன் என்றா நினைக்கிறாய்? நான் ஏவியதைச் செய்தால் நான் உன்னைப் போக விடுவேன்.

அவள்

வரம்புமீறிப் பெருகிய காமம் கலக்குவதால் என் மனம் உன் ஏவலைச் செய்யாது என்று கூறி நிற்கின்றாய். அத்தகைய நீ, உனக்கு அயலார்போலத் தோன்றும் என் சொல், மெய்ம்மொழி என்பதை மட்டும் எவ்வாறு தெரிந்து கொண்டாய்?

அவன்

ஆராய்ந்து அணிந்த அணிகலன்களைக் கொண்டவளே! நீ இப்பொழுது கூறியவற்றால், சற்று முன் 'நாளை வருவேன், இப்பொழுது போக விடு' என்று கூறியது உண்மை என்று நான் தெளிந்தேன். முன்பு பலமுறை நாம் முல்லைப் பூவையும், குருந்தம் பூவையும் தலையிலே சூடிக்கொண்டு காட்டாற்றின் கரையில், மணலில் உள்ள சோலையில், அகன்ற பாறையில், தங்கி மகிழ்ந்தோம். இப்பொழுதும் அவ்விடத்தில் பகல் எல்லாம் தோழியரோடு விளையாடி, இரவு வந்த பின்பும் அங்குத் தங்கி மகிழ்வோம். அவ்வேளையில் நாம் மேய்ப்பதற்காக அழைத்து வந்த பசுக் கூட்டம் நமக்காகக் காத்து நிற்கும். அவற்றினிடையே, பாம்பு இறக்குமாறு அதிர்ந்து ஒலிக்கும்

இடியைப் போல் முழங்கும் காளைகளும் தமக்கு விருப்பமான பசுக்களுடன் நிற்கும்.

இவ்வாறு உரையாடி மகிழ்ந்த ஆயர் மகனும், ஆயர் மகளும் வீடு சேர்ந்தனர்.

கருத்து

அவளும், அவனும் சந்தித்து உரையாடுங்கால், மாறுபட்ட செய்திகளைக் கூறினும் இறுதியில் உடன்பாடு கொள்ளுகின்றனர்.

விளக்கம்

ஆயர் மகள் ஒருத்தி வினைமுடித்துத் திரும்பும் வழியில், ஆயர் மகன் ஒருவன் வழிமறித்துத் தான் அவள் மீது கொண்ட காதலை வெளிப்படுத்த, அவளோ அவனை, முன்பின் அறியாதவன் என்று கூறி, தான் செல்லும் வழியில் குறுக்கிடாதே என்று கூறுகின்றாள். முன்பின் அறியாத ஒருத்தியிடம் ஒருவன் அவளைக் காதலிப்பதாகக் கூறுவதும், அவனை அவள் அறிந்திலன் என்று உரைப்பதும் இப்பாடலில் கூறப் பெறுவதால், உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இதனைக் 'கைக்கிளை' என்றார்.

சொற்பொருள்

1. நலம் - நன்மை; நந்திய - பெருகிய; நயம் - விருப்பம் விளைவிக்கின்ற; தட - பெரிய.
2. அலமரல் - மருண்டு நோக்குதல்; அமர் - விருப்பம்தரும்; உண்கண் - மையுண்ட கண்.
3. உலமரல் - ஓயாது அலைத்தல்; உயவு - வருத்தம்; உய்யுமாறு - பிழைக்குமாறு.
4. பேர் ஏமுற்றோர் - பெரிதும் பித்தேறியவர்; விலக்குவாய் - தடுப்பவனே.
5. யார் எல்லா - நீ யார்?
6. தளிர் இயால் - தளிர் போன்ற மென்மையுடையவளே!
7. புல்இனத்து ஆயர் - ஆட்டு இடையர்.
9. குடம் சுட்டு - ஒவ்வொன்றும் குடம் பால் கறக்கின்ற பசு.
12. ஏதமோ இல்லை - குற்றமே இல்லை.

13. எல்லை வருவான் விடு - நான் நாளை வருவேன், இப்போது விடு.
15. நீப்பார் - நெஞ்சில் உடன்படாதார்.
20. ஏதிலர் - அயலார்.
21. தேறுவது ஏன்? - நம்புகின்றாயே எவ்வாறு?
24. அல்கல் - தங்குதல்; அகல்அறை - அகன்ற பாறை.
25. முச்சி வேய்ந்து - தலையிலே சூடிக்கொண்டு; எல்லை - பகல்.
27. உரும் - இடி.
28. ஏறு - காளை; நாகு - கன்று.

தலைவி கூற்று

கலித்தொகை 116 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

வினைவலபாங்கின் தலைமகளை ஆற்றிடைக் கண்டு விலக்கிய தலைமகனோடு அவள் சில மொழி கூறிக் குறியிடங் கூறியது.

கூற்று விளக்கம்

வழியிடையே தலைவியைக் கண்ட தலைவன் அவளைத் தடுத்து நிறுத்தினான். அவள் அவனுடன் சில பேசிய பின்னர், மறுநாள் அவளைச் சந்திப்பதற்கான குறியிடம் கூறியது.

தலைவி

பாங்குஅரும் பாட்டங்கால் கன்றொடு செல்வேம்;எம்
தாம்பின் ஒருதலை பற்றினை, ஈ:ங்குஎம்மை
முன்னைநின் றாங்கே விலக்கிய எல்லா!நீ
என்னையே முற்றாய் விடு.

தலைவன்

விடேஎன்; தொடீஇய செல்வார்த் துமித்து,எதிர் மண்டும்
கடுவய நாகுபோல் நோக்கித் தொழுவாயில்
நீங்கிச் சினவுவாய் மற்று.

தலைவி

நீநீங்கு; கன்றுசேர்ந் தார்கண் கதவுஊற்றாச் சென்றாங்கு,
வன்கண்ணள் ஆய்வரல் ஓம்பு.

தலைவன்

யாய்வருக ஒன்றோ; பிறர்வருக மற்றுநின்;
கோவரினும் இங்கே வருக; தளரேன்யான்,
நீஅருளி நல்கப் பெறின்.

தலைவி

நின்னையான் சொல்லினவும் பேணாய், நினைஇ,
கனைபெயல் ஏற்றின் தலைசாய்த்து, எனையதூஉம்
மாறுஎதிர் கூறி– மயக்குப் படுகுவாய்!
கலத்தொடுயாஞ் செல்வுழி நாடிப் புலத்தும்
வருவையால் நாணிலி நீ.

தெளிவுரை

அவள் : *முன்னம் ஒரு முறை, நான் என்னுடைய கன்றை மேயவிட, என் இல்லத்துக்கு அருகேயுள்ள தோட்டத்தை நாடிச் சென்றபோது, என் கையில் இருந்த தாம்புக் கயிற்றைப் பற்றிக் கொண்டு தடுத்தாய்; இப்போழ்தும், இங்கு என் முன்வந்து நின்று என்னைப் போகவிடாமல் தடுக்கின்றாய். நீ என்ன பைத்தியம் பிடித்தவனோ? (பலரும் செல்கின்றபோது, என்னை மட்டும் ஏன் தடுத்துக் கொண்டுள்ளாய்?) என்னைப் போக விடு.*

அவன் : *உன்னைப் போக விடமாட்டேன்; பெண் எருமைக் கன்று தொழுவத்தை விட்டு வெளியே வரும்போது யாராவது அதைத் தொட எண்ணினால், அவனைக் கீழே தள்ளிவிட்டுத் துள்ளி ஓடும். அப்படிப்பட்ட கன்றைப்போல நீ உன் இல்லம் விட்டு வெளியே வந்துள்ளாய். நான் உன்னைத் தடுத்ததாக நீ எண்ணினால், என்னைத் தள்ளிவிட்டு, கன்று துள்ளிச் செல்வது போல் செல்ல வேண்டியது நீயல்லவா?*

அவள் : *நீ இந்த இடத்தை விட்டு நீங்கிச் சென்றுவிடு; யாராவது தன் கன்றைக் கட்டி வைத்தால் தலையீற்றுப் பசு, அவரைச் சினந்து முட்டும்; அந்தப் பசு போன்ற அஞ்சாத தன்மை கொண்டவள், என் தாய்; அவள் நீ என்னைத்*

தடுப்பதைக் கண்டால், உன்னைத் தண்டிப்பாள்; என் தாய் இவ்விடம் வாராதவாறு நீ உன்னைப் பாதுகாத்துக் கொள். (தாய் காணுவதற்கு முன் சென்றுவிடு.)

அவன் : *உன் தாய் வந்தாலும் அல்லது வேறு யார்தான் வந்தாலும், உன் தந்தையே வந்தாலும் வரட்டும்; நீ எனக்கு அருள் செய்து உன் நெஞ்சத்தைத் தருவாயாயின், அவர்க்கெல்லாம் நான் அஞ்சமாட்டேன்.*

அவள் : *உனக்கு நான் கூறியவற்றைச் சிறிதும் பொருட் படுத்தாமல் என்னையே நினைந்து கொண்டுள்ளாய்; கனத்த மழை பெய்யும் போதுகூட அசையாது தலைசாய்த்து நிற்கும் காளையைப் போல நிற்கின்றாய்; நான் கூறியதையெல்லாம் மறுத்துப் பேசி மயக்கமுற்றிருக்கிறாய்; நாணமற்றவனாகவும் உள்ளாய்; பால் கறக்கின்ற பாத்திரத்தோடு நான் செல்கின்ற போது, பசுக்கள் மேய்கின்ற புலத்திற்கும் நீ வருவாயாக.*

கருத்து

தலைவி தலைவனுக்குக் குறியிடம் கூறினாள்.

விளக்கம்

ஆயர்மகள் ஒருத்தியை, அவள் செல்லும் வழி மறித்து, அவளை விரும்பிய தலைவனான ஆயர்மகன் அவளைத் தடுத்திட்டபோது, அவர்கள் உரையாடிய செய்தி இப்பாடலுள் கூறப்பட்டுள்ளது. தொடக்கத்தில், அவன் கூறியவற்றை அவள் மறுத்துரைப்பினும், இறுதியில், அவனை விரும்பிய தலைவி, தன்னைச் சந்திப்பதற்குரிய இடத்தைக் கூறி, அங்கு அவன் வரவேண்டும் என்றாள்.

குறிப்பு

தலைவியின் வசைக்குத் தலைவன் சிறிதும் நாணப்படாமல் அசையாது நின்றதற்கு, 'கனைபெயல் ஏற்றினை' உவமையாகக் கூறியிருத்தல் நயம் மிக்கது.

சொற்பொருள்

1. பாங்கு - அருகே; அரும் - செல்லுதற்கு அரிய; பாட்டங்கால் - தோட்டத்தில்.

2. தாம்பு - கயிறு; ஒருதலை - ஒரு முனை.
3. முன்னை - முன்னே; விலக்கிய - தடுத்த.
4. முற்றாய் - தடுக்காதே.
5. தொடீஇய - தொட; துமித்து - கெடுத்து; மண்டும் - விரைந்தோடும்.
6. கடு - மிகவும்; வய - வலிமையுள்ள; நாகு - பெண் எருமைக் கன்று; தொழு - தொழுவம்.
8. சேர்ந்தார்கண் - சேர்ந்தார் மீது; கதம் - சினம்; ஈற்றா - ஈற்றுஆ - கன்று ஈன்ற பசு.
9. வன்கண்ணள் - சினம் உடையவள்; ஆய் - தலைவி.
11. கோ - தலைவன்; தளரேன் - தளர்ச்சி அடைய மாட்டேன்.
12. அருளி (என் மேல்) அருள் உள்ளவனாக; நல்கப் பெறின் - வருவாயானால்.
13. பேணாய் - பொருட்படுத்தாமல்.
14. கனை பெயல் - கனத்த மழை; ஏறு - காளை.
15. மாறு எதிர் கூறி - (நான் கூறியதற்கு) மாறாகச் சொல்லி.
16. கலம் - பால் கறக்கின்ற பாத்திரம்; புலம் - மேட்டு நிலம்.
17. வருவை - வருவாய்; நாண் இலி - நாணம் இல்லாதவன்.

அடியோர் கூற்று

கலித்தொகை 94 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

'அடியோர் பாங்கினும், வினைவலர் பாங்கினுங், கடிவரையிலபுறத் தென்மனார் புலவர்' என்பதனால், அடியோராகிய கூனும் குறளும் உறழ்ந்து கூறிக் கூடியது.

கூற்று விளக்கம்

பணியாளரும் தொழிலாளரும் அகப்பொருள் பாடலில் தலைவராதல் கூடும். அது கைக்கிளையும் பெருந்திணையும் என்ற இரண்டு திணைகளில் அடங்கும் என்ற தொல்காப்பிய நூற்பாவின்படி (தொல். பொருள். 23) பணியாளராகிய கூனியும் குள்ளனும் முறையே தலைவியும் தலைவனுமாக நின்று உரையாடிக் கூறியது.

குறளன்

என்நோற் றனைகொல்லோ?–
நீருள் நிழல்போல் நுடங்கிய மென்சாயல்
ஈங்குஉருச் சுருங்கி
இயலுவாய்! நின்னோடு உசாவுவேன்; நின்றீத்தை.

கூனி

அன்னையோ! காண்தகை இல்லாக் குறள்நாழிப் போழ்தினான்,
ஆண்டலைக்கு ஈன்ற பறழ்மகனே; நீஎம்மை,
'வேண்டுவல்' என்று விலக்கினை; நின்போல்வார்
தீண்டப் பெறுபவோ மற்று?

குறளன்

மாண்ட எறித்த படைபோல் முடங்கி மடங்கி,
நெறித்துவிட் டன்ன நிறைஏரால் என்னைப்
பொறுக்கல்லா நோய்செய்தாய்; பொறீஇ நிறுக்கல்லேன்;
நீநல்கின் உண்டுஎன் உயிர்.

கூனி

குறிப்புக்காண், வல்லுப் பலகை எடுத்து நிறுத்தன்ன,
கல்லாக் குறள! கடும்பல் வந்துஎம்மை,
இல்லத்து வாஎன மெய்கொளீஇ, எல்லாநின்!
பெண்டிர் உளர்மன்னோ? கூறு.

குறளன்

நல்லாய்!கேள், உக்கத்து மேலும் நடுஉயர்ந்து, வாள்வாய
கொக்குஉரித்து அன்ன கொடுமடாய்! நின்னையான்
புக்குஅகலம் புல்லின், நெஞ்சுஊன்றும்; புறம்புல்லின்,
அக்குளுத்து, புல்லலும் ஆற்றேன்; அருளீமோ
பக்கத்துப் புல்லச் சிறிது

கூனி குறளனை இகழ்ந்து சொல்லுதலும்,
அவள் செலவு நோக்கிக் குறளன் தன் நெஞ்சிற்கு உரைத்தலும்

போசீத்தை! மக்கள் முரியே!நீ மாறுஇனித் தொக்க,
மரக்கோட்டம் சேர்ந்தெழுந்த பூங்கொடி போல,
நிரப்பமில் யாக்கை தழீஇயினர், எம்மைப்
புரப்பேம் என்பாரும் பலரால்; பரத்தைஎன்
பக்கத்துப் புல்லியாய் என்னுமால்; தொக்க

உழுந்தினும் துவ்வா, குறுவட்டா! நின்னின்
இழிந்ததோ, கூனின் பிறப்பு?– 'கழிந்தாங்கே,
'யாம் வீழ்தும்' என்றுதன் பின்செலவும், உற்றீயாக்
கூனிகுழை யும்குழைவு காண்'

'காமனார் நடக்கும் நடைகாண்' என்ற கூனியின்முன், குறளன் நடந்து காட்டுதல்

'யாமை எடுத்து நிறுத்தற்றால், தோள்இரண்டும் வீசி,
யாம்வேண்டேம் என்று விலக்கவும், எம்வீழும்
காமர் நடக்கும் நடைகாண்' – 'கவர்கணைச்
சாமனார் தம்முன் செலவு காண்க.'

குறளனின் கூளுறவு

ஒஓ!காண், நம்முள் நகுதல் தொடீஇயர், நம்முள்நாம்
உசாவுவம், கோன்அடி தொட்டேன்.

கூனி குறளனை விரும்பி மொழிதல்

ஆங்காக! சாயல்இன் மார்ப! அடங்கினேன்; 'ஏஎ
பேயும் பேயும் துள்ளல் உறும்'எனக்
கோயிலுள் கண்டார் நகாமை வேண்டுவல்;
தண்டாத் தகடுருவ! வேறாகக் காவின்கீழ்ப்
போதர்; அகடுஆரப் புல்லி முயங்குவேம்–
துகள்தபு காட்சி அவையத்தார் ஓலை
முகடுகாப்பு யாத்துவிட் டாங்கு.

தெளிவுரை

இப்பாடல், குறளன் ஒருவனுக்கும் கூனி ஒருத்திக்கும் நிகழ்ந்த காதல் உரையாடல்களை நகைச்சுவை தோன்றக் கூறுகிறது.

சாலையில் நடந்து சென்று கொண்டிருக்கும் ஒரு கூனியை நோக்கிய,

குறளன்

"இவ்விடத்தில் நான் உன்னைச் சந்திப்பதற்கு நீ என்ன தவம் செய்தனையோ? அறியேன்! கரையில் நிற்கும் ஒரு பொருள், அந்தக் கரைக்குப் பக்கமுள்ள நீர்நிலையில் எப்படி வளைந்தும் குறுகியும் தெரியுமோ அதுபோல, உடலில் கூனையும்

மென்மையான சாயலையும் பெற்று உருவம் சுருங்கி நிற்கின்றாய்! என்றாலும் உன்னுடன் சிறிது நேரம் பேச நினைக்கிறேன். சற்று நில்!" என்றான்.

(அதைக் கேட்ட கூனி அம்மாவோ, தனியாகச் செல்லும் பெண்ணொருத்தியை நோக்கி இவ்வாறு கூறும் இவன் எத்தகையவனாக இருப்பானோ, என்று மனத்துள் எண்ணிக் கொண்டு பேசுகிறாள்.)

கூனி

"ஆண்தலைப்புள் என்று சொல்லப்படும் ஆந்தையின் குஞ்சுப் பறவை போன்று காணப்படும் குள்ளனே! கெட்ட நேரத்தில் பிறந்ததால் இப்படிக் குள்ளனாகத் தோன்றுகின்றாய்போலும்! என்னை விரும்புவதாகக் கூறி, மேலும் செல்லவிடாமல் என்னைத் தடுக்கின்றாய்! உன் போன்ற குள்ளர்கள் என்னைத் தொடும் தகுதியற்றவர்கள்" என்று அந்தக் குறளனை நோக்கிக் கூனி கூறினாள்.

குறளன்

"கொழுவைக் கொண்டுள்ள ஏர்க்கலப்பையைப் போல, மேலே எழுந்தும், கீழே வளைந்தும் அழகுடன் தோன்றி எனக்குக் காமநோயை ஏற்படுத்தி விட்டாய்; அந்நோயை என்னால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை; நீ அருள்புரிந்தால்தான் என் உயிர் என் உடம்பில் நிற்கும்; உன் எண்ணத்தைக் கூறு" என்று கூனியிடம் கூறினான்.

(குறளன், எத்தகைய எண்ணம் கொண்டு கூனியைத் தடுத்தான் என்பதை அவள், அவனுடைய சொற்கள் மூலம் நெஞ்சத்தினால் உணர்ந்து கொண்டு,)

கூனி

"ஏடா! கல்லாத மூடா! குள்ள உருவம் உடையவனே! சூதாடும் பலகையை நிறுத்தி வைத்தாற் போன்றவனே! மக்கள் நடமாட்டம் இல்லாத இந்தக் கடுமையான வெயில் எரிக்கும் உச்சி வேளையில், இங்கே வந்து என்னை உன் வீட்டுக்கு வா என்று அழைத்து என் கைதொட்டுப் பிடித்து இழுக்கின்றாயே! ஏடா உனக்கு வேறு

பெண்டிரும் இருக்கின்றனரோ" எனக் குறளனைக் கூனி வினவினாள்.

குறளன்

(கூனிக்கு விடையளிப்பவன்போல) "நல்லவளே! நான் கூறுவதைக் கேள். கொக்கைக் கண்டிருப்பாயல்லவா! அதன் தலைக்குமேல் நடுவில் வாள் போன்ற மூட்டுவாய் இருப்பதை நீ அறிவாய்! அந்தக் கொக்கை உரித்தாற் போன்ற வளைந்த தோள் மூட்டுவாய்(கூனை) உடையவளே! நான் உன் மார்பைத் தழுவினால் உன்னுடைய கூன் என் நெஞ்சிலே குத்தும். அதைத் தவிர்க்க உன் முதுகைத் தழுவினால், அந்த வளைவு எனக்குக் கிச்சுகிச்சு மூட்டும். ஆதலால், உன்னைக் கூடி முயங்குதல் என்பது எளிதன்று; எனவே உன்னைப் பக்கவாட்டில் தழுவ நீ என் அருகே வா!" என்று குறளன் கூறினான்.

குறளன் கூறியது கேட்ட கூனி

'சீச்சீ! கேடு கெட்டவனே, எட்டிப்போ; என்னை நெருங் காதே!' என்றாள். மீண்டும் அவள் குறளனை நோக்கி, "மனிதனுக்கு உரிய முழு உருவமும் கொள்ளாத அரைமனிதனாய் முரிபட்டவனே! நீ இந்த எண்ணத்தையே விட்டுவிடு. மரத்தில் பற்றித் தவழ்ந்து சுற்றிக் கொண்டிருக்கும் பூங்கொடியைப் போன்று என்னைத் தழுவி, என் கூன் உடலிலும் ஓர் அழகுண்டு என்று எண்ணி என்னைப் பாதுகாக்கப் பலருள்ளனர். நீ பரத்தமை கொண்டவன்; ஆதலால்தான் என் உடலின் பக்கவாட்டில் புல்லுவதாகக் கூறுகின்றாய்!" என்றாள்.

பின்னும் அவனை நோக்கி, "சிறிய சூதாடும் பலகையைப் போன்ற உருவங்கொண்டவனே! உளுந்தினால் செய்யப் பெற்ற பணியாரத்தைத் துய்த்து மகிழ்ந்தோர் பலருள்ளனர். அதுபோல என் போன்ற கூன்கொண்ட மகளிரை மணந்து வாழ்வோர் பலருள்ளனர். கூன்பிறப்பு, குறளன் பிறப்பைவிட எந்த விதத்தில் தாழ்ந்து போயிற்று?" என வினவினாள்.

குறளன்

அவளுடைய வினாவிற்கு விடை கூறத் தெரியாத குறளன் தன் நெஞ்சை நோக்கி, "ஏ உள்ளமே! நீ அவளை விரும்பியதால்,

அவள் அருகே சென்று நான் அவளை விரும்புவதாகக் கூறினேன். எனினும், அவள் நான் கூறியதை எண்ணாமல், எனக்குத் தன் இசைவைத் தெரிவிக்காமல் என்னைவிட்டு எட்டிச் சென்று கூனிக் குறுகிக் குழைகின்ற குழைவைப் பார்!" என்றான். இவன் நெஞ்சத்துக்குக் கூறியதுபோலக் கூறினும், அவள் காதில் விழுமாறும் கூறியதால், அவள் அவனுக்கு மறுமொழி கூறலானாள்.

கூனி

கூனி, குறளனை நோக்கிக் கூறாமல் தன் நெஞ்சத்துக்குக் கூறுவாள் போல, "ஏ, நெஞ்சமே, நான் அவனை விரும்பவில்லை என்று கூறி விலகி நிற்கும் நிலையிலும், அவன் ஆமையை எடுத்து நேராக நிறுத்தினாற் போல, தன் இரண்டு தோள்களையும் தன் விலாவுக்குள் வருமாறு வீசிக்கொண்டு மன்மதனைப் போல நடைபோட்டு நடந்து என்னை விரும்பி வருவதைப் பார்!" என்று அவன் காதிலும் விழுமாறு கூறினாள்.

குறளன்

கூனி, தனக்குள் கூறிக் கொள்வதுபோலக் கூறினும், அவளுடைய உள்ளத்தை உணர்ந்து மகிழ்ந்த குறளன், "ஒருவருக்கொருவர் அன்புடன் முயங்குவதற்குக் காரணமான மலரம்புகளை ஏவும் சாமனின் தமையன் காமனின் நடையை நீயே பார்" என்று கையை வீசிக் கொண்டு நடந்து காட்டினான்.

கூனி

அதைக் கண்ட கூனி, "ஓ, ஓ இவன் நடையைப் பார்" என்று தன் நெஞ்சை நோக்கிக் கூறினாள்.

குறளன்

கூனி தன்னை விரும்பியவள்தான் என்பதைக் குறிப்பால் உணர்ந்த குறளன், கூனியை நோக்கி, "நாம் கூடி மகிழ எந்த இடம் பொருத்தம் என ஆராய்வோம், வா. இனி உன்னை நான் இகழ்ந்து பேச மாட்டேன்; அரசன் ஆணையாக இதைக் கூறுகிறேன்" என்றான்.

கூனி

அது கேட்ட கூனி, "அப்படியா? இனி நானும் இகழ மாட்டேன். இனிய மார்பை உடையவனே! எனக்கு இனியவனே! இந்தக் கோவிலாகிய அரண்மனையுள், உலா வருபவர்கள் நம்மைக் கண்டு பேயும், பேயும் துள்ளி நிற்பதைப் போல, இந்தக் கூனும் குறளும் துள்ளி விளையாடி மகிழ்கின்றன என்று இகழ்ந்து நகையாடும் நிலைமைக்கு நாம் ஆளாகக் கூடாது; கிடைத்தற்கு அரிய பொன் தகடு போன்ற ஒளிமிக்க உருவத் தினைக் கொண்டவனே! இந்த அரண்மனைக்கு அப்பால் காணப்படும் சோலைக்குச் செல்வோம்; குற்றமற்ற அறிவினைக் கொண்ட ஆன்றோர், சிறந்த கருத்துகள் பொதிந்த ஓலையை, உச்சியிலே கட்டி முத்திரையை இட்டு வைப்பதுபோல, நாம் இருவரும் வாய் முத்தம் இட்டு, நம் நிரம்பா உடல் தழுவி இன்பம் கொள்ள முற்படுவோம்" என்று கூறினாள்.

கருத்து

குள்ள உருவம் படைத்த ஒருவனும் கூன் விழுந்த ஒருத்தியும் தம்முள் காதல் கொண்டு ஒன்று சேர்ந்தனர்.

விளக்கம்

அகத்துறையுள் அகனைந்திணை என்று கூறிச் சிறப்பிக்கப் பெறும் அகத்திணைக் கூற்றுகளுள், தலைவன் தலைவி என்று கூறப் பெறுவோர், சமுதாயத்துள் தலைமைப் பொறுப்புள்ளவர் களாகக் கருதப் பெறுவர். பிறருக்கு ஏவல் புரிவோராகவோ அல்லது அடிமை நிலையில் உள்ளவராகவோ கூறப் பெறார்.

எனினும், அந்நிலைக்கு மாறாக உள்ள அடியோர், வினைவலர் ஆகிய கீழ்நிலை சார்ந்த மக்களிடையே நிகழும் காதல் நிகழ்ச்சிகளும் அக இலக்கியத்துள் கூறப் பெறுவதுண்டு என்று அறிய இப்பாடல் துணையாக உள்ளது. உடல் வளமும் அழகும் பெற்றோர் மட்டுமின்றி, உடல் ஊனம் உடையோர்களிடையே நிகழும் காதல் உணர்ச்சிகளையும் பாடுவதுண்டு என்பதையும் இப்பாடல் மூலம் உணர்கின்றோம். இளமைநிலை மாறிய நிலையில் காதல் வயமாகும் செய்தியும் இப்பாடலுள் கூறப்

பெறுகிறது. இவ்வாறு கூறப் பெற்றிருப்பின் அதனை அகனைந் திணையுள் அடக்காமல், கைக்கிளை, அல்லது பெருந்திணையுள் அடக்குவர். இப்பாடல் பெருந்திணைப்பாற்படும் எனினும், ஊடல், கூடல், உறழ்ந்து கூறல் ஆகிய செய்திகள் கூறப் பெறுவதால், இதனை மருதத்திணையுள் கூறல் தகும் என்று எண்ணி இம்மருதத்திணைப் பாடல்களைப் பெரும்புலவர் மருதன் இளநாகனார் எண்ணினார் போலும்.

இந்தப் பாடலில் கூன் விழுந்த உடல் கொண்ட ஒருத்திக்கும் குள்ளமான உருவம் கொண்ட ஒருவனுக்கும் ஏற்பட்ட காதல் ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது. கூனியாய் இருப்பினும், குறளனாய் இருப்பினும், எல்லார்க்கும் ஏற்படும் காதல் உணர்வு ஏற்படத்தான் செய்யும் என்ற இயற்கையை இப்பாடல் மூலம் உணர்கிறோம்.

சொற்பொருள்

1. என்நோற்றனை - என்ன தவம் செய்தனையோ?
2. நுடங்கிய - வளைந்த.
4. இயலுவாய் - செல்லுபவளே; உசாவுவேன் - பேசுவேன்; நின்றீத்தை - நில்.
5. குறள் - குள்ளமானவன்; நாழிப்போழ்தினான் - ஒரு நாழிகைப் போழ்தில்.
6. ஆண்டலை - (ஆண்மகன் தலை போன்ற தலையுடைய) ஒரு பறவை; பறழ் - குஞ்சு.
7. விலக்கினை - தடுத்து நிறுத்தினாய்.
9. எறித்த - எறிந்த - பொருந்திய; படை - ஏர்.
10. நெறித்துவிட்டன்ன - முறித்துவிட்டாற் போன்ற; நிறை ஏர் - நிறைந்த அழகு.
11. பொறீஇ நிறுக்கல்லேன் - பொறுத்து இருக்கமாட்டேன்.
12. நல்கின் - அருள் செய்தால்.
15. மெய்கொளீஇ - என் கைகளைப் பற்றி.
16. பெண்டிர் உளர்மன்னோ? - வேறு பெண்டிரும் இருக்கின்றனரோ?
17. உக்கம் - தலை.
18. கொடுமடாய் - வளைந்த கூனியே.
19. அகம் - மார்பு; புல்லின் - தழுவினால்; புறம் - முதுகு.

20. அக்குளுத்து - கிச்சு கிச்சு மூட்டும்; அருளீமோ - அருள மாட்டாயா.
21. பக்கத்து - பக்கவாட்டில்.
22. சீத்தை - அறிவு கெட்டவனே; மக்கள் முரி - முழு உருவமில்லாது அரை மனிதனாய் முரிபட்டவனே; நீ மாறு இனி - நீ உன் மனம் மாறு, நீ உன் எண்ணத்தைக் கைவிடு.
23. மரக்கோட்டம் - மரத்தின் வளைவில்.
24. நிரப்பமில் யாக்கை - முதுகும் வளராத உடல் கூன்.
25. புரப்பேம் - பாதுகாப்போம்; பரத்தை - பரத்தமை கொண்டவன்.
27. துவ்வா - வளராத, அதாவது உழுந்தின் அளவினும் உருவால் சிறியவன்.
28. கழிந்தாங்கே - எட்டிச் சென்று.
29. யாம் வீழ்தும் - நான் விரும்பினேன்; பின்செலவும் - பின்னாலே செல்லவும்.
31. யாமை - ஆமை; நிறுத்தற்றால் - நிறுத்தியதுபோல.
32. விலக்கவும் - விலகி நிற்கவும்; வீழும் - விரும்பும்.
33. காமர் - காமன், மன்மதன்; கவர்கணை - காதலர் உள்ளங்களைக் கவரும் மலர்க்கணை.
34. சாமனார் தம்முன் - சாமனாரின் முன்னவனாகிய மன்மதன்.
35. நம்முள் நகுதல் தொடீஇயர் - நம்முள் தொடீஇயர் நகுதல் - நம்முள் தொட்டு மகிழ்தற்கு.
36. உசாவுவம் - உரையாடவும்; கோன் - அரசன்.
37. சாயல் - அழகு.
38. துள்ளல் உறும் - துள்ளி நிற்பதைப் போல.
39. நகாமை - சிரிக்கக் கூடாது.
40. தண்டா - கிடைத்தற்கரிய; தகடு உருவ - பொன் தகடு போன்ற உருவமுடையவனே; கா - சோலை.
41. போதர் - போவோம்; அகடு - நெஞ்சு.
42. துகள்தபு - குற்றமற்ற; காட்சி - அறிவு; அவையத்தார் - ஆன்றோர்.
43. ஓலை முகடு - ஓலைகளைக் கட்டி அதன் தலையில்; காப்பு - முத்திரை; யாத்து விட்டாங்கு - முத்திரையை இட்டு வைப்பது போல.



சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன.
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிறப்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும்; அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கியவீதி இனியவன்

சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொலி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்.

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல் களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, படிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை. வணங்குவதற்கு மட்டுமன்று; நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2
9 788183 797672

Vol-7
ISBN: 978-81-8379-774-0
9 788183 797740

விலை ரூ. 72